

2018

# வருடாந்த அறிக்கை

வெற்றிக்கான வழியை வழிநடாத்துதல்

இலங்கை
காப்புறுதி
ஒழுங்குமுறைப்படுத்தல்
ஆணைக்குழு

# பொருளடக்கம்



ஆண்டின் முக்கிய நிகழ்வுகள் 4
பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு 6
ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் 12
ஆணைக்குழு அங்கத்தவர்களின் விபரங்கள் 13
சிரேஷ்ட முகாமைத்துவக் குழு 15
அலுவலக உத்தியோகத்தர்கள் 16
மீளாய்வுகள்
பொது மீளாய்வு 20
புள்ளிவிபர மீளாய்வு 26
செயற்பாட்டு மீளாய்வு
- மேற்பார்வையாளர் மீளாய்வு 66
- ஒழுங்குமுறைப்படுத்தல் மீளாய்வு 71
- விசாரணை மீளாய்வு 75
- சந்தை அபிவிருத்தி மற்றும் வெளியுறவுகள் பற்றிய மீளாய்வு 79
- நிருவாக மீளாய்வு 82
- நிதி மீளாய்வு 83
நிதித் தகவல்கள்
- நிதி நிலைமை அறிக்கை 86
- நிதிச் செயறுபாடு பற்றிய அறிக்கை 87
- உரிமைப்பங்கு மற்றும் தேறிய சொத்துக்கள் மாற்றம் பற்றிய கூற்று 88
- நிதிப்பாய்ச்சல் அறிக்கை 89
- காப்புறுதிதாரர் பாதுகாப்பு நிதியம் காசுப்பாய்ச்சல் அறிக்கை 90
- கணக்கீட்டுக் கொள்கைகள் 91
- நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள் 93
கணக்காளர் நாயகத்தின் அறிக்கை 100
2018 ஆம் ஆண்டின் கணக்காய்வாளர் நாயகத்தினால் எடுத்துகாட்டப்பட்ட விடயங்களும் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட பதில்களும் 107
பின்னிணைப்பு I 115
பின்னிணைப்பு II 116
பின்னிணைப்பு III 118
அருஞ்சொல் சொற்கள் 119



# நோக்கு

ஆசியாவின் திறன்மதிப்புமிக்க காப்புறுதி ஒழுங்குபடுத்துனராக் இருத்தல்.





# பணி

காப்புறுதிதாரர்களின் நாட்டங்களைப் பாதுகாக்கும் அதேவேளை, காப்புறுதித் துறையின் அபிவிருத்தியை ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் வசதிப்படுத்தல்.

# ஆண்டின் முக்கிய நிகழ்வுகள்

- காப்புறுதிக் கம்பனிகளின் எண்ணிக்கை - 25
- காப்புறுதித் தரகர்களின் எண்ணிக்கை - 63
- காப்புறுதி முகவர்களின் எண்ணிக்கை - 44,919
- காப்புறுதி பற்றிய விழிப்புணர்வு 12 பிரதேச செயலகங்களிலுள்ள 773 கிராம சேவையாளர் பிரிவுகளைச் சென்றடைந்திருக்கிறது.

## காப்புறுதித் தொழிற்துறையின் செயலாற்றுகை

| | 2018 | 2017 | மாற்றம் % |
|---|---|---|---|
| மொத்தக் காப்புறுதிக் கட்டுப்பணம் (ரூ. மில்லியனில்) | 181,506 | 164,960 | 10.03% |
| மொத்த சொத்துகள் (ரூ. மில்லியன்) | 623,477 | 581,685 | 7.18% |
| மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (GDP) % சத வீதத்தில் ஊடுருவல் | 1.26 | 1.23 | 2.44% |
| காப்புறுதியின் அடர்த்தி (ரூபா) | 8,376 | 7,693 | 8.88% |

## ஆணைக்குழுவின் செயலாற்றுகை

| | 2018 | 2017 | மாற்றம் % |
|---|---|---|---|
| காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியம் (ரூ. மில்) | 5,042.8 | 4,110 | 22.7% |
| செஸ் வருமானம் (ரூ. மில்) | 479.09 | 418.23 | 14.6% |
| வருடாந்த கட்டணம் (ரூ. மில்) | 168.50 | 142.17 | 18.52% |

**ரூபா. 623,477 மில்.**
காப்புறுதி தொழிலின் மொத்த சொத்துகள்

**ரூபா. 181,506 மில்.**
காப்புறுதி தொழிலின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம்



# முகாமைத்துவ தகவல்கள்

# பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு



"இலாபத்தன்மை பெயரளவில் இந்தத் துறையின் இலாபத்தன்மை 2017இல் இ.ரூபா 49,084 மில்லியனிலிருந்து 2018இல் இ.ரூபா 37,017 மில்லியனாக குறைந்து விட்டாலும், ஒரு தடவை மிகையைத் தவிர்த்ததன் பின்னர் கிடைத்த இலாபம் 2018இல் இ.ரூபா 36,636 மில்லியனாகவும் 2017இல் இ.ரூபா 33,217 மில்லியனாக இருந்தமையினால் அதன் இலாபங்கள் 10.29% வீதத்தினால் அதிகரித்துள்ளது. பொதுக் காப்புறுதித்துறை ஆண்டுக்கு 19.52% வீதத்தை பதிவுசெய்ததன் மூலம் இலாபத்தில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் காட்டியது. ஏனைய 4 கம்பனிகளைத் தவிர்த்து மிகுதி பொதுக் காப்புறுதிக் கம்பனிகள் (10) இலாபத்தில் அதிகரிப்பை வெளிப்படுத்தின. எனினும் ஒருதடவை மிகையைத் தவிர்த்து ஆயுள் காப்புறுதித்துறை சிறந்த செயலாற்றுகைகயை வெளிப்படுத்தியது. 2018இல் 14 கம்பனிகளில் 4 கம்பனிகளைத் தவிர்த்து ஏனைய கம்பனிகள் தமது தொழிற்பாட்டிலிருந்து இலாபத்தை பதிவுசெய்தன."

# பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு (தொடர்ச்சி)

பெருமைமிக்க ஆணைக்குழு உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்களின் வழிகாட்டுதல்களின் உதவியுடன், திட்டமிட்ட மைல்கற்களை அடைவதற்கு முன்னோக்கி வழிநடத்தும் 4ஆவது ஆண்டாக 2018ஆம் ஆண்டில் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் சாதனைகளை மீள்பதிவு செய்வதில் நான் உண்மையிலேயே பெருமை கொள்கின்றேன்.

இந்த ஆண்டு மிகவும் சவாலான ஆண்டாக இருந்த போதிலும், இந்தத் துறையின் வளர்ச்சியை ஒழுங்குமுறைப்படுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் வசதியளித்தல் ஆகியவற்றில் எங்கள் பங்கை விரிவாக்கக்கூடியதாகவிருந்தது. இந்த ஆண்டு மூன்று வேறுபட்ட பணிப்பாளர் சபைகள் செயற்பட்டன. நீண்டகாலம் பணியாற்றிய பணிப்பாளர் சபையின் சேவைக்காலம் 2018 பெப்பரவரியில் முடிவடைந்தது. அடுத்துவந்த பணிப்பாளர் சபை ஏப்பிரலில் இருந்து 26 ஒக்டோபர் வரை செயற்பட்டு அரசாங்கத்தில் ஏற்பட்ட மாற்றத்தினால் இராஜினாமா செய்தது. அதன் பின்னர் 2019இல் இருந்து தொடர்ந்து செயற்பட்டது. ஆணைக்குழுவின் சீரான செயற்பாட்டை எளிதாக்கும் வகையில் மூன்றாவது பணிப்பாளர் சபை 2018இன் இறுதிக் காலாண்டில் இருந்து செயற்பட்டது. இவ்வருடத்தில் பணியாற்றிய அனைத்துப் பணிப்பாளர் சபை அங்கத்தவர்களுக்கும், அவர்களின் வழிகாட்டல் விலைமதிப்பற்றது அதற்கு நான் உண்மையில் நன்றி கூறுகின்றேன்

## பிரதான ஒழுங்குமுறைப்படுத்தல் முன்னெடுப்புகள்

ஆணைக்குழு 2018ஆம் ஆண்டில் சில விதிகள், ஒழுங்குமுறைகள் மற்றும் தீர்மானங்களைத் திருத்தியதுடன் தொழிலுக்கு புதிய வழிமுறைகளை வெளியிட்டது. அவை வளர்ந்து வரும் ஒழுங்குமுறைத் தேவைகளுக்கு ஏற்ப அறிக்கையிடல் வடிவங்களுக்கான திருத்தங்கள் மற்றும் சில கட்டமைப்புகளுக்கான திருத்தங்கள் என வகைப்படுத்தலாம்.

அறிக்கையிடல் வடிவங்களுக்கான திருத்தங்கள், காலாண்டு விபரத்திரட்டு வடிவம், வருடாந்த விபரத்திரட்டு வடிவம் மற்றும் ஒரே தடவை மிகைத் தேவைகளை இணைத்துக் கொள்வதற்கும், வெளிப்புற கணக்காய்வாளர் காலாண்டுக்கான தேவைப்பாட்டு சான்றுபடுத்தலுக்காகவும் காப்புறுதியாளர்களின் இயல்பான சுருக்கம் மற்றும் காப்புறுதித் தரகர்களுக்கான காலாண்டு விபரத்திரட்டு திருத்தம் என்பன மேற்கொள்ளப்பட்டன.

இவ்வருடத்தில் சில கட்டண கட்டமைப்புகள் திருத்தப்பட்டன. காப்புறுதித் தரகராக பதிவு செய்வதற்கான கட்டணம் அவை காப்புறுதி தரகு வியாபாரத்தின் ஒரு வகுப்பிற்கு இ.ரூபா 100,000/- முதல் இ.ரூபா 150,000/- வரை உயர்த்தப்பட்டுள்ளன. இலங்கை காப்புறுதி தரகர்களின் சங்கத்தின் மேற்கொள்ளப்பட்ட காப்புறுதி தரகர்களின் பதிவு கட்டணத்தை திருத்தியமைத்தல் தொடர்பாக மேற்கொண்ட கீழ்நோக்கிய திருத்தத்திற்கான கருத்துக்களையும் ஆணைக்குழு பரிசீலித்தது, திருத்தப்பட்ட கட்டணம் 13 ஒகஸ்ட் 2018 முதல் பொருந்தும்.

முக்கியமாக திறமையான குழாத்தின் விளைவாக ஆணைக்குழுவின் செயற்பாட்டு செலவுகள் அதிகரித்ததன் காரணமாக, காப்புறுதியாளர்கள் செலுத்தும் வருடாந்த கட்டணமும் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தில் 0.10% வீதத்தில் இருந்து 0.125% வீதம் வரை மேல்நோக்கி திருத்தம் செய்யப்பட்டது.

புதிய பணிப்புரைகளைப் பொறுத்தவரை, மோசடி அல்லது நிதி முறைகேடு காரணமாக பணிநீக்கம் செய்ப்பட்ட நபர்களை காப்புறுதித்துறையில் பணிக்கமர்த்துவதைத் தடுக்கும் நோக்கில் ஆணைக்குழு 14ஆம் இலக்கப் பணிப்புரையை வெளியிட்டது. பூட்கையாளர்களின் நலன்களைப் பாதுகாத்தல் மற்றும் கைத்தொழிற்துறையின் ஒருமைப்பாட்டை நிலைநிறுத்துவது என்ற ஒரே நோக்கத்துடன் இந்த முயற்சியிருந்தது.

நீண்டகால காப்புறுதி வியாபாரத்தின் காப்புறுதி நிதிகளை நிர்வகிப்பதற்கான நடைமுறைகளை அமைப்பது மற்றொரு பணிப்புரையாகும். இந்த பணிப்புரையானது நிறுவனங்கள் தங்கள் நிதிகளை நிர்வகிப்பதில் ஒரேமாதிரியான நடைமுறைகளை வகுக்கின்றது. இந்த பணிப்புரை நீண்டகால காப்புறுதி வணிகத்தின் பல்வேறு துணை வகுப்புகளின் நிதிகளின் வெளிப்படைத்தன்மை மற்றும் பிரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

2016ஆம் ஆண்டில் கடனுதவி விளிம்பு விதிகளிலிருந்து இடர் அடிப்படையிலான மூலதன விதிகளுக்கு இடம்பெயரும் போது நீண்டகால வியாபாரத்தில் உருவாக்கப்பட்ட ஒரேதடவை மிகை 16ஆம் பணிப்புரையில் இருந்தது. இந்தப் பணிப்புரை இந்த மிகை அடையாளம் மற்றும் இதற்கான செயன்முறையை அமைக்கின்றது, இது புதிய கணக்கியல் தரங்களை செயற்படுத்தவதன் மூலம் மூலதன தேவைகள் மறுவரையறை செய்யப்படும் வரை அதன் பயன்பாட்டை கட்டுப்படுத்துகின்றது.

காப்புறுதித்துறைக்கான கூட்டிணைந்த ஆளுகை மீது நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட மற்றொரு பணிப்புரை இருந்தது. இந்த பணிப்புரையைத் தயாரிப்பதில் வங்கித்துறைக்கு பொருந்தக்கூடிய ஆளுகை குறித்த பொருத்தமான விதிகள் பட்டியலிடப்பட்ட பொருந்தக்கூடிய

# பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு (தொடர்ச்சி)

கூட்டிணைந்த ஆளுகை விதிகள் மற்றும் தொடர்புடைய துறைக்கு தொடர்புடைய சில குறிப்பிட்ட விதிகள் ஆகியவற்றை நாங்கள் கருத்தில் கொண்டுள்ளோம். கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்டிருந்தாலும் இல்லாவிட்டாலும், உரிமம் பெற்ற அனைத்து காப்புறுதியாளர்களுக்கும் ஆளுகை கட்டமைப்பு பொருந்தும், இது ஜுலை 2019 முதல் அமுலுக்கு வரும். இந்த கட்டமைப்பிற்கு அந்தந்த காப்புறுதியாளர்களின் வருடாந்த அறிக்கைகளில் இணக்கம் குறித்த வெளிப்பாடு தேவைப்படுகின்றது. இந்தக் கட்டமைப்பும் உரிய காப்புறுதியாளர்களின் வருடாந்த அறிக்கையில் இணக்கத்தில் வெளிப்படுத்துவதற்கு கோருகின்றது.

## கைத்தொழிற்துறையின் செயலாற்றுகை

### மொத்த எழுதப்பட்ட தவணைக்கட்டணம்

மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி விகிதம் 2018ஆம் ஆண்டில் கீழ்நோக்கி இருப்பதால், காப்புறுதித்துறையின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் வளர்ச்சி விகிதம் 15.3% வீதத்திலிருந்து 10.03% (2018) வீதமாக குறைந்துள்ளது. இந்த ஆண்டில் உருவாக்கப்பட்ட மேலதிக தவணைக் கட்டணம் அண்ணளவாக இ.ரூபா 16,546 மில்லியனாக இருப்பதுடன், வருட இறுதியில் இ.ரூபா 181,506 மில்லியனை பதிவுசெய்தது. ஆண்டு முழுவதும் நிலவிய பொருளாதார மற்றும் அரசியல் நிச்சயமற்ற தன்மைகளால் வியாபார நம்பிக்கையில் ஏற்பட்ட தாக்கத்தின் காரணமாக இருக்கக்கூடும். பொதுக் காப்புறுதி வியாபாரத்துறையானது 2017இல் காணப்பட்ட 17.3% வீத வளர்ச்சியில் இருந்து 2018இல் 8.3% வீதமாக கடுமையாக வீழ்ச்சியடைந்தது சான்றாக அமைவதுடன், 50 அடிப்படைப் புள்ளிகளினால் 2017ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் திரட்டிய மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்திற்கு குறைந்த மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டண பங்களிப்பினையே வழங்கியது. தீ, மோட்டார் வாகனம் மற்றும் நானாவிதத் துறைகளில் காணப்பட்ட மொத்த எழுதப்பட்ட தவணைக்கட்டண வளர்ச்சி மற்றும் சுகாதாரக் காப்புறுதித்துறையில் காணப்பட்ட எதிர்மறை வளர்ச்சி என்பன பொது காப்புறுதித் துறையின் மொத்த எழுதப்பட்ட தவணைக்கட்டணத்தில் வீழ்ச்சிக்கு பங்களிப்பு செய்தன. சுகாதாரத் துறையில் சில ஆயுள் காப்புறுதியாளர்களின் செறிவுக்கு சுகாதாரத் துறைக்கான பொதுக் காப்புறுதிக் கம்பனிகளின் மொத்த எழுதப்பட்ட தவணைக்கட்டணத்தில் எதிர்மறை வளர்ச்சி காரணமாக இருக்கக்கூடும்.

திரட்டிய மொத்த எழுதப்பட்ட தவணைக்கட்டணத்தில் 61% வீதமளவில் பங்களிப்பு செய்யும் மோட்டார் காப்புறுதி வியாபாரம் 2015இல் இருந்து கீழ்நோக்கிய வளர்ச்சியைக் காட்டுகின்றதுடன், இதன் வளர்ச்சி 2015இல் 19.10% வீதத்தில் இருந்து 2018இல் 11.47% வீதமாக குறைந்துள்ளது

அடுத்ததாக பிரதான ஐந்து கம்பனிகளின் சந்தைப் பங்குகள் 2017இல் 69% வீதத்தில் இருந்து 74% வீதமாக அதிகரித்தமை, குறிப்பிடக்கூடிய வளர்ச்சியாவதுடன், அதனால் ஏனைய பொது காப்புறுதியாளர்களின் திரட்டிய மொத்த எழுதப்பட்ட தவணைக்கட்டணத்திற்கான பங்களிப்பானது 31% (2017) வீதத்தில் இருந்து 26% வீதமாக குறைந்துள்ளது.

எனினும், 2017 மற்றும் 2018இல் ஆயுள் காப்புறுதித் துறை தொடர்ந்தும் 12% வீத வளர்ச்சியுடன் நிலையாக இருந்தது. 2018இல் திரட்டிய எழுதப்பட்ட மொத்த தவணைக்கட்டண வருமானத்தில் 44% வீத பங்களிப்பை நீண்ட கால காப்புறுதி வியாபாரம் வழங்கியதுடன், இதன் பெறுமதி இ.ரூபா 80,303 மில்லியன் ஆகும். நீண்டகால வியாபாரத்தின் திரட்டிய மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்திற்கு இணையானது, இணையற்றது மற்றும் இணைக்கப்பட்ட என்பவற்றின் பங்களிப்புகள் முறையே இ.ரூபா 20,588 மில்லியன், இ.ரூபா 57,660 மில்லியன் மற்றும் இ.ரூபா 2,053 மில்லியன் ஆகும். மேலும், இணைந்த வியாபாரங்கள் மற்றும் இணைக்கப்பட்ட நீண்ட கால வியாபாரங்கள் 2017 உடன் ஒப்பிடுகையில் 2018இல் முறையே 7.3% மற்றும் (0.13%) வீதங்களினால் வளர்ச்சியடைந்துள்ள போதிலும் காப்புறுதியாளர்கள் 2018இல் 14.6% வீத வளர்ச்சியைக் கொண்டிருக்கும் இணைக்கப்படாத விற்பனையில் அதிகமாக தமது கவனக்குவிப்பைக் கொண்டுள்ளனர் என்பதைக் காட்டுகின்றது. இதற்கான காரணம் காப்புறுதி பூட்கையாளர்களின் மிகை பரிமாற்றத்தின் போது உயர் வரி அறவிடப்பட்டமையாக இருக்கக்கூடும்.

மேலும், நீண்ட கால வியாபாரத்தின் பிரதான ஐந்து கம்பனிகளினதும் திரட்டிய மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்திற்கான பங்களிப்பு 80.95% வீதத்தில் இருந்து 80.26% வீதமாக அதிகரித்ததன் ஊடாக சற்று அதிகரிப்பு காணப்படுகின்ற போதிலும், பொது காப்புறுதி கம்பனிகளின் பங்குகளுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு காணப்படுகின்றது.

2017ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட 643,483 புதிய பூட்கைகளுடன் ஒப்பிடுகையில் வழங்கப்பட்ட புதிய நீண்ட கால பூட்கைகளின் எண்ணிக்கை 712,013 ஆக 10.65% வீதத்தினால் அதிகரித்துள்ளது. மொத்த ஆயுள் காப்புறுதிப் பூட்கைகள் 3,215,911ஐ எட்டியதுடன், 4.79% வீத வளர்ச்சியை அடைந்ததுடன், இது ஆயுள் காப்புறுதித் துறையின் நேர்மறையான பார்வையைப் பிரதிபலிக்கின்றது.

பொது காப்புறுதி கொள்கைகளின் எண்ணிக்கையும் 2018 இல் 6,492,003 பூட்கைகளாக 5.94% வீதமாக அதிகரித்துள்ளது. 5,614,901

# பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு (தொடர்ச்சி)

மோட்டார் காப்புறுதிப் பூட்கையில் 3ஆம் தரப்பு காப்புறுதிப் பூட்கைகள் ஏனைய விரிவான பூட்கைகளுடன் ஒப்பிடுகையில் அதிகமான பங்களிப்பை செய்துள்ளன. விரிவான பூட்கைகள் எதிர்மறையான 7% வீத வளர்ச்சியை வெளிப்படுத்துகையில் மூன்றாம் தரப்பு காப்புறுதி 14.6% வீதத்தினால் அதிகரித்துள்ளது.

## இலாபத்தன்மை

இலாபத்தன்மை பெயரளவில் இந்தத் துறையின் இலாபத்தன்மை 2017இல் இ.ரூபா 49,084 மில்லியனிலிருந்து 2018இல் இ.ரூபா 37,017 மில்லியனாக குறைந்து விட்டாலும், ஒரு தடவை மிகையைத் தவிர்த்ததன் பின்னர் கிடைத்த இலாபம் 2018இல் இ.ரூபா 36,636 மில்லியனாகவும் 2017இல் இ.ரூபா 33,217 மில்லியனாக இருந்தமையினால் அதன் இலாபங்கள் 10.29% வீதத்தினால் அதிகரித்துள்ளது. பொதுக் காப்புறுதித்துறை ஆண்டுக்கு 19.52% வீதத்தை பதிவுசெய்ததன் மூலம் இலாபத்தில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் காட்டியது. ஏனைய 4 கம்பனிகளைத் தவிர்த்து மிகுதி பொதுக் காப்புறுதிக் கம்பனிகள் (10) இலாபத்தில் அதிகரிப்பை வெளிப்படுத்தின. எனினும் ஒருதடவை மிகையைத் தவிர்து ஆயுள் காப்புறுதித்துறை சிறந்த செயலாற்றுகைகயை வெளிப்படுத்தியது. 2018இல் 14 கம்பனிகளில் 4 கம்பனிகளைத் தவிர்த்து ஏனைய கம்பனிகள் தமது தொழிற்பாட்டிலிருந்து இலாபத்தை பதிவுசெய்தன. இதற்கு காரணம் 2018ஆம் ஆண்டு இ.ரூபா 34,337 மில்லியன் பெறுமதியுடைய ஏற்க நேர்ந்த கோரிக்கைகள் ஆகும், இது கடந்த ஆண்டுகளில் பதிவுசெய்யப்பட்ட உயர் ஏற்கநேர்ந்த கோரிக்கைகள் ஆகும்.

## நடந்துவரும் பிரதான ஒழுங்குமுறைப்படுத்தல் சீர்திருத்தங்கள்

அரசாங்கத்தினால் நிதித்துறையில் பிரதான ஒழுங்குபடுத்தல் நிறுவனங்களில் ஒன்றாக ஆணைக் குழு தெரிவுசெய்யப்பட்டு பிரதான ஒழுங்குமுறைப்படுத்தல் சீர்திருத்தங்கள் நடைபெற்று வருகின்றன. அத்துடன், நிதியியல் துறையின் வர்ச்சிக்காக அதன் வினைத்திறனை மேம்படுத்தவதற்கு நிதித்துறையை நவீனமயப்படுத்தல் கருத்திட்டத்தின் கீழ் 9 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தக் கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், இது இத்துறைக்கு திட்டமிடப்பட்ட சீர்திருத்தத்துடன் 2022 வரை தொடரும். அத்தகைய ஒரு குறிப்பிடத்தக்க சீர்திருத்தம், மேற்பார்வை செயன்முறையை மேலும் வலுவானதாக செய்வதற்கு தகவல் தொழில்நுட்பத்தின் ஆதரவுடன் ஒரு முழுமையான இடர் அடிப்படையிலான மேற்பார்வை அமைப்புக்கு இடம்பெயர்வதாகும்.

சர்வதேச காப்புறுதி மேற்பார்வையாளராக சங்கத்தின் காப்புறுதி மையக் கோட்பாடுகளுக்கு ஏற்ப பரந்த அதிகாரங்களைக் கொணட புதிய காப்புறுதி ஒழுங்குமுறைச் சட்டம் ஐ.எப்.ஆர்.எஸ் 17 செயல்படுத்தலுக்கான மாற்றம் குறித்தும் ஆணைக்குழு கவனம் செலுத்தும். நுண் காப்புறுதி ஒழுங்குமுறை மற்றும் மேற்பார்வை மற்றும் தயாரிப்பு மேம்பாட்டு ஆகியவை சில முக்கிய சீர்திருத்தங்களாக கருதப்படுகின்றது.

பலகொள்கை முன் முயற்சிகளில் சரியான திசையில் எங்களை வழிநடத்திய தலைவர் மற்றும் ஆணைக்குழுவின் அங்கத்தவர்களுக்கு நான் உண்மையில் நன்றி கூறுகின்றேன். தொழிற்துறையை மேம்படுத்தவதற்கான தொடர்ச்சியான ஆதரவிற்காக காப்புறுதித் துறை நிறுவனங்களுக்கு எனது பாராட்டுகளைப் பதிவு செய்ய விரும்புகின்றேன், கடைசியாக காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் ஊழியர்களுக்கு ஆணைக்குழுவின் நோக்கங்களை அடைவதற்கான முயற்சிகளுக்கு எனது பாராட்டுகள் செல்கின்றன.



தமயந்தி பெர்னான்டோ
பணிப்பாளர் நாயகம்



# ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் மற்றும் ஊழியர்கள்

# ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள்




[1] திரு. மனோ தித்தவெல - தலைவர்
[2] திரு. ஏ.எம்.பி.எம்.பி. அத்தப்பத்து
[3] திரு. எச்.ஏ. கருணாரத்ன
[4] திரு. டி.என்.ஆர். சிறிவர்தன
[5] திரு. யதுஸ்ரன் கனகசபை
[6] திரு. எரோல் பெரேரா
[7] திரு. உபுல் தேசபிரிய

# ஆணைக்குழு அங்கத்தவர்களின் விபரங்கள்

## [1] திரு. மனோ தித்தவெல்ல தலைவர்

திரு.மனோ தித்தவெல்ல இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் தலைவராவார்.

திரு.தித்தவெல இலங்கையின் பாரம்பரிய நீதித்துறை பொறிமுறைகளை ஒருங்கிணைப்பினால் வலுவூட்டப்பட்ட ஒருங்கிணைத்தல் மீள் இணக்க பொறிமுறைகள் செயலகத்தின் செயலாளர் நாயகமும் ஆவார். அத்துடன் கௌரவ நிதி அமைச்சரின் சிரேஸ்ட ஆலோசகருமான திரு. தித்தவெல்ல, பொருளாதார விடயங்கள் தொடர்பான சிரேஸ்ட ஜனாதிபதி ஆலோசகரும் ஆவார். அத்துடன் 2003 ஆகஸ்ட் தொடக்கம் 2005 நவம்பர் வரை ஜனாதிபதி காரியாலயத்தில் சிரேஸ்ட செயலாளர் நாயகமாக இருந்துள்ளார். இவர், உபாய நுட்ப நிறுவனங்கள் முகாமைத்துவ முகவராண்மையின் (SEMA) முதலாவது தலைவரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமாவார். இந்த முயற்சி திரு. தித்தவெல்லவினால் இலங்கையின் பாரிய பொது நிறுவனங்களின் சிறந்த பொறுப்புக்கூறும் தன்மையையும் நல்லாட்சியையும் அதனுடைய செயற்திறனையும் மேம்படுத்தும் பொருட்டு ஊக்குவிக்கப்பட்ட ஒன்றாகும். இலங்கையின் சகல பொருளாதார அபிவிருத்தி செயற்பாடுகளையும் ஒருங்கிணைக்கும் நிறுவனமான பொருளாதார அபிவிருத்தி தேசிய பேரவை சபையில் (NCED) கடமையாற்றியமைக்கு மேலதிகமாக சுனாமி மீள்கட்டுமான மற்றும் நாட்டைக் கட்டியெழுப்புதல் திட்டத்திற்காக உருவாக்கப்பட்ட பணிசக்தி அமைப்பின் தலைவராகவும் (TAFREN) கடமையாற்றியுள்ளார்.

திரு.தித்தவெல்ல, அரசதுறை சார்ந்த பல நிறுவனங்களில் முக்கிய பதவிகளை வகித்துள்ளார். அவை, இலங்கை அரசாங்கத்தின் அப்போதைய தனியார்துறை முகவராண்மையான பொது நிறுவன சீரமைப்பு ஆணைக்குழுவின் (PERC) பணிப்பாளர் நாயகம், இலங்கை அரசினால் உரிமை கொள்ளப்பட்ட மக்கள் வங்கியின் தலைவர் என்பனவாகும். பாரிய அரசதுறை நிறுவனங்களில் உள்ள சபைகளில் பலவேறு பதவிகளையும் வகித்துள்ளார். அது மாத்திரமன்றி, திரு. தித்தவெல்ல, தனியார் துறையிலும் பலவேறு சிரேஸ்ட பதவிகளை வகித்து 35 வருடங்களுக்கும் மேலதிகமான அனுபவங்களைப் பெற்றுள்ளார்.

கொழும்பு றோயல் கல்லூரியில் கல்வி கற்ற இவர் 1960 ஆம் ஆண்டு மே மாதம் 8 ஆம் திகதி பிறந்தார். எடின்பர்க் பல்கலைக்கழகத்தில் முதலீட்டு சந்தைப்படுத்தல் மற்றும் நிதித்துறையில் பட்டத்தையும் பிரித்தானிய திறந்த பல்கலைக்கழகத்தில் மனித கணினி தொடர்பாடலில் பட்டப்பின் டிப்ளோமாவையும் பெற்றுள்ளார். இவர் 2000 - 2003 வரை ஐக்கிய இராச்சியத்தின் பட்டய சந்தைப்படுத்தல் நிறுவனத்தின் சர்வதேச நம்பிக்கையாளர் சபையிலும் உறுப்பினராக இருந்துள்ளார்.

## [2] திரு. ஏ.எம்.பீ.எம்.பி அத்தபத்து

திரு.ஏ.எம்.பீ.எம்.பி.அத்தபத்து திறைசேரியின் பிரதிச் செயலாளராவதுடன், இவர் 24 வருடங்களுக்கு மேலாக பொதுத் திறைசேரியில் பல்வேறுபட்ட திணைக்களங்களில் பணியாற்றிய அனுபவத்தைக் கொண்டுள்ளார். இவர் இலங்கை திட்டமிடல் சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தராவார்.

இந்தக் காலத்தில், அவர் சர்வதேச நிதி, நிதியியல் சந்தை, ஆரம்ப துறை அபிவிருத்தி, நுண் நிதி அபிவிருத்தி, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர் அபிவிருத்தி மற்றும் அபிவிருத்தி நிதியியலில் உபாயமார்க்கத் திட்டம் போன்ற பல்வேறு துறைகளில் பணியாற்றியதுடன் திறைசேரியில் உதவிப் பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர், பணிப்பாளர் மற்றும் மேலதிக பணிப்பாளர் நாயகம் என பல்வேறுபட்ட பதவிகளையும் வகித்துள்ளார். அவர் திறைசேரியின் பிரதிச் செயலாளர் பதவியை வகிப்பதற்கு முன்னர் நிதி அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக பணியாற்றினார். இவர் நிதி அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக பணியாற்றிய வேளையில், ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியளிக்கப்பட்ட "சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களுக்கான பிராந்திய அபிவிருத்தி கருத்திட்டம் (SMERDP), உலக வங்கியினால் நிதியளிக்கப்பட்ட "சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களுக்கான அபிவிருத்தி வசதியளிப்பு கருத்திட்டம் (SMEDeF), ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியளிக்கப்பட்ட "சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களுக்கான கடன் வசதியளிப்பு SMELoC) போன்ற மீள்நிதியியடல் கடன் முறைமைகள் திட்டங்களை அமுல்படுத்தினார். மேலும், ஜேர்மன் இன்டர்நஷனல் கோர்பரேஷன் அமைப்பினால் நிதியளிக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தையும் ஆசிய அபிவிருத்தியினால் நிதியளிக்கப்பட்ட "சூரிய ஒளியில் இருந்து வலுவைப் பெற்றுக்கொள்ளும் கூரைத்தகடுகளுக்கான கடன் கருத்திட்டம்" என்பனவற்றையும் ஆரம்பித்து வைத்தார்.

தற்போது திரு அத்தபத்து அரசாங்கத்தின் "என்டர்பிறைஸ் ஸ்ரீலங்கா லோன் ஸ்கீம்" இற்குப் பொறுப்பாக உள்ளதுடன் மக்கள் வங்கி, இலங்கை தேயிலை சபை மற்றும் இலங்கை லொத்தர் சபை என்பவற்றின் பணிப்பாளர் சபைகளில் திறைசேரியின் பிரதிநிதியாக அங்கத்துவம் வகிக்கின்றார்.

திரு.அத்தபத்து இலங்கையின் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் பொதுத்துறை நிர்வாகத்தில் முகாமைத்துவ பட்டப்படிப்பில் விஞ்ஞானமானிப் பட்டத்தையும், அவுஸ்திரேலியாவின் பின்டர்ஸ் பல்கலைக்கழகத்தில் சர்வதேச அபிவிருத்தியில் முதுமானிப் பட்டத்தையும் பெற்றுள்ளதுடன் கொழும்பு பல்கலைக்கழகத்தில் பொருளாதார அபிவிருத்தி மற்றும் ஜப்பான் பொருளாதார அபிவிருத்தி கற்கை நிறுவனத்தில் பொருளாதார அபிவிருத்தி தொடர்பான பட்டப்பின் டிப்ளோமா பட்டங்களையும் பெற்றுள்ளார்.

## [3] திரு. எச்.ஏ.கருணாரத்தன

திரு.எச்.ஏ.கருணாரத்ன இலங்கை மத்திய வங்கியின் பிரதி ஆளுனராக செயற்படுவதுடன், இவர் இலங்கை மற்றும் வெளிநாடுகளில் நிதியியல் துறை தொடர்பான நீண்டகால அனுவத்தைக் கொண்டுள்ளார். இவர் இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் கொள்கைக் குழுவில் அங்கத்தவராகவும், நிதியியல் முறைமையின் நிலைத்திருப்புக் குழு, தேசிய கொடுப்பனவுகள் பேரவை மற்றும் ஊழியர் நம்பிக்கை

நிதியத்தின் முதலீடுகள் மேற்பார்வைக் குழு என்பவற்றின் தலைவராகவும் இருக்கின்றார். அத்துடன் இலங்கையின் கொடுகடன் தகவல் பணியகம் மற்றும் இலங்கை வங்கியாளர்களுக்கான கற்கை நிறுவனம் என்பவற்றின் தலைவராக இருக்கின்றார். இதற்கு மேலதிகமாக பிணையங்கள் மற்றும் பரிமாற்றல் ஆணைக்குழு, கொழும்பு டொக்கியாட் மற்றும் வெஸ்ட் கோஸ்ட் பவர் பிறைவட் லிமிடட் என்பவற்றின் சபைகளில் அங்கத்துவம் வகிக்கின்றார். அவருடைய முப்பத்திமூன்று கால சேவைக்காலத்தில் நாணயச் சபையின் உதவி ஆளுனர் மற்றும் செயலாளர். நாணயச் சபைக்கான ஆலோசனை கணக்காய்வுக் குழுவின் செயலாளர், சர்வதேச தொழிற்பாடுகள் திணைக்களத்தின் பணிப்பாளர், உள்ளூர் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் பிரதான கொடுக்கல் வாங்குனர் எனும் சில பிரதான பதிவிகளை வகித்துள்ளார்.

திரு கருணாரத்தன சிங்கப்பூர் நாணய சபையிடமிருந்து வர்த்தகங்களை எதிர்காலங்கள், விருப்பங்கள், பிற வழித்தோன்றல் தயாரிப்புகளை வர்த்தகம் செய்வதற்கான அனுமதிப்பத்திரத்தைப் பெற்றிருந்த வேளையில் ரிப்கோ சிங்கப்பூர் தனியார் நிறுவனத்தின் நிலையான வருமானத் திணைக்களத்தின் பிரதித் தலைவர், சிங்கப்பூர் மன் பினான்ஷியல் பிறைவர் லிமிடட் நிறுவனத்தின் பிரதான இடர் கண்காணிப்புக்கான பிரதித் தலைவர் எனும் பதவிகளையும் வகித்துள்ளார்.

திரு கருணாரத்தன 2009 இருந்து 2015 வரை இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவக் குழு மற்றும் சந்தை தொழிற்படுத்தல் குழு என்பவற்றில் அங்கத்துவம் வகித்துள்ளார். இவர் இலங்கையின் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் பொதுத்துறை நிர்வாகத்தில் முகாமைத்துவ பட்டப்படிப்பில் விஞ்ஞானமானிப் பட்டத்தையும், அமெரிக்காவின் ஒஹியோ பல்கலைக்கழகத்தில் பொருளியலில் முதுமானிப் பட்டத்தையும் பெற்றுள்ளார். அத்துடன் இவர் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் பெலெ அங்கத்துவத்தையும் கொண்டுள்ளார்.

ஒதுக்கீடுகள் மற்றும் போர்ட்போலியோ முகாமைத்துவம் மீதான பல்வேறுபட்ட உள்ளூர் மற்றும் சர்வதேச மாநாடுகளில் வழமையாக உரையாற்றுபவராகவும் திரு கருணாரத்ன விளங்குகின்றார்.

## [4] திரு. டி.ஆர்.சிறிவர்தன

திரு. டி.என்.ஆர். சிறிவர்தன, பேராதனைப் பல்கலைக்கழகத்தில் புவியியல் துறையில் கலைமானி சிறப்புப் பட்டத்தையும் இலங்கை திறந்த பல்கலைக்கழத்தில் சட்டத் துறையில் (LLB) பட்டத்தையும் பெற்றிருப்பதுடன் ஐக்கிய இராச்சியத்திலுள்ள கார்டிப்மெட்ரோபொலிட்டன் பல்கலைக்கழகத்தில் இருந்து தகவல் தொழினுட்பவியல் மற்றும் புலமைச் சொத்துக்கள் பற்றிய சர்வதேச வியாபாரத்தில் முதுமானி (LLM) பட்டத்தையும் பெற்றிருக்கிறார். இவர் தொழில்முறைரீதியான ஓர் சட்ட வழிக்கறிஞரும் ஆவார். திரு. சிறிவர்தன, கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தில் 1988 ஆம் ஆண்டில் இணைந்து கொண்டார் தற்போது, அவர் கம்பனிகள் பதிவாளர் நாயகம் பதவியினை வகிக்கிறார். திரு. சிறிவர்தன, இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகம், இலங்கை கணக்கீடு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை, இலங்கை பிணையங்கள் மற்றும் பரிமாற்று ஆணைக்குழு ஆகியவற்றின் ஓர் பதவிவழி உறுப்பினராகவும் உள்ளார்.

## [5] திரு. யுதிஸ்ரன் கனகசபை

திரு. கனகசபை, கணக்காய்வுக் குழு, சம்பந்தப்பட்ட பகுதி அளவிலான பரிவர்த்தனைக் குழு ஆகியவற்றின் நிர்வாகம் அல்லாத, சுயாதீனப் பணிப்பாளராகவும் தலைவராகவும் கடமையாற்றி வருகின்றார். 2018 பெப்ரவரி 01 ஆம் திகதி முதல் சம்பளம் மற்றும் நட்டஈட்டுக் குழுவில் உறுப்பினராக இருந்து வருகின்றார்.

சிலோன் டுபாக்கோ பிஎல்சியின் சபை கணக்காய்வுக் குழுவின் தலைவராவார். மேலும் வரையறுக்கப்பட்ட (தனியார்) மிலேனியம் தகவல் தொழில்நுட்பங்கள், கார்கில்ஸ் பு.்.ட் கம்பனி, வரையறுக்கப்பட்ட ஹன்டர்ஸ் பிஎல்சி மற்றும் வரையறுக்கப்பட்ட லங்கா கெனரீஸ் கம்பனி ஆகியவறறின் நிர்வாகம் அல்லாத இயக்குனராகவும் சபை கணக்காய்வுக் குழுவின் உறுப்பினராகவும் செயற்பட்டு வருகின்றார்.

இவர், 2016 ஆகஸட் முதல் 2018 டிசமப்ர் 31 வரை யூனியன் வங்கி பிஎல்சியின் (இது ஒரு டெக்ஸாஸ் பசிபிக் குழுமத்தின் துணைக் கம்பனி) கணக்காய்வுக் குழுவின் தலைவராக செயற்பட்டு வந்தார். அத்துடன் 2006 ஆம் ஆண்டில் பிறைஸ்வோட்டர் ஹவுஸ் கூப்பர்ஸ் நிறுவனத்தின் சிரேஸ்ட பங்குதாரர் / பிரதம நிர்வாக அலுவலராவார். இவர், 2017 மார்ச் 31 ஆம் திகதி ஓய்வு பெற்றார். இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் ஒரு உறுப்பினராவார்.

## [6] திரு. எரெல் பெரேரா

திரு எரெல் ஏ.டி.பெரேரா இங்கிலாந்து, மலேசியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளில் பலவேறு வர்த்தகங்களில் சிரேஸ்ட முகாமைத்துவப் பதவிகளை வகித்துள்ளார். அவர் இலங்கை திரும்பிய பின்னர் வெளிநாட்டு முதலீடு மற்றும் தொழில்நுட்ப பரிமாற்றங்கள் என்பவற்றுடன் தொடர்புபட்ட கூட்டு முயற்சிகளை முன்னேற்றுவதில் கவனம் செலுத்தினார்.

இவர், விபரக்கொத்து வெளியீடு, கொடுப்பனவுத் தொலைபேசிகள் மற்றும் பேஜிங் கூடு முயற்சித் திட்டங்கள் ஆகியவற்றுக்கு முன்னோடி அந்தஸ்துடன் கூடிய அங்கிகாரத்தை முதலீட்டு சபையில் இருந்து வெற்றிகரமாகப் பெற்றுக் கொண்டார். மேலும் கூட்டுமுயற்சி முதலீடு மற்றும் கூறுநம்பிக்கை "start-ups" என்பவற்றை இலங்கையில் ஊக்குவிப்பதற்கும் கருவியாக செயற்பட்டார். திரு. பெரேரா, 1990 ஆம் ஆண்டு புவுநு (இப்போது Verizon USA) ஜனாதிபதி சர்வதேச கிண்ணத்தைப் பெற்ற பெருமையையும் தனதாக்கிக் கொண்டார். 1995 ஆம் ஆண்டு அவருடைய வழிகாட்டலின் கீழ் விபரக்கொத்து வெளியீட்டுக் குழு முதல் முறையாக இலங்கை தேசிய தர விருதைப் பெற்றுக்கொண்டது. அவர், அமெரிக்காவின் வணிகக் கழகத்தின் (AMCHAM) ஸ்தாபக உறுப்பினராவார். அவர் தற்போது இலங்கையின் பல்வேறு பொது மற்றும் தனியார் நிறுவனங்களில் சுயாதீன பணிப்பாளராக செயறபட்டு வருகின்றார்.

## [7] திரு. உபுல் தேஷபிரிய

திரு. உப்புல் தேஷப்பிரிய சட்ட வழக்கறிஞ்ஞராவார். அத்துடன், கொழும்பு பல்கலைக்கழகத்தில் இருந்து சட்டமானி (சிறப்பு) பட்டத்தைப் பெற்றுள்ளார். அவர் 2015 - 2018 வரை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பணிப்பாளராகக் கடமையாற்றினார். மேலும், 2014 - 2016 வரை இலங்கையின் BAR அமைப்பின் முன்னாள் பொருளாளரும் ஆவார்.

# சிரேஷ்ட முகாமைத்துவக் குழு




[1] திருமதி. தமயந்தி பெர்னான்டோ (பணிப்பாளர் நாயகம்)
[2] திருமதி. சமரி ஏக்கநாயக்க (பணிப்பாளர் மேற்பார்வை)
[3] திரு. சதீஸ் குமார் (பணிப்பாளர் நிதி மற்றும் நிர்வாகம்)
[4] திருமதி. கசுனி பின்னவல (பணிப்பாளர் சட்டம் மற்றும் அமுலாக்கல்)
[5] திரு. ராஜன் நிருபசிங்கம் (உதவிப் பணிப்பாளர் சட்டம்)
[6] திரு. பிம்சரா விஜேசிங்க (உதவிப் பணிப்பாளர் சந்தை அபிவிருத்தி மற்றும் வெளிவாரி உறவுகள்)
[7] திருமதி. சாரிகா வத்துஹேவா (உதவிப் பணிப்பாளர் மேற்பார்வையாளர்)

# அலுவலக உத்தியோகத்தர்கள்



இடமிருந்து வலம்

திருமதி. துஷாரி விஜேவர்தன, திருமதி. பவித்ரா புஞ்சிஹேவா, திரு. எதிர்ராஜ் சிறிகாந்தன், திருமதி. கௌஷாலி தயாரத்ன, திருமதி. பிரியங்கி த சில்வா



இடமிருந்து வலம்

திருமதி. நிலங்கா வலிசுந்தர, செல்வி. ஜயனி ராஜபத்திரன, செல்வி. உபலக்ஷி ரனசிங்க, திரு. ரொஷான் த கொஸ்தா, திருமதி. சந்திமா கம்புறுகமுவ, திருமதி. கோகில சிறிவர்தன, திரு. லக்ஷ்மன் விஜேசிங்க

# அலுவலக உத்தியோகத்தர்கள்



இடமிருந்து வலம்

செல்வி. சத்துனி தலபாவில, திருமதி. ஷானிகா நாணயக்கார, திருமதி. டெசிகா ரத்நாயக்க, திரு. நயன ரவீந்திர, திருமதி. திலினி வகிஸ்ட, திரு. சானக லன்காநாத.



இடமிருந்து வலம்

செல்வி. சிரோமி ரத்நாயக்க, திருமதி. உபேந்திர செனவிரத்ன, திருமதி. டி.டபிலயூ.எஸ்.எஸ்.சுபுலி, திருமதி. சஷினி பிரேமால், திரு. கலன புஷ்பகுமார, திருமதி. விந்தியானி துலபிட்டிய

# அலுவலக உத்தியோகத்தர்கள்



இடமிருந்து வலம்

திருமதி. லசந்தி தொட்டஹேவா, திரு. சமிந்த லால் குமார, திருமதி. ருவினி லியனகே,
திரு. சரித விக்ரமசிங்க, திரு. அனுஷ்க பண்டார, திருமதி. சியாமளி அத்தநாயக்க, திருமதி. மரினா டயஸ்



இடமிருந்து வலம்

திரு. நளின் தலகல, திருமதி. வீனா செனவிரத்ன, திரு. லக்மின பத்திராஜா, திருமதி. மல்ஹாரி விக்ரமசிங்க,
திருமதி. சுஜீவ ரணசிங்க, திரு. சனத் உதயங்க, செல்வி. சந்தமாலி கருணாதிஸ்ஸ, திரு. சமன் சேனாதீர



# மீளாய்வுகள்


| | |
|---|---|
| பொது மீளாய்வு | 20 |
| புள்ளிவிபர மீளாய்வு | 26 |
| தொழிற்பாட்டு மீளாய்வு | 66 |

# பொது மீளாய்வு

## சட்டம் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் மறுசீரமைப்பு நிர்வாகம்

### சட்டவாக்கம்

இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் (இதற்குப் பின்னர் ஆணைக்குழு எனக் குறிப்பிடப்படும்) இலக்கு மற்றும் பொறுப்பு யாதெனில், காப்புறுதிப் பூட்கையாளர்கள் மற்றும் சாத்தியமான காப்புறுதிக் பூட்கையாளர்கள் ஆகியோரின் நலன்களைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் இலங்கையில் காப்புறுதி வியாபாரத்தை நேர்மைத்திறனுடன் தொழிற்துறை ரீரியாகவும் விவேகமாகவும் நடாத்துதலாகும்.

2000ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க காப்புறுதிக் கைத்தொழில் ஒழுங்குமுறைப்படுத்தல் சட்டம் (இதன் பின்னர் "சட்டம்" எனக் குறிப்பிடப்படும்) காப்புறுதிக் கம்பனிகள், காப்புறுதி தரகுக் கம்பனிகள், காப்புறுதி முகவர்கள் மற்றும் நட்ட சீராக்கலாளர்கள் ஆகியவற்றை ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை செய்வதற்குரிய இயைபான சட்டக் கட்டமைப்பைத் தருகின்றது.

2007 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, 2011ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க மற்றும் 2017ஆம் ஆண்டின் 23ஆம் இலக்கச் (திருத்தம்)சட்டம் என்பவற்றினால் காப்புறுதிக் கைத்தொழிலின் ஒழுங்குமுறைப்படுத்தல் திருத்தப்பட்டுள்ளது.

### துணைச் சட்டவாக்கம்

இவ்வாண்டில் இந்தச் சட்டத்திற்கு கொண்டுவரப்பட்ட துணைநிலைச் சட்டவாக்கம் கீழே ஒழுங்குமுறைப்படுத்தல் சீர்திருத்தங்களின் கீழ் விபரிக்கப்பட்டுள்ளன

#### ஒழுங்குமுறைப்படுத்தல் மறுசீரமைப்புகள்

#### விதிகள்

i) காப்புறுதி தரகராக பதிவினைப் பெற்றுக்கொள்வதற்கான பதிவுசெய்தல் கட்டணத்தை அதிகரித்தல்

காப்புறுதி முகவராக பதிவுசெய்துகொள்வதற்கான பதிவுசெய்தல் கட்டணம் இ.ரூபா 100,000/- இருந்து இ.ரூபா 150,000/- ஆக அதிகரிக்கப்பட்டது (காப்புறுதி தரகு செய்தல் வியாபாரத்தின் வகுப்புக்கான). இந்த விதி 1 மே 2018ஆம் திகதியில் இருந்து அமுலுக்கு வந்தது.

ii) காப்புறுதித் தரகுக் கம்பனிகளுக்கான காலாண்டு விபரத்திரட்டுகளின் மாதிரியைத் திருத்துதல்

ஆணைக்குழு மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக காலாண்டு விபரத்திரட்டுகளின் மாதிரியை மீளத்திருத்தியது. இந்த விதி 08 ஒக்டோபர் 2018ஆம் திகதியில் இருந்து அமுலுக்கு வந்தது.

#### சட்டத்தின் 96அ பிரிவின் கீழ் விநியோகிக்கப்பட்ட பணிப்புரை

i) பணிப்புரை 14 – நிதியில் கையாடல் அல்லது மோசடி போன்ற காரணங்களினால் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட நபர்களை சேவையில் இணைத்துக்கொள்வதைத் தவிர்த்தல்

நிதியியல் கையாடல் அல்லது மோசடி காரணமாக சேவையிலிருந்து (எந்தவொரு தொழிலாக இருந்த போதும்) சேவைஇடைநிறுத்தப்பட்ட நபரை மீள தொழிலில் இணைத்துக்கொள்வதை கைத்தொழிற் துறை தவிர்த்துக்கொள்வதற்கான 14ஆம் இலக்கப் பணிப்புரையை ஆணைக்குழு விநியோகித்தது. இந்தப் பணிப்புரை 09 ஜனவரி 2018ஆம் திகதியில் இருந்து அமுலுக்கு வந்தது.

ii) பணிப்புரை 15 – நீண்டகால காப்புறுதி வியாபாரத்திற்கான காப்புறுதி நிதியத்தை முகாமைத்துவம் செய்வதற்கான நடைமுறை

இலங்கை காப்புறுதிச் சங்கத்தின் விதப்புரைகளைக் கவனத்தில் கொண்டு ஆணைக்குழு அனைத்து நீண்டகால காப்புறுதிக் கம்பனிகளுக்கு 15ஆம் இலக்கப் பணிப்புரையை விநியோகித்தது. இந்தப் பணிப்புரை 16 பெப்பரவாரி 2018ஆம் திகதியில் இருந்து அமுலுக்கு வந்தது.

iii) பணிப்புரை 16 – ஒரு தடவை மிகைக்கான செயற்பாடு மற்றும் அடையாளம் காணல்

ஒரு தடவை மிகைக்கான செயற்பாடு மற்றும் அடையாளம் காணலுக்கான பொறிமுறை தொடர்பாக அனைத்து நீண்ட கால காப்புறுதிக் கம்பனிகளுக்கும் 16 ஆம் இலக்க பணிப்புரையை ஆணைக்குழு விநியோகித்தது. இந்தப் பணிப்புரை 20 மார்ச் 2018ஆம் திகதியில் இருந்து அமுலுக்கு வந்தது.

iv) பணிப்புரை 17 – காப்புறுதிக் கம்பனிகளுக்கான கூட்டிணைந்த ஆளுகை

காப்புறுதிக் கம்பனிகளின் விவகாரங்களில் அதிகூடிய வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு 17 ஆம் இலக்க பணிப்புரையை ஆணைக்குழு விநியோகித்தது. இந்தப் பணிப்புரை 01 ஜூலை 2018ஆம் திகதியில் இருந்து அமுலுக்கு வந்தது.

### தீர்மானங்களுக்கான திருத்தங்கள்

#### i) தற்போதுள்ள 9ஆவது தீர்மானத்திற்கான திருத்தம்

இலங்கை காப்புறுதிச் சங்கத்தின் விதப்புரைகளைக் கவனத்தில் கொண்டு ஆணைக்குழு காப்புறுதி தரகர்களின் பதிவுசெய்தலைப் புதுப்பிப்பதற்கான கட்டணம் தொடர்பான 9வது தீர்மானத்தை திருத்தியது. திருத்தப்பட்ட பதிவுசெய்தலைப் புதுப்பிப்பதற்கான கட்டணம் 13 ஒகஸ்ட் 2018ஆம் திகதியில் இருந்து பிரயோகிக்கப்பட்டது.

#### ii) தற்போதுள்ள 12ஆவது தீர்மானத்திற்கான திருத்தம்

16ஆம் இலக்கப் பணிப்புரை மற்றும் ஏனைய திருத்தங்களின் தேவைப்பாட்டுடன் கூட்டிணைக்கும் வகையில் காப்புறுதியாளர்களுக்கான காலாண்டு விபரத்திரட்டுகளின் மாதிரி திருத்தப்பட்டது.

ஒவ்வொரு காப்புறுதியாளரும், 2018 ஏப்பிரல் 1ஆம் திகதியில் இருந்து ஆரம்பிக்கும் ஒவ்வொரு காலண்டுக்கும் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்க வேண்டிய காலாண்டு விபரத்திரட்டுகளை திருத்தப்பட்ட காலாண்டு விபரத்திரட்டுகளின் மாதிரிக்கு அமைவாக தயாரித்தல் வேண்டும்.

மாதாந்த அடிப்படையில் அறிக்கையிட வேண்டிய காப்புறுதியாளர்கள், மேற்குறித்த தேவைப்பாடுகளுடன் 31 ஜுலை 2018ஆம் திகதி முடிவடைந்த மாதத்தில் இருந்து இணங்குதல் வேண்டும். அத்துடன் வழங்கப்பட்ட பணிப்புரைக்கு அமைவாக அந்தக் காலத்தினுள் விபரத்திரட்டை ஆணைக்குழுவிற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

#### iii) தற்போதுள்ள 14ஆவது தீர்மானத்திற்கான திருத்தம்

16ஆம் இலக்கப் பணிப்புரை மற்றும் 14 மற்றும் 15ஆம் இலக்க தீர்மானங்களின் மீது வெளிவாரி கணக்காய்வாளரின் சான்றுபடுத்தும் தேவைப்பாட்டுடன் கூட்டிணைக்கும் வகையில் காப்புறுதியாளர்களுக்கான வருடாந்த விபரத்திரட்டுகளின் மாதிரி திருத்தப்பட்டது. இந்த புதிய மாதிரி 31 டிசம்பர் 2017ஆம் திகதியில் இருந்து பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

#### iv) தற்போதுள்ள 14ஆவது தீர்மானத்திற்கான திருத்தம்

16ஆம் இலக்கப் பணிப்புரை மற்றும் 14 மற்றும் 15ஆம் இலக்க தீர்மானங்களின் மீது வெளிவாரி கணக்காய்வாளரின் சான்றுபடுத்தும் தேவைப்பாட்டுடன் கூட்டிணைக்கும் வகையில் காப்புறுதியாளர்களுக்கான காப்புறுதிக் கணிப்பீட்டு சுருக்கத்தின் மாதிரி திருத்தப்பட்டது. இந்த புதிய மாதிரி 31 டிசம்பர் 2017ஆம் திகதியில் இருந்து பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

### காப்புறுதியாளர்களுக்கான வருடாந்தக் கட்டணத்தை அதிகதிப்பதற்காக ஒழுங்குவிதியைத் திருத்துதல்.

தற்போதுள்ள வருடாந்தக் கட்டணத்தை காப்புறுதியாளர்களின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் மீது விதிக்கப்படும் 0.10% வீதத்திலிருந்து 0.125% வீதமாக அதிகரிப்பதற்கு அவசியமான உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்காக நிதி அமைச்சுக்கு அவசியமான ஆவணங்களை ஆணைக்குழு வழங்கியுள்ளது. மேற்குறிப்பிட்ட திருத்தம் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், இது 31 டிசம்பர் 2018ஆம் திகதியில் இருந்து அமுலுக்கு வரும்.

## சந்தை கட்டமைப்பு

### காப்புறுதியாளர்கள்

சட்டத்தின் 12 ஆம் பிரிவிற்கு அமையவும், சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஏற்பவும், சட்டத்தின் கீழ், அத்தகைய வியாபாரத்தின் பதிவு அல்லது பதிவு செய்ய கருதும் எந்த ஒரு நபரும் அத்தகைய பதிவினை மேற்கொள்ளாதிருப்பாராயின் இலங்கையில் காப்புறுதி வியாபாரத்தை மேற்கொள்ள முடியாது.


சட்டத்தின் 13 ஆம் பிரிவிற்கு அமைவாக, இலங்கையில் காப்புறுதி வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு ஆர்வமுடைய ஒருவர், 2007 இன் 7ஆம் இல. கம்பனிகள் சட்டத்தின் கீழ் பொதுக் கம்பனி ஒன்றில் ஒன்றிணைந்திருக்க வேண்டும் என்பதுடன், சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நியமத் தேவைகள் அனைத்தையும் பூரணப்படுத்தியதன் பின்னர் காப்புறுதி தொழிலின் ஒழுங்கமைப்பு சட்டத்தின் கீழ் காப்புறுதி வழங்குனராக பதிவு செய்து கொள்ளவும் வேண்டும்.

ஆண்டின் இறுதியில் அன்றுள்ளவாறு சட்டத்தின் கீழ் காப்புறுதி வழங்குனர்களாக 25 கம்பனிகள் பதிவு செய்துள்ளன. எம்பிஎஸ்எல் காப்புறுதிக் கம்பனி லிமிடட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்த நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரத்திற்கான அனுமதி 28 ஜுன் 2017ஆம் திகதியில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளது. மேலும், ஏஜஜி காப்புறுதி லிமிடட் நிறுவனம் எந்தவொரு புதிய காப்புறுதி வியாபாரத்தையும் ஏற்றுக்கொள்ளமாட்டாது மற்றும் 2007 ஆம் ஆண்டு 07ஆம் இலக்க சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக திரவப்படுத்தல் ஒருவரை நியமித்து இலங்கையில் இருந்து வெளியேறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்றது.

வியாபாரத்தை கொண்டு செல்வதற்கு பதிவு செய்துள்ள காப்புறுதி வியாபாரத்தை மேற்கொள்ளும் கம்பனிகளின் வகைகளை வரைபு 01 காண்பிக்கின்றது. தொழிற்படும் 25 காப்புறுதி கம்பனிகளில், நீண்டகால காப்புறுதி வியாபாரத்தையும், பொதுவான காப்புறுதி வியாபாரத்தையும் மேற்கொள்ளும், கலவை காப்புறுதி வழங்குனர்களாக பதிவு செய்யப்பட்ட 2 கம்பனிகளும், நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தை

மேற்கொள்ள பதிவு செய்து கொண்ட 12 கம்பனிகளும், பொதுவான காப்புறுதி வியாபாரத்தை மேற்கொள்ள பதிவு செய்து கொண்ட 11 கம்பனிகளும் உள்ளடங்கும்.

வரைபடம் 1
காப்புறுதியாளர்களினால் கொண்டு நடாத்தப்படும் காப்புறுதி வியாபாரத்தின் வகைகள்





## காப்புறுதித் தரகர்கள்

2007 இன் 7ஆம் இல. கம்பனிகள் சட்டத்தின் கீழ் உட்சேர்க்கப்பட்டு காப்புறுதி தரகர் வியாபாரத்தை மேற்கொள்வதற்காக சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு கம்பனி காப்புறுதி தரகர் எனப்படும். காப்புறுதி வழங்குனர், காப்புறுதி வைப்பாளர் அல்லது காப்புறுதி ஒன்றை பிரேரிப்பவர்கள் அல்லது மீள் காப்புறுதி செய்பவர்களுக்கு அல்லது ஒரு காப்புறுதி கம்பனியுடன் அவர்கள் சார்பாக காப்புறுதி வழங்குனர் அல்லது காப்புறுதி கம்பனியிடமிருந்து தரகுப் பணத்தை அல்லது தரகு எனும் கொடுப்பனவு ஒன்றைப் பெற்றுக் கொள்ளும் எதிர்பார்ப்புடன் காப்புறுதி வியாபாரத்திற்கு இடையீட்டாளர்களாக காப்புறுதி தரககர்கள் செயற்படுகின்றனர்.

ஆண்டிறுதியின் போது 63 கம்பனிகள் காப்புறுதி தரகர்களாக பதிவு செய்யப்பட்டிருந்தன. சொல்லப்பட்ட கம்பனிகளில், 45 கம்பனிகள் நீண்ட காலம் மற்றும் பொதுவான காப்புறுதி தரகு வியாபாரம் இரண்டிலும் பதிவு செய்திருந்த அதே நேரம் 18 கம்பனிகள் பொது காப்புறுதி தரகு வியாபாரத்தில் மட்டும் பதிவு செய்திருந்தன.

வரைபு 2 இந்த ஆண்டில் காப்புறுதி தரகர்கள் மேற்கொண்ட காப்புறுதி தரகு வியாபாரத்தின் வகைப்படுத்தல்களை காண்பிக்கின்றது.

வரைபடம் 2
காப்புறுதி தரகர்களினால் இவ்வருடம் நடத்தப்பட்ட காப்புறுதி இடைத்தரகு வர்த்தகத்தின் வகைகள்




## காப்புறுதி முகவர்கள்

சட்டத்தின் கீழ் காப்புறுதி வழங்குனர் அல்லது காப்புறுதி தரகர் ஒருவருடன், காப்புறுதி முகவராக பதிவு செய்து கொள்ளும் தனியாளர்கள், அத்தகைய காப்புறுதி வழங்குனர் அல்லது காப்புறுதி தரகர்களுடன் தரகை நோக்கமாகக் கொண்டு காப்புறுதி வியாபாரத்தை பதிவு செய்வதவர்களாவர். பதிவுசெய்வதற்கான தகைமைகள் சபையினால் நிர்ணயிக்கப்படும்.


சட்டத்தின் 34 ஆம் பிரிவிற்கு அமைவாக, காப்புறுதி முகவர்கள் முக்கிய விநியோக ஊடகமாக இருப்பதுடன், இவர்களூடாக காப்புறுதி வழங்குனர்கள் காப்புறுதி வியாபாரத்தை தேடிப் பெற்றுக் கொள்ளுகின்றனர்.

காப்புறுதி வழங்குனர்களினால் வழங்கப்பட்ட தகவல்களுக்கு அமைவாக இந்த ஆண்டின் போது காப்புறுதி முகவர்களாக சேர்க்கப்பட்ட தனிநபர்களின் மொத்த எண்ணிக்கை ஏறத்தாழ 15,798 ஆகவிருந்ததுடன், இது கடந்த ஆண்டின் (14,595) எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது 8.24% வீத அதிகரிப்பைக் காட்டுகின்றது.

இந்த ஆண்டின் இறுதியில், காப்புறுதி வழங்குனர்களை பிரதிநிதித்துவப்படுத்திய காப்புறுதி முகவர்களின் மொத்த எண்ணிக்கை ஏறத்தாழ 44,919 ஆகும். இது கடந்த ஆண்டின் (45,228) எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது 0.68% வீத வீழ்ச்சியாகும்.

இந்த வருடம் காப்புறுதி நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நிறுவன ரீதியான காப்புறுதிக் கம்பனிகளின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 53 ஆகும்.

வரைபடம் 3
2017.12.31 இல் மொத்த காப்புறுதி முகவர்கள




வரைபு 03 காப்புறுதி கம்பனிகளுடன் பதிவு செய்து கொண்டுள்ள தனிப்பட்ட காப்புறுதி முகவர்களை காட்டுகின்றது.

இந்த வருடம் காப்புறுதி முகவர் நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தனிப்பட்ட காப்புறுதி முகவர்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 456 ஆகும்.

## நட்ட சீராக்கலாளர்கள்

இவ்வருட இறுதியில் 10 தனிப்பட்ட நட்ட சீராக்கலாளர்கள் செயற்பட்டார்கள்.

2017 ஜூலை 5ஆம் திகதியிடப்பட்ட 2026/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் நட்ட சீராக்கலாளர்களுக்கான பதிவு விதிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவில் பதிவு செய்யாமல் நட்ட சீராக்கலாளராக (பிரிவு 114(1) இல் வரையறுக்கப்பட்டவாறு) எவரேனும் நபர் செயற்படுதல் அல்லது வைத்திருத்தல் தடைசெய்யப்பட்டு 2011ஆம் ஆண்டு 3ஆம் இலக்க திருத்தச் சட்டத்தின் மூலம் 2011ஆம் ஆண்டு சட்டம் திருத்தப்பட்டது. சட்டத்தின் 89அ(2) ஆம் பிரிவுக்கு அமைவாக பதிவு செய்வதற்கான தேவைப்பாடுகளில் இருந்து வரையறுக்கப்பட்ட விதிவிலக்குகள் சில உள்ளன.

சட்டத்தின் 89பி பிரிவின் கீழ் நட்ட சீராக்கலாளராக பதிவு செய்வதற்கு அவசியமான குறிப்பிடப்பட்ட

தகைமைகள் மற்றும் அனுபவங்களை குறிப்பிட்ட விண்ணப்பங்களைக் கோருவதற்கு ஆணைக்குழு விதிகளை உருவாக்க முடியும். சட்டத்தின் 89 சீ (1)இன் கீழ் ஆணைக்குழு பதிவுசெய்வதற்கு அவசியமான விண்ணப்பங்களைக் கோருவதற்கு அவசியமான ஆவணங்கள், தகவல்கள் மற்றும் கட்டணங்களை குறிப்பிட்டு விதிகளை உருவாக்க முடியும்.


அதற்கமைவாக, ஆணைக்குழு நட்ட சீராக்கலாளராக பதிவு செய்வதற்கு அவசியமான தகைமைகள் மற்றும் அனுபவங்களை கோரி மேற்குறிப்பிட்ட விதிகளை உருவாக்கும்.

## கம்பனியின் அந்தஸ்தும் மூலதன மாற்றங்களும்

காப்புறுதி வர்த்தகத்தில் ஈடுபடும் காப்புறுதி வழங்குனர்களில் 09 கம்பனிகள் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்டன. அவையாவன ஏஐஏ (யுஐயு) இன்ஸ்யூரன்ஸ் லங்கா பிஎல்சி, யூனியன் எஸ்யூரன்ஸ் பிஎல்சீ, சொப்ட்லொஜிக் லைப் இன்சூரான்ஸ் பிஎல்சி, எச்என்பி அஸ்யூரன்ஸ் பிஎல்சி, அமானா டக்பாபுல் பிஎல்சீ, அமானா டக்பாபுல் லைப் பிஎல்சீ, ஜனசக்தி இன்ஸ்யூரன்ஸ் பிஎல்சீ ஆர்பிக்கோ இன்ஸ்யூரன்ஸ் பிஎல்சி மற்றும் பீப்பள்ஸ் இனசூரனஸ் பிஎல்சீ, என்பனவாகும்.

பட்டியலிடப்பட்டதும், பட்டியலிடப்படாததுமான காப்புறுதியாளர்களின் சதவீதத்தை வரைபு 4 காண்பிக்கின்றது.

வரைபடம் 4
பட்டியலிடப்பட்டதும், பட்டியலிடப்படாததுமான காப்புறுதியாளர்களின் நிலவரம்




1987 இன் 36 ஆம் இலக்க இலங்கையின் பிணையங்களும் பரிவர்த்தனையும் ஆணையகத்தின் கீழ், உரிமம் பெற்ற பங்கு பரிவர்த்தனையில் தற்போதுள்ள காப்புறுதியாளர்கள் பட்டியலிடப்பட்டிருக்க வேண்டும் எனும் தேவைப்பாட்டை 2011ம் ஆண்டு 3ஆம் இலக்கச் திருத்தச் சட்டம் கொண்டுள்ளது. பெப்ரவரி 2015 அன்று அல்லது அதற்கு முன்னர், கலவைக் காப்புறுதி கம்பனிகள் அதன் வியாபாரத்தை இரண்டு வெவ்வேறு கம்பனிகளாக வேறாக்கி பெப்பரவரி 2016 அன்று அல்லது அதற்கு முன்னர் பட்டியலிடுதல் வேண்டும்.

திருத்தச் சட்டம் நடைமுறைக்கு வந்ததன் பின்னர் காப்புறுதி வழங்குனராக பதிவு செய்யும் புதிய கம்பனி ஒன்றிற்கு சபையின் உரிமம் வழங்கப்பட்ட மூன்று ஆண்டு காலத்திற்குள், 1987 இன் 36 ஆம் இலக்க இலங்கை பிணையங்களும், பரிவர்த்தனைகளும் ஆணையத்தின் கீழ் உரிமம் பெற்ற பங்கு பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட வேண்டிய தேவையுள்ளது.

2011 ஜூன் மாதத்திற்கு முன்னால் காப்புறுதி வழங்குனராக பதிவு செய்யப்பட்ட கம்பனி ஒன்றிற்கு, 2015 பெப்ரவரி அன்று அல்லது அதற்கு முன்னர் காப்புறுதி வியாபாரத்தின் ஒவ்வொரு வகைப்படுத்தலுக்கும் அதன் பங்கு மூலதனத்தை மிகக் குறைந்தது ரூபா ஐந்நூறு மில்லியனை அதிகரிக்குமாறு கூற வேண்டிய தேவை ஆணைக்குழுவிற்கு உள்ளது.

2011 ஜூன் மாதத்தை தொடர்ந்து பதிவு செய்து கொண்டுள்ள காப்புறுதிக் கம்பனிகள், ரூபா 500 மில்லியனுக்கு குறையாத பங்கு மூலதனத்தைக் கொண்டுள்ளனர்.

## காப்புறுதியாளர்களிடமிருந்து ஒரு செஸ் தீர்வை

சட்டத்தின் 7 ஆம் பிரிவிற்கு அமைவாக காப்புறுதி பூட்கையாளர்களின் பாதுகாப்பு நிதியம் ஒன்றை உருவாக்குவதற்கு செஸ் தீர்வை ஒன்றை ஏற்படுத்துமாறு கட்டளை ஒன்று கௌரவ நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சரினால் பிறப்பிக்கப்பட்டது. 09 ஜூலை 2002ஆம் திகதி உடைய 1244/5 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின்படி, நீண்டகால காப்புறுதி வர்த்தகத்தின் மொத்த நிகர காப்புறுதி கட்டணத்தின் 0.2% வீதமும் மற்றும் பொது காப்புறுதி வர்த்தகத்தின் மொத்த நிகர காப்புறுதி கட்டணத்தின் 0.4%மும் காப்புறுதி வைப்பாளரின் பாதுகாப்பு நிதியத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

2003 ஜனவரியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு, காப்புறுதியாளர்கள் வழங்குனர்களிடமிருந்து செஸ் சேகரிப்பு ஆரம்பமாகியதுடன், 2018 ஆம் ஆண்டிற்கான செஸ் சேகரிப்பு தொகை ரூபா 479 மில்லியன் ஆகும்

வரைபு 5 செஸ் மற்றும் காப்புறுதி பூட்கையாளர்களின் பாதுகாப்பு நிதியம் என்பவற்றின் அசைவை காண்பிக்கின்றது.

## காப்புறுதி பூட்கையாளர்களின் பாதுகாப்பு நிதியம்

சட்டத்தின் 103 ஆம் பிரிவிற்கு அமைவாக காப்புறுதியாளர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட செஸ் காப்புறுதிப் பூட்கையாளர்களின் பாதுகாப்பு நிதியத்தில் வைப்பு செய்யப்படுகின்றது.

இந்த நிதி காப்புறுதிப்பூட்கையாளர்களின் பொதுப் பாதுகாப்புக்கும் மற்றும் ஏதேனும் விசேட நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படலாம். இது காப்புறுதிப் பூட்கையாளர்களுக்கும் உத்தேச பூட்கையாளர்களுக்கும் நன்மையளிப்பதற்காக இருக்கின்றது.


(அ) பொதுமக்கள் மத்தியில் காப்புறுதி தொழில் குறித்த விழிப்புணர்வை உருவாக்குவதில் ஏற்படக்கூடிய செலவினம் மற்றும் காப்புறுதி தொழிலை அபிவிருத்தி செய்வதில் ஏற்படக்கூடிய ஏனைய செலவினங்களை தீர்த்தல்.

(ஆ) ஆணைக்குழுவின் அதிகாரங்கள், நடவடிக்கைகள் மற்றும் கடமைகள் ஆகியவற்றை பிரயோகிப்பது, கடமையாற்றுவது மற்றும் செயற்படுத்துவதினால் ஏற்படக்கூடிய செலவினத்தை தீர்த்தல்.

காப்புறுதி பூட்கையாளர்களின் பாதுகாப்பு நிதியத்தின் வரவில் இருக்கும் தொகை அரசாங்க பிணையங்களிலும் அரசாங்க வங்கிகளின் நிலையான வைப்புகளிலும் முதலீடு செய்யப்படும்.

2016 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு நிதியத்திற்கு திரண்ட தொகை ரூபா 5,043 மில்லியனாகும். இது முன்னைய ஆண்டைவிட (ரூபா 4,110 மில்லியன்) 22.70மூ அதிகரிப்பாகும்.

வரைபடம் 05
செஸ் மற்றும் காப்புறுதிப் பூட்கையாளர்களின் பாதுகாப்பு நிதியம்




## காப்புறுதித் தீர்வை

பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் எந்தவொரு வகுப்பு தொடர்பிலும் தற்போது எவ்வித தீர்வைகளும் இல்லை. மோட்டார் காப்புறுதி, தீ அபாய காப்புறுதி, தொழிலாளர் நட்ட ஈட்டுக் காப்புறுதி என்பவற்றிற்கு இருந்த தீர்வைகள் முறையே 1 ஜனவரி 2002, 2005, 2007 இலிருந்து நடைமுறைக்கு வருமாறு நீக்கப்பட்டன.

## சட்டத்தின் பிரயோகத்திற்கான விதி விலக்குகள்

சட்டத்தின் 12 (3) ஆம் பிரிவிற்கு அமைவாக, 1999 இன் 20 ஆம் இலக்க விவசாயம் மற்றும் கமத்தொழில் காப்புறுதி சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட விவசாய மற்றும் கமத்தொழில் சபை, 1978 இன் 15 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதி கூட்டுத்தாபன சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதி கூட்டுத்தாபனம் 1996 இன் 17 ஆம் இலக்க சமூக பாதுகாப்பு சபை சட்டத்தின் கீழ் சமூக பாதுகாப்பு சபை என்பவற்றுக்கு சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படுவதில்லை.

## தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் (NITF)

2006 இன் 28 ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதிய சட்டத்தினால் (NITF சட்டம்) தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதிய சபை தாபிக்கப்பட்டு திருத்தச் சட்டத்தினால் ஆணைக்குழுவின் நோக்கெல்லையின் கீழ் கொண்டு வரப்பட்டது.

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதிய சட்டத்திற்கு அமைவாக, வேலை நிறுத்தம், கலவரம், சிவில் அமைதியின்மை மற்றும் பயங்கரவாதம் ஆகியவற்றிற்காக நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சினால் பேணப்பட்டு வந்த நிதி தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தினால் உள்ளீர்ப்பு செய்யப்பட்டது. காப்புறுதியாளர்களினால் விநியோகிக்கப்படும் வேலை நிறுத்தம், கலவரம், சிவில் அமைதியின்மை மற்றும் காப்புறுதி இடர்களுக்கு எதிராக தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் சார்பான காப்புறுதி காப்புகளை வழங்கும் காப்புறுதியாளர்கள் அவற்றின் மீது சேகரிக்கும் எழுதப்பட்ட தவணைக் கட்டணங்களை தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தில் வைப்புச் செய்ய வேண்டும்.

2007 இன் 27 ஆம் இலக்க சட்டத்தின் திருத்தப்பட்ட சட்டத்திற்கு அமைவாக, ஒவ்வொரு மீள்காப்புறுதி செய்யும் ஒவ்வொரு காப்புறுதியாளரும் அமைச்சரினால் தீர்மானிக்கப்பட்டவாறு வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ளவாறு 50% வீதத்திற்கும் மேற்படாது பொறுப்புத் தொகையை தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தில் மீள் காப்புறுதி செய்ய வேண்டும்.

31 டிசம்பர் 2012 ஆம் திகதி வெளியிடப்பட்ட இலக்கம் 1791/ 4 ஐக் கொண்ட வர்த்தமானி அறிவித்தலின் படி, ஒவ்வொரு காப்புறுதியாளரும் நீண்டகால மீள் காப்புறுதி ஒப்பந்தங்கள் தவிர்த்து ஒவ்வொரு பொது மீள்காப்புறுதிக் கொள்கையில் இருந்து எழும் மொத்த பொறுப்பில் 30% வீதத்தை தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தில் மீள்காப்புறுதி செய்வதற்கு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். இதற்கு முன்னர் இது 20% சதவீதமாகும்.

## ஏனைய தொடர்புடைய விடயங்கள்

### வீதி பாதுகாப்பிற்கான தேசிய கவுன்சில் (NCRS)

வீதி பாதுகாப்பிற்கான தேசிய கவுன்சில் போக்குவரத்து அமைச்சின் நோக்கெல்லையின் கீழ், வாகன போக்குவரத்து சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டது. வாகன காப்புறுதியை வழங்குகின்ற ஒவ்வொரு காப்புறுதியாளரும் வீதிப்பாதுகாப்பு நிதியத்திற்காக மூன்றாந் தரப்பு காப்புறுதி கட்டணங்களின் 1% வீதத்தைப் பங்களிப்பு செய்ய வேண்டும். வீதிப் பாதுகாப்பிற்கான தேசிய கவுன்சிலின் சபையில் காப்புறுதி சபை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

இந்தப் பங்களிப்பு மோட்டார் வாகன விபத்துகளின் போது விபத்தை ஏற்படுத்திவிட்டு ஓடும் சந்தர்ப்பங்களில் நட்டவீட்டை வழங்குவதற்குப் பயன்படுத்தப்படும்.

### நிதித்துறை புறக்கணிப்புக் கவுன்சில் (FSOC)

"இலங்கை மத்திய வங்கியினால் நிதித்துறை மேற்பார்வைக் கவுன்சில்" நிறுவப்பட்டதுடன், இதில் நிதியியல் துறையின் ஒழுங்குமுறைப்படுத்தல்களை மேற்கொள்ளும் சிரேஸ்ட பிரதிநிதிகள் இதில் அங்கம் வகிக்கின்றனர். இந்த உயர் மட்டக் குழு, நிதிச் சந்தையின் சீரான அபிவிருத்திக்கு பொருத்தமான கொள்கை பணிப்புரைகளை வழங்குவதை உறுதிப்படுத்துவதற்கும் மற்றும் முழு நிதி முறைமையினதும் தேவைக்கு அமைவாக அனைத்து நிதியியல் ஒழுங்கமைப்பு முகவர்களை ஒருங்கிணைப்பதற்கும் மற்றும் தகவல்களைப் பரிமாறிக்கொள்வதற்காகவும் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த நிதித்துறை மேற்பார்வைக் கவுன்சிலில் ஆணைக்குழுவின் தலைவரும் பணிப்பாளரும் பிரதிநிதித்துவப்படுத்துவர்.

### இலங்கை காப்புறுதி சங்கம் (IASL)

இலங்கை காப்புறுதி சங்கம் (IASL) 1989 இல் நிறுவப்பட்டது. சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட காப்புறுதியாளர்கள் அனைவரும் சபையில் அங்கத்துவம் பெறுவதற்குத் தகுதி பெறுவார்கள்.

இலங்கை காப்புறுதி கம்பனிகள் அனைத்தினதும் பிரதம நிறைவேற்று அதிகாரிகளை கொண்டுள்ள இலங்கை காப்புறுதி சங்கத்தின் நிறைவேற்றுக் குழு, சங்கத்தின் நடவடிக்கைகளின் ஒட்டுமொத்த முகாமைத்துவத்திற்கு பொறுப்பாகவிருக்கும். அத்துடன் பின்வரும் குழுக்கள் அவற்றுடன் தொடர்புடைய விடயங்களில் நிறைவேற்றுக் குழுவிற்கு தமது பரிந்துரைகளை செய்வதிலும் உதவும்.

- ஆயுள் காப்புறுதி மன்றம்
- பொது காப்புறுதி மன்றம்
- நிதி தொழில்நுட்ப உப-குழு
- சட்ட ஆலோசனை மன்றம்
- மனிதவள உப-குழு
- தகவல் தொழில்நுட்ப உப-குழு
- சந்தைப்படுத்தலும் விற்பனையும் மன்றம்
- காப்புறுதிக் கணிப்பீட்டு உப குழு

### இலங்கை காப்புறுதித் தரகர்கள் சங்கம் (SLIBA)

ஆணைக்குழுவில் பதிவுசெய்த காப்புறுதி தரகர்கள் இலங்கை காப்புறுதி தரகர் சங்கத்தில் பிரதிநிதித்துவப்படுத்துவர். இலங்கை காப்புறுதி தரகர் சங்கம் காப்புறுதி தரகர்களின் நன்மைக்காக உருவாக்கப்பட்டது.

### இலங்கை காப்புறுதி நிறுவனம் (SLII)

1982 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை காப்புறுதி நிறுவனமானது இலாப நோக்கமற்ற ஒரு அமைப்பாக இருப்பதோடு காப்புறுதி வியாபாரத்தில் உள்ளவர்களின் திறமைகளையும் அறிவையும் விருத்தி செய்வது அதன் நோக்கமாகவும் உள்ளது. இலங்கை காப்புறுதி நிறுவனத்திற்கான நிதி காப்புறுதி வழங்குனர்களின் ஆண்டு சந்தா மற்றும் அதன் உறுப்பினர்களிடமிருந்து கிடைத்த பங்களிப்புகளில் இருந்து கிடைக்கிறது. இலங்கை காப்புறுதி நிறுவனம் இலண்டன் பட்டய காப்புறுதி நிறுவனத்துடன் இணைக்கப்பட்டுள்ளதுடன் இலண்டனிலுள்ள பட்டய காப்புறுதி நிறுவனம், இந்திய காப்புறுதி நிறுவனம், இந்தியாவின் காப்புறுதி கணிப்பீட்டாளர் சங்கம் போன்ற தொழிச்சார் அமைப்புகளுக்கான பரீட்சைகளையும் நிருவகித்து வருகின்றது. நிறுவனமானது காப்புறுதி கைத்தொழிலில் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள நபர்களுக்காக காப்புறுதியில், குறுங்கால டிப்ளோமா பாடநெறிகளையும் நடாத்தி வருகின்றது.

சபையானது காப்புறுதி முகவர்களாக நியமிக்கப்படவுள்ளவர்களுக்கு ஆட்சேர்ப்பு பரீட்சைகளை நடாத்துவதற்கான பொறுப்பையும் நிறுவனத்திடம் ஒப்படைத்துள்ளது. நிறுவனமானது காப்புறுதி வியாபாரத்தின் இரு பகுதிகள் தொடர்பிலும் ஆட்சேர்ப்பு பரீட்சைகளை தொடர்ந்தும் நடாத்தி வருகின்றது.

### காப்புறுதி ஒம்புட்ஸ்மன்

இலங்கை காப்புறுதி சங்கம் ஜனவரி 2019 ஆம் ஆண்டு டாக்டர் ரஞ்சித் ரனராஜாவை காப்புறுதி ஒம்புட்ஸ்மனாக நியமித்ததுள்ளது. இலங்கை காப்புறுதிச் சங்கம் மற்றும் ஒம்புட்ஸ்மன் என்பவற்றுக்கிடையில் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு அமைவாக, காப்புறுதி வைப்பாளர்களினால் காப்புறுதி ஒம்புட்ஸ்மனுக்கு கொண்டுவரப்படும் முரண்பாடுகளை இலங்கை காப்புறுதிச் சங்கத்துடன் இணைந்துள்ள காப்புறுதிக் கம்பனிகள் தீர்த்துக்கொள்கின்றன.

### காப்புறுதி மேற்பார்வையாளர்களின் சர்வதேச சங்கம் (IAIS)

காப்புறுதி மேற்பார்வையார்களின் சர்வதேச சங்கத்தின் ஒரு அங்கத்தினர் என்ற வகையில் சபையானது காப்புறுதி மேற்பார்வையாளர்களின் சர்வதேச சங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பான பிரதான காப்புறுதி கோட்பாடுகள், தகவல்கள் போன்ற வெளியீடுகளையும், வழிகாட்டிகளையும் கிரமமான முறையில் பெறுகின்றது. காப்புறுதி மேற்பார்வையாளர்களின் சர்வதேச சங்கத்தினால் பரிந்துரை செய்யப்பட்ட சில பிரதான கோட்பாடுகள் இலங்கையில் காப்புறுதி தொழிலின் சிறந்த மேலாண்மை மற்றும் கண்காணிப்பிற்காக சபையினால் பின்பற்றப்படுகின்றன.

### காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்துனர்களுக்கான ஆசிய மன்றம் (AFIR)

சீன காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் முன்னெடுப்புடன் 2006 ஆம் ஆண்டு காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்துனர்களுக்கான ஆசிய மன்றம் பிராந்திய காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஒத்துழைப்பு பொறிமுறைக்காக உருவாக்கப்பட்டது. ஆணைக்குழு காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்துனர்களுக்கான ஆசிய மன்றத்தில் அங்கத்தவராக உள்ளது.

காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்துனர்களுக்கான ஆசிய மன்றம் கரைகடந்த மேற்பார்வையைப் பலப்படுத்துவத்காக ஆசிய காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தலாளர்களுக்கான பிராந்திய ஒத்துழைப்பு மேடையாக அமைந்துள்ளது.

அதன் வகிபாகத்தை நிலைநிறுத்துவதற்கும் ஒழுங்குமுறைப்படுத்தல் தகவல்கள் மற்றும் தொழில்நுட்பத்தைப் பரிமாறிக்கொள்ளுதல், ஒழுங்குமுறைப்படுத்தல் அனுபவங்களைப் பரிமாறிக்கொள்ளல் மற்றும் கைத்தொழிற்துறை நிபுணர்களை பரிமாறிக்கொள்ளுதல் போன்றவற்றை ஊக்குவிப்பதற்கான அதன் பிரதான மேடையை சரியாக அமைப்பதற்கும், எல்லை தாண்டிய அபாயங்களை தடுப்பதற்கும் பதிலளிப்பதற்கும் ஒழுங்குமுறை ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்புக்கான ஒரு முக்கிய தளமாகவும், ஒழுங்குமுறை அமைப்புகள் மற்றும் திறன்களை மேம்படுத்துவதற்கான ஒரு முக்கிய தளமாகவும் இதனை உருவாக்குவதற்கும், காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்துனர்களுக்கான ஆசிய மன்றம் எதிர்பார்க்கின்றது. இதனால் உலகளாவிய காப்புறுதி ஒழுங்குமுறை சீர்திருத்தத்தில் மிகவும் பயனுள்ள முறையில் பங்கேற்க வேண்டும்.

# புள்ளிவிபர மீளாய்வு

## காப்புறுதிக் கம்பனிகளின் சுருக்கப்பெயர்

| | முழுப் பெயர் | சுருக்கம் |
|---|---|---|
| 1 | ஏஐஏ இன்சூரன்ஸ் லங்கா பிஎல்சி | ஏஐஏ லைப் |
| 2 | ஏஐஜி இன்சூரன்ஸ் லங்கா பிஎல்சி | ஏஐஜி |
| 3 | எலைன்ஸ் இன்சூரன்ஸ் லங்கா லிமிடட் | எலைன்ஸ் ஜென்.. |
| 4 | எலைன்ஸ் லைப் இன்சூரன்ஸ் லங்கா லிமிடட் | எலைன்ஸ் லைப் |
| 5 | அமானா டக்காபுல் பிஎல்சி | அமானா ஜென் |
| 6 | அமானா டக்காபுல் லைப் பிஎல்சி | அமானா லைப் |
| 7 | ஆர்பிகோ இன்சூரன்ஸ் பிஎல்சி | ஆர்பிகோ |
| 8 | சிலிங்கோ ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிடட் | சிலிங்கோ ஜென் |
| 9 | சிலிங்கோ லைப் இன்சூரன்ஸ் லிமிடட் | சிலிங்கோ லைப் |
| 10 | கென்டினன்டல் இன்சூரன்ஸ் லங்கா லிமிடட் | கென்டினன்டல் |
| 11 | கோப்பரட்டிவ் இன்சூரன்ஸ் கம்பனி லிமிடட் | கோப்பரட்டிவ் ஜென் |
| 12 | கோப்லைப் இன்சூரன்ஸ் லிமிடட் | கோப்லைப் |
| 13 | பெயாபெஸ்ட் இன்சூரன்ஸ் லிமிடட் | பியார்பெஸ்ட் |
| 14 | எச்என்பி அசூரன்ஸ் பிஎல்சி | எச்என்பி லைப் |
| 15 | எச்என்பி ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிடட் | எச்என்பி ஜென் |
| 16 | ஜனசக்தி இன்சூரன்ஸ் பிஎல்சி | ஜனசக்தி லைப் |
| 17 | ஜனசக்தி ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிடட் | ஜனசக்தி ஜென் |
| 18 | லைப் இன்சூரன்ஸ் கோப்பரேஷன் (லங்கா) லிமிடட் | எல்ஐசி |
| 19 | எல்ஓஎல்சி ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிடட். | எல்ஓஎல்சி ஜென் |
| 20 | எல்ஓஎல்சி லைப் அசூரன்ஸ் லிமிடட் | எல்ஓஎல்சி லைப் |
| 21 | எம்பிஎஸ்எல் இன்சூரன்ஸ் கம்பனி லிமிடட் | எம்பிஎஸ்எல் |
| 22 | நஷனல் இன்சூரன்ஸ் ட்ரஸட் பன்ட் | என்ஐடிஎப் |
| 23 | ஓரியன்ட் இன்சூரன்ஸ் லிமிடட் | ஓரியன்ட் |
| 24 | பீப்பீள்ஸ் இன்சூரன்ஸ் பிஎல்சி | பிப்பீள்ஸ் |
| 25 | சீமாசகித்த சனச ரக்சன சமாகம | சனச |
| 26 | சொப்ட்லொஜிக் லைப் இன்சூரன்ஸ் பிஎல்சி | செப்ட்லொஜிக் லைப் |
| 27 | ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் கோர்பரேஷன் லிமிடட் | எஸ்எல்ஐசி |
| 28 | யூனியன் அசூரன்ஸ் பிஎல்சி | யூனியன் லைப் |

## புள்ளிவிபர மீளாய்வுக்கான அட்டவணைகளையும் புள்ளிவிபரங்களையும் விளக்கும் போது கீழ்வரும் பொதுக்குறிப்புகள் துணையாகும்.

1. காப்புறுதிக் கம்பனிகள் மற்றும் காப்புறுதி தரகுக் கம்பனிகளினால் வழங்கப்பட்ட புள்ளிவிபரங்களின் அடிப்படையில் அட்டவணைகளும் வரைபுகளும் தயாரிக்கப்பட்டுள்ளது.
2. ஏஐஏ பொது காப்புறுதி லங்கா லிமிடட் மற்றும் ஜனசக்தி பொது காப்புறுதி லிமிடட் என்பன 2016 இல் ஒன்றிணைக்கப்பட்டு “ஜனசக்தி ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிடட்” என அழைக்கப்படுகின்றது.
3. ஜனசக்தி ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிடட் 28 செப்டெம்பர் 2018 இல் எலைன்ஸ் இன்சூரன்ஸ் லங்கா லிமிடட் நிறுவனத்துடன் இணைக்கப்பட்டு “எலைன்ஸ் இன்சூரன்ஸ் லங்கா லிமிடட்” என அழைக்கப்படுகின்றது.
4. 2016இற்கு முன்னர் சொப்ட்லொஜிக் லைப் பிஎல்சி நிறுவனம் ஏசியன் அலைன்ஸ் இன்சூரன்ஸ் பிஎல்சி லிமிடட் என அழைக்கப்பட்டது.
5. ஏசியன் எலைன்ஸ் ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிடட் 2015இல் பியார்பகஸ் ஏசியா லிமிடட் நிறுவனத்தினால் கைக்கொள்ளப்பட்டு தற்போது “பியார்பர்ஸ்ட் இன்சூரன்ஸ் லிமிடட்” என அழைக்கப்படுகின்றது.
6. யூனியன் ஜெனரல் லிமிடட் பியார்பர்ஸ்ட் இன்சூரன்ஸ் லிமிடட் நிறுவனத்தினால் கைக்கொள்ளப்பட்டு அத்துடன் இணைக்கப்பட்டு 28 பெப்பரவரி 2017 தொடக்கம் “பியார்பர்ஸ்ட் இன்சூரன்ஸ் லிமிடட” என அழைக்கப்படுகின்றது.
7. ஏஐஜி இன்சூரன்ஸ் லிமிடட் தனது வியாபார நடவடிக்கைகளை 2014 தொடக்கம் நிறுத்திக் கொண்டு, தன்னார்வ திரவமயமாக்கல் நடவடிக்கைகளை மேற்கொண்டதனால், 2018ஆம் ஆண்டு ஏஐஜியின் புள்ளிவிபரங்கள் கருத்தில் கொள்ளப்படவில்லை.
8. என்ஐடிஎப் வேறுபட்ட காப்புறுதித் திட்டங்களைக் கையாளுவதனால் ஒப்பீட்டளவைப் பராமரிப்பதற்கு இடர் அடிப்படையிலான மூலதனத்தைக் கருத்தில் கொள்வதற்கு என்ஐடிஎப் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட தரவுகள் கவனத்தில் கொள்ளப்படவில்லை.
9. என்ஐடிஎப் நிறுவனத்தின் பயிர் மற்றும் கடன் பாதுகாப்பு திட்டத்தின் நிதித் தரவுகள், குறிப்பிடப்பட்ட தொழிற்பாடு காப்புறுதியாக கருதப்படாமையினால் 2014 தொடக்கம் அப்புள்ளிவிபரங்கள் அகற்றப்பட்டன.
10. அட்டவணைகளில் காணப்படும் பெறுமதி மிகக்கிட்டிய எண்ணுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அதனால், காட்டப்பட்டுள்ள மொத்தத் தொகைக்கும் அதன் ஆக்கக்கூறுகளின் கூட்டுத்தொகைகளுக்கும் இடையில் சிறிய வேறுபாடு காணப்படக்கூடும்.
11. முன்னர் வெளியிடப்பட்ட பெறுமதிகளுடன் தற்போதுள்ள பெறுமதியை ஒப்பிடும் போது வேறுபாடு காணப்பட்டால், அது திருத்தத்தின் காரணமாக ஏற்பட்டதாகும்.
12. அடைப்புக்குறிக்குள் சுட்டிக்காட்டுள்ள பெறுமதிகள் மறைப்பெறுமதியாகும்.
13. இந்த அறிக்கையில் “ஆயுள்” மற்றும் “நீண்ட காலம்” எனும் பதங்கள் மாறிமாறி வரும்.
14. கீழ்வரும் சின்னங்கள் அறிக்கை முழுவதிலும் பயன்படுத்தப்பட்டுள்ளன.
    (a) = மீண்டும் குறிப்பிடப்பட்ட மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட பெறுமதி
    (b) = தற்காலிக புள்ளிவிபரங்கள்
    - = ஏதுமில்லை

## உலகக் காப்புறுதி சந்தையில் இலங்கையின் காப்புறுதி கைத்தொழிற்துறையின்

### கண்ணோட்டம் ஒரே பார்வையில்

உலகளாவிய காப்புறுதி கைத்தொழிற்துறையானது 2018ஆம் ஆண்டின் போது அண்ணளவாக 3-4 வீத உண்மையான நிபந்தனைகளுடன் நிலையான வளர்ச்சியை நேர்மறையான பொருளாதார உந்துதலுடன் அறிக்கையிட்டது. மேம்பட்ட சந்தைகளின் நீடித்த முன்னேற்றம் மற்றும் வளர்ந்து வரும் சந்தைகளின பங்களிப்புகள் ஆகியவை ஆண்டின் உலளாவிய காப்புறுதியின் எழுதப்பட்ட தவணைக் கட்டண வளர்ச்சியை உந்துகின்றன. ஆயினும் கூட, காப்புறுதித்துறையின் இலாபத்தன்மை ஒப்பீட்டளவில் குறைந்த வட்டி வீத சூழல்களில் அழுத்தத்தின் கீழ் இருந்தது.

பல காரணிகளுக்கிடையில், அமெரிக்காவிற்கும் சீனாவிற்கும் இடையிலான வர்த்தகப் போர், சீன கடினமான தரையிறக்கம், புவிசார் அரசியல் நிச்சயமற்ற தன்மை மற்றும் அனைத்து முக்கிய மத்திய வங்கிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இறுக்கமான நாணயக் கொள்கைகள் ஆகியவை 2018 ஆம் ஆண்டில் காப்புறுதியாளர்களுக்கு குறிப்பிடத்தக்க தலைவலியாக இருந்தன.

தொழில்நுட்பம் உலகளாவிய காப்பீட்டுத் துறையை விரைவாக மாற்றுகின்றது. மோசடி தடுப்புக்கான பிளாக்செயின் பயன்பாடுகளின் எண்ணிக்கை செயல்முறை எளிமைப்படுத்தல், திறமையான காப்புறுதி செய்தல் மற்றும் டிஜிடல் - முதலாவது கொள்கை நிர்வாகம், பதிவேடுகளைப் பேணுதல், தன்னியக்கமான கொடுப்பனவு வசதி போன்றன ஊடாக மேம்படுத்தப்பட்ட வினைத்திறன் காப்புறுதியின் அமைப்பினை முற்றாக மீள்வடிவமைக்கின்றது. உடல்நல சேவை வழங்குனர்களின் ஆகுசெலவுகள் மற்றும் நடத்தைகளில் தாக்கம் செலுத்துபவை தொடர்பான முன்னெடுப்புகள் மற்றும் தரவுப் பகுப்பாய்வு என்பவற்றுக்கான முதலீடுகளை காப்புறுதியாளர்கள் அதிகரிக்கின்றனர். உலகெங்கிலும் அதிகரித்து வரும் தரவு மீறல்களுக்கு விடையிறுப்பாக சைபர் காப்புறுதி வெளிப்பட்டுள்ளது. இது வணிகங்களுக்கு பிரதான ஆபத்துகளில் ஒன்றாக கருதப்படுகின்றது.

ட்ரோன்கள், செயற்கைகோள் படங்கள், உரிமைகோரல் நிர்வாகத்தில் செயல்திறனை மேம்படுத்துதல் மற்றும் ஆபத்து தடுப்பு மதிப்பீட்டை அதிகளவில் பயன்படுத்துவதன் மூலம் பேரழிவு நிகழ்வுகளை நிர்வகிக்க உலகம் கூடுதல் தீர்வுகளைத் தேடுகின்றது. மியூனிக் மீள் வெளியீடுகளின் படி, தீவிர புயல்கள், காட்டுத் தீ மற்றும் வரட்சி ஆகியவை 2018ஆம் ஆண்டிலும் கடுமையான நட்ட இழப்புகளை ஏற்படுத்தின. வடக்கு கலிபோனியாவில் ஏற்பட்ட காட்டுத்தீ மற்றும் அமெரிக்காவில் ஏற்பட்ட "மைக்கல்" சூறாவளி, இந்தோனேசியாவில் ஏற்பட்ட சுனாமி மற்றும் பூகம்பம், ஜப்பானில் மில்லியன் கணக்கில் இழப்புகளை ஏற்படுத்திய பல டைபூன்கள் மற்றும் இரண்டு பூகம்பங்கள் போன்ற மிக விலையுயர்ந்த இயற்கை பேரழிவுகள் இதில் அடங்கும். இயற்கை பேரழிவினால் ஏற்பட்ட நட்டங்களின் அடிப்படையில் 1980ஆம் ஆண்டுக்கு பின்னர் ஏற்பட்ட நான்காவது இயற்கை பேரழிவு ஆண்டாக 2018ஆம் ஆண்டு அமைந்துள்ளது. 2018இல் காலநிலை மற்றும் இயற்கை அனர்த்த இடர்களை முகாமைத்துவம் செய்வதில் மீள் காப்புறுதியாளர்களின் வகிபாகத்தை காண முடிந்தது.

பல காப்புறுதியாளர்கள் டிஜிடல் முறையில் கிடைக்கக்கூடிய மருத்துவத்தரவு, மருந்து பரிந்துரைக்கும் தகவல்கள் மற்றும் ஒரு விண்ணப்பதாரரின் ஆயுட்காலத்தை மதிப்பிடுவதற்கும் பாரம்பரிய மருத்தவ சோதனைகளை அகற்றுவதற்கும் பயன்படுத்தக்கூடிய முக பகுப்பாய்வு தொழில்நுட்பத்தின் அடிப்படையில் இணைப்பு மற்றும் மேம்பட்ட பகுப்பாய்வுகளைப் பரிசோதித்து வருகின்றனர். சுவிஸ் ரீ வெளியீட்டுள்ளதன் படி, இருதய நோய் (சீவிடி), புற்றுநோய் மற்றும் நீரிழிவு போன்ற நாட்பட்ட நோய்களின் நிகழ்வு அதிகரித்து வருகின்றது. இந்தியாவில் இருதய நோய்கள், புற்றுநோய் மற்றும் பிற நாட்பட்ட நோய்கள் 2005ஆம் ஆண்டில் 53% வீதமாக இருந்தன, இது 2030 ஆண்டாகும் போது 67% வீதமாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. விழிப்புணர்வை அதிகரித்தல் மற்றும் கவர்ச்சிகரமான மருத்தவக் காப்புறுதித் தீர்வுகளை வழங்குதல் போன்றவற்றில் காப்புறுதியாளர்கள் முக்கியமான வகிபாகத்தை வகிக்கின்றனர்.

காப்புறுதித்துறையில் உலகளாவிய இணைப்புகள் மற்றும் கையகப்படுத்தல் நடவடிக்கைகள் தொடர்கின்றதுடன், கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2018ஆம் ஆண்டில் 9% (அண்ணளவாக) அதிகரித்துள்ளது. (மூலம்: publications of https:// www.lexology.com)

### இலங்கை பொருளாதாரத்தின் ஓர் சுருக்கம்

இவ்வருடம், நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி இ.ரூபா 14,450 பில்லியன் ஆகும். இலங்கை பொருளாதாரத்தின் வளர்ச்சி அரசியலமைப்பு நெருக்கடி, முக்கிய நாணயங்களுக்கு எதிரான இலங்கை ரூபாயின் கூர்மையான தேய்மானம், உள்நாட்டு பெற்றோலியப் பொருட்களின் விலைகள் மற்றும் நிர்வாக ரீதியாக நிர்ணயிக்கப்பட்ட பிற விலைகள், தொழிற்துறை தொடர்பான நடவடிக்கைகளின் மந்த நிலை போன்றவற்றின் காரணமாக திருத்தப்பட்ட விலை அழுத்தங்கள், தொழிற்துறை தொடர்பான நடவடிக்கைகளில் மந்தநிலை போன்றவற்றால் மிகவும் பாதிக்கப்பட்டது. அதேநேரம், இந்த வளர்ச்சி பெரும்பாலும் சேவை துறைகாரணமாக 4.7% வீதம் வளர்ச்சியடைந்துதுடன் விவசாய நடவடிக்கைகளில் மீட்கப்பட்டது, இதன் வளர்ச்சி 4.8% வீதமாகும்.

மேலும், கொழும்பு பங்குச் சந்தையின் மோசமான செயற்பாடுகள், பங்குகளின்

விலைகள் சந்தை புரள்வு, சந்தை மூலதனமிடுதல் மற்றும் உழைக்கும் வீதத்திற்கான விலை என்பற்றின் சரிவு ஏற்பட்டதென்பதற்கு சாட்சியாக விளங்குகின்றது.


(மூலம் - மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கை 2018)

## இலங்கை காப்புறுதிச் சந்தை

2018ஆம் ஆண்டில் இலங்கை காப்புறுதித்துறை இருபத்தியாறு பதிவு செய்யப்பட்ட காப்புறுதி நிறுவனங்களுடன் (28 ஜூன் 2017 இருந்து 2 ஏப்பிரல் 2019 வரை இடைநிறுத்தப்பட்ட எம்பிஎஸ்எல் தவிர்ந்த) இயங்கியது. ஆறு காப்புறுதி கம்பனிகள் வெளிநாட்டு உரிமைப்பங்குடன் இணைந்து முக்கிய பங்குதாரர்களுடன் இயங்குகின்றது. பல நிறுவனங்கள் குழுமத்தின் கூட்டு நிறுவனங்கள், துணை நிறுவனங்கள் மற்றும் உப நிறுவனங்களாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. மேலும் 31 டிசம்பர் 2018ஆம் திகதி நிலவரப்படி, ஒன்பது கம்பனிகள் கொழும்பு பங்கு பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்டுள்ளன.

2015ஆம் ஆண்டு கலவை காப்புறுதியாளர்களின் வியாபாரங்கள் ஆயுள் மற்றும் பொது காப்புறுதி வியாபாரங்களாக பிரிக்கப்பட்டதைத் தொடர்ந்து விசேடமாக பொது காப்புறுதித் துறையில் பல கையகப்படுத்தல்கள் மற்றும் கூட்டிணைப்புகள் மேற்கொள்ளப்பட்டன. கையக்கபடுத்தல் மற்றும் கூட்டிணைத்தல்களின் சமீபத்திய போக்குகள் உலகளாவிய காப்புறுதி நிறுவனங்களுக்கு உரிமையை மாற்றுவதைக் காணக்கூடியதாக இருந்தது. அவை உலகளாவிய வணிக கள மாதிரிகளைப் பன்முகப்படுத்த முனைகின்றன. இந்த ஆண்டின் போது ஒரு பெரிய கையகப்படுத்தல் நடைபெற்றதுடன், இது பொது காப்புறுதித்துறையை மாற்றியமைத்தது. இலங்கையில் அண்ணவாக 6% (2017இல்) வீத சந்தைப் பங்கினைப் பதிவுசெய்த எலையன்ஸ் ஜெனரல் ஜனசக்தி ஜெனரலை. கைக்கொண்டதன்

வரைபடம் 1
காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் தவணைக் கட்டண வருமானம் மற்றும் வளர்ச்சி வீதம்




ஊடாக அதன் சந்தைப் பங்கு இரு மடங்காக அதிகரித்தது.

பாரிய எண்ணிக்கையான மக்களைச் சென்றடையக்கூடியதும் இலகுவான மற்றும் தாங்கிக்கொள்ளக்கூடியதுமான காப்புறுதி வகையாக இருப்பதனால், "நுண் காப்புறுதி" எனும் எண்ணக்கரு இலங்கையினுள் பிரதான கலந்துரையாடல் தலைப்பாக மாறியுள்ளது. மக்கள் தொகை மாற்றத்துடன் சார்பு விகிதத்தை அதிகரிப்பதற்கான போக்கு, ஓய்வூதியத் திட்டங்கள் மற்றும் குறைந்த ஊடுறுவல் நிலைகளின் போதுமான பாதுகாப்பு கிடைக்காதது காப்புறுதியாளர்களுக்கும் நுண் காப்புறுதியாளர்களுக்கும் அதிக வாய்ப்புகளை உருவாக்குகின்றது.

2018 மே நடுப்பகுதியில் பெய்த கனமழையினால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவு காரணமாக கடுமையான சேதம் ஏற்பட்டது. மேலும் டிசம்பர் பிற்பகுதியில் இலங்கையில் வட மாகாணத்தில் பலத்த இடியுடன் கூடிய புயல்கள் சேதத்தை ஏற்படுத்தின. எனினும் 2017ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது பேரழிவு இடர் நிகழ்வு காரணமாக காப்புறுதித்துறையில் ஏற்பட்ட தாக்கம் தீவிரமாக இல்லை.

மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கையின் படி, அவர்கள் நடாத்திய வியாபார ஆய்வுகளின் அடிப்படையில், கட்டமைப்பு சீர்திருத்தங்கள் மற்றும் கொள்கை அமுல்படுத்தலில் ஏற்பட்ட காலதாமதம் நிச்சயமற்ற தன்மையை உருவாக்கியதுடன் ஆண்டின் பிற்பகுதியில் நிலவிய அரசியல் பதற்றம் என்பன வியாபார நம்பிக்கையையும் முதலீட்டு உணர்வு என்பவற்றையும் பாதித்துள்ளது. இந்த பொருளாதார மற்றும் அரசியல் நிச்சயமற்ற தன்மைகள் இருந்தபோதிலும் கூட, ஒட்டுமொத்த காப்பீட்டுத்துறையானது 2017ஆம் ஆண்டில் பதிவான இ.ரூபா 164,960 மில்லியனுடன் ஒப்பிடும் போது 2018ஆம் ஆண்டில் இல.ரூபா 181,507 மில்லியன் மொத்த தவணைக்கட்டணமாக கிடைத்துள்ளதுடன், இது 2017ஆம் ஆண்டு பதிவு செய்ய 15.30% வீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018ஆம் ஆண்டு பெயரளவிலான அடிப்படையில் 10.03% வீத மிதமான கட்ட வளர்ச்சியை அடைந்துள்ளது. கடந்த வருடத்தைப் போலவே, மோட்டார் காப்புறுதி மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டண வருமானத்திற்கு பாரியளவில் பங்களிப்பு செய்தது. எனினும், 2015ஆம் ஆண்டிலிருந்து இரட்டை எண்ணாக வளர்ச்சியைப் பதிவுசெய்த பொதுக் காப்புறுதித்துறை மிக மந்தமான வளர்ச்சியை (8.37%) கொண்டிருந்தது. ஆயுள் காப்புறுதித்துறையும் 2018ஆம் ஆண்டில் இ.ரூபா 80,303 மில்லியன் எழுதப்பட்ட தவணைக் கட்டண வருமானத்தைப் பெற்று ஆண்டுக்கு 12.20% வீதமெனும் மிதமான வளர்ச்சியைப்

அட்டவணை 1
தவணைக் கட்டண வருமானமும் ஊடுருவலும்

| | 2014 | 2015 | 2016 | 2017 (அ) | 2018 (ஆ) |
|---|---|---|---|---|---|
| தவணைக் கட்டண வருமானம் (ரூ. மில்) - நீண்டகால காப்புறுதி (ரூ. மில்) | 44,596 | 53,691 | 63,477 | 71,571 | 80,303 |
| தவணைக் கட்டண வருமானம் (ரூ. மில்) - பொது காப்புறுதி (ரூ. மில்) | 61,202 | 69,271 | 79,590 | 93,389 | 101,203 |
| மொத்த தவணைக் கட்டண வருமானம் - காப்புறுதி வியாபாரம் (ரூ. மில்) | 105,798 | 122,962 | 143,067 | 164,960 | 181,506 |
| மொத்த தவணைக் கட்டணத்தில் வளர்ச்சி வீதம் - காப்புறுதி வியாபாரம் (%) | 5.84 | 16.22 | 16.35 | 15.30 | 10.03 |
| மீள்காப்புறுதி தவணைக் கட்டண வருமானம் (ரூ.மில்)** | 2,041 | 1,738 | 2,397 | 3,683 | 4,056 |
| நடைமுறை சந்தை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி (ரூ.மில்) * | 10,361 | 10,951 | 11,996 | 13,418 | 14,450 |
| மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி வீதம் (%)* | 4.90 | 4.84 | 4.50 | 3.40 | 3.20 |
| ஊடுருவல் (மொ.உ.உ. இன் % இல் மொத்தக் காப்புறுதித் தவணைக் கட்டணம்) | 1.02 | 1.12 | 1.19 | 1.23 | 1.26 |
| ஊடுருவல் % (மொ.உ.உ. இன் % இல் நீண்டகால காப்புறுதி வியாபாரத்தின் தவணைக் கட்டணம்) | 0.43 | 0.49 | 0.53 | 0.53 | 0.56 |
| ஊடுருவல் % (மொ.உ.உ. இன் % இல் பொது காப்புறுதி வியாபாரத்தின் தவணைக் கட்டணம்) | 0.59 | 0.63 | 0.66 | 0.70 | 0.70 |
| காப்புறுதி செறிவு (மொத்த தவணைக் கட்டண வருமானம் - காப்புறுதி வியாபாரம் / சனத்தொகை) (ரூ.) | 5,094 | 5,865 | 6,747 | 7,693 | 8,376 |
| சனத்தொகை '000 (ஆண்டின் மத்தியில்)* | 20,771 | 20,966 | 21,203 | 21,444 | 21,670 |

* மூலம் : இலங்கை மத்திய வங்கி மற்றும் புள்ளி விபரவியல் திணைக்களம்
: இலங்கை மத்திய வங்கியின் 2018ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு 2014 இல் இருந்து தற்போதைய சந்தை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி இற்றை செய்யப்பட்டுள்ளது.

** தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தினால் உழைக்கப்பட்ட பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் கட்டாய மீள்காப்புறுதி எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தை மீள்காப்புறுதி எழுதப்பட்ட தவணைக் கட்டண வருமானம் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

பதிவுசெய்தது. கடந்த ஐந்து ஆண்டுகளில் காப்புறுத்தித்துறையின் தவணைக்கட்டண வருமானம் மற்றும் வளர்ச்சி வீதத்தை வரைபடம் 1 விளக்குகின்றது.

நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் காப்புறுதியின் பங்கு 1.26% வீதமாக மிகக் குறைவாகவே உள்ளது (2017:1.23%). செலவழிப்பு வருமானத்தின் நிலை காப்புறுதி ஊடுருவலின் மட்டத்தில் நேரடித் தாக்கத்தை விளைவிக்கின்றது. காப்புறுதி குறைத்த சில எதிர்மறை எண்ணக்கருக்கள் மற்றும் கிடைக்கக்கூடிய சமூகப் பாதுகாப்பு நன்மைகள் என்பன குறைந்த ஊடுருவல் நிலைகளுக்கு பங்களிப்பு செய்யும் வேறு சில காரணிகளாகும்.

நாட்டின் மக்கள் தொகைக்கான மொத்த தவணைக்கட்டண வருமானம் அடிப்படையில் கணக்கிடப்படும் காப்புறுதி அடர்த்தி இ.ரூபா 8,376 ஆகும். 2018ஆம் ஆண்டில், இலங்கை 8 மில்லியன் வேலைவாய்ப்பை பெற்றதாக அறிவித்தது (மூலம்: மத்திய வங்கியின் ஆண்டறிக்கை 2018). அதன்படி, நாட்டில் வேலை செய்யும் நபர்களுக்கான மொத்த தவணைக்கட்டண வருமானம் 22,688 ஆக இருந்தது. கடந்த ஒரு ஆண்டில் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டண ஊடுருவல் மற்றும் காப்புறுதி அடர்த்தி பற்றிய விபரங்களை அட்டவணை 1 வழங்குகின்றது.

## காப்புறுதிக் கம்பனிகளின் மொத்த சொத்துக்கள்


காப்புறுதி நிறுவனங்களின் சொத்துக்கள் காப்புறுதி பூட்கையாளர்களுக்கு வழங்கப்படும் இறுதிப் பாதுகாப்புக்கு பலத்தை அளிக்கின்றன. அட்டவணை 2 மற்றும் வரைபு 2 என்பன கடந்த ஐந்து ஆண்டுகளில் சராசரியான வளர்ச்சி வீதமான 11.29% வீதத்தைக் கொண்ட காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் சொத்துகள் தொடர்பான விபரங்களை வெளிப்படுத்துகின்றன. 31 டிசம்பர்

அட்டவணை 2
காப்புறுதிக் கம்பனிகளின் சொத்துக்கள்

| | 2014 | 2015 | 2016 | 2017 (அ) | 2018 (ஆ) |
|---|---|---|---|---|---|
| நீண்டகால காப்புறுதி (இ.ரூபா. மில்) | 247,061 | 312,713 | 345,589 | 391,890 | 429,706 |
| பொதுக் காப்புறுதியும் பங்குரிமையாளர்களும் (இ.ரூபா. மில்) | 174,588 | 151,177 | 173,985 | 185,583 | 190,088 |
| மீள்காப்புறுதி (இ.ரூபா.மில்) | 3,065 | 3,417 | 5,755 | 4,212 | 3,683 |
| **மொத்தம் (இ.ரூபா மில்)** | ***422,031** | ***466,519** | **525,329** | **581,685** | **623,477** |

* உள்ளக கொடுக்கல்வாங்கல்கள் நீக்கப்பட்டுள்ளது

வரைபடம் 2
காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் மொத்த சொத்துகளும் சொத்துகளின் வளர்ச்சி வீதமும்




2018ஆம் திகதியில் உள்ளவாறு காப்புறுதியாளர்களினால் அறிக்கையிடப்பட்ட மொத்த சொத்துகளின் பெறுமதி ரூபா 623,477 மில்லியன் ஆகும். இந்த அறிக்கையில் முற்பகுதியில் கலந்துரையாடப்பட்டவாறு இலங்கையின் பொருளாதாரத்தில் காணப்பட்ட அதிகரித்த நிலையில்லாத் தன்மை காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் மொத்த சொத்துகளின் வளர்ச்சியை எதிர்மறையாக தாக்கியது. 2017ஆம் ஆண்டு காணப்பட்ட வளர்ச்சி வீதமான 10.73% வீதத்துடன் ஒப்பிடுகையில் 2018ஆம் ஆண்டு பதிவுசெய்யப்பட்ட 7.18% வீதம் வீழ்ச்சியை வெளிப்படுத்தியது.

கடந்த ஆண்டைப் போலவே, நீண்ட கால காப்புறுதித்துறையின் சொத்துகள் நடுநிலையான 9.65% வீத வளர்ச்சியை பதிவு செய்த அதேவேளையில் பொதுக் காப்புறுதித்துறையின் சொத்துகளின் வளர்ச்சியானது கடந்த ஆண்டுடன் (2017: 6.67%) ஒப்பிடுகையில் 2018ஆம் ஆண்டு 2.43% வீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. 2018ஆம் ஆண்டு நீண்ட கால காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி என்பவற்றின் சொத்துகள் முறையே இ.ரூபா 190,088 மில்லியன் மற்றும் 429,706 மில்லியன் ஆகும் (2017: இ.ரூ.185,583 மில்லியன் மற்றும் இ.ரூ.391,890).

கலவை காப்புறுதியாளரான, இலங்கை காப்புறுதிக் கம்பனி சொத்து அடிப்படைக்கு பிரதான பங்களிப்பை வழங்கியதுடன், அதைத் தொடர்ந்து சிலிங்கோ லைப், ஏஐஏ லைப் மற்றும் யூனியன் லைப் என்பன பங்களிப்பு செய்தன. பொதுக் காப்புறுதியைப் பொறுத்தவரையில் எலைன்ஸ் ஜெனரல் மற்றும் சிலிங்கோ ஜெனரல் என்பன நேர்மறையான பங்களிப்பை சொத்து மதிப்பில் வழங்கின.

தேசிய மீள்காப்புறுதியாளரான தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் அதன் மீள்காப்புறுதி வியாபாரம் தொடர்பாக இ.ரூபா 3,683 மில்லியனைப் பதிவுசெய்ததுடன், கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 12.54% வீத வீழ்ச்சியை பதிவுசெய்துள்ளது. மேலும், இது தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் மீள்காப்புறுதி வியாபாரம் தொடர்பான நிதியியல் முதலீடுகளில் குறிப்பிடத்தக்க கழிப்பனவாகும்.

## பிரதான நிதியியல் துறைகளில் மொத்த சொத்துகளின் பரம்பல்

வங்கிகள், நிதிக் கம்பனிகள், காப்புறுதியாளர்கள், குத்தகைக் கம்பனிகள், ஓய்வூதிய நிதியங்கள் போன்ற நிதியியல் இடைத்தரகர்களுடனான தொடர்பு குறிப்பிடக்கூடியளவு அதிகரித்துச் செல்லுகின்றது. அட்டவணை 3 மற்றும் வரைபு 3 என்பன பிரதான நிதியியல் துறைகளில் மொத்த சொத்துக்களின் பரம்பலை வெளிப்படுத்துகின்றது. 2018ஆம் ஆண்டின் இறுதியில்

அட்டவணை 03
பிரதான நிதியியல் துறைகளில் மொத்த சொத்துகளின் பரம்பல்

| நிதியியல் துறைகள் | சொத்துகளின் பரம்பல் | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2014 | | 2015 | | 2016 | | 2017 | | 2018 | |
| | ரூபா பில்லியன் | % | ரூபா பில்லியன் | % | ரூபா பில்லியன் | % | ரூபா பில்லியன் | % | ரூபா பில்லியன் | % |
| வங்கித் துறை | 8,442.0 | 70.3 | 9,503.7 | 68.7 | 10,575.8 | 69.5 | 11,897.4 | 69.7 | 13,708.3 | 72.4 |
| வைப்புகளை ஏற்கும் ஏனைய நிதி நிறுவனங்கள் | 857.0 | 7.1 | 1,044.2 | 7.6 | 1,246.7 | 8.2 | 1,370.4 | 8.0 | 1,542.7 | 8.2 |
| விசேட நிதி நிறுவனங்கள் | 441.0 | 3.7 | 557.8 | 4.0 | 335.4 | 2.2 | 388.9 | 2.3 | 240.0 | 1.3 |
| ஒப்பந்த சேமிப்பு நிறுவனங்கள் | 1,853.6 | 15.4 | 2,257.5 | 16.3 | 2,536.6 | 16.7 | 2,838.0 | 16.6 | 2,807.7 | 14.8 |
| காப்புறுதிக் கம்பனிகள்* | 422.0 | 3.5 | 466.5 | 3.4 | 525.3 | 3.5 | 581.7 (அ) | 3.4 | 623.5 (ஆ) | 3.3 |
| **மொத்தம்** | **12,015.6** | **100.0** | **13,829.6** | **100.0** | **15,219.8** | **100.0** | **17,076.4** | **100.0** | **18,922.2** | **100.0** |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

இத்துறையின் மொத்த சொத்துகளின் தொகையின் வளர்ச்சியானது 10.8% வீதத்தை பதிவு செய்தது.

பிரதான வெளிநாட்டு நாணயங்களுக்கு எதிராக இலங்கை ரூபா கூர்மையாக வீழ்ச்சியடைந்த போதிலும், குறிப்பாக வங்கித்துறை 2018ஆம் ஆண்டு நடுநிலையான செயலாற்றுகையை வெளிப்படுத்தின. எனினும் இலங்கை மத்தி வங்கியின் 2018ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையின்படி, செயற்படாத கடன்கள் மற்றும் முற்பணங்களின் செயற்பாடுகள் அதிகரித்தமை வங்கித்துறை, அனுமதியளிக்கப்பட்ட நிதிக் கம்பனிகள் மற்றும் விஷேட குத்தகைக் கம்பனிகள் என்பவற்றின் செயலாற்றுகையைப் பாதித்தன. மேலும், குறைந்தளவான கடன் வளர்ச்சி, உயர் தொழிற்பாட்டு மற்றும் நிர்வாகச் செலவுகள் மற்றும் வரிகள் என்பன நிதியியல் துறையின் இவ்வருட இலாபத்தினை தீர்மானிக்கும் காரணிகளாக அமைந்தன.

33 அனுமதியளிக்கப்பட்ட வங்கிகளைக் கொண்ட வங்கித்துறை 2018ஆம் ஆண்டு அதன் சொத்து மதிப்புகளை விரிவாக்குவதைத் தொடர்ந்தது. இலங்கை மத்திய வங்கியின் சொத்துக்களின் பெறுமதியான இ.ரூபா 1,914.3 பில்லியன் உள்ளடங்கலாக வங்கித்துறையின் மொத்த சொத்துக்களின் பெறுமதி 15.22% வீதத்தினால் ரூபா 13,708 பில்லியனாக அதிகரித்தது. அதற்கமைவாக, 2018ம் ஆண்டு பிரதான நிதியியல் துறையில் மொத்த சொத்துகளில் 72.4% வீதத்தை வங்கித்துறை பிரதிநிதித்துவப்படுத்தியது.

பிரதானமாக அனுமதிபெற்ற நிதிக் கம்பனிகளை உள்ளடக்கிய ஏனைய வைப்புகளை ஏற்றுக்கொள்ளும் நிதி நிறுவனங்கள் 2017ஆம் ஆண்டு காணப்பட்ட இ.ரூபா 1,3740.4 பில்லியனில் இருந்து 2018ஆம் ஆண்டு இ.ரூபா 1,542.7 பில்லியனாக அதன் சொத்து மதிப்பினை விரிவுபடுத்திக் கொண்டன. அதற்கமைவாக, 2018ஆம் ஆண்டு நிதியியல் நிறுவனங்களின் சொத்தக்களின் அடிப்படை 12.57% வீதத்தினால் அதிகரித்தது.

விசேட நிதி நிறுவனங்களின் சொத்துகள் 2017ஆம் ஆண்டு காணப்பட்ட இ.ரூபா 388.9 மில்லியனில் இருந்து 2018ஆம் ஆண்டு 240 மில்லியனாக குறைவடைந்தது. விசேட குத்தகைக் கம்பனிகள் மற்றும் அலகு நம்பிக்கை நிதியங்கள்/ அலகு நம்பிக்கை முகாமைத்துவக் கம்பனிகள் இந்த வகுதியில் சொத்துக்களில் குறைப்புக்கு பங்களிப்பு செய்தன.

ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியங்கள் என்பவற்றை உள்ளடக்கிய ஒப்பந்த சேமிப்பு நிறுவனங்கள் மற்றும் ஏனைய ஓய்வூதிய மற்றும் சேமலாப நிதியங்கள் என்பவற்றின் சொத்துகளின் பெறுமதி 2018ஆம் ஆண்டு இ.ரூபா 2,808 பில்லியன் (2017 இ.ரூபா 2838 பில்லியன்) ஆகும். ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியங்கள் என்பன முன்னேற்றத்தைக் காட்டிய போதிலும் அனுமதியளிக்கப்பட்ட ஓய்வூதிய மற்றும் சேமலாப நிதியங்கள் வீழ்ச்சியை வெளிப்படுத்தின.


காப்புறுதித்துறை நிதியியல் சேவைகள் கைத்தொழிற்துறையில் முக்கிய வகிபாகத்தை வகித்ததுடன், 2017ஆம் ஆண்டு காணப்பட்ட இ.ரூபா 581.7 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2018ஆம் ஆண்டு இ.ரூபா 5817 பில்லியனைப் பதிவு செய்தது. கடந்த ஆண்டைப் போலவே இவ்வாண்டும் காப்புறுதிக் கம்பனிகள் நிதியியல் துறையில் உள்ள மொத்த சொத்துகளில் 3.3% வீதத்தை வகித்து.

## இலாபம்

இந்த ஆண்டில் நிலவிய வட்டி வீத சூழலில் ஏற்பட்ட ஏற்ற இறக்கம் மற்றும் பிற பொருளாதார இடையூறுகள் காப்புறுதித்துறையின் இலாபத்தை பாதித்ததுடன் காப்புறுதிக் கம்பனிகள் தங்களுடைய வரிக்கு முன்னரான இலாபமாக இ.ரூபா 37,017 மில்லயனை (2017: இ.ரூபா 49,084) அறிவித்தன. காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் மொத்த இலாபமானது ஒரே தடவையிலான மிகை தொகையைத் தவிர்த்து இ.ரூபா 36,636 மில்லியனாவதுடன், 2017ஆம் ஆண்டு இத்தொகை இ.ரூபா 33,217 மில்லியனாகும்.

2017ஆம் ஆண்டில், ஆணைக்குழு ஒரு தடவையிலான மிகையை அடையாளம் காணல் மற்றும் நடவடிக்கையை மேற்கொள்வதற்காக 16ஆம் இலக்க பணிப்புரையை விநியோகித்தது. அதற்கமைவாக, நீண்ட கால காப்புறுதி நிறுவனங்கள் பணிப்புரைக்கு இணக்கமாக, 31 டிசம்பர் 2017ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான

வரைபடம் 3
31 டிசம்பர் 2018ஆம் திகதியன்று பிரதான நிதியியல் துறைகளில் மொத்த சொத்துகளின் பரம்பல்



அட்டவணை 04

காப்புறுதிக் கம்பனிகளின் இலாபம்

| காப்புறுதியாளர் | 2017 (அ) | | | | 2018 (ஆ) | | |
|---|---|---|---|---|---|---|---|
| | நீண்டகால காப்புறுதி (இ.ரூபா '000) | | பொதுக் காப்புறுதி (இ.ரூபா '000) | மொத்தம் (இ.ரூபா) | நீண்ட கால காப்புறுதி (ஒரே தடவை மிகை மாற்றத்திற்கு பின்னர் (இ.ரூபா) | பொதுக் காப்புறுதி (இ.ரூபா '000) | மொத்தம் (இ.ரூபா '000) |
| | ஒரே தடவை மிகை மாற்றத்திற்கு முன்னர் | ஒரே தடவை மிகை மாற்றத்திற்கு பின்னர் | | | | | |
| ஏஜஏ லைப் | 7,597,097 | 13,677,945 | | 13,677,945 | 1,616,851 | | 1,616,851 |
| எலைன்ஸ் ஜென. | | | 184,346 | 184,346 | | 573,717 | 573,717 |
| எலைன்ஸ் லைப் | 104,026 | 104,026 | | 104,026 | 95,177 | | 95,177 |
| அமான ஜென. | | | 62,722 | 62,722 | | 22,987 | 22,987 |
| அமான லைப் | 50,592 | 50,592 | | 50,592 | (61,520) | | (61,520) |
| ஆர்பிகோ | 206,013 | 206,013 | | 206,013 | 65,694 | - | 65,694 |
| சிலிங்கோ ஜென. | | | 1,702,653 | 1,702,653 | | 2,335,822 | 2,335,822 |
| சிலிங்கோ லைப். | 6,351,351 | 9,807,535 | | 9,807,535 | 7,157,389 | | 7,157,389 |
| கென்டினன்டல் | | | 275,529 | 275,529 | | 436,349 | 436,349 |
| கோப்பரட்டிவ் ஜென. | | | 399,111 | 399,111 | | 417,169 | 417,169 |
| கோப்லைப் | 54,880 | 54,880 | | 54,880 | 42,678 | | 42,678 |
| பியார்பர்ஸ்ட் | | | 720,450 | 720,450 | | 724,809 | 724,809 |
| எச்என்பி லைப் | 725,665 | 725,665 | | 725,665 | 1,297,848 | | 1,297,848 |
| என்என்பி ஜென. | | | 201,361 | 201,361 | | 282,805 | 282,805 |
| ஜனசக்தி லைப் | (104,193) | 1,691,635 | | 1,691,635 | 9,378,738 | | 9,378,738 |
| ஜனசக்தி ஜென. | | | 1,361,882 | 1,361,882 | | - | - |
| எல்ஐசி | 24,643 | 24,643 | | 24,643 | (68,290) | | (68,290) |
| எல்ஓஎல்சி ஜென. | | | 272,157 | 272,157 | | 205,466 | 205,466 |
| எல்ஓஎல்சி லைப் | 144,595 | 400,730 | | 400,730 | (263,142) | | (263,142) |
| எம்பிஎஸ்எல் | - | - | (46,437) | (46,437) | - | (149,232) | (149,232) |
| என்ஐசீஎப் | | | 812,150 | 1,077,186 | | 1,717,284 | 3,288,840 |
| ஓரியன்ட் | | | 65,874 | 65,874 | | 94,740 | 94,740 |
| பீப்பிள்ஸ் | | | 866,691 | 866,691 | | 847,016 | 847,016 |
| சனச | 2,384 | 2,384 | 15,313 | 17,697 | (20,636) | 12,280 | (8,356) |
| சொப்ட்லொஜிக் லைப் | 1,106,517 | 1,904,521 | | 1,904,521 | 1,094,762 | | 1,094,762 |
| எஸ்எல்ஐசி | 3,216,447 | 3,314,683 | 2,575,519 | 5,890,202 | 1,658,851 | 3,796,991 | 5,455,843 |
| யூனியன் லைப் | 4,002,194 | 7,384,128 | | 7,384,128 | 2,132,392 | | 2,132,392 |
| மொத்தம் | **23,482,211** | **39,349,380** | **9,469,323** | **49,083,739** | **24,126,794** | **11,318,204** | **37,016,554** |

* 2018இல் மேற்கொள்ளப்பட்ட ஒரே தடவை மிகை பரிமாற்றம் உள்ளடக்கப்பட்டுள்ளது.

** மொத்த இலாபம் பயிர் மற்றும் மீள்காப்புறுதியின் வரிக்கு முன்னரான இலாபங்களான இ.ரூபா 229 மில்லியன் (2017:இ.ரூபா128 மில்லியன்) மற்றும் இ.ரூபா 1342 மில்லியன் (2017:இ.ரூபா136 மில்லியன்) என்பவற்றை உள்ளடக்கியுள்ளது.

பங்குதாரர்களின் நிதிக்கு பங்களிப்பு செய்யும் வியாபரத்தைத் தவிர்த்து ஒரே தடவையிலான மிகையை மாற்றம் செய்தன. ஒரே தடவை மிகையின் பரிமாற்றம் காரணமாக, 2017ஆம் ஆண்டு நீண்ட கால காப்புறுதியாளர்களின் இலாபம் இ.ரூபா 39,349 ஆவதுடன் 67.57% வீதமாக அதிகரித்தது. இது அட்டவணை 4 இல் விபரிக்கப்பட்டுள்ளது. 2018ஆம் ஆண்டு எச்என்பி லைப் நிறுவனம் மட்டுமே ஒரே தடவை மிகையான ரூபா 381 மில்லியனை (2017: இ.ரூபா 15,867) மாற்றம் செய்தது.

நீண்ட கால காப்புறுதி வியாபாரம் 2018ஆம் ஆண்டுக்கான வரிக்கு முன்னரான இலாபமாக இ.ரூபா 24,127 மில்லியனை அறிவித்ததுடன், இந்த இலாபம் ஜனசக்தி ஜெனரலின் துணை முதலீட்டின் அகற்றல் மூலம் கிடைத்த குறிப்பிடத்தக்க இலாபத்துடன் ஜனசக்தி லைப் நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்டது. ஒரே தடவையிலான மிகையை தவிர்ந்த ஏனைய ஒதுக்குகளை விடுவித்ததன் காரணமாக கடந்த இரு ஆண்டுகளில் ஆயுட் காப்புறுதி நிறுவனங்களின் இலாபம் முன்னேற்றப் போக்கைக் காட்டியது. ஏஜஏ லைப், சிலிங்கோ லைப், எச்என்பி லைப், ஜனசக்தி லைப்,

சொப்ஸ்ட்லொஜிக் லைப், எஸ்எல்ஜசி, யூனியன் லைப் போன்ற நிறுவனங்கள் அவர்களுக்காக நியமிக்கப்பட்ட கணிப்பீட்டாளர்களின் விதப்புரைக்கு அமைவாக பங்குதாரர்களுக்கு பங்களிப்பு செய்யும் வியாபாரம் தவிர்ந்த மிகைகளை மாற்றம் செய்தன.

கைத்தொழிற்துறையில் அவர்களுக்கிடையில் காணப்பட்ட கடும் போட்டி மற்றும் விலை அழுத்தங்களின் மத்தியிலும் கடந்த ஆண்டு பதிவுசெய்த இ.ரூபா 9,469 வரிக்கு முன்னரான இலாபத்தை விட அதிகரித்த இலாபமான இ.ரூபா 9,469 மில்லியனை 2018ஆம் ஆண்டில் பதிவு செய்தன. அதற்கமைவாக, ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் பொதுக் காப்புறுதி நிறுவனங்களின் இலாபம் 19.52% வீதத்தினால் அதிகரித்தது. இலங்கை காப்புறுதி நிறுவனம் மற்றும் சிலிங்கோ ஜெனரல் எனும் இரு நிறுவனங்களும் இணைந்து பொதுக் காப்புறுதி நிறுவனங்களின் 2018ஆம் ஆண்டுக்கான வரிக்கு முன்னரான இலாபத்தில் 54.19% வீதத்தை பங்களிப்பு செய்தன.

## காப்புறுதிக் கம்பனிகளின் பங்குதாரர்களின் நிதி

அட்டவணை 5 இல் விபரிக்கப்பட்டவாறு, காப்புறுதிக் கம்பனிகளில் உள்ள பங்குதாரர்களின் நிதி இ.ரூபா 191,273 ஆவதுடன், ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் இது 8.19% வீதத்தினால் அதிகரித்துள்ளது. 31 டிசம்பர் 2018ஆம் ஆண்டு முடிவடைந்த ஆண்டில் கைத்தொழிற்துறையினால் அறிவிக்கப்பட்ட மொத்த ஒதுக்குகளின் பெறுமதி இ.ரூபா 150,390 மில்லியன் ஆகும். 16ஆவது பணிப்புரையின் நிபந்தனைகளுக்கு அமைவாக சில குறிப்பிட்ட ஆயுள் காப்புறுதி நிறுவனங்களினால் பங்குதாரர்களின் "கட்டுப்படுத்தப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் ஒதுக்காக" பராமரிக்கப்பட்ட இ.ரூபா 16,248 மில்லியன் ஒரே தடவை மிகையினை பிரதிபலிக்கின்றது. வருடத்தின் இறுதியில் ஒதுக்கு நிலை வீழ்ச்சியினை அறிக்கையிட்டதன் விளைவாக இந்த ஆண்டு சில ஆயுள் மற்றும் பொதுக் காப்புறுதிக் கம்பனிகள் நட்டத்தை பதிவு செய்தன.

பங்குலாப கொடுப்பனவுகளின் காரணமாக பங்குதாரர்களின் நிதியில் சிறிய வீழ்ச்சி காணப்பட்ட போதிலும், இ.ரூபா 58,806 மில்லியனைப் பதிவுசெய்து பங்குதாரர் நிதி தொடர்பாக மிகப் பலமான நிலையை இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் அறிக்கையிட்டது. எனினும், இலங்கை

அட்டவணை 5

காப்புறுதிக் கம்பனிகளின் மொத்த பங்குதாரர்களின் நிதிகள்

| காப்புறுதியாளர் | 2017 (அ) | | 2018 (ஆ) | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | மொத்த பங்குதாரர்களின் நிதிகள் (இ.ரூபா'000) | % | எழுதப்பட்ட மூலதனம் (இ.ரூபா'000) | கட்டுப்படுத்தப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் ஒதுக்கு (இ.ரூபா'000) | மொத்த ஏனைய ஒதுக்குகள் (இ.ரூபா'000) | மொத்த பங்குதாரர்களின் நிதிகள் (இ.ரூபா'000) | % |
| ஏஜஏ லைப் | 17,358,916 | 9.82 | 511,922 | 6,080,848 | 12,106,094 | 18,698,864 | 9.78 |
| எலைன்ஸ் ஜென. | 1,574,375 | 0.89 | 8,079,529 | | 3,315,595 | 11,395,124 | 5.96 |
| எலைன்ஸ் லைப் | 883,746 | 0.50 | 739,624 | - | (21,563) | 718,060 | 0.38 |
| அமான ஜென. | 1,816,088 | 1.03 | 1,950,165 | | (22,600) | 1,927,565 | 1.01 |
| அமான லைப் | 573,788 | 0.32 | 532,051 | - | 14,694 | 546,745 | 0.29 |
| ஆர்பிகோ | 933,197 | 0.53 | 675,565 | - | 323,327 | 998,891 | 0.52 |
| சிலிங்கோ ஜென. | 9,774,455 | 5.53 | 500,200 | | 10,645,123 | 11,145,323 | 5.83 |
| சிலிங்கோ லைப். | 20,646,897 | 11.68 | 500,001 | 3,456,184 | 22,469,397 | 26,425,582 | 13.82 |
| கென்டினன்டல் | 1,436,494 | 0.81 | 750,000 | | 983,311 | 1,733,311 | 0.91 |
| கோப்பரட்டிவ் ஜென. | 2,080,131 | 1.18 | 1,430,195 | | 979,527 | 2,409,721 | 1.26 |
| கோப்லைப் | 618,715 | 0.35 | 544,260 | - | 97,780 | 642,040 | 0.34 |
| பியார்பர்ஸ்ட் | 4,530,086 | 2.56 | 3,131,949 | | 2,006,139 | 5,138,088 | 2.69 |
| எச்என்பி லைப் | 3,776,277 | 2.14 | 1,171,875 | 381,156 | 3,962,849 | 5,515,880 | 2.88 |
| என்என்பி ஜென. | 1,170,220 | 0.66 | 1,150,000 | | 228,434 | 1,378,434 | 0.72 |
| ஜனசக்தி லைப் | 9,460,877 | 5.35 | 4,853,752 | 1,795,829 | 2,176,715 | 8,826,295 | 4.61 |
| ஜனசக்தி ஜென. | 7,878,355 | 4.46 | - | | - | - | - |
| எல்ஜசி | 652,425 | 0.37 | 500,000 | - | (5,321) | 494,679 | 0.26 |
| எல்ஓஎல்சி ஜென. | 1,251,828 | 0.71 | 700,000 | | 641,080 | 1,341,080 | 0.70 |
| எல்ஓஎல்சி லைப் | 984,033 | 0.56 | 800,000 | 256,134 | (336,112) | 720,022 | 0.38 |
| எம்பிஎஸ்எல் | 26,673 | 0.02 | 1,080,022 | - | (1,202,514) | (122,492) | (0.06) |
| என்ஜசீஎப் | 7,354,525 | 4.16 | - | | 6,956,088 | 6,956,088 | 3.64 |
| ஓரியன்ட் | 668,831 | 0.38 | 825,000 | | (56,857) | 768,143 | 0.40 |
| பீப்பிள்ஸ் | 3,057,239 | 1.73 | 1,350,000 | | 2,025,147 | 3,375,147 | 1.76 |
| சனச | 789,445 | 0.45 | 1,044,979 | - | 46,748 | 1,091,726 | 0.57 |
| சொப்ட்லொஜிக் லைப் | 3,886,129 | 2.20 | 1,062,500 | 798,004 | 4,810,459 | 6,670,963 | 3.49 |
| எஸ்எல்ஜசி | 61,642,746 | 34.87 | 6,000,000 | 98,237 | 52,707,979 | 58,806,216 | 30.74 |
| யூனியன் லைப் | 11,964,714 | 6.77 | 1,000,000 | 3,381,934 | 9,289,754 | 13,671,688 | 7.15 |
| மொத்தம் | **176,791,205** | **100.00** | **40,883,587** | **16,248,326** | **134,141,272** | **191,273,185** | **100.00** |

காப்புறுதிக் கூட்டுத்தாபனம் இன்னும் பொது மற்றும் ஆயுள் காப்புறுதி வியாபாரங்களை வேறாக்கவில்லை. சிலிங்கோ லைப் நிறுவனமும் இ.ரூபா 26,426 மில்லியனை பங்குதாரர் நிதியாக பதிவுசெய்து ஆரோக்கியமான ஒதுக்கு நிலையிலுள்ளதுடன், அதனைத் தொடாந்து ஏஐஏ லைப் மற்றும் யூனியன் லைப் நிறுவனங்கள் உள்ளன.

பொதுக் காப்புறுதி நிறுவனங்களை எடுத்துக்கொண்டால், ஜனசக்தி ஜெனரல் கம்பனியை கைக்கொள்ளல் செய்ததன் ஊடாக எலைன்ஸ் ஜெனரலின் பதிவுசெய்யப்பட்ட மூலதனம் மற்றும் ஒதுக்கு நிலமை சிறிது முன்னேற்றம் கண்டுள்ளது. சிலிங்கோ ஜெனரல் 31 டிசம்பர் 2019ஆம் திகதியன்று இ.ரூபா 11,145 மில்லியனை பங்குதாரர் நிதியாக பதிவுசெய்ததன் ஊடாக சந்தையில் தொழிற்படும் நிறுவனங்களினுள் மிகச்சிறந்த ஆரோக்கியமான ஒதுக்கு நிலையைப் பராமரிக்கின்றது.

## காப்பறுதியாளர்களின் கிளைகள், ஊழியர்கள் மற்றும் முகவர்களின் பகுப்பாய்வு

அட்டவணை 6 மற்றும் வரைபு 4 இல் குறிப்பிடப்பிட்டவாறு, காப்புறுதியாளர்கள் 2018ஆம் ஆண்டு 19,437 நபர்களுக்கு தொழில்வாய்ப்பினை வழங்கியதன் ஊடாக நிதியியல் சேவைகள் துறையில் முக்கிய வகிபாகத்தை வகிக்கின்றது. அதற்கமைவாக, கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டு அண்ணளவாக 1000 புதிய தொழில்வாய்ப்புகள் உருவாக்கப்பட்டது. கலவைக் கம்பனிகள் 3,370 தொழில்வாய்ப்புகளை உருவாக்கிய போது, பொது காப்புறுதி மற்றும் நீண்டகால காப்புறுதி என்பன முறையே 9,819 மற்றும் 6,248 தொழில்வாய்ப்புகளை உருவாக்கின. கடந்த வருடத்தைப் போலவே இவ்வருடமும் 60% வீதமான ஊழியர்கள் மேல் மாகாணத்திலேயே உள்ளனர்.


மேலும் 44,904 நீண்ட கால காப்புறுதிக் கம்பனியின் வெற்றிக்கும் போட்டித்தன்மைக்கும்

அட்டவணை 06
2017 மற்றும் 2018 இல்
கிளைகள், ஊழியர்கள் மற்றும் முகவர்களின் எண்ணிக்கை

| மாகாணம் | கிளைகளின் எண்ணிக்கை | | ஊழியர்களின் எண்ணிக்கை | | முகவர்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|---|---|
| | 2017 | 2018 | 2017 | 2018 | 2017 | 2018 |
| மத்திய மாகாணம் | 177 | 204 | 1,018 | 1,070 | 4,418 | 3,768 |
| கிழக்கு மாகாணம் | 153 | 166 | 652 | 682 | 2,286 | 2,272 |
| வட மத்திய மாகாணம் | 139 | 144 | 724 | 753 | 2,468 | 2,257 |
| வட மேல் மாகாணம் | 224 | 233 | 1,116 | 1,151 | 4,238 | 4,497 |
| வட மாகாணம் | 161 | 162 | 547 | 622 | 3,171 | 2,683 |
| சப்ரகமுவ மாகாணம் | 161 | 160 | 822 | 866 | 3,117 | 3,166 |
| தென் மாகாணம் | 266 | 274 | 1,470 | 1,554 | 5,000 | 5,015 |
| ஊவா மாகாணம் | 121 | 124 | 583 | 632 | 2,435 | 2,204 |
| மேல் மாகாணம் | 677 | 680 | 11,535 | 12,107 | 17,733 | 19,042 |
| மொத்தம் | **2,079** | **2,147** | **18,467** | **19,437** | **44,866** | **44,904** |

பிரதான பணியினையாற்றும் முகவர்கள் கைத்தொழிற்துறையில் பணியாற்றுகின்றதுடன் வாடிக்கையாளர்களின் காப்புறுதித் தேவைகளை பூர்த்திசெய்வதில் முக்கியமான வகிபாகத்தை வகிக்கின்றனர். 2018ஆம் ஆண்டு 19,042 ஆக 7.38% வீதத்தினால் அதிகரித்த முகவர்கள் மேல் மாகாணத்தில் பாரிய பங்களிப்பினை வழங்குகின்றனர். அத்துடன், வடமேல் மாகாணத்தில் பணிபுரியும் முகவர்களின்

வரைபடம் 4
31 டிசம்பர் 2018 அன்று உள்ள கிளைகள், ஊழியர்கள் மற்றும் முகவர்களின் எண்ணிக்கை




எண்ணிக்கையும் 259 இருந்து 4,497 ஆக அதிகரித்துள்ளது. எனினும், பிரதானமாக மத்திய மற்றும் வட மாகாணங்களில் 2018ஆம் ஆண்டு முகவர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி காணப்பட்டது. 90 வீதத்திற்கும் அதிகமான முகவர்கள் நீண்டகால மற்றும் கலவைக் கம்பனிகளில் பணிபுரிகின்றனர்.

நாடு முழுவதிலும் கிளை வலையமைப்புகளை உருவாக்கியதன் ஊடாக வாடிக்கையாளர்களுக்கான சேவைகளை இலங்கையின் காப்புறுதிக் கைத்தொழிற்துறை விரிவாக்கியுள்ளது. ஒவ்வொரு வருடமும் புதிய கிளைகள் சேர்த்துக்கொள்ளப்படுகின்றன. 2017ஆம் ஆண்டு அறிக்கையிடப்பட்ட 2,079 கிளைகளுடன் ஒப்பிடுகையில் 2018ஆம் ஆண்டு அறிக்கையிடப்பட்ட கிளைகளின் எண்ணிக்கை 2,147 ஆகும். நீண்டகால மற்றும் பொதுக் காப்புறுதிக் கம்பனிகளினால் அறிக்கையிடப்பட்ட கிளைகளின் எண்ணிக்கை முறையே 1,159 மற்றும் 782 ஆகும். மிகுதிக் கிளைகள் கலவைக் கம்பனிகளுக்கு சொந்தமானவையாகும். இவ்வருடம் மத்திய மாகாணத்தில் உள்ள கிளைகளின் எண்ணிக்கை குறிப்பிட்டுக் கூறக்கூடியளவிற்கு அதிகரித்துள்ளது. அதனைத் தொடர்ந்து வடமேல், வட மத்திய, கிழக்கு மற்றும் மேல் மாகாணங்களில் புதிய கிளைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

## காப்புறுதிக் கம்பனிகளின் விநியோக ஊடகம்

இன்று காப்புறுதியாளர்கள் ஒன்றிணைக்கப்பட்ட முகவர்கள், சந்தைப்படுத்தல் அலுவலர்கள், வங்கிகள் மற்றும் ஏனைய நிதி நிறுவனங்கள் என்பவற்றை உள்ளடக்கி பல் விநியோக சட்டகத்தைக் கொண்டுள்ளன. மேலும், வாடிக்கையாளரின் உறவினைப் பலமாக்கும் முக்கியமான ஆலோசனைகள், இடை விற்பனை மற்றும் மேல் விற்பனை என்பவற்றை வழங்குவதன் ஊடாக டிஜிடல்மயப்படுத்தலின் துணையுடன் பெறுமதி சேர்த்தலை அவதானிக்க முடிகின்றது. கொடுப்பனவுகள்,

வரைபடம் 5
காப்புறுதி கம்பனிகளின் விநியோக ஊடகம்




| | 2017 நீண்ட காலம் | 2017 பொது | 2018 நீண்ட காலம் | 2018 பொது |
|---|---|---|---|---|
| முகவர்கள் | 87.41 | 33.19 | 86.93 | 34.76 |
| தரகர்கள் | 0.63 | 17.05 | 1.01 | 17.57 |
| முகவர்கள் தவிர்ந்த நிறைவேற்று விற்பனைப் படை | 3.69 | 43.72 | 3.02 | 41.67 |
| நேரடி | 1.69 | 2.84 | 1.55 | 2.85 |
| வங்கிகாப்புறுதி | 5.92 | 2.85 | 7.14 | 2.87 |
| ஏனைய | 0.65 | 0.34 | 0.35 | 0.29 |

சந்தைப்படுத்தல்கள் மற்றும் உரிமை கோரல் செயலாக்க காப்புறுதித் தொழில் போன்ற ஒருங்கிணைந்த செயல்பாடுகளில் பெறுமதி சேர்த்தல் இருந்த போதிலும், ஒன்லைன் நன்மைகளை ஒரு விநியோக ஊடகமாக இன்னும் பயன்படுத்தவில்லை.

மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டண தொகையில் 86.93 வீதத்தை உருவாக்கியதன் மூலம் சந்தையில் ஆயுள் காப்புறுதித்துறையினர் ஆதிக்கம் செலுத்தினர். நீண்டகால காப்புறுதியின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் 2017ஆம் ஆண்டு 5.92% ஆக இருந்ததுடன் இது 2018ஆம் ஆண்டு 7.14% ஆக சற்று அதிகரித்தது. மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டண உருவாக்கத்தில் பொதுக் காப்புறுதி வியாபாரத்தில் பிரத்தியேக விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் அலுவலர்களின் முக்கியத்துவம் காணப்பட்டது. இந்தப் பிரிவின் மூலம் 41.67% (2017:43.72%) நிறுவன முகவர்கள் மற்றும் நிதி மற்றும் குத்தகை நிறுவனங்கள் மற்றும் முகவர்களின் கீழ் வணிகப்படுத்தப்பட்ட குழுமம் ஆகியவை பொது காப்புறுதி வியாபாரத்தின் எழுதப்பட்ட தவணைக் கட்டண வருமானத்தை உருவாக்குவதற்கான ஒரு முக்கிய அடிப்படையாகும், இது மொத்த உள்நாட்டு உற்பத்தில் 34.76% ஆகும். எழுதப்பட்ட தவணைக் கட்டண வருமானத்தில் 17.57% வீதத்தை ஈட்டும் ஊடகமாக தரகு நிறுவனங்களும் முக்கிய பங்கு வகிக்கின்றன. நேரடி காப்புறுதி வியாபாரம் முக்கியமாக தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் மூலம் அரசாங்கத்தினால் செயற்படுத்தப்படும் காப்புறுதி திட்டங்களைக் குறிக்கின்றது.

வரைபு 5 காப்புறுதிக் கம்பனிகளின் எழுதப்பட்ட தவணைக் கட்டண வருமானத்திற்கு வேறுபட்ட விநியோக ஊடங்களினால் வழங்கப்பட்ட பங்களிப்பைக் காட்டுகின்றது.

## நீண்டகால காப்புறுதி வியாபாரம்

### மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம்

நீண்டகால காப்புறுதி மட்டுமே மேற்கொள்ள பதிவுசெய்யப்பட்ட பன்னிரண்டு காப்புறுதி நிறுவனங்களினதும் பொது மற்றும் நீண்ட காப்புறுதி வியாபாரங்களைக் கையாளும் மூன்று கலவை நிறுவனங்களினதும் மேம்பட்ட போட்டியை இலங்கையின் ஆயுள் காப்புறுதித்துறை எதிர்நோக்குகின்றது.

பொதுவாக, 2018ஆம் ஆண்டு எதிர்பார்த்ததை விட ஒப்பீட்டளவில்

அட்டவணை 7

கம்பனி ரீதியான எழுதப்பட்ட தவணைக் கட்டண வருமானம் மற்றும் சந்தை பங்கு - நீண்டகால காப்புறுதி வியாபாரம்


| காப்புறுதியாளர் | 2014 | | 2015 | | 2016 | | 2017 (அ) | | 2018 (ஆ) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் (இ.ரூபா) | சந்தைப் பங்கு (%) | மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் (இ.ரூபா) | சந்தைப் பங்கு (%) | மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் (இ.ரூபா) | சந்தைப் பங்கு (%) | மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் (இ.ரூபா) | சந்தைப் பங்கு (%) | மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் (இ.ரூபா) | சந்தைப் பங்கு (%) |
| ஏஐஏ லைப் | 7,266,574 | 16.29 | 8,433,333 | 15.71 | 10,103,915 | 15.92 | 11,510,581 | 16.08 | 12,739,351 | 15.86 |
| எலைன்ஸ் லைப் | 823,456 | 1.85 | 919,144 | 1.71 | 1,040,269 | 1.64 | 1,178,817 | 1.65 | 1,301,254 | 1.62 |
| அமான லைப் | 679,029 | 1.52 | 928,294 | 1.73 | 820,727 | 1.29 | 792,174 | 1.11 | 822,261 | 1.02 |
| ஆர்பிகோ | 297,439 | 0.67 | 482,447 | 0.90 | 745,386 | 1.17 | 1,038,085 | 1.45 | 1,391,241 | 1.73 |
| சிலிங்கோ லைப். | 12,002,524 | 26.91 | 13,456,828 | 25.06 | 15,027,600 | 23.67 | 15,765,484 | 22.03 | 17,812,774 | 22.18 |
| கோப்லைப் | 402,046 | 0.90 | 494,598 | 0.92 | 466,997 | 0.73 | 626,972 | 0.88 | 624,600 | 0.78 |
| எச்என்பி லைப் | 2,342,867 | 5.25 | 2,788,715 | 5.19 | 3,554,078 | 5.60 | 3,963,642 | 5.54 | 4,420,513 | 5.50 |
| ஜனசக்தி லைப் | 2,170,419 | 4.87 | 2,550,782 | 4.75 | 2,943,963 | 4.64 | 2,902,873 | 4.06 | 3,008,842 | 3.75 |
| எல்ஐசி | 348,767 | 0.78 | 386,885 | 0.72 | 473,867 | 0.75 | 582,114 | 0.81 | 522,698 | 0.65 |
| எல்ஓஎல்சி லைப் | 592,422 | 1.33 | 1,209,578 | 2.25 | 1,896,558 | 2.99 | 2,467,166 | 3.45 | 2,610,785 | 3.25 |
| எம்பிஎஸ்எல் | 294,299 | 0.66 | 203,235 | 0.38 | 235,533 | 0.37 | 123,732 | 0.17 | 65,839 | 0.08 |
| சனச | 260,867 | 0.58 | 311,434 | 0.58 | 367,637 | 0.58 | 454,056 | 0.62 | 526,938 | 0.67 |
| எஸ்எல்ஐசி | 8,121,159 | 18.21 | 10,470,079 | 19.50 | 11,893,640 | 18.74 | 12,517,119 | 17.49 | 13,205,802 | 16.45 |
| சொப்ட்லொஜிக் லைப் | 3,048,148 | 6.84 | 4,091,042 | 7.62 | 5,635,701 | 8.88 | 7,530,935 | 10.52 | 10,005,733 | 12.46 |
| யூனியன் லைப் | 5,945,499 | 13.33 | 6,964,390 | 12.97 | 8,270,751 | 13.03 | 10,117,630 | 14.14 | 11,243,915 | 14.00 |
| மொத்தம். | 44,595,516 | 100 | 53,690,783 | 100 | 63,476,622 | 100 | 71,571,380 | 100 | 80,302,546 | 100 |
| வளர்ச்சிவீதம் (%) | 7.01 | | 20.40 | | 18.23 | | 12.75 | | 12.20 | |

குறைந்த பொருளாதார வளர்ச்சி, சமூக பொருளாதார கொள்கையின் நிச்சயமில்லாத் தன்மை தொடர்ந்தமை காரணமாக நாணயத்தின் பெறுமதி வீழ்ச்சியடைந்ததையினால் இது கொடுப்பனவுகளின் நிலுவையைப் பாதித்தமை மற்றும் நேரடி மற்றும் மறைமுக வரிகளின் அதிகரிப்பின் காரணமாக செலவழிக்கக்கூடிய வருமானம் போன்ற காரணங்களினால் உலகளாவிய ரீதியிலும் உள்நாட்டிலும் சவாலான வருடமாக அமைந்தது.

இவ்வாறான சவால்களுக்கு மத்தியிலும், இலங்கையின் ஆயுள் காப்புறுதி கைத்தொழிற்துறை தொடர்ச்சியாக வளர்ச்சியடைந்து 2017ஆம் ஆண்டு பதிவு செய்த இ.ரூபா 71,571 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 12.20% (2017:12.75%) வீத வளர்ச்சியுடன் இ.ரூபா 80,303 மில்லியனை எழுதப்பட்ட தவணைக் கட்டண வருமானமாகப் பெற்றுக்கொண்டது.

வரைபடம் 6

மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணத்தின் நிறுவன வாரியான சந்தைப் பங்கு - 2018 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான நீண்டகால காப்புறுதி வர்த்தகம்




வாடிக்கையாளர்களுக்கு தரமான சேவையை உறுதி செய்வதற்கான செயல்பாட்டு செயல்முறைகளை மேம்படுத்துவதற்கான காப்புறுதியாளர்களின் முயற்சிகளின் விளைவாக, தற்போதுள்ள காப்புறுதி வகைகளை மறுசீரமைத்தல், வாடிக்கையாளர்களின் மாறிவரும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக புதுமையான ஆயுள் காப்புறுதி வகைகளை அறிமுகப்படுத்துதல், காப்புறுதி குறித்த வாடிக்கையாளர் விழிப்புணர்வை மேம்படுத்துதல் மற்றும் மேம்படுத்தப்பட்ட செயற்பாடுகளின் விளைவாக ஆயுள் காப்புறுதிச்

சந்தை அதன் வளர்ச்சி வேகத்தைத் தக்கவைத்துக் கொண்டது.

மேலும், 2018ஆம் ஆண்டின் போது காப்புறுதி நிறுவனங்களின் பிந்திய பிரித்தல் அனைத்துக் காப்புறுதி நிறுவனங்களும் தங்கள் வியாபார வகையில் வலுவான கவனம் செலுத்தவதற்கு வழிவகுத்தது மற்றும் உயரும் நகரமயமாக்கல், வாடிக்கையாளர் நுட்ப நிலைகள் மற்றும் நாட்டின் ஒட்டுமொத்த நுண் பொருளாதார அம்சங்கள் போன்ற காரணிகள் ஆயுள் காப்புறுதி வியாபாரத்தின் வளர்ச்சிக்கு வழிவகுத்தன.

அதன்படி, நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டண வருமானம் 2014 தொடக்கம் 2018 வரையிலான காலகட்டத்தில் 80.07% முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. கடந்த நான்கு ஆண்டுகளில் தொழிற்துறைக்கு இரட்டை இலக்க எழுதப்பட்ட தவணைக் கட்டண வருமான வளர்ச்சி வீதம் காணப்பட்டாலும், 2018ஆம் ஆண்டிலிருந்து பதிவு செய்யப்பட்ட வளர்ச்சி வீதத்தில் சரிவு காணப்பட்டது. அட்டவணை 7 கம்பனிகள் ரீதியான எழுதப்பட்ட தவணைக் கட்டண வருமானம் மற்றும் நீண்ட கால காப்புறுதி நிறுவனங்களின் சந்தைப் பங்கை விளக்குகின்றது.


2018ஆம் ஆண்டில் இ.ரூபா 17,813 மில்லியனை (2017:இ.ரூபா:15,765 மில்லியன்) எழுதப்பட்ட தவணைக் கட்டண வருமானத்தை உருவாக்கியதன் மூலம் நீண்ட கால காப்புறுதிச் சந்தையில் செலிங்கோ லைப் தொடர்ந்து தனது ஆதிக்கத்தை தக்க வைத்துக் கொண்டுள்ளதுடன் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டண வருமானத்தில் 22.18% வீத பங்கைக் கொண்டுள்ளது. எஸ்எல்ஐசி மற்றும் ஏஐஏ லைப் முந்தைய ஆண்டைப் போலவே 2018ஆம் ஆண்டில் முறையே இ.ரூபா 13,206 மில்லியன் (2017: 12,517 மில்லியன்) மற்றும் இ.ரூபா 12,739 மில்லியனைத் (2017: இ.ரூபா 11,511 மில்லியன்) எழுதப்பட்ட தவணைக் கட்டணமாகப் பெற்றுக்கொண்டதன் ஊடாக சந்தைப் பங்கில் முறையே 16.45% மற்றும் 15.86% வீதத்தைப் பெற்று இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களைப் பெற்றன. இந்த மூன்று கம்பனிகளின் பங்களிப்பு 2017ஆம் ஆண்டு பதிவுசெய்த 55.60% வீதத்துடன் ஒப்பிடுகையில் 2018ஆம் ஆண்டு பதிவுசெய்த 54.49% வீதமானது சிறிய வீழ்ச்சியை வெளிப்படுத்தகின்றது.

யூனியன் லைப் மற்றும் சொப்ட் லொஜிக் லைப் 2018ஆம் ஆண்டில் முறையே இ.ரூபா 11,244 மில்லியன் (2017: 10,118 மில்லியன்) மற்றும் இ.ரூபா 10,006 மில்லியனைத் (2017: இ.ரூபா 7,531 மில்லியன்) எழுதப்பட்ட தவணைக் கட்டணமாகப் பெற்றுக்கொண்தன் ஊடாக சந்தைப் பங்கில் முறையே 14.00% மற்றும் 12.46% வீதத்தைப் பெற்று நான்காவது மற்றும் ஐந்தாவது இடங்களைப் பெற்றன. சிலிங்கோ லைப், ஆர்பிகோ லைப் மற்றும் சொப்ட்லொஜிக் லைப் தவிர்ந்த ஏனைய அனைத்த நீண்ட கால காப்புறுதி கம்பனிகளும் அவர்களுடை சந்தைப் பங்கில் எல்லை வீழ்ச்சியை வெளிப்படுத்தின. மேலும், 2017ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஆர்ப்பிகோ மற்றும் சொப்ட்லொஜிக் லைப் என்பன 2018ஆம் ஆண்டில் குறிப்பிடக்கூடியளவு வளர்ச்சியான 30% வீதத்திற்கு மேற்பட்ட வளர்ச்சியை பதிவுசெய்தன. எல்ஓஎல்சி லைப் 2017ஆம் ஆண்டு பெற்றுக்கொண்ட 30% வீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018ஆம் ஆண்டு 5.82% வீதத்தினால் பாரிய வீழ்ச்சியை அடைந்துள்ளது. மேலும், கோப்லைப் மற்றும் எல்ஐசி என்பன (28 ஜுன் 2017 இருந்து 2 ஏப்பிரல் 2019 வரை இடைநிறுத்தப்பட்ட எம்பிஎஸ்எல் தவர்த்து) 2017ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2018ஆம் ஆண்டு உருவாக்கிய எழுதப்பட்ட தவணைக் கட்டண வருமான மறை வளர்ச்சியை வெளிப்படுத்தியுள்ளது. வரைபு 6 ஒவ்வொரு ஆயுள் காப்புறுதிக் கம்பனியும் உருவாக்கிய எழுதப்பட்ட தவணைக் கட்டண வருமானத்தின் செயலாற்றுகையை வெளிப்படுத்தகின்றது.

## மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டண வருமானத்திற்கு பங்களிப்பு செய்த முதல் ஐந்து பங்குதாரர்களும் ஏனைய காப்புறுதிக் கம்பனிகளும் - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்

வரைபு 7 கடந்த ஐந்து ஆண்டுகளில் சந்தைப்பங்கிள் அடிப்படையில் முதல் ஐந்து பங்குதாரர்களினதும் ஏனைய காப்புறுதிக் கம்பனிகளின்

வரைபடம் 07
2014 - 2018 வரை ஐந்து முன்னணி நிறுவனங்களும் காப்புறுதி வர்த்தகப் பங்குகளும் - நீண்டகால காப்புறுதி வர்த்தகம்




| | சிலிங்கோ லைப். | எஸ்எல்ஐசி | ஏஐஏ லைப் | யூனியன் லைப் | சொப்ட்லொஜிக் லைப | ஏனையவை |
|---|---|---|---|---|---|---|
| 2014 | 26.92 | 18.21 | 16.29 | 13.33 | 6.84 | 18.41 |
| 2015 | 25.06 | 19.50 | 15.71 | 12.97 | 7.62 | 19.14 |
| 2016 | 23.67 | 18.74 | 15.92 | 13.03 | 8.88 | 19.76 |
| 2017(அ) | 22.03 | 17.49 | 16.08 | 14.14 | 10.52 | 19.74 |
| 2018(ஆ) | 22.18 | 16.45 | 15.86 | 14.00 | 12.46 | 19.05 |

விபரங்களையும் வெளிப்படுத்தகின்றது. சிலிங்கோ லைப், எஸ்எல்ஜசி, ஏஐஏ லைப், யூனியன் லைப் மற்றும் சொப்ட் லொஜிக் லைப் என்பன 2018ஆம் ஆண்டு நீண்ட கால காப்புறுதித்துறைச் சந்தையில் முதல் ஐந்து இடங்களைக் கைப்பற்றியுள்ளன. இந்த ஐந்து கம்பனிகளும் இணைந்து இ.ரூபா 65,008 மில்லியனை எழுதப்பட்ட தவணைக் கட்டண வருமானமாகப் பெற்று 80.95% (2017: 80.26%) வீதத்தைப் பதிவுசெய்தன. 2017ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2018ஆம் ஆண்டு சிலிங்கோ லைப் அதன் சந்தை வளர்ச்சியில் சிறிதளவு முன்னேற்றத்தை வெளிப்படுத்தியதுடன் நீண்டகால காப்புறுதிக் கைத்தொழிற்துறையில் பிரதான பங்குதாரர்களான எஸ்எல்ஜசி, ஏஐஏ லைப் மற்றும் யூனியன் லைப் என்பன 2017ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியை வெளிப்படுத்தகின்றன. ஐந்தாவது பங்களிப்பாளரான செ ாப்ட்லொஜிக் லைப் சந்தைப் பங்கில் 12.46% (2017: 10.52%) வீதத்தைக் கைப்பற்றியுள்ளதுடன் கடந்த ஐந்து ஆண்டுகளில் படிப்படியான வளர்ச்சியை அதன் சந்தைப் பங்கில் வெளிப்படுத்தியுள்ளது. நீண்ட கால காப்புறுதிச் சந்தையில் உள்ள ஏனைய காப்புறுதி நிறுவனங்களின் சந்தைப் பங்கு 19.05% வீத (2017: 19.74%) சந்தைப் பங்கினைப் பெற்று சற்று வீழ்ச்சியைப் வெளிப்படுத்தியுள்ளது.

## மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம், மீள்காப்புறுதிக்கு வழங்கப்பட்ட தவணைக்கட்டணம் மற்றும் தக்கவைத்துக்கொண்ட வீதத்தின் பகுப்பாய்வு - நீண்ட கால காப்புறுதி

அட்டவணை 8 இல் விபரிக்கப்பட்டவாறு, 2018ஆம் ஆண்டு பங்குபற்றும் மற்றும் பங்குபற்றாத வியாபாரங்கள் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டண வருமானத்திற்கு முறையே 25.64% வீத(2017: 26.81%) மற்றும் 71.80 மூ வீத(2017: 70.32%) பங்களிப்பினை வழங்கியுள்ளது. சில காப்புறுதி நிறுவனங்கள் பங்கேற்பு வியாபாரத்தில் இருந்து விலகிச் சென்றதனால், பங்கேற்பு அம்சங்களைக் கொண்ட தயாரிப்புகள் வழங்கலில் குறைவடைந்துவிட்டன. இருப்பினும், எஸ்எல்ஜசி 45% வீத மதிப்புடைய பங்குபற்றும் வியாபாரத் தயாரிப்புகளை தனது எழுதப்பட்ட தவணைக் கட்டண வருமானத்தில் கொண்டுள்ளது.

2018ஆம் ஆண்டு பங்குபற்றாத வியாபாரத் தயாரிப்புகள் 14.57% வீதமாக வளர்ச்சியடைந்துள்ளதுடன் இ.ரூபா 57,660 மில்லியனைப் பதிவுசெய்துள்ளது. சந்தையில் இணைக்கப்பட்ட நீண்டகால காப்புறுதி வகைகளுக்கான தேவை குறைந்த முதலீட்டாளர்களின் நம்பிக்கை மற்றும் பங்குச் சந்தையில் மெதுவான செயற்திறன் ஆகியவை 2018ஆம் ஆண்டில் இ.ரூபா 2,054 மில்லியன் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டண வருமானத்தை வழங்கியது.

அட்டவணை 8இல் விபரிக்கப்பட்டவாறு 2018ஆம் ஆண்டு ஆயுள் காப்புறுதி வியாபாரத்தின் தக்கவைத்துக்கொள்ளும் வீதம் 95.81% (2017:95.99%) ஆகும். 2018ஆம் ஆண்டில் பங்கேற்காத வியாபாரம் தொடர்பான மீள்காப்புறுதியாளர்களுக்கு வழங்கப்பட்ட எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தில் ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சி வீதம் 17% வீதமாக இருந்தபோதிலும், இது மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டண வளர்ச்சியை புகாரளிக்கின்றது. இணைக்கப்பட்ட நீண்ட கால வியாபாரம் தொடர்பான மீள்காப்புறுதியாளர்களுக்கு வழங்கப்பட்ட எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் வளர்ச்சியானது காப்புறுதியாளர்களின் மீள் காப்புறுதி ஏற்பாட்டை மேம்படுத்துவதேயாகும்.

## நீண்டகால காப்புறுதி வியாபாரத்தின் சொத்துகள்

காப்புறுதியாளர்களுக்கு, விசேடமாக ஆயுள் காப்புறுதியாளர்களுக்கு அவர்களுடைய நீண்ட கால பொறுப்புகளுடன், வினைத்திறனான சொத்துப் பொறுப்பு முகாமைத்துவம் பிரதானமாகும். அட்டவணை 9 மற்றும் வரைபு 8 என்பன 31 டிசம்பர் 2017 மற்றும் 2018ஆம் ஆண்டுகளில் கம்பனி ரீதியான நீண்ட கால காப்புறுதியாளர்களின் மொத்த சொத்துக்களை விளக்குகின்றது.

அட்டவணை 8
மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம், மீள்காப்புறுதிக்கு வழங்கப்பட்ட தவணைக்கட்டணம் மற்றும் தக்கவைத்துக்கொண்ட வீதத்தின் பகுப்பாய்வு - நீண்ட கால காப்புறுதி

| வகுப்பு | 2016 | | | 2017 (அ) | | | 2018 (ஆ) | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் (இ.ரூபா '000) | மீள்காப்பு-றுதியாளர்-களுக்கு வழங்கப்பட்ட தவணைக் கட்டணம் (இ.ரூபா '000) | தக்கவைத்-தல் வீதம் (%) | மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் (இ.ரூபா '000) | மீள்காப்பு-றுதியாளர்-களுக்கு வழங்கப்பட்ட தவணைக் கட்டணம் (இ.ரூபா '000) | தக்கவைத்-தல் வீதம் (%) | மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் (இ.ரூபா '000) | மீள்காப்பு-றுதியாளர்-களுக்கு வழங்கப்பட்ட தவணைக் கட்டணம் (இ.ரூபா '000) | தக்கவை-த்தல் வீதம் (%) |
| பங்குபற்றல் | 18,056,530 | 178,699 | 99.01 | 19,187,271 | 148,134 | 99.23 | 20,588,173 | 153,520 | 99.25 |
| பங்குபற்றாத | 43,393,219 | 2,271,917 | 94.76 | 50,327,490 | 2,661,364 | 94.71 | 57,660,445 | 3,115,590 | 94.60 |
| அலகு இணைக்க-ப்பட்டது | 2,026,873 | 30,069 | 98.52 | 2,056,618 | 59,872 | 97.09 | 2,053,927 | 98,672 | 95.20 |
| மொத்தம் | **63,476,622** | **2,480,685** | **96.09** | **71,571,380** | **2,869,370** | **95.99** | **80,302,546** | **3,367,781** | **95.81** |

அட்டவணை 9

மொத்த சொத்துக்களின் நிறுவன ரீதியான பகுப்பாய்வு - நீண்டகால காப்புறுதி வர்த்தகம்


| சொத்துகளின் வகை | 2017 (அ) | | 2018 (ஆ) | |
|---|---|---|---|---|
| | இ.ரூபா'000 | % | இ.ரூபா'000 | % |
| ஏஐஏ லைப் | 52,576,947 | 13.42 | 54,405,489 | 12.66 |
| அலியான்ஸ் லைப் | 4,015,838 | 1.02 | 4,648,594 | 1.08 |
| அமானா லைப் | 2,809,627 | 0.72 | 2,844,544 | 0.66 |
| ஆர்பிகோ | 2,104,045 | 0.54 | 2,717,868 | 0.63 |
| செலிங்கோ லைப் | 106,094,508 | 27.07 | 118,059,390 | 27.47 |
| கோப்லைப் | 2,214,565 | 0.57 | 2,369,515 | 0.55 |
| எச்என்பி லைப் | 15,419,280 | 3.93 | 18,678,274 | 4.35 |
| ஜனசக்தி லைப் | 20,020,952 | 5.11 | 20,919,453 | 4.87 |
| எல்ஐசி | 2,667,267 | 0.68 | 2,795,737 | 0.65 |
| எல்ஓஎல்சி லைப் | 4,102,317 | 1.05 | 4,683,738 | 1.09 |
| எம்பிஎஸ்எல் | 634,896 | 0.16 | 661,822 | 0.15 |
| சணச | 1,944,909 | 0.50 | 1,828,952 | 0.43 |
| எஸ்எல்ஐசி | 121,739,739 | 31.06 | 128,642,499 | 29.94 |
| சொப்ட்லொஜிக் லைவ் | 12,478,446 | 3.18 | 17,332,967 | 4.03 |
| யூனியன் லைப் | 43,067,007 | 10.99 | 49,116,729 | 11.43 |
| மொத்தம் | **391,890,345** | **100.00** | **429,705,570** | **100.00** |

31 டிசம்பர் 2018ஆம் திகதியன்று நீண்ட கல காப்புறுதி வியாபாரமானது இ.ரூபா 429,706 மில்லியனை (2017: இ.ரூபா 391,890 மில்லியன்) பெற்றுக்கொண்டுள்ளதுடன், 31 டிசம்பர் 2017ஆம் ஆண்டு காணப்பட்ட மொத்த சொத்துக்களுடன் ஒப்பிடுகையில் இது 9.65% வீத வளர்ச்சியைப் பதிவுசெய்கின்றது.

கடந்த ஆண்டைப் போலவே, எஸ்எல்ஐசி இ.ரூபா 128,642 மில்லியன் பெறுமதியான பெரும்பான்மையான சொத்துக்களை வைத்துக்கொண்டுள்ளதுடன், இது மொத்த சொத்தில் 29.94% வீதமாகும்.

வரைபடம் 08

31 டிசம்பர் 2017 மற்றும் 2018ஆம் திகதியன்று மொத்த சொத்துக்களின் பகுப்பாய்வு – நீண்டகால காப்பறுதி வியாபாரம




சந்தையில் சிலிங்கோ லைப் மற்றும் ஏஐஏ லைப் என்பன முறையே 27.47% (இ.ரூபா 118,059 மில்லியன்) மற்றும் 12.66% (இ.ரூபா 54,405 மில்லியன்) வீதமான சொத்துக்களைக் கொண்டு இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பெற்றுள்ளது. அதற்கமைவாக, எஸ்எல்ஐசி, சிலிங்கோ லைப் மற்றும் ஏஐஏ லைப் என்பன ஒன்றிணைந்து நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தில் மொத்த சொத்துகளில் 70% வீதத்திற்கு மேற்பட்ட பங்கினை பெற்றுக்கொண்டன.

யூனியன் லைப், ஜனசக்தி லைவ் மற்றும் எச்என்பி லைப் என்பன தங்கள் சொத்து அடிப்படையை அதிகரித்ததன் ஊடாக முறையே நான்காம், ஐந்தாம் மற்றும் ஆறாம் இடங்களைப் பெற்றுக்கொண்டன. கடந்த வருடத்தைப் போலவே, 31 டிசம்பர் 2018ஆம் திகதியில் சனசவைத் தவிர்த்து ஏனைய அனைத்துக் கம்பனிகளும் தங்கள் மொத்த சொத்துக்களை மேம்படுத்திக் கொண்டன.

## 31 டிசம்பர் 2017 மற்றும் 2018ஆம் திகதியன்று சொத்துக்களின் செறிவு - நீண்டகால காப்பறுதி வியாபாரம்

அட்டவணை 10 மற்றும் வரைபு 9 என்பவற்றில் 31 டிசம்பர் 2017 மற்றும் 31 டிசம்பர் 2018ஆம் திகதிகளில் வேறுபட்ட சொத்து வகைகளில் நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தின் செறிவுகள்.

கடந்த வருடத்தைப் போலவே, ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுடன் இணங்குவதற்காகவும் இடர்களைக் குறைப்பதற்காகவும் அரசாங்க கடன் பிணையங்களில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு ஆயுள் காப்புறுதியாளர்கள் முன்னுரிமை அளித்தனர். எனினும், மொத்த சொத்துகளில், அரசாங்க கடன் பிணைங்களின் பெறுமதி 31 டிசம்பர் 2018ஆம் திகதியில் இ.ரூபா 176,437 மில்லியனாகவும் (இ.ரூபா 183,350 மில்லியன்) 41.06% வீதத்தைப்

அட்டவணை 10

31 டிசம்பர் 2017 மற்றும் 2018ஆம் திகதியன்று சொத்துக்களின் செறிவு - நீண்டகால காப்பறுதி வியாபாரம்

| சொத்துகளின் வகை | 2017 (அ) | | 2018 (ஆ) | |
|---|---|---|---|---|
| | இ.ரூபா'000 | % | இ.ரூபா'000 | % |
| அரசாங்க கடன் பிணையங்கள் | 183,349,981 | 46.79 | 176,436,676 | 41.06 |
| உரிமைப் பங்குகள் | 44,382,861 | 11.33 | 35,109,870 | 8.17 |
| கூட்டிணைந்த கடன் | 72,939,391 | 18.61 | 80,776,780 | 18.80 |
| நிலம் மற்றும் கட்டிடங்கள் | 11,077,650 | 2.83 | 13,625,448 | 3.17 |
| வைப்புகள் | 41,048,688 | 10.47 | 66,962,746 | 15.58 |
| அலகு நம்பிக்கைகள் | 6,881,290 | 1.76 | 6,884,885 | 1.60 |
| பூட்கைக் கடன்கள் | 6,130,590 | 1.56 | 5,833,641 | 1.36 |
| ஏனைய சொத்துகள் | 22,587,408 | 5.76 | 40,617,878 | 9.46 |
| காசு மற்றும் காசுக்கு சமமானவை | 3,492,486 | 0.89 | 3,457,646 | 0.80 |
| மொத்தம் | **391,890,345** | **100** | **429,705,570** | **100** |

பிரதிநிதித்துவப்படுத்தியதுடன் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் சிறிய வீழ்ச்சியை பதிவுசெய்தது.

31 டிசம்பர் 2018ஆம் திகதியன்று நீண்ட கால வியாபரங்கள் மொத்த சொத்துக்களில ஏனைய பிரதான சொத்து வகைகளான கூட்டிணைந்த கடன்கள், வங்கி வைப்புகள் மற்றும் உரிமைப் பங்குகள் என்பன முறையே 18.80%, 15.58% மற்றும் 8.17% வீதத்தை .பிரதிநிதித்துவப்படுத்தின. 2018ஆம் ஆண்டில், 31 டிசம்பர் 2018ஆம் திகதயில் கூட்டிணைந்த கடன்கள் இ.ரூபா 80,777 மில்லியனாக அதிகரித்ததுடன் 10.75% வீத (இ.ரூபா 72,939 மில்லியன்) அதிகரிப்பை பதிவுசெய்தது.

31 டிசம்பர் 2018ஆம் திகதியன்று உரிமைப் பங்குகளில் முதலீடுகள் இ.ரூபா 35,110 மில்லியனைப் பதிவுசெய்ததுடன், 31 டிசம்பர் 2017ஆம் திகதி பதிவுசெய்யப்பட்ட இ.ரூபா 44,383 மில்லியனுடன் ஒப்பிடுகையில் இது ஓர் சரிவாகும். நிச்சயமற்ற அரசியல் நிலமைகள், நிலையில்லா பொருளாதார கொள்கைகள் மற்றும் விரிவடைந்துவரும் சந்தைக்கான எதிர்மறையான உலக அபிவிருத்திகள் போன்ற காரணங்கள் கம்பனிகளின் உரிமைப்பங்கு முதலீட்டு நிலையைப் பாதித்ததுடன், அது உள்நாட்டு உரிமைப் பங்கு சந்தையில் எதிர்மறையான அசைவினை பிரதிபலித்தது.

கூட்டிணைந்த கடன்களில் மேற்கொண்ட முதலீடுகளை ஒத்ததாக, அதிகரித்த வட்டி வீதங்களால் 31 டிசம்பர் 2018ஆம் திகதியன்று வைப்புத் தொகை கணிசமாக அதிகரிக்க வழிவகுத்தது. அப்பெறுமதி இ.ரூபா 66,963 மில்லியனாக இருந்ததுடன் 31 டிசம்பர் 2017ஆம் திகதி பதிவு செய்த இ.ரூபா 41,049 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 61.13% எனும் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை வெளிப்படுத்தியது.


மேலும் ஏனைய சொத்துகள் குறிப்பிடத்தக்க அதிகரிப்புடன், இ.ரூபா 40,618 மில்லியனை பதிவுசெய்து மொத்த சொத்துக்களில் 9.46% வீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியது. இந்த வகை கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 79.83% வீதம் அதிகரிப்பை வெளிப்படுத்தியதுடன் முக்கியமாக ஒத்திவைக்கப்பட்ட வரி சொத்துகள், திரட்டப்பட்ட முதலீட்டு வருமானம், பணிக்கொடை நன்மை சொத்துகள் மற்றும் கடனாளிகள் போன்றவற்றை உள்ளடக்கியுள்ளதுடன், இது 31 டிசம்பர் 2017ஆம் திகதியன்று இ.ரூபா 41,049 மில்லியனை பதிவுசெய்துள்ளது.

எனினும், 2018 இல் திருத்தப்பட்ட வரிச் சட்டத்தை அமுல்படுத்தியதன் விளைவாக இ.ரூபா 9,156 மில்லியன் மதிப்புள்ள ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துக்களை ஆயுள் காப்புறுதியாளர்கள் அங்கீகரித்துள்ளனர். அவை எதிர்கால வரி செலுத்துதல்களை ஈடுசெய்யப் பயன்படுத்தப்படலாம்.

எனினும், முக்கிய முதலீட்டு வகைகளான அரசாங்க கடன் பிணையங்கள், கூட்டிணைந்த கடன்கள் மற்றும் வைப்புகள் 2018 இல் நீண்ட கால காப்புறுதியாளர்கள் வைத்திருந்த மொத்த சொத்துக்களில் 75.44% (2017: 75.87%) வீதத்தையும் மற்றும் மீதமுள்ள

வரைபடம் 9

31 டிசம்பர் 2017 மற்றும் 2018ஆம் திகதியன்று சொத்துக்களின் செறிவு – நீண்டகால காப்பறுதி வியாபாரம்



அட்டவணை 11

முதலீட்டு வருமானம் மற்றும் சராசரி முதலீடுகளின் சுருக்கம் - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்

| வகை | 2017 (அ) | | | 2018 (ஆ) | | |
|---|---|---|---|---|---|---|
| | முதலீட்டு வருமானம் (இ.ரூபா '000) | சராசரி வருமானம் (இ.ரூபா'000) | முதலீட்டு வருவாய் விகிதம் (%) | முதலீட்டு வருமானம் (இ.ரூபா'000) | சராசரி வருமானம் (இ.ரூபா'000) | முதலீட்டு வருவாய் விகிதம் (%) |
| **அரசாங்க கடன் பிணையங்கள்** | 19,677,088 | 172,823,351 | 11.39 | 19,509,213 | 179,893,329 | 10.84 |
| - திறைசேரி பிணையங்கள் | 18,321,109 | | | 17,876,498 | | |
| - திறைசேரி உண்டியல்கள் | 108,711 | | | 296,332 | | |
| - ஏனையவை (ரிபோ) | 1,247,268 | | | 1,336,382 | | |
| உரிமைப் பங்கு | 1,013,995 | 33,899,535 | 2.99 | 1,071,240 | 31,041,750 | 3.45 |
| - மூலதன ஈட்டுகை/ நட்டங்கள் | (294,173) | | | (173,346) | | |
| - பங்குலாபம் | 1,308,167 | | | 1,244,586 | | |
| **கூட்டிணைந்த கடன்கள்** | 8,417,610 | 72,160,137 | 11.67 | 9,528,146 | 76,858,085 | 12.40 |
| - தொகுதிக்கடன் | 8,324,681 | | | 9,450,032 | | |
| - வணிகப் பத்திரம் மற்றும் ஏனையவை | 92,929 | | | 78,114 | | |
| - ஏனைய அதையொத்த நிதிக் கருவிகள் | - | | | - | | |
| நிலம் மற்றும் கட்டிடங்கள் | 88,147 | 10,541,592 | 0.84 | 80,109 | 12,351,549 | 0.65 |
| **வைப்புகள்** | 4,535,278 | 34,667,120 | 13.08 | 6,558,766 | 54,005,717 | 12.14 |
| - வங்கி | 4,080,779 | | | 6,013,545 | | |
| - நிதி கம்பனிகள் | 454,499 | | | 545,221 | | |
| அலகு நம்பிக்கை | 104,828 | 4,410,341 | 2.38 | 235,590 | 6,883,088 | 3.42 |
| பூட்கை கடன்கள் | 288,435 | 5,927,562 | 4.87 | 106,230 | 5,982,116 | 1.78 |
| ஏனையவை | 57,868 | 721,486 | 8.02 | 52,091 | 1,135,697 | 4.59 |
| மொத்தம் | **34,183,249** | **335,151,124** | **10.20** | **37,141,384** | **368,151,330** | **10.09** |

25.56% (2017:24.13%) வீதத்தை பங்குகள், நிலம் மற்றும் கட்டடங்கள், பிற் சொத்துகள், பூட்கைக் கடன்கள் போன்றவற்றினை கொண்டிருந்தன.

## முதலீட்டு வருமானம் - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்

2018ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட வட்டி விகிதங்கள் அதிகரித்த போதிலும், 2017ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட இ.ரூபா 34,183 மில்லியனுடன் ஒப்பிடும் போது முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட மொத்த வருமானம் 8.65% வீதமாக அதிகரித்து, இ.ரூபா 37,141 மில்லியனாக உயர்ந்துள்ளது. அட்டவணை 11 இல் சித்தரிக்கப்பட்டுள்ளபடி, அரசாங்க திறைசேரிப் பத்திரங்கள், கூட்டிணைந்த கடனீடுகள் மற்றும் வங்கி வைப்புகள் அதிகம் கவர்ச்சிகரமான முதலீட்டு விருப்பங்கள் மொத்த முதலீட்டு வருமானத்தில் 89.76% வீத பங்களிப்பை வழங்கின.

அரசாங்க கடன் பிணையங்களிலிருந்து பெறப்பட்ட மொத்த முதலீட்டு வருமானம் இ.ரூபா 179,893 மில்லியன் சராசரி முதலீடுகளுக்கு எதிராக 2018ஆம் ஆண்டில் இ.ரூபா 19,509 மில்லியனாக இருந்தது. அதன்படி, அரசாங்க கடன் பிணையங்கள் 2018ஆம் ஆண்டிற்கான 10.84% வீத முதலீட்டு வருவாயைப் பதிவு செய்துள்ளன. மேலும், வைப்புத் தொகையின் வட்டி வருமானம் முந்தைய ஆண்டை விட 44.62% வீதம் அதிகரித்துள்ளது. முதலீட்டு வகையின் குறிப்பிடத்தக்க பகுதியைக் கொண்டிருக்கும் கூட்டிணைந்த கடன் இ.ரூபா 9,828 மில்லியன் (2017: இ.ரூபா 8,418 மில்லியன்) முதலீட்டு வருமானத்தை ஈட்டியது மற்றும் ஆண்டுக்கு 13.19% வீதம் வளர்ச்சியடைந்துள்ளது. மேலும், கூட்டிணைந்த கடனின் முதலீட்டு வருவாய் 2017இல் பெற்றப்பட்ட 11.67% வீதத்துடன் ஒப்பிடுகையில் 2018ஆம் ஆண்டு 12.40% வீதமாக இருந்தது. அதன்படி, அதிக முதலீட்டு வருவாய் விகிதம் அனைத்து நிதி முதலீடுகளிலும் பெரு நிறுவன கடன்களால் பெறப்படுகின்றது.

ஒட்டு மொத்த முதலீட்டு வருவாய் 2018 இல் 10.09% வீதமாக இருந்ததுடன் 2017 இல் 10.20% வீதமாக இருந்தது.

## காப்புறுதிக் கம்பனிகளின் கடன்தீர் நிலை - நீண்டகால காப்புறுதி வியாபாரம்

அட்டவணை 12, 31 டிசம்பர் 2017 மற்றும் 2018 ஆம் திகதியன்று நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தின் கிடைக்கப்பெறும் மொத்த மூலதனம், இடர் அடிப்படையிலான மூலதனத் தேவைப்பாடு மற்றும் மூலதனப் போதுமை விகிதம் என்பவற்றை விளக்குகின்றது. 2017 மற்றும் 2017ஆம் ஆண்டுகளுக்காக நீண்ட கால காப்புறுதி வியாபாரங்கள் மூலதன போதுமை விகிதமாக முறையே 314% மற்றும் 355% வீதங்களைப் பதிவுசெய்தன. அனைத்து காப்புறுதி கம்பனிகளும் மிகக் குறைந்த தேவைப்பாடான 102% வீதத்தை 31 டிசம்பர் 2018 அன்று திருப்தியானளவில் பூர்த்தி செய்ததுடன் எல்ஓஎல்சி லைப் நிறுவனத்தை தவிர்த்து அனைத்துக் கம்பனிகளும் ஆணைக்குழுவினால்

அட்டவணை 12

கடன்தீர் நிலையின் கம்பனி ரீதியான பகுப்பாய்வு - 31 டிசம்பர் 2017 மற்றும் 2018ஆம் திகதியில் நீண்ட கால காப்புறுதி வியாபாரம்

| காப்புறுதியாளர் | 31 டிசம்பர் 2017 அன்று (ஆ) | | | | 31 டிசம்பர் 2018 அன்று (ஆ) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மொ.கி.மு (இ.ரூபா'000) | இ.அ.மு.தே (இ.ரூபா'000) | ச.மு.ம.க (இ.ரூபா'000) | மு.போ.வி (இ.ரூபா'000) | மொ.கி.மு (இ.ரூபா'000) | இ.அ.மு.தே (இ.ரூபா'000) | ச.மு.ம.க (இ.ரூபா'000) | மு.போ.வி (இ.ரூபா'000) |
| ஏஐஏ லைப் | 23,866,513 | 3,853,018 | 4,010,591 | 595 | 19,221,556 | 2,934,346 | 974,079 | 655 |
| எலையன்ஸ் லைப் | 1,208,658 | 172,560 | 79,873 | 700 | 1,214,542 | 293,397 | 100,329 | 414 |
| அமான லைப் | 555,105 | 312,338 | - | 178 | 493,210 | 278,560 | - | 177 |
| ஆர்பிகோ | 1,417,242 | 163,944 | - | 864 | 1,618,804 | 413,912 | 406,492 | 391 |
| சிலிங்கோ லைப். | 52,476,848 | 13,984,914 | - | 375 | 53,627,152 | 14,983,052 | 8,129 | 358 |
| கோப்லைப | 644,898 | 421,572 | - | 153 | 776,624 | 318,802 | - | 244 |
| எச்என்பி லைப் | 6,038,377 | 1,689,029 | 483,048 | 358 | 6,636,693 | 2,082,131 | 451,835 | 319 |
| ஜனசக்தி லைப் | 5,178,103 | 2,151,085 | 717,405 | 241 | 9,663,465 | 2,915,036 | 728,421 | 332 |
| எல்ஐசி | 665,053 | 253,998 | - | 262 | 476,371 | 248,126 | - | 192 |
| எல்ஓஎல்சி லைப் | 1,008,325 | 442,673 | - | 228 | 634,156 | 455,978 | - | 139 |
| எம்பிஎஸ்எல் | 155,065 | 78,956 | - | 196 | 219,364 | 57,412 | - | 382 |
| சனச | 522,525 | 289,799 | 54,773 | 180 | 594,237 | 290,923 | 2,953 | 204 |
| எஸ்எல்ஐசி | 74,563,589 | 17,278,458 | - | 432 | 80,502,789 | 18,308,338 | 608,221 | 440 |
| சொட்லொஜிக் லைப் | 6,084,461 | 2,921,106 | 826,001 | 208 | 7,933,517 | 3,961,403 | 1,450,442 | 200 |
| யூனியன் லைப் | 16,532,023 | 4,701,641 | - | 352 | 14,382,478 | 5,495,855 | 164,406 | 262 |
| மொத்தம் ∴ ஒட்டுமொத்தம் | **190,916,785** | **48,715,089** | **6,171,691** | **355** | **197,994,959** | **53,037,271** | **4,895,307** | **314** |

குறிப்பிடப்பட்ட அமுலாக்கல் மட்டமான 160% வீதத்திற்கும் மேற்பட்ட மூலதனப் போதுமை விகிதத்தை தாண்டின. மேலும், காப்புறுதியாளர்கள் மூலதனப் போதுமை தேவைப்பாடான இ.ரூபா 500 மில்லியனைப் பேணுதல் வேண்டும். எம்பிஎஸ்எல், அமான லைப் மற்றும் எல்ஐசியைத் தவிர்த்து ஏனைய அனைத்து ஆயுள் காப்புறுதி நிறுவனங்களும் மொத்த கிடைக்கப்பெறும் மூலதனமான இ.ரூபா 500 மில்லியனை 31 டிசம்பர் 2018அன்று பேணவில்லை. அதற்கமைவாக, 2015 விதிகளான கடன்தீர் எல்லை நிபந்தனைகளில் (இடர் அடிப்படையிலான மூலதனம்) உள்ள மொத்த கிடைக்கப்பெறும் மூலதனம் தேவைப்பாட்டினை பேணாத நிறுவனங்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது.

அனைத்து ஆயுள் காப்புறுதி நிறுவனங்களின் ஒப்பந்தங்களும் ஒரே நேரத்தில் சரணடைதல் மதிப்பு மூலதன கட்டணம் தீவிர பாதகமான சூழ்நிலையின் அபாயத்தை நிவர்த்தி செய்கின்றது, சில நிறுவனங்களுக்கு இந்த மதிப்பு எதிர்மறையாகவோ அல்லது பூஜ்ஜியமாகவோ இருக்கலாம். அதன்படி, சரணடைதல் மதிப்பு மூலதன கட்டணம் 31 டிசம்பர் 2018ஆம் திகதியன்று இ.ரூபா 4,895 மில்லியனாக இருந்தது மற்றும் 2017 உடன் ஒப்பிடும் போது குறிப்பிடத்தக்க அளவு குறைக்கப்பட்டுள்ளது.

## காப்புறுதிக் கம்பனிகளின் மொத்த கிடைக்கப்பெறும் மூலதனத் தேவைப்பாடு - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்

அட்டவணை 13, 31 டிசம்பர் 2018ஆம் திகதியில் நீண்ட கால காப்புறுதிக் கம்பனிகளின் கிடைக்கப்பெறும் மூலதனத் தேவைப்பாட்டின் அமைப்பினை சித்தரிக்கின்றது. 31 டிசம்பர் 2018ஆம் திகதியில், நீண்ட கால காப்புறுதிக் கம்பனிகளின் திரண்ட கிடைக்கப்பெறும் மூலதனத் தேவைப்பாட்டுத் தொகை இ.ரூபா 197,995 மில்லியன் (2017: இ.ரூபா 190,917 மில்லியன்) மற்றும் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் அதன் எல்லை வளர்ச்சி 3.71% வீதமாகும். இவற்றில் 2017ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது ஜனசக்தி லைப் அறிவித்த கிடைக்கப்பெறும் மூலதனத் தேவைப்பாட்டின் அளவில் பாரிய அதிகரிப்பு காணப்பட்டது, முக்கியமாக தொடர்புடைய தரப்புகளில் அனுமதிக்க முடியாத முதலீடுகளை அகற்றுவதன் காரணமாக, அகற்றுவதற்கு முன் கிடைக்கப்பெறும் மூலதனத் தேவைப்பாட்டினைத் தீர்மானிக்கும் இது ஒரு விலக்கு என்று கருதப்பட்டது. மேலும், யூனியன் லைப், ஏஐஏ லைப் மற்றும் எல்ஓஎல்சி லைப் என்பன அறிவித்த கிடைக்கப்பெறும் மூலதனத் தேவைப்பாடு அனுமதிக்கப்படாத சொத்துகளின் அதிகரிப்பு மற்றும் மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் எல்ஓஎல்சி லைப் அறிவித்த குறிப்பிடத்தக்க இழப்புகளின் விளைவாக அனுமதிக்க முடியாத சொத்துக்கள் என்பன காரணமாக 2017 இற்கு எதிராக 2018ஆம் ஆண்டில் முறையே 13%, 19.46% மற்றும் 37% வீதத்தினால் குறைந்துள்ளன.

ஒட்டுமொத்த கிடைக்கப்பெறும் மூலதனத் தேவைப்பாடு அடுக்கு I, அடுக்கு II மூலதனம் மற்றும் கழிப்பனவுகளை உள்ளடக்கியது. அடுக்கு I மூலதனம் என்பது இழப்புகளை ஈடுசெய்ய முழுமையாக கிடைக்கக்கூடிய மூலதனம்

அட்டவணை 13

காப்புறுதிக் கம்பனிகளின் மொத்த கிடைக்கப்பெறும் மூலதனத் தேவைப்பாடு - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்

| காப்புறுதியாளர் | 31 டிசம்பர் 2017ஆம் திகதியன்று (அ) | 31 டிசம்பர் 2018ஆம் திகதியன்று (ஆ) | | | |
|---|---|---|---|---|---|
| | கி.மூ.தே (இ.ரூபா'000) | அடுக்கு I (இ.ரூபா'000) | அடுக்கு II (இ.ரூபா'000) | கழிப்பனவுகள் (இ.ரூபா'000) | கி.மூ.தே (இ.ரூபா'000) |
| ஏஐஏ லைப் | 23,866,513 | 18,475,920 | 6,548,764 | 5,803,128 | 19,221,556 |
| எலைன்ஸ் லைப் | 1,208,658 | 1,457,677 | - | 243,135 | 1,214,542 |
| அமான லைப் | 555,105 | 516,058 | 35,482 | 58,330 | 493,210 |
| ஆர்பிகோ | 1,417,242 | 1,883,431 | - | 264,627 | 1,618,804 |
| சிலிங்கோ லைப். | 52,476,848 | 58,007,149 | 3,624,280 | 8,004,277 | 53,627,152 |
| கோப்லைப் | 644,898 | 876,538 | 58,245 | 158,159 | 776,624 |
| எச்என்பி லைப் | 6,038,377 | 9,339,704 | 381,156 | 3,084,166 | 6,636,693 |
| ஜனசக்தி லைப் | 5,178,103 | 9,897,367 | 1,795,829 | 2,029,730 | 9,663,465 |
| எல்ஐசி | 665,053 | 572,026 | 9,050 | 104,704 | 476,371 |
| எல்ஓஎல்சி லைப் | 1,008,325 | 686,896 | 256,134 | 308,875 | 634,156 |
| எம்பிஎஸ்எல் | 155,065 | 220,695 | - | 1,331 | 219,364 |
| சனச | 522,525 | 849,357 | 1,221 | 256,341 | 594,237 |
| எஸ்எல்ஐசி | 74,563,589 | 82,938,158 | 31,128 | 2,466,497 | 80,502,789 |
| சொப்ட்லொஜிக் லைப் | 6,084,461 | 10,575,915 | 846,440 | 3,488,838 | 7,933,517 |
| யூனியன் லைப் | 16,532,023 | 15,304,859 | 5,072,672 | 5,995,053 | 14,382,478 |
| மொத்தம் | **190,916,785** | **211,601,749** | **18,660,402** | **32,267,190** | **197,994,959** |

மற்றும் தக்க வருவாய் மற்றும் வருவாய்களுக்கான மாற்றங்கள் 31 டிசம்பர் 2017ஆம் திகதியன்று இ.ரூபா 209,252 மில்லியனுடன் ஒப்பிடும் போது 31 டிசம்பர் 2018ஆம் திகதியன்று காணப்பட்ட இ.ரூபா 211,602 மில்லியனாக இருந்தது. தொடர்ந்து செல்லும் அடிப்படையில் இழப்பை அகத்துறிஞ்சுவதற்கு உதவும் அடுக்கு II மூலதனம் 31 டிசம்பர் 2018ஆம் திகதியன்று இ.ரூபா 18,660 மில்லியனாக இருந்ததுடன் அறிவிக்கப்பட்ட 31 டிசம்பர் 2017ஆம் திகதியன்று காணப்பட்ட இ.ரூபா 6,947 மில்லியனுடன் ஒப்பிடும் போது குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்துள்ளது. ஒரே தடவை மிகைகளை அடையாளம் காணல் மற்றும் நடைமுறை தொடர்பாக ஆணைக்குழு வழங்கிய 16ஆம் இலக்க பணிப்புரைக்கு அமைவாக, நீண்டகால காப்புறுதியாளர்கள் ஒரேதடவை மிகையை மாற்றுவதற்கு அனுமதிக்கப்படுகின்றனர், பங்குபற்றும் வியாபாரத்தைத் தவிர பங்குதாரர் நிதிகளுக்கு மாறும் காப்புறுதியாளர்கள் ஒழுங்குமுறை இருப்பு பங்குதாரர் நிதிகளில் உள்ள இந்த மிகையை கட்டுப்படுத்தப்பட்டதாக பராமரிக்க அறிவுறுத்தப்பட்டனர்.

பணிப்புரையில் கூறப்பட்ட தேவைப்பாட்டுக்கு அமைவாக, அடுக்கு II மூலதனத்தின் கீழ் கட்டுப்படுத்தப்பட்ட ஒழுங்குமுறை இருப்பு அறிக்கையிடப்பட்டுள்ளது, இதன் விளைவாக அடுக்கு II மூலதனத்தை ஆண்டுக்கு 168.61% வீதமாக உயர்த்தியது.

கிடைக்கப்பெறும் மூலதனத் தேவைப்பாட்டின் 16.30% வீதத்தைக் குறிக்கும் முக்கியமாக அருவமான அல்லது திரவமற்ற சொத்துக்களைக் கொண்ட கழிவுகள் 27.63% வீதமாக அதிகரித்துள்ளன, இ.ரூபா 25,283 மில்லியனுடன் ஒப்பிடும் போது இ.ரூபா 32,267 மில்லியன், இது ஆயுள் காப்புறுதியாளர்களின் ஒத்திவைக்கப்பட்ட வரி சொத்துக்களை 2018ஆம் ஆண்டில் குறைப்பு என அங்கீகரிப்பதன் காரணமாக ஏற்பட்டதாகும்.

## காப்புறுதி கம்பனிகளின் இடர் அடிப்படையிலான மூலதனத் தேவைப்பாடு ஒப்பீடுகள் - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்

அட்டவணை 14, 31 டிசம்பர் 2017 மற்றும் 2018ஆம் திகதியன்று இடர் அடிப்படையிலான மூலதனத் தேவைப்பாடு தொடர்பான பல்வேறு மூலதனக் கட்டணங்களின் நிறுவன ரீதியான அமைப்பை விளக்குகின்றது. இடர் அடிப்படையிலான மூலதனத் தேவைப்பாடு என்பது பன்முகப்படுத்தலுக்கான பொருத்தமான கொடுப்பனவுகளுடன் பிரதான இடர் வகைகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட மூலதனக் கட்டணங்களின் மொத்தமாகும். கடன் இடர், செறிவு இடர், சந்தை இடர், மீள்காப்புறுதி இடர், பொறுப்பு இடர் மற்றும் இந்த நோக்கத்திற்காக பிரதான இடர் வகைகளாக கருதப்படுகின்றன.

2018ஆம் ஆண்டில், பல்வகைப்படுத்தலுக்குப் பிறகு மொத்த ஆபத்து மூலதனக் கட்டணங்கள் நீண்ட கால காப்புறுதி வியாபாரத்திற்கான

அட்டவணை 14

31 டிசம்பர் 2017ஆம் திகதியில் காப்புறுதி கம்பனிகளின் இடர் அடிப்படையிலான மூலதனத் தேவைப்பாடு ஒப்பீடுகள் - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்

| காப்புறுதியாளர் | 31 டிசம்பர் 2017ஆம் திகதியில் (அ) இ.ரூபா '000 | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | கடன் இடர் | செறிவு இடர் | சந்தை இடர் | மீள்காப்புறுதி இடர் | பொறுப்பு இடர் | தொழிற்பாட்டு இடர் | பல் வகைப்படுத்தலுக்கு முன் இ.மூ.தே | பல் வகைப்படுத்தலுக்க் முன் இ.மூ.தே |
| ஏஜஐ லைப் | 544,451 | 474,348 | 2,267,270 | - | 1,941,588 | 527,000 | 5,754,658 | 3,853,018 |
| எலைன்ஸ் லைப் | 2,774 | 25,188 | 66,840 | 470 | 139,893 | 33,617 | 268,782 | 172,560 |
| அமான லைப் | 28,721 | 214,431 | 63,375 | 529 | 49,814 | 28,114 | 384,984 | 312,338 |
| ஆர்பிகோ | 23,827 | 54,087 | 61,596 | - | 83,571 | 20,747 | 243,828 | 163,944 |
| சிலிங்கோ லைப். | 1,068,870 | 567,911 | 12,088,853 | 4,653 | 2,430,953 | 1,071,222 | 17,232,461 | 13,984,914 |
| கோப்லைப் | 50,641 | 12,837 | 300,411 | - | 211,709 | 22,063 | 597,662 | 421,572 |
| எச்என்பி லைப் | 194,403 | 362,576 | 1,030,356 | 1,759 | 551,798 | 152,059 | 2,292,949 | 1,689,029 |
| ஜனசக்தி லைப் | 247,394 | 53,919 | 1,700,189 | 1,082 | 760,967 | 194,302 | 2,957,852 | 2,151,085 |
| எல்ஐசி | 25,835 | 44,139 | 174,420 | 82 | 63,257 | 27,289 | 335,022 | 253,998 |
| எல்ஓஎல்சி லைப் | 1,072 | 16,189 | 240,874 | 4,457 | 354,006 | 41,041 | 657,639 | 442,673 |
| எம்பிஎஸ்எல் | 4,428 | 14,432 | 47,136 | 5 | 42,863 | 6,357 | 115,223 | 78,956 |
| சனச | 27,824 | 166,080 | 84,412 | 307 | 77,346 | 19,275 | 375,241 | 289,799 |
| எஸ்எல்ஐசி | 1,042,994 | 1,972,474 | 13,709,970 | - | 4,149,374 | 1,259,957 | 22,134,770 | 17,278,458 |
| சொப்ட்லொஜிக் லைப் | 92,124 | 348,759 | 1,481,824 | - | 2,195,653 | 123,141 | 4,241,501 | 2,921,106 |
| யூனியன் லைப் | 196,407 | 471,272 | 3,837,662 | 276 | 1,270,902 | 435,499 | 6,212,016 | 4,701,641 |
| மொத்தம் | **3,551,764** | **4,798,642** | **37,155,187** | **13,620** | **14,323,694** | **3,961,683** | **63,804,590** | **48,715,089** |

| காப்புறுதியாளர் | 31 டிசம்பர் 2018ஆம் திகதியில் (ஆ) இ.ரூபா '000 | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | கடன் இடர் | செறிவு இடர் | சந்தை இடர் | மீள்காப்புறுதி இடர் | பொறுப்பு இடர் | தொழிற்பாட்டு இடர் | பல் வகைப்படுத்தலுக்கு முன் இ.மூ.தே | பல் வகைப்படுத்தலுக்க் முன் இ.மூ.தே |
| ஏஜஐ லைப் | 420,637 | 574,443 | 1,007,142 | - | 2,074,536 | 545,703 | 4,622,461 | 2,934,346 |
| எலைன்ஸ் லைப் | 2,380 | 7,035 | 215,230 | 779 | 184,040 | 37,356 | 446,819 | 293,397 |
| அமான லைப் | 18,882 | 153,823 | 102,350 | 512 | 28,509 | 29,076 | 333,153 | 278,560 |
| ஆர்பிகோ | 33,831 | 121,978 | 135,120 | 264 | 292,926 | 26,911 | 611,030 | 413,912 |
| சிலிங்கோ லைப். | 1,426,249 | 733,458 | 12,532,563 | 4,393 | 2,679,805 | 1,148,284 | 18,524,753 | 14,983,052 |
| கோப்லைப் | 54,053 | 41,797 | 190,285 | - | 138,573 | 23,635 | 448,344 | 318,802 |
| எச்என்பி லைப் | 239,892 | 405,478 | 1,352,803 | 2,235 | 547,326 | 184,588 | 2,732,322 | 2,082,131 |
| ஜனசக்தி லைப் | 247,969 | 65,840 | 2,461,137 | 2,397 | 863,013 | 197,503 | 3,837,859 | 2,915,036 |
| எல்ஐசி | 27,673 | 67,415 | 143,172 | 117 | 63,359 | 26,978 | 328,715 | 248,126 |
| எல்ஓஎல்சி லைப் | 15,260 | 26,772 | 202,240 | - | 382,183 | 46,723 | 673,179 | 455,978 |
| எம்பிஎஸ்எல் | 2,342 | 4,692 | 43,457 | - | 26,513 | 6,622 | 83,626 | 57,412 |
| சனச | 26,723 | 175,162 | 85,285 | 341 | 40,565 | 18,103 | 346,179 | 290,923 |
| எஸ்எல்ஐசி | 1,264,435 | 2,185,672 | 14,278,384 | - | 4,391,860 | 1,267,836 | 23,388,188 | 18,308,338 |
| சொப்ட்லொஜிக் லைப் | 167,517 | 608,112 | 2,027,729 | - | 2,793,684 | 170,954 | 5,767,996 | 3,961,403 |
| யூனியன் லைப் | 218,989 | 603,863 | 4,542,621 | - | 1,089,026 | 479,743 | 6,934,241 | 5,495,855 |
| மொத்தம் | **4,166,833** | **5,775,542** | **39,319,520** | **11,038** | **15,595,920** | **4,210,013** | **69,078,865** | **53,037,271** |

இ.ரூபா 53,037 மில்லியன் (2017: இ.ரூபா 48,715 மில்லியன்) ஆகும். பல்வகைப்படுத்தலுக்கு முன்னர் இ.ரூபா 69,079 மில்லியனாக இருந்தது.


கடந்த ஆண்டைப் போலவே, சந்தை இ.ரூபா 39,320 மில்லியனாக இருந்ததுடன், அதன் பிறகு முறையே பொறுப்பு இடர் மற்றும் செறிவு இடர் என்பன இருந்தது. அதன்படி மூன்று இடர் வகைகளும் பல்வகைப்படுத்தலுக்கு முன்னர் மொத்த இடர் மூலதன கட்டணங்களில் 87.86% ஐக் குறிக்கின்றன.

## விநியோகிக்கப்பட்ட பூட்கைகளின் மற்றும் அமுலில் உள்ள பூட்கைகளின் எண்ணிக்கை - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்

2018ஆம் ஆண்டின் போது, நீண்டகால காப்புறுதி நிறுவனங்கள் 712,013 புதிய ஆயுள் காப்புறுதி பூட்கைகளை விநியோகித்துள்ளன, இது கடந்த ஆண்டு விநியோகித்த புதிய காப்புறுதி எண்ணிக்கை 643,483 உடன் ஒப்பிடுகையில் 10.65% வீத வளர்ச்சியாகும். இது ஆயுள் காப்புறுதி நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட மொபைல் அப்பிலிகேசன்ஸ் ஊடாக விநியோகிக்கப்பட்ட ஆயுள் காப்புறுதி, ஒரு நாள் கோரிக்கைகளை நிறைவேற்றுதல்

வரைபடம் 10

### விநியோகிக்கப்பட்ட பூட்கைகளின் மற்றும் அமுலில் உள்ள பூட்கைகளின் எண்ணிக்கை – நீண்ட கால காப்புறுதி வியாபாரம்




| | 2014 | 2015 | 2016 | 2017 (அ) | 2018 (ஆ) |
|---|---|---|---|---|---|
| விநியோகிக்கப்பட்ட புதிய ஆயுள் காப்புறுதி பூட்கைகளின் எண்ணிக்கை | 545,303 | 740,511 | 668,714 | 643,483 | 712,013 |
| அமுலில் உள்ள ஆயுள் காப்புறுதி பூட்கைகளின் எண்ணிக்கை | 2,604,667 | 2,889,763 | 3,009,427 | 3,068,866 | 3,215,911 |
| மொத்த சனத்தொகையில் அமுலில் உள்ள ஆயுள் காப்புறுதி பூட்கைகளின் % * | 12.5 | 13.8 | 14.19 | 14.31 | 14.84 |
| மொத்த தொழிற்படையில் அமுலில் உள்ள ஆயுள் காப்புறுதி பூட்கைகளின் % * | 29.6 | 33.6 | 37.62 | 35.51 | 37.93 |


*மூலம்: அரையாண்டு தொழிற்படை மற்றும் குடிசனத்தொகை – குடித்தொகை மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

போன்ற புதிய புத்தாக்கங்களின் காரணமாக ஏற்பட்டதாகும். அதற்கமைவாக 2018ஆம் ஆண்டு 3,215,911 (2017:3,068,866) ஆயுள் காப்புறுதிப் பூட்கைகள் அமுலில் இருந்தன. வரைபடம் 10இல் சித்தரிக்கப்பட்டுள்ளவாறு, மொத்த ஆயுள் காப்புறுதிப் பூட்கைகள் கடந்த ஐந்து ஆண்டுகளில் நடைமுறையில் படிப்படியாக அதிகரித்துள்ளது. இது நீண்ட கால காப்புறுதி வியாபாரம் நாட்டில் தொடர்ந்து விரிவடைந்து வருவதை பிரதிபலிக்கின்றது.

மொத்த மக்கள் தொகையில் ஆயுள் காப்புறுதிக் கொள்கைகளின் எண்ணிக்கையானது 2018இல் 14.84% வீதமாக இருந்தது, இது 2017இல் பதிவு செய்யப்பட்ட 14.31% வீதத்துடன் உடன் ஒப்பிடும் போது மேலும் அதிகரித்துள்ளது. மேலும் ஆயுள் காப்புறுதிப் பூட்கைகளின் எண்ணிக்கை தொழிற்படையின் 2017இல் பதிவு செய்யப்பட்ட 31.51% வீதத்தில் இருந்து 2018 இல் 37.93% வீதமாக உயர்ந்தள்ளது.

வரைபடம் 11

### 2017 மற்றும் 2018இல் அமுலில் உள்ள பூட்கைகளின் வகைப்படுத்தல் – நீண்டகால காப்புறுதி வியாபாரம்




## அமுலில் உள்ள பூட்கைகளின் வகைப்படுத்தல் மற்றும் காப்புறுதி செய்யப்பட்ட தொகை - நீண்டகால காப்புறுதி வியாபாரம்

அட்டவணை 15, 2017 மற்றும் 2018ஆம் ஆண்டுகளில் அமுலில் உள்ள காப்புறுதி பூட்கைகளின் எண்ணிக்கை மற்றும் காப்புறுதி வகைப்படுத்தலின் அடிப்படையில் காப்புறுதியின் பெறுமதி என்பவற்றை விபரிக்கின்றது. முக்கிய தயாரிப்புகளாக என்டோவ்மென்ட் யுனிவேர்சர் லைப், தவணை, முழு மற்றும் ஏனையவை என வகைப்படுத்தப்பட்டுள்ளது. 2018இல், மொத்த காப்புறுதி செய்யப்பட்ட பெறுமதி இ.ரூபா 2,850,115 மில்லியன் ஆவதுடன், ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 22.16% வீதம் வளர்ச்சியடைந்தது.

பெரும்பான்மையான ஒரு முறைக் கொடுப்பனவின் உள்ளாந்த பண்புகள் காரணமாக, 1,270,693 எண்ணிக்கையான நடைமுறையில் உள்ள பெரும்பாலன பூட்கைகள் உரிமை வழங்குதல் சார்ந்ததாகும். எனினும், நுகர்வோர் தேவையில் ஏற்பட்ட மாற்றங்களின் 2017ஆம் ஆண்டில் 1,439,456 பூட்கைளுடன் ஒப்பிடும் போது உரிமை வழங்குதல் சார்ந்த பூட்கைகள் 2018ஆம் ஆண்டில் ஒரு சிறிய வீழ்ச்சியைக் காட்டின. சுகாதார திட்டங்கள், நம்பிக்கை அலகுடன் இணைக்கப்பட்டவை, ஆண்டுத்தொகை மற்றும் குழு என்பவற்றை உள்ளடக்கியவற்றக்கான கேள்வி அதிகரித்ததனால், சுகாதார பாதுகாப்பு நன்மைகள், முதலீட்டு சேமிப்பு வகைகள், நெகிழ்வுத்தன்மை மற்றும் வழங்கப்பட்ட ஓய்வூதிய விருப்பங்கள் உள்ளிட்ட தயாரிப்புகளில் உட்பொதிக்கப்பட்ட சில குணாதிசயங்கள் காரணமாக அவ்வாறான காப்புறுதி வகை ஆண்டுக்கு ஆண்டு அடிப்பயில் 71% வீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளது.

மேலும், 2017 உடன் ஒப்பிடும் போது 2018ஆம் ஆண்டில் தவணைக்

அட்டவணை 15
2017 மற்றும் 2018இல் அமுலில் உள்ள பூட்கைகளின் வகைப்படுத்தல் - நீண்டகால காப்புறுதி வியாபாரம்

| காப்புறுதிகளின் வகை | 2017 | | 2018 | |
|---|---|---|---|---|
| | அமுலில் உள்ள பூட்கைகளின் எண்ணிக்கை | காப்புறுதி செய்யப்பட்ட தொகை | அமுலில் உள்ள பூட்கைகளின் எண்ணிக்கை | காப்புறுதி செய்யப்பட்ட தொகை |
| தவணைக் காப்புறுதி | 446,307 | 835,316,103 | 530,885 | 922,955,498 |
| உலகளாவிய ஆயுள் | 868,702 | 281,070,589 | 893,710 | 393,408,191 |
| முழு ஆயுள் காப்புறுதி | 23,835 | 1,525,598 | 24,435 | 1,635,183 |
| உரிமை வழங்குதல்கள் | 1,439,456 | 372,435,760 | 1,270,693 | 417,939,398 |
| ஏனையவை | 290,566 | 842,829,068 | 496,188 | 1,114,176,834 |
| மொத்தம் | **3,068,866** | **2,333,177,117** | **3,215,911** | **2,850,115,104** |

காப்புறுதி வியாபாரத்திலிருந்த வியாபார அளவில் ஓரளவு அதிகரிப்பு ஏற்பட்டது. இதன் விளைவாக 2017 தொடக்கம் 2018 வரை 446,307 பூட்கைகளில் இருந்து 530,885 பூட்கைகள் வரை அதிகரித்தது. இதன் காப்புறுதி செய்யப்பட்ட பெறுமதி இ.ரூபா 922,955 மில்லியன் (2017: இ.ரூபா 835,316 மில்லியன்) மற்றும் நடைமுறையில் உள்ள மொத்த பூட்கைகளில் 16.51% வீதமாகும்.

## காலங்கடந்த காப்புறுதி பூட்கைகள் - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்


வரைபு 12 இல் விபரிக்கப்பட்டவாறு, 2017ஆம் ஆண்டு பதிவுசெய்யப்பட்ட 275,039 காலங்கடந்த பூட்கைகளின் எண்ணிக்கை 2018ஆம் ஆண்டு 275,039ஆக குறைவடைந்துள்ளதுடன், இது 2,492 காலங்கடந்த பூட்கைகள் குறைவடைந்துள்ளமையைக் காட்டுகின்றது. அதனால் 2017ஆம் ஆண்டு 8.96% வீதமாக இருந்த காலங்கடந்த பூட்கைகள் 2018ஆம் ஆண்டு 8.47% வீதமாக குறைவடைந்துள்ளது. புதிய நீண்டகால காலங்கடந்த காப்புறுதிப் பூட்கைகளின் எண்ணிக்கை 2017ஆம் ஆண்டு 90,350ஆக இருந்ததுடன் இது 2018ஆம் ஆண்டு 85,253 காப்புறுதிப் பூட்கைளாக குறைவடைந்ததனால், இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 5.64% வீதத்தினால் குறைவடைந்துள்ளது. அதனால், வழங்கப்பட்ட புதிய பூட்கைளின் சதவீதத்தை 2017இல் பதிவுசெய்யப்பட்ட 14.04% வீதத்துடன் ஒப்பிடும் போது 2018இல் அது 11.97% வீதமாக குறைந்துவிட்டதாக புதிய பூட்கைக் கொள்கை குறைகின்றது.

## காப்புறுதிக் கம்பனிகளினால் தீர்க்கப்பட்ட உரிமைக்கோரல்கள் - நீண்டகால காப்புறுதி வியாபாரம்

ஆயுள் காப்புறுதி நிறுவனங்களினால் தீர்க்கப்பட்ட மொத்த உரிமைக் கோரல்களின் எண்ணிக்கை 2018இல் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்துள்ளன. இதன் பெறுமதி இ.ரூபா 34,337 மில்லயனாகவும் (2017: இ.ரூபா 26,371 மில்லயன்) ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 30.21% வீதமாகவும் அதிகரித்துள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளில் காப்புறுதி நிறுவனங்களினால் தீர்க்கப்பட்ட மதிப்பின் அடிப்படையில் மிகப் பெரிய தொகையாகும். வரைபு 13இல் விபரிக்கப்பட்டவாறு, மொத்த தீர்ப்பனவுகள் காப்புறுதி பூட்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட அங்கவீன நன்மைகள், இறப்பு நன்மைகள், தன்னொப்படைப்புகள், முதிர்ச்சி நன்மைகள் மற்றும் ஏனைய நன்மைகள் என்பவற்றை உள்ளடக்கியிருந்தது.


2018இல் தீர்க்கப்பட்ட மொத்தக் கோரிக்கைகளில் முதிர்ச்சி நன்மைகள் 53.24% (2017:54.58%) வீதத்தைப் பெற்றிருந்தன. எனினும், 2017 உடன் ஒப்பிடுகையில் 2018இல் முதிர்ச்சி நன்மைகளின் சதவீதம் 27% வீதத்தினால் அதிகரித்துள்ளதுடன், சில பெரிய கம்பனிகளினால் முதிர்ச்சி நன்மைகள் தீர்கப்பட்டமை இந்த அதிகரிப்புக்கு காரணமாகியது. தன்னொப்படைப்பு பிரிவும் கோரல்களின் பெறுமதியில் குறிப்பிட்ட பகுதியைப் பெற்றுக்கொண்டுள்ளதுடன், அதன் பெறுமதி இ.ரூபா 34,337 மில்லயனாகவும் மொத்தக் கோரல்களில் 20.37%

வரைபடம் 12
காலங்கடந்த காப்புறுதி பூட்கைகள் - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்




| | 2014 | 2015 | 2016 | 2017 (அ) | 2018 (ஆ) |
|---|---|---|---|---|---|
| காலங்கடந்த புதிய காப்புறுதி பூட்கைகள் | 103,500 | 93,008 | 102,697 | 90,350 | 85,253 |
| மொத்த காலங்கடந்த காப்புறுதி பூட்கைள் | 278,061 | 264,473 | 271,586 | 275,039 | 272,547 |
| புதிய காப்புறுதி பூட்கைகளின் மீது புதிதாக காலங்கடந்த காப்புறுதிகளின் எண்ணிக்கை | 18.98 | 12.56 | 15.36 | 14.04 | 11.97 |
| மொத்த காப்புறுதி பூட்கைகளின் மீது மொத்த காலங்கடந்த காப்புறுதிகளின் எண்ணிக்கை | 10.68 | 9.15 | 9.02 | 8.96 | 8.47 |

வரைபடம் 13
காப்புறுதிக் கம்பனிகளினால் தீர்க்கப்பட்ட உரிமைக்கோரல்கள் - நீண்டகால காப்புறுதி வியாபாரம்




| | 2014 | 2015 | 2016(அ) | 2017(அ) | 2018(ஆ) |
|---|---|---|---|---|---|
| அங்கவீன நன்மைகள் | 436,518 | 430,617 | 488,818 | 636,472 | 965,313 |
| மரணம் | 1,889,289 | 1,640,801 | 1,616,565 | 2,106,087 | 2,800,576 |
| தன்னொப்படைப்புகள் | 7,184,611 | 5,267,864 | 5,121,636 | 5,530,517 | 6,994,574 |
| முதிர்ச்சி நன்மைகள் | 9,754,751 | 11,687,811 | 12,370,659 | 14,393,605 | 18,279,240 |
| ஏனையவை | 1,378,929 | 1,906,560 | 2,887,039 | 3,704,469 | 5,297,039 |

வீதமாகவுள்ளதுடன், இது ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 26.47% வீதமாக அதிகரித்துள்ளது.

2018ஆம் ஆண்டு, அங்கவீன நன்மைகள் மற்றும் இறப்பு நன்மைகள் என்பன 2017 உடன் ஒப்பிடுகையில் முறையே 51.67% மற்றும் 32.98% வீதத்தினால் அதிகரித்துள்ளது. உடல்நல நன்மைகள், முற்பணக் கொடுப்பனவுகள், மிகையூதியம், இரத்துசெய்தல்கள் மற்றும் மீள்வழங்கல் போன்றவற்றை உள்ளடக்கிய ஏனைய நன்மைகள் இ.ரூபா 34,337 மில்லயனாக இருந்ததுடன், இது மொத்த கோரிக்கைகளில் 15.43% வீதத்தைப் பெற்றிருந்ததுடன் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் வளர்ச்சியையும் வெளிப்படுத்தியது.

## காப்புறுதிக் கோரிக்கைகளின் எண்ணிக்கை - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்

2018இல் 30.21% குறிப்பிடத்தக்க கோரிக்கைளுக்கான மேம்படுத்தலில் எண்ணிக்கையான 394,434 இற்கு மொத்த கோரிக்கைகளின் எண்ணிக்கை 2018இல் 15.03% வீதமாக அதிகரித்தது. முதிர்ச்சி நன்மை கோரிக்கைகளின் எண்ணிக்கை 153,856 ஆகவும் மொத்த கோரிக்கையில் 39.01% வீதமாகவுமிருந்தது. சுகாதார நன்மைகள், இரத்துச் செய்தல்கள், மீள்செலுத்தல், பகுதியளவு மீளப்பெறுதல் போன்ற நானாவித கலவையாக காணப்படும் ஏனைய வகையைச் சேர்ந்த கோரல்களின் எண்ணிக்கை 166,665 ஆண்டு ஆண்டுக்கு அண்டு அடிப்படையில் 14.58% வீதமாக அதிகரித்தது. ஏனைய நன்மைக் கோரிக்கைகள் மற்றும் முதிர்ச்சிக் கோரிக்கைகள் என்பன இணைந்து மொத்தக் கோரல்களில் 81.26% வீதத்தை கைப்பற்றின. மொத்த கோரல்களில் 14.84% வீதத்தை உரிமை வழங்கல் கோரல்கள் பிரதிநிதித்துவப்படுத்தின, காப்புறுதியாளர்கள் இதனைக் குறைப்பதற்கு கவனத்தை செலுத்தல் வேண்டும். 2017 உடன் ஒப்பிடுகையில் 2018இல் மரண நன்கொடை எண்ணிக்கை 6.12% வீதத்தினால் அதிகரித்துள்ளது. எனினும், அங்கவீன நன்மை கோரிக்கைகளைத் தவிர்த்து ஏனைய அனைத்துவகைக் கோரிக்கைகளும் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்ததுடன், அங்கவீன கோரிக்கைகளின் எண்ணிக்கை 2018இல் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியை கொண்டிருந்ததுடன், இது ஒரு காப்புறுதியாளரின் பிரதானமாக முன்னெடுக்கப்பட்டது. 2014 இருந்து 2018 வரையான காலத்திற்கான காப்புறுதிக் கோரல்களின் எண்ணிக்கையின் விபரங்களை அட்டவணை 16 வழங்குகின்றது.

அட்டவணை 16
காப்புறுதிக் கோரிக்கைகளின் எண்ணிக்கை - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்

| | 2014 | 2015 | 2016 | 2017 (அ) | 2018 (ஆ) |
|---|---|---|---|---|---|
| அங்கவீன நன்மைகள் | 8,120 | 14,081 | 9,521 | 10,749 | 3,441 |
| மரணம் | 5,795 | 6,747 | 8,418 | 11,247 | 11,935 |
| தன்னொப்படைப்புகள் | 46,312 | 42,814 | 46,484 | 47,191 | 58,537 |
| முதிர்ச்சி நன்மைகள் | 107,353 | 120,661 | 108,680 | 128,266 | 153,856 |
| ஏனையவை | 84,835 | 112,337 | 143,336 | 145,452 | 166,665 |
| மொத்தம் | **252,415** | **296,640** | **316,439** | **342,905** | **394,434** |


# பொதுக் காப்புறுதி வியாபாரம்

## மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டண வருமானம்

பொதுக் காப்புறுதி மட்டுமே மேற்கொள்ள பதிவுசெய்யப்பட்ட பதினொரு காப்புறுதி நிறுவனங்களினதும் பொது மற்றும் நீண்ட காப்புறுதி வியாபாரங்களைக் கையாளும் மூன்று கலவை நிறுவனங்களினதும் மற்றும் மீள்காப்புறுதி வியாபாரங்களையும் உள்ளடக்கி பதினைந்து பொது காப்புறுதிக் கம்பனிகளை துறையினுள் பொதுக் காப்புறுதித்துறை உள்ளடக்கியுள்ளது. இந்த சந்தையில் உள்ளவர்கள் இலங்கை காப்புறுதிக் கைத்துறையினுள் போட்டி, ஒத்திசைவான, வெளிப்பமையான மற்றும் ஒழுங்குமுறைப்படுத்த சூழலை உருவாக்க எதிர்பார்க்கின்றார்கள்.

பொதுவாக, இந்த வருடம் நிர்மாணத் தொழிலில் ஏற்பட்ட வீழ்ச்சி, 2018ஆம் வரவுசெலவுத் திட்டத்தின் ஊடாக பிரதானமாக சிறிய ரக எஞ்சின் கொள்ளளவைக் கொண்ட வாகனங்களுக்கு மிகவும் சாதகமான நிலமை காணப்பட்டதனால், வாகனப் பதிவில் ஏற்பட்ட அதிகரிப்பு போன்ற கைத்தொழிற்துறையில் காணப்பட்ட சந்தர்ப்பங்கள் மற்றும் சவால்கள் காரணமாக பொதுக் காப்புறுதியாளர்களிடையே அதிக போட்டி நிறைந்ததாக இருந்தது. எனினும், கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2018ஆம் ஆண்டு காணப்பட்ட சாதகமற்ற சூழ்நிலை காரணமாக கைதொழிற்துறை சிறயளவிலான எதிர்மறை வீழ்ச்சியைச் சந்தித்தது. எலைன்ஸ் ஜெனரல் மற்றும் ஜனசக்தி ஜெனரல் என்பவற்றின் ஒன்றிணைப்பு கைத்தொழிற்துறையில் போட்டியை மேப்படுத்திய பங்குதாரர்களிடையில் குறிப்பிடத்தக்க அதேவேளையில் முன்னணி சந்தை மாற்றத்தை உருவாக்கியது.

வரைபடம் 14
கம்பனி ரீதியான எழுதப்பட்ட தவணைக் கட்டண வருமானத்தில் சந்தை பங்கு – 31 டிசம்பர் 2018ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான பொதுக் காப்புறுதி வியாபாரம்




அட்டவணை 17
கம்பனி ரீதியான எழுதப்பட்ட தவணைக் கட்டண வருமானம் மற்றும் சந்தை பங்கு - பொதுக் காப்புறுதி வியாபாரம்

| காப்புறுதியாளர் | 2014 | | 2015 | | 2016 | | 2017 (அ) | | 2018 (ஆ) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மொத்த எழுதப்பட்ட தவணை க் கட்டணம் (இ.ரூபா) | சந்தைப் பங்கு (%) | மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் (இ.ரூபா) | சந்தைப் பங்கு (%) | மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் (இ.ரூபா) | சந்தைப் பங்கு (%) | மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் (இ.ரூபா) | சந்தைப் பங்கு (%) | மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் (இ.ரூபா) | சந்தைப் பங்கு (%) |
| ஏஜஜி | 2,655,577 | 4.34 | 3,297,840 | 4.76 | | | | | | |
| எலைன்ஸ் ஜென. | 414,805 | 0.68 | 3,141 | 0.00 | | | | | | |
| அமான ஜென. | 2,723,406 | 4.45 | 3,244,844 | 4.68 | 4,247,691 | 5.34 | 5,956,142 | 6.38 | 18,610,471 | 18.39 |
| சிலிங்கோ ஜென. | 1,285,418 | 2.10 | 1,438,732 | 2.08 | 1,474,186 | 1.85 | 1,686,270 | 1.81 | 1,841,067 | 1.82 |
| கென்டினென்டல் | 11,431,680 | 18.68 | 12,921,561 | 18.65 | 15,265,433 | 19.18 | 17,012,087 | 18.22 | 18,137,933 | 17.92 |
| கோப்பரெட்டிவ் ஜென. | 1,761,747 | 2.88 | 2,309,413 | 3.33 | 3,088,064 | 3.88 | 3,892,780 | 4.17 | 4,545,405 | 4.49 |
| பியார்பெஸ்ட் | 1,358,932 | 2.22 | 1,691,705 | 2.44 | 2,420,130 | 3.04 | 2,966,679 | 3.18 | 3,692,397 | 3.65 |
| எச்என்பி ஜென. | 1,638,126 | 2.68 | 1,908,901 | 2.76 | 2,361,614 | 2.97 | 9,610,990 | 10.29 | 10,946,602 | 10.82 |
| ஜனசக்தி ஜென. | 2,182,915 | 3.57 | 2,577,224 | 3.72 | 2,982,385 | 3.75 | 3,662,008 | 3.92 | 4,062,172 | 4.01 |
| எல்ஐசி | 6,491,556 | 10.61 | 7,406,160 | 10.69 | 10,137,864 | 12.74 | 11,740,185 | 12.57 | - | 0.00 |
| எல்ஓஎல்சி ஜென. | 1,815,486 | 2.97 | 2,476,961 | 3.58 | 3,096,834 | 3.89 | 3,795,106 | 4.06 | 4,318,721 | 4.27 |
| எம்பிஎஸ்எல் | 961,225 | 1.57 | 1,159,208 | 1.67 | 972,976 | 1.22 | 260,806 | 0.28 | (512) | 0.00 |
| என்ஜடீஎப் | 5,295,759 | 8.65 | 4,961,413 | 7.16 | 6,420,822 | 8.07 | 8,114,412 | 8.69 | 9,644,901 | 9.53 |
| ஓரியன்ட் | 491,127 | 0.80 | 746,935 | 1.08 | 810,728 | 1.02 | 1,179,000 | 1.26 | 1,376,398 | 1.36 |
| பீப்பள்ஸ் | 3,286,063 | 5.37 | 3,637,404 | 5.25 | 4,166,727 | 5.24 | 4,587,432 | 4.91 | 5,354,367 | 5.29 |
| சனச | 344,041 | 0.56 | 349,527 | 0.50 | 384,481 | 0.48 | 569,509 | 0.61 | 768,120 | 0.76 |
| எஸ்எல்ஐசி | 12,113,994 | 19.79 | 13,583,222 | 19.61 | 15,198,381 | 19.10 | 18,355,361 | 19.65 | 17,905,523 | 17.69 |
| யூனியன் ஜென. | 4,950,741 | 8.09 | 5,557,189 | 8.02 | 6,561,571 | 8.23 | | | | |
| மொத்தம் | **61,202,599** | **100** | **69,271,380** | **100** | **79,589,887** | **100** | **93,388,766** | **100** | **101,203,564** | **100** |
| வளர்ச்சி வீதம் (%) | **5.01** | | **13.18** | | **14.90** | | **17.34** | | **8.37** | |

அட்டவணை 17 இல் விபரித்தவாறு, பொதுக் காப்புறுதித்துறை 2017ஆம் ஆண்டு பதிவுசெய்த இ.ரூபா 93,389 மில்லியனுடன் ஒப்பிடுகையில் இ.ரூபா 101,204 மில்லியனை எழுதப்பட்ட தவணைக் கட்டண வருமானமாகப் பெற்றுக்கொண்டதுடன் 8.37% வீத ஒற்றை இலக்க வளர்ச்சியை அறிக்கையிட்டது. தொழில்நுட்பம், சந்தைப்படுத்தல், விநியோகம் மற்றும் கொடுப்பனவில் புதிய முறைகள் போன்ற தொழில்முறையால் இயக்கப்படும் காரணிகளினால் பொதுக் காப்புறுதித்துறையை உயர்த்த உதவியது. எனினும். எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் வளர்ச்சி வீதம் முந்தைய ஆண்டின் வளர்ச்சி வீதமான 17.34% வீதத்துடன் ஒப்பிடும் போது மெதுவான வேகத்தில் இருந்தது. தீ, மோட்டார், நானாவித காப்புறுதி வியாபாரங்கள் மற்றும் சுகாதார காப்புறுதி வியாபரத்தினால் பதிவுசெய்யப்பட்ட எதிர்மறை வளர்ச்சி ஆகியன இந்த எழுதப்பட்ட தவணைக் கட்டண வளர்ச்சி வீதம் குறைந்ததற்கு காரணமாகின.

எலைன்ஸ் ஜெனரல் மற்றும் ஜனசக்தி ஜெனரல் என்பவற்றின் ஒன்றிணைப்பு காரணமாக பொதுக் காப்புறுதிச் சந்தையில் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தை மிஞ்சி தலைமைத்துவத்தைப் பெற்றுக்கொண்டன. வரைபு 14 மற்றும் அட்டவணை 17இல் விபரிக்கப்பட்டவாறு, எலைன்ஸ் ஜெனரல் சந்தைப் பங்கில் 18.39% வீதத்தைக் கைப்பற்றி 2018ஆம் ஆண்டுக்காக இ.ரூபா 18,610 மில்லியன் தவணைக் கட்டணத்தைப் பெற்றுக்கொண்டது. சிலிங்கோ ஜெனரல் இ.ரூபா 18,138 மில்லியனை (2017:இ.ரூபா:17,012 மில்லியன்) எழுதப்பட்ட தவணைக் கட்டண வருமானத்தை உருவாக்கியதன் மூலம் 17.92% (2017:18.22%) வீத சந்தைப் பங்குடன் தொடர்ந்தும் இரண்டாம் இடத்தில் இருந்தது.

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் இ.ரூபா 18,355 மில்லியனை (2017:இ.ரூபா: 17,905 மில்லியன்) எழுதப்பட்ட தவணைக் கட்டண வருமானத்தை உருவாக்கியதன் மூலம் 17.69% (2017:19.65%) வீத சந்தைப் பங்கைப் பெற்றுக்கொண்டு மூன்றாம் இடத்தில் இருந்ததுடன், 2017 உடன் ஒப்பிடுகையில் 1.96% வீத வீழ்ச்சியைப் பதிவுசெய்கின்றது. பியார்பெஸ்ட் இ.ரூபா 10,947 மில்லியனை (2017: இ.ரூபா 9,611 மில்லியன்) எழுதப்பட்ட தவணைக் கட்டண வருமானத்தை உருவாக்கியதன் மூலம் 10.82% (2017:10.29%) வீத சந்தைப் பங்குடன் தொடர்ந்தும் நான்காம் இடத்தில் இருந்தது.


என்ஜடீஎப் தனது செயலாற்றுகையை தனது தவணைக் கட்டண வருமானத்தை 2018இல் இ.ரூபா 9,645 மில்லியனாக (2017: இ.ரூபா 8,114 மில்லியன்) உயர்த்தியதன் ஊடாக மேம்படுத்தியதுடன் 9.53% (2017:8.69%) வீத சந்தைப் பங்குடன் ஐந்தாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. என்ஜடீஎப் நிறுவனத்தின் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையிலான வருமானம் 18.87% வீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளது.

2017ஆம் ஆண்டு பதிவுசெய்யப்பட்ட மொத்த எழுதப்பட்ட தவணை கட்டணத்துடன் ஒப்பிடுகையில் ஒன்றிணைக்கப்பட்ட காரணத்தினால் எலைன்ஸ் ஜெனரல் தவிர்த்து சனச மற்றும் கோப்பரட்டிவ் ஜெனரல் மட்டுமே 20% வீதத்திற்கு மேற்பட்ட அதிகரிப்பை வெளிப்படுத்தின. 2018இல் எஸ்எல்ஜசி, சிலிங்கோ ஜெனரல் மற்றும் எம்பிஎஸ்எல் தவிர்த்து ஏனைய அனைத்து பொதுக் காப்புறுதிக் கம்பனிகளும் தமது சந்தைப் பங்கில் சற்று வளர்ச்சியை வெளிப்படுத்தின.

## மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டண வருமானத்திற்கு பங்களிப்பு செய்த முதல் ஐந்து பங்குதாரர்களும் ஏனைய காப்புறுதிக் கம்பனிகளும் - பொதுக் காப்புறுதி வியாபாரம்

வரைபு 15 கடந்த ஐந்து ஆண்டுகளில் சந்தைப்பங்கின் அடிப்படையில் முதல் ஐந்து பங்குதாரர்களினதும் ஏனைய காப்புறுதிக் கம்பனிகளின் விபரங்களையும் வெளிப்படுத்துகின்றது. பொதுக் காப்புறுதி சந்தைப் போட்டியாளர்களுக்கு இடையிலான போட்டியின் மத்தியில் எலைன்ஸ் ஜெனரல், சிலிங்கோ ஜெனரல் மற்றும் எஸ்எல்ஜசி எனும் மூன்றும் இணைந்து 2018ஆம் ஆண்டு பொதுக் காப்புறுதித்துறைச் சந்தையில் 54% (2017: 50.44%) வீத பங்கினைப் பெற்றுக்கொண்டன.

வரைபடம் 15
2014 – 2018 வரை மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டண வருமானத்திற்கு பங்களிப்பு செய்த பிரதான ஐந்து பங்களிப்பாளர்களினதும் ஏனைய காப்புறுதியாளர்களினதும் சந்தைப் பங்கு – பொதுக் காப்புறுதி வியாபாரம்




| | ஜனசக்கதி ஜெனரல் / எலைன்ஸ் ஜெனரல் | சிலிங்கோ | எஸ்எல்ஜசி | யூனியன் ஜெனரல்/ பெயர்பெர்ஸ்ட் | என்டீஜஎப் | ஏனையவை |
|---|---|---|---|---|---|---|
| 2014 | 10.61 | 18.68 | 19.79 | 8.09 | 8.65 | 34.18 |
| 2015 | 10.69 | 18.65 | 19.61 | 8.02 | 7.16 | 35.86 |
| 2016 | 12.74 | 19.18 | 19.10 | 8.24 | 8.07 | 32.67 |
| 2017 (அ) | 12.57 | 18.22 | 19.65 | 10.29 | 8.69 | 30.58 |
| 2018 (ஆ) | 18.39 | 17.92 | 17.69 | 10.82 | 9.53 | 25.65 |

எலைன்ஸ் ஜெனரல் ஒன்றிணைந்த ஜனசக்தி ஜெனரலின் சந்தைப் பங்குடன் சேர்த்து தனது சந்தையை விரிவாக்கிக் கொண்டதன் ஊடாக, 2018இல் அதன் சந்தைப் பங்கினை 18.39% வீதமாக பதிவுசெய்து சந்தை தலைமையைப் பெற்றுக்கொள்ள முடிந்தது. சிலிங்கோ ஜெனரலின் தவணைக் கட்டண வருமானத் 6.62% வீதமாக அதிகரித்த போதிலும், 2017ஆம் ஆண்டில் பதிவுசெய்ய 18.22% வீத சந்தைப் பங்குடன் ஒப்பிடுகையில் அது 17.92% வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம், 2018இல் 17.69% (2017:19.65%) வீத சந்தைப் பங்கைப் பெற்றுக்கொண்டு மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. எனினும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் தவணைக் கட்டண வருமானம் 2017ஆம் ஆண்டில் பதிவுசெய்த இ.ரூபா: 17,905 மில்லியனில் இருந்து 2018இல் இ.ரூபா 18,355 மில்லியனாக வீழ்ச்சியடைந்துள்ளது. பொதுக் காப்புறுதித்துறையில் முறையே 10.82% (2017: 10.29%) மற்றும் 9.53% (2017:8.69%) சந்தைப் பங்குகளைப் பெற்று பியார்பெஸ்ட் மற்றும் என்ஜஎபி என்பன தொடர்ந்தும் நான்காம் மற்றும் ஐந்தாம் இடங்களில் இருந்தன. இந்த ஐந்து போட்டியாளர்களும் இணைந்து மொத்த எழுதப்பட்ட தவணை வருமானத்தில் 74.35% (2017:69.42%) வீதத்திற்கு பங்களிப்பு செய்ததுடன், ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 4.93% வீத வளர்ச்சியைப் பதிவுசெய்துள்ளனர்.

கடந்த ஆண்டினைப் போலவே, 2018இல் மிகுதிக் கம்பனிகளின் திரட்டிய சந்தைப் பங்குகள் 30.58% வீத்திலிருந்து 25.65% வீதத்திற்கு மேலும் வீழ்ச்சியடைந்துள்ளது. இது 28 செப்டெம்பர் 2018ஆம் திகதியில் இருந்து பயனுறுதி பெற்ற ஜனசக்தி ஜெனரல் மற்றும் எலைன்ஸ் ஜெனரல் கம்பனிகளின் ஒன்றிணைப்பின் காரணமாக இந்த வீழ்ச்சி ஏற்பட்டது.

## மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணங்களின் வகை ரீதியான பகுப்பாய்வு - பொதுக் காப்புறுதி வியாபாரம்

பொது காப்புறுதி வியாபாரத்தின் பிரதான உப வகைகளில் இருந்து பிறப்பிக்கப்பட்ட மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டண வருமானம், அதன் வளர்ச்சி வீதத்துடன் மற்றும் 2014 இருந்து 2018 இற்கான மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டண வருமானத்தில் அதன் வீதம் அட்டவணை 18 மற்றும் வரைபு 16 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் பிரதான உப வகைகளாக தீ, கடல், வாகன, சுகாதாரம் மற்றும் நானாவித காப்புறுதி வியாபாரங்கள் உள்ளதுடன்,

அட்டவணை 18


மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணங்களின் வகை ரீதியான பகுப்பாய்வு - பொதுக் காப்புறுதி வியாபாரம்

| வகை | மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் (இ.ரூபா'000) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2014 | 2015 | 2016 | 2017 (அ) | 2018 (ஆ) |
| தீ | 6,353,292 | 6,604,074 | 7,479,910 | 8,597,489 | 9,274,723 |
| கடல் | 1,911,944 | 1,996,862 | 2,086,394 | 2,191,654 | 2,403,187 |
| மோட்டார் வாகனம் | 35,786,941 | 42,622,205 | 49,333,000 | 56,047,640 | 62,478,575 |
| சுகாதாரம் | 7,593,386 | 8,534,364 | 10,036,518 | 14,649,440 | 14,185,167 |
| நானாவிதம் | 6,721,836 | 6,495,454 | 7,120,742 | 7,866,260 | 8,280,272 |
| **உப மொத்தம்** | **58,367,399** | **66,252,959** | **76,056,564** | **89,352,484** | **96,621,924** |
| எஸ்ஆர்சீசீ அன்ட் டீ | 2,835,200 | 3,018,421 | 3,533,324 | 4,036,283 | 4,581,641 |
| **மொத்தம்** | **61,202,599** | **69,271,380** | **79,589,888** | **93,388,766** | **101,203,564** |

| வகை | வளர்ச்சி (%) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2014 | 2015 | 2016 | 2017 (அ) | 2018 (ஆ) |
| தீ | 0.79 | 3.95 | 13.26 | 14.94 | 7.88 |
| கடல் | 6.40 | 4.44 | 4.48 | 5.05 | 9.65 |
| மோட்டார் வாகனம் | 7.37 | 19.10 | 15.74 | 13.61 | 11.47 |
| சுகாதாரம் | 4.13 | 12.39 | 17.60 | 45.96 | (3.17) |
| நானாவிதம் | (4.19) | (3.37) | 9.63 | 10.47 | 5.26 |
| **உப மொத்தம்** | **4.71** | **13.51** | **14.80** | **17.48** | **8.14** |
| எஸ்ஆர்சீசீ அன்ட் டீ | 11.46 | 6.46 | 17.06 | 14.23 | 13.51 |
| **மொத்தம்** | **5.01** | **13.18** | **14.90** | **17.34** | **8.37** |

| வகை | பங்கு வீதம் (%) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2014 | 2015 | 2016 | 2017 (அ) | 2018 (ஆ) |
| தீ | 10.38 | 9.53 | 9.40 | 9.21 | 9.16 |
| கடல் | 3.12 | 2.88 | 2.62 | 2.35 | 2.37 |
| மோட்டார் வாகனம் | 58.47 | 61.53 | 61.98 | 60.02 | 61.74 |
| சுகாதாரம் | 12.41 | 12.32 | 12.61 | 15.69 | 14.02 |
| நானாவிதம் | 10.98 | 9.38 | 8.95 | 8.42 | 8.18 |
| **உப மொத்தம்** | **95.37** | **95.64** | **95.56** | **95.68** | **95.47** |
| எஸ்ஆர்சீசீ அன்ட் டீ | 4.63 | 4.36 | 4.44 | 4.32 | 4.53 |
| **மொத்தம்** | **100.00** | **100.00** | **100.00** | **100.00** | **100.00** |

வரைபடம் 16
2014 இருந்து 2018 வரை மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தில் வகை ரீதியான பகுப்பாய்வு – பொது காப்புறுதி வியாபாரம்.




| | 2014 | 2015 | 2016 | 2017 (அ) | 2018 (ஆ) |
|---|---|---|---|---|---|
| எஸ்ஆர்சீசீ அன்ட் டீ | 4.63 | 4.36 | 4.44 | 4.32 | 4.53 |
| நானாவிதம் | 10.98 | 9.38 | 8.95 | 8.42 | 8.18 |
| சுகாதாரம் | 12.41 | 12.32 | 12.61 | 15.69 | 14.02 |
| மோட்டார் வாகனம் | 58.47 | 61.53 | 61.98 | 60.02 | 61.74 |
| கடல் | 3.12 | 2.88 | 2.62 | 2.35 | 2.37 |
| தீ | 10.38 | 9.53 | 9.40 | 9.21 | 9.16 |
| தொழில் வளர்ச்சி | 5.01 | 13.18 | 14.90 | 17.34 | 8.37 |

இது வேலை நிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதம் என்பவற்றையும் உள்ளடக்கியுள்ளது.

அட்டவணை 18இல் பிரதிபலித்தவாறு, மோட்டார் வாகனக் காப்புறுதி 2018இல் இ.ரூபா 62,479 மில்லியனை (2017:இ.ரூபா 56,048 மில்லியன்) மொத்த எழுதப்பட்ட தவணை கட்டணத்தில் 61.74% (2017:60.02%) வீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மொத்த எழுதப்பட்ட தவணை கட்டணத்தைப் பெற்று இம்முறையில் சந்தையில் பெரும்பான்மையைக் கைப்பற்றிக் கொண்டது. 2017இல் பதிவுசெய்யப்பட்ட வளர்ச்சி வீதமான 13.61% வீதத்துடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டு 11.47% பதிவுசெய்யப்பட்ட வளர்ச்சி வீதத்தில் சற்று வீழ்ச்சி காணப்படுகின்றது.

சுகாதாரக் காப்புறுதி 2018இல் இ.ரூபா 14,185 மில்லியனை (2017:இ.ரூபா 14,649 மில்லியன்) மொத்த எழுதப்பட்ட தவணை கட்டணத்தில் 14.02% (2017:45.96மு) வீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மொத்த எழுதப்பட்ட தவணை கட்டணத்தைப் பெற்றுக்கொண்டமையினால் 3.17% வீத மறை வளர்ச்சியைக் கொண்டுள்ளது. கல்வி அமைச்சினால் இலங்கை முழுவதிலுமுள்ள பாடசாலை மாணவர்களுக்கு 2017ஆம் ஆண்டு சுரக்ஷா இலவச மருத்துவ மற்றும் தனிப்பட்ட விபத்து காப்புறுதி முறை அறிமுகப்படுத்தப்பட்டதுடன், இது 2018 ஒக்டோபர் மாதம் காலாவதியானதுடன் 2018/2018இற்கு மீள்காப்புறுதியில் ஏற்பட்ட தாமதமும் இதற்கு காரணமாகியது.

தீக் காப்புறுதி 2018இல் இ.ரூபா 9,275 மில்லியனை (2017:இ.ரூபா 8,597 மில்லியன்) மொத்த எழுதப்பட்ட தவணை கட்டணத்தில் 9.16% (2017:14.94%) வீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மொத்த எழுதப்பட்ட தவணை கட்டணத்தைப் பெற்றுக்கொண்டுள்ளது. 2017ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறைந்த நிர்மாணிப்பு கொள்ளளவைக் கொண்டுள்ளமையினால் தீ காப்புறுதி வீழ்ச்சியடைவதற்கு அது வழிவகுத்தது.

சுகாரத்தைத் தவிர்த்து நானாவிதக் காப்புறுதி தவணைக் கட்டண வருமானமாக இ.ரூபா 8,280 மில்லியனை (2017:இ.ரூபா 7,866 மில்லியன்) பெற்றுக்கொண்டுள்ளதுடன், இது மொத்த எழுதப்பட்ட தவணை கட்டணத்தில் 8.18% வீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தியது. நானாவிதக் காப்புறுதி 2017இல் பதிவுசெய்யப்பட்ட வளர்ச்சி வீதமான 10.47% வீதத்துடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டு 5.26% வீதமாக வீழ்ச்சி அடைந்துள்ளது.

கடல் காப்புறுதி 2018இல் மொத்த எழுதப்பட்ட தவணை கட்டணமாக இ.ரூபா 2,403 மில்லியனை (2017:இ.ரூபா 2,192 மில்லியன்)ப் பெற்றுக்கொண்டுள்ளதுடன், மொத்த எழுதப்பட்ட தவணை கட்டணத்தில் 2.37% (2017:2.35%) வீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. இது 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீடுகையில் 9.65% (2017:5.05%) வீத வளர்ச்சியைப் பதிவுசெய்கின்றது.

என்ஜடீஎப்பின் வேலைநிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதம் (எஸ்ஆர்சிசி அனட் டீ) என்பவற்றிலிருந்தான இடர் காப்பீட்டுக்காக சேகரிக்கப்பட்ட தவணைக் கட்டணங்களின் பெறுமதி இ.ரூபா 4,582 மில்லியன் (2017:இ.ரூபா 4,036 மில்லியன்) ஆவதுடன் 2018இல் 13.51% (2017:14.23%) வீத வளர்ச்சியைப் பதிவுசெய்த அதேவேளையில் இது மொத்த எழுதப்பட்ட தவணை கட்டணத்தில் 4.53% வீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

## நானாவித காப்புறுதி வியாபாரத்தின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தில் வகை ரீதியான பகுப்பாய்வு

2017 மற்றும் 2018ஆம் ஆண்டுகளில் வேறுபட்ட காப்புறுதி வகைகளில் உருவாக்கப்பட்ட மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டண வருமானம் நானாவித காப்புறுதி வியாபாரத்தின் கீழ் அட்டவணை 19 இல் காட்டப்பட்டுள்ளது. நானாவித காப்புறுதி வியாபாரத்தின் பிரதான வகைகளினுள் தனிப்பட்ட விபத்து, விமான குழப்பம், ஏனையவை மற்றும் பணியாளர்களின் இழப்பீடுகள் காப்புறுதி, போக்குவரத்து காப்புறுதி போன்றன அடங்குகின்றன. வேலைநிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதம் (எஸ்ஆர்சிசி அனட் டீ) மற்றும் துணைக் காப்புறுதி என்பவை தவிர்ந்த நானாவித காப்புறுதியில் இருந்து உருவாக்கப்பட்ட மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் பெறுமதி இ.ரூபா 8,280 மில்லியன் (2017: இ.ரூபா 7,866 மில்லியன்) ஆவதுடன், கடந்த

அட்டவணை 19
2017 மற்றும் 2018இற்கான நானாவித காப்புறுதி தவணைக் கட்டணத்தின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் வகை ரீதியான பகுப்பாய்வு

| வகை | மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் | |
|---|---|---|
| | 2017 (அ) | 2018 (ஆ) |
| உயில் நட்டக் காப்புறுதி | 502,357 | 487,470 |
| தனிப்பட்ட விபத்து | 1,434,805 | 1,666,986 |
| ஒப்பந்ததாரர்களின் அனைத்து இடர்கள் | 281,601 | 467,916 |
| நிபுணத்துவ நட்ட ஈடு | 275,178 | 334,498 |
| பயணக் காப்புறுதி | 497,729 | 531,208 |
| நம்பகத்தன்மை உத்தரவாதம் | 100,207 | 117,688 |
| களவு | 374,946 | 407,106 |
| பாதுகாப்பான காசு உள்ளடங்களாக காசு இடமாற்றம் | 411,776 | 436,336 |
| பண்ட போக்குவரத்து | 133,885 | 125,159 |
| பண்டப் பொறுப்பு | 141,741 | 149,555 |
| அரசுப் பொறுப்பு | 395,893 | 447,877 |
| வங்கியாளர்களின் காப்பீடு | 396,087 | 397,635 |
| எயர்கிராப்ட் ஹல் | 849,838 | 1,051,199 |
| பணியாளர்களுக்கான நட்டவீட்டுக் காப்புறுதி | 734,274 | 717,806 |
| தேசிய இயற்கை இடர் காப்புறுதி முறைமை | 500,000 | 500,000 |
| ஏனையவை | 1,176,498 | 903,390 |
| உப மொத்தம் | **8,206,814** | **8,741,830** |
| கழி : என்ஐடீஎஃப்இற்கான எஸ்ஆர்சீசீ அன்ட டீசி | (320,564) | (433,731) |
| துணைக் காப்புறுதி தவணைக் கட்டணம் | (19,990) | (27,827) |
| மொத்தம் | **7,866,260** | **8,280,271** |

ஆண்டுடன் ஒப்பிடுகையில் 5.26% (2017:10.47%) வீத வளர்ச்சியைப் பதிவுசெய்துள்ளது.


உறுதித்தலைப்புக் காப்புறுதி, பண்ட இடமாற்றக் காப்புறுதி, பணியாளர்களுக்கான இழப்பீட்டுக் காப்புறுதி மற்றும் ஏனைய வகையைத் தவிர்த்து அனைத்து வகையான நானாவித காப்புறுதி வியாபாரங்களும் நேர்மறையான வளர்ச்சியை 2018இல் வெளிப்படுத்தின.தனிப்பட்ட விபத்து மற்றும் எயார்கிராப்ட் ஹல் போன்ற வகைகள் முறையே இ.ரூபா 1,667 மில்லியன் (2017: இ.ரூபா 1,051 மில்லியன்) மற்றும் இ.ரூபா 1,051 மில்லியனைப் (2017: இ.ரூபா 850 மில்லியன்) பெற்றுக்கொண்டதன் ஊடாக நானாவித காப்புறுதி வியாபாரத்தின் கீழ் உயர் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தைப் பெற்றுக்கொண்டன.

ஏனைய வகையைச் சேர்ந்த நானாவித காப்புறுதி வியாபாரம் மூன்றாவது பெரிய வியாபார வகையாக இருந்ததுடன் இது 2018ஆம் ஆண்டு இ.ரூபா 903 மில்லியனை மொத்த எழுதப்பட்ட தவணைக்கட்டணமாகப் பெற்றுக்கொண்டுள்ளதுடன், 2017இல் பெற்றுக்கொண்ட மொத்த எழுதப்பட்ட தவணைக்கட்டணமாக இ.ரூபா 1,176 மில்லியன் உடன் ஒப்பிடுகையில் 23.21% வீதம் வீழ்ச்சியடைந்துள்ளதுடன் இது பிரதானமாக செயலாற்றுகை பிணையங்கள், ஏலப் பிணையங்கள் போன்றவற்றை உள்ளடக்கியுள்ளது.

## மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம், மீள்காப்புறுதி தவணைக் கட்டணம் மற்றும் காப்புறுதியாளர்களினால் தக்கவைக்கப்பட்டவை - பொதுக் காப்புறுதி வியாபாரம்

அட்டவணை 20 மற்றும் வரைபு 17 என்பன, 2014 இருந்து 2018 வரை பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் பிரதான வகுப்புக் காப்புறுதிக் கம்பனிகளினால் உருவாக்கப்பட்ட மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம், மீள்காப்புறுதியாளர்களுக்கு செலுத்தப்பட்ட மீள்காப்புறுதி தவணைக் கட்டணம் மற்றும் தக்கவைக்கப்பட்ட மட்டங்களின் விபரங்களை விளக்குகின்றது. அட்டவணை 20இல் விபரிக்கப்பட்டவாறு பொதுக் காப்புறுதி வியாபாரம், வேலைநிறுத்தம், கலவரம், சிவில்குழப்பம் மற்றும் நட்டவீடு மற்றும் பயங்கரவாதம் தவிர்த்து 2018இல் மொத்த எழுதப்பட்ட தவணைக்கட்டண வருமானம் இ.ரூபா 96,622 மில்லியனில், மொத்த தக்கவைத்தல் வீதமான 80.86மூ வீதத்தைக் (எஸ்ஆர்சிசி அன்ட் டீ தவிர்த்து) (2017: 81.20 %) கொண்டு இ.ரூபா 18,497 மில்லியன் (2017: இ.ரூபா 16,801 மில்லியன்) பெறுமதியுடைய

வரைபடம் 17
மீள்காப்புறுதி தவணைக் கட்டணம் மற்றும் காப்புறுதியாளர்களினால் தக்கவைக்கப்பட்டவை – பொதுக் காப்புறுதி வியாபரம்



அட்டவணை 20
காப்புறுதியாளர்களின் மொத்த எழுதப்பட்ட தவணைக்கட்டணம், மீள்காப்புறுதி தவணைக் கட்டணம் மற்றும் தக்கவைப்புகள் - பொதுக் காப்புறுதி வியாபாரம

| வகை | மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் (இ.ரூபா'000) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2014 | 2015 | 2016 | 2017 (அ) | 2018 (ஆ) |
| தீ | 6,353,292 | 6,604,074 | 7,479,910 | 8,597,489 | 9,274,723 |
| கடல் | 1,911,944 | 1,996,862 | 2,086,394 | 2,191,654 | 2,403,187 |
| மோட்டார் வாகனம் | 35,786,941 | 42,622,205 | 49,333,000 | 56,047,640 | 62,478,575 |
| சுகாதாரம் | 7,593,386 | 8,534,364 | 10,036,518 | 14,649,440 | 14,185,167 |
| நானாவிதம் | 6,721,836 | 6,495,454 | 7,120,742 | 7,866,260 | 8,280,272 |
| **உப மொத்தம்** | **58,367,399** | **66,252,959** | **76,056,563** | **89,352,484** | **96,621,924** |
| எஸ்ஆர்சீசீ அன்ட் டீ | 2,835,200 | 3,018,421 | 3,533,324 | 4,036,283 | 4,581,641 |
| **மொத்தம்** | **61,202,599** | **69,271,380** | **79,589,888** | **93,388,766** | **101,203,564** |

| வகை | மீள்காப்புறுதி எழுதப்பட்ட தவணைக் கட்டணம் (இ.ரூபா'000) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2014 | 2015 | 2016 | 2017 (அ) | 2018 (ஆ) |
| தீ | 5,075,545 | 5,137,042 | 5,959,242 | 6,947,675 | 6,581,382 |
| கடல் | 1,171,768 | 1,154,511 | 1,174,266 | 1,177,400 | 1,258,650 |
| மோட்டார் வாகனம் | 636,603 | 1,115,036 | 1,233,466 | 2,152,508 | 4,250,943 |
| சுகாதாரம் | 2,634,795 | 3,012,362 | 486,984 | 2,682,617 | 1,676,719 |
| நானாவிதம் | | | 3,213,645 | 3,840,459 | 4,728,932 |
| **உப மொத்தம்** | **9,518,711** | **10,418,951** | **12,067,604** | **16,800,660** | **18,496,626** |
| எஸ்ஆர்சீசீ அன்ட் டீ | - | - | - | 108,750 | 81,656 |
| **மொத்தம்** | **9,518,711** | **10,418,951** | **12,067,604** | **16,909,410** | **18,578,282** |

| வகை | தக்கவைக்கப்பட்டவை (இ.ரூபா'000) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2014 | 2015 | 2016 | 2017 (அ) | 2018 (ஆ) |
| தீ | 1,277,747 | 1,467,033 | 1,520,667 | 1,649,814 | 2,693,341 |
| கடல் | 740,176 | 842,351 | 912,129 | 1,014,254 | 1,144,536 |
| மோட்டார் வாகனம் | 35,150,338 | 41,507,169 | 48,099,534 | 53,895,132 | 58,227,632 |
| சுகாதாரம் | 11,680,427 | 12,017,456 | 9,549,533 | 11,966,823 | 12,508,448 |
| நானாவிதம் | | | 3,907,097 | 4,025,800 | 3,551,340 |
| **உப மொத்தம்** | **48,848,688** | **55,834,008** | **63,988,960** | **72,551,823** | **78,125,298** |
| எஸ்ஆர்சீசீ அன்ட் டீ | 2,835,200 | 3,018,421 | 3,533,324 | 3,927,533 | 4,499,984 |
| **மொத்தம்** | **51,683,888** | **58,852,429** | **67,522,284** | **76,479,356** | **82,625,282** |

| வகை | மொத்த எழுதப்பட்ட தவணை வருமானத்தில் (%) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2014 | 2015 | 2016 | 2017 (அ) | 2018 (ஆ) |
| தீ | 20.11 | 22.21 | 20.33 | 19.19 | 29.04 |
| கடல் | 38.71 | 42.18 | 43.72 | 46.28 | 47.63 |
| மோட்டார் வாகனம் | 98.22 | 97.38 | 97.50 | 96.16 | 93.20 |
| சுகாதாரம் | 81.59 | 79.96 | 95.15 | 81.69 | 88.18 |
| நானாவிதம் | | | 54.87 | 51.18 | 42.89 |
| **உப மொத்தம்** | **83.69** | **84.27** | **84.13** | **81.20** | **80.86** |
| எஸ்ஆர்சீசீ அன்ட் டீ | 100.00 | 100.00 | 100.00 | 97.31 | 98.22 |
| **மொத்த பிடித்துவைத்திருத்தல் வீதம்** | **84.45** | **84.96** | **84.84** | **81.89** | **81.64** |

கொடுக்கப்பட்ட மீள்காப்புறுதியைக் கொண்டுள்ளது.

கடந்த ஆண்டைப் போலவே, மோட்டார் வாகனக் காப்புறுதி வியாபாரத்தினால் உயர்ந்தளவான தக்கவைத்துக் கொள்ளல் வீதமான 93.20% (2017:81.20%) பெறப்பட்டது. எனினும், மீள்காப்புறுதிக்காக கொடுக்கப்பட்ட தவணைக் கட்டணங்களின் பெறுமதி 2018இல் இ.ரூபா 2,152 மில்லியனில் இருந்து இ.ரூபா 4,251 மில்லியனாக அதிகரித்து வளர்ச்சி வீதமாக 97.53% வீதத்தைப் பதிவுசெய்த போதிலும், தக்கவைத்துக்கொள்ளல் விகிதம் சிறிதளவான வீழ்ச்சியைக் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் காட்டுகின்றது. இது பிரதானமாக நாட்டின் கடந்த சில ஆண்டுகளாக பெற்ற எதிர்மறையான சூழ்நிலைகளில் இருந்து பெற்றுக்கொண்ட இடர் தொடர்பான அனுபவத்தின் ஊடாக அதனை கைக்கொள்வதற்கு மீள்காப்புறுதி நிகழ்ச்சித்திட்டங்களை மேம்படுத்தியதன் காரணமாக ஏற்பட்டதாகும்.

2018இல் சுகாதார காப்புறுதி இரண்டாவது அதியுயர் தக்கவைத்தல் வீதமான 88.18% வீதத்தை (2017:81.69%) பதிவுசெய்ததுடன், இது 6.49% வீதத்தினால் வளர்ச்சியுள்ளதை வெளிப்படுத்தியது. அதற்கமைவாக, சுகாதாரக் காப்புறுதிக்காக கொடுக்கப்பட்ட மீள்காப்புறுதித் தவணைக் கட்டணம்

2017இல் பதிவுசெய்யப்பட்ட 37.50% வீதமாக பதிவுசெய்யப்பட்டஇ.ரூபா 2,683 மில்லியனில் இருந்து 2018இல் இ.ரூபா 1,677 மில்லியனாக குறைவடைந்தது.

கடல் காப்புறுதியின் தக்கவைத்துக்கொள்ளல் வீதம் மீள்காப்புறுதிக்கான தவணைக் கட்டணக் கொடுப்பனவு 2018இல் இ.ரூபா 1,259 மில்லியனாக (2017: இ.ரூபா 1,177 மில்லியன்) அறிக்கையிடப்பட்டதன் ஊடாக 2017இல் பதிவு செய்யப்பட்ட 46.28% வீதத்திலிருந்து 1.35% வீதத்தினால் சற்று அதிகரித்தது.

2017இல் பதிவுசெய்யப்பட்ட 51.18% வீதத்தில் இருந்து 8.29% வீதத்தினால் குறைவடைந்து 42.89% வீதத்தை தக்கவைத்துக் கொள்ளல் விகிதத்தை நானாவிதக் காப்புறுதி வெளிப்படுத்துகின்றது. கடந்த ஆண்டைப் போலவே, 2017ல் 19.19% வீதத்தை தக்கவைத்துக் கொள்ளல் விகிதமாக பதிவுசெய்த போதிலும் அதனுடன் ஒப்பிடுகையில் 29.04% வீத அதிகரிப்பை காட்டியதன் ஊடாக 2018 இல் மிகக் குறைந்த தக்கவைத்துக்கொள்ளல் விகிதத்தை தீக் காப்புறுதி வெளிப்படுத்தியது.

## மொத்த சொத்துக்களின் கம்பனி ரீதியான பகுப்பாய்வு - பொதுக் காப்புறுதி வியாபாரம்

31 டிசம்பர் 2017 மற்றும் 31 டிசம்பர் 2018இல் பொதுக் காப்புறுதிக் கம்பனிகளிடையே சொத்துக்களின் பரவலை அட்டவணை 21 மற்றும் வரைபு 18 வெளிப்படுத்துகின்றது. 31 டிசம்பர் 2018 இல் பொதுக் காப்புறுதி வியாபாரத்தில் உள்ள மொத்த சொத்துக்களின் பெறுமதி ரூபா 190,088 மில்லியனாவதுடன், இதனை 31 டிசம்பர் 2017இல் இதன் பெறுமதி ரூபா 185,583 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2.43% வீதம் அதிகரித்துள்ளது.

## இணைப்பு 01

கடந்த ஆண்டைப் போலவே, பொதுக் காப்புறுதி வியாபாரத்தில் உள்ள

அட்டவணை 21

மொத்த சொத்துகள் தொடர்பாக கம்பனி ரீதியான பகுப்பாய்வு - பொது காப்புறுதி வியாபாரம்


| காப்புறுதியாளர் | 2017 (அ) | | 2018 (ஆ) | |
|---|---|---|---|---|
| | (இ.ரூ 000) | % | (இ.ரூ 000) | % |
| எலைன்ஸ் ஜென. | 6,954,152 | 3.75 | 31,203,197 | 16.42 |
| அமான ஜென. | 3,201,348 | 1.73 | 3,309,045 | 1.74 |
| சிலிங்கோ ஜென. | 25,551,645 | 13.77 | 27,899,029 | 14.68 |
| கென்டினென்டல் | 4,262,314 | 2.30 | 5,381,550 | 2.83 |
| கோப்பரெட்டிவ் ஜென. | 4,667,558 | 2.52 | 5,510,538 | 2.90 |
| பெயர்பெர்ஸ்ட் | 15,975,791 | 8.61 | 14,917,948 | 7.85 |
| எச்என்பி ஜென. | 4,385,775 | 2.36 | 4,773,910 | 2.51 |
| ஜனசக்தி ஜென. | 22,457,907 | 12.10 | - | 0.00 |
| எல்ஓஎல்சி ஜென. | 5,077,102 | 2.74 | 5,531,511 | 2.91 |
| எம்பிஎஸ்எல் | 618,234 | 0.33 | 550,469 | 0.29 |
| என்ஜஇஎப் | 13,165,645 | 7.09 | 11,909,582 | 6.27 |
| ஓரியன்ட் | 1,731,256 | 0.93 | 1,943,480 | 1.02 |
| பீப்பள்ஸ் | 7,745,115 | 4.17 | 8,417,568 | 4.43 |
| சனச | 633,678 | 0.34 | 715,143 | 0.38 |
| எஸ்எல்ஐசி | 69,155,434 | 37.26 | 68,024,988 | 35.79 |
| மொத்தம் | **185,582,954** | **100** | **190,087,958** | **100** |

சொத்துக்களின் பெரும் பகுதியை இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் இ.ரூபா 68,025 மில்லியன் (இ.ரூபா 69,155 மில்லியன்) சொத்துக்களை வைத்துக் கொண்டதன் ஊடாக தனதாக்கிக் கொண்டதுடன், அதன் சொத்துக்களின் பங்கு 1.47% வீதத்தினால் குறைந்த போதிலும், மொத்த கைத்தொழிற்துறை சொத்துக்களில் அது 35.79% வீதத்தை (2017: 37.26%) பிரதிநிதித்துவப்படுத்தியது.

எலைன்ஸ் ஜெனரல் இ.ரூபா 31,203 மில்லியன் (2017: இ.ரூபா 6,954 மில்லியன்) பெறுமதியான சொத்துக்களை 31 டிசம்பர் 2018 இல் அறிக்கையிட்டதுடன், 2018 இல் ஜனசக்கதி ஜெனரலுடன் இணைந்து

வரைபு 18

மொத்த சொத்துகள் தொடர்பாக கம்பனி ரீதியான பகுப்பாய்வு – பொது காப்புறுதி வியாபாரம்




கொண்டதன் ஊடாக இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இ.ரூபா 24,249 மில்லியனால் அதிகரித்துள்ளதுடன் கைத்தொழிற்துறையில் உள்ள சொத்தக்களின் பங்குகளின் அடிப்படையில் இரண்டாம் இடத்தையும் கைப்பற்றியுள்ளது.

2018இல் சிலிங்கோ ஜெனரல், பியார்பெஸ்ட் மற்றும் என்ஜடீஎப் என்பன மொத்த சொத்துகளில் முறையே 14.68% (2017:13.77%), 7.85% (2017:8.61%) மற்றும் 6.27% ((2017:7.09%) வீதத்தைப் பெற்றுக்கொண்டு, மூன்றாம், நான்காம் மற்றும் ஐந்தாம் இடங்களைப் பெற்றுக்கொண்டன. எனினும் 2017 உடன் ஒப்பிடுகையில் 2018 இல் என்ஜடீஎப் இன் சொத்துக்களின் வீழ்ச்சி தெளிவாகத் தெரிகின்றது. அட்டவணை 21இல் காட்டப்பட்டவாறு, பொதுக் காப்புறுதி கம்பனிகளின் மொத்த சொத்துகளில் 81.01% வீதம் முதல் ஐந்து கம்பனிகளிடையே உள்ளதுடன் மிகுதி 18.99% வீதமே மிகுதி பத்து காப்புறுதிக் கம்பனிகளுக்கு சொந்தமாக உள்ளது.

## பொதுக் காப்புறுதி வியாபாரத்தில் சொத்துக்களின் செறிவு

அட்டவணை 22 மற்றும் வரைபு 19 31 டிசம்பர் 2017 மற்றும் 2018இல் பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் சொத்துக்களை விளக்குகின்றது. 2018 இல் பொதுக் காப்புறுதி வியாபரத்தில் உள்ள மொத்த சொத்தகளின் பெறுமதி இ.ரூபா 190,088 மில்லியன் (2017: இ.ரூபா 185,583 மில்லியன்) ஆவதுடன், 31 டிசம்பர் 2017 உடன் ஒப்பிடுகையில் 2.43% வீத வளர்ச்சியை பதிவுசெய்கின்து. பொதுக் காப்புறுதித் துறையின் பிரதான முதலீட்டு வகையான அரச பிணையங்களில் பெரும்பாலான சொத்துகள் முதலீடு செய்யப்பட்டுள்ளதுடன், இதன் பெறுமதி இ.ரூபா 53,188 மில்லியன் (2017: இ.ரூபா 41,880 மில்லியன்) ஆகவும், மொத்த சொத்துகளில் இது 27.98% வீதத்தை வெளிப்படுத்துகின்றது. இதற்கு காரணம் அரசாங்க பிணையங்களில் காணப்படும் மிகக் குறைந்த இடர் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுடன் இணங்குதல் ஆகும். சட்டத்தின் பிரிவு 25(1)இற்கு

### வரைபு 19
### 31 டிசம்பர் 2017 மற்றும் 2018 அன்று சொத்துக்களின் செறிவு – பொதுக் காப்புறுதி வியாபாரம்




அட்டவணை 22
31 டிசம்பர் 2017 மற்றும் 2018 அன்று சொத்துக்களின் செறிவு - பொதுக் காப்புறுதி வியாபாரம்

| சொத்துக்களின் வகை | 2017 (அ) | | 2018 (ஆ) | |
|---|---|---|---|---|
| | இ.ரூபா'000 | % | இ.ரூபா'000 | % |
| அரச கடன் பிணையங்கள் | 41,879,803 | 22.57 | 53,188,206 | 27.98 |
| உரிமைப்பங்குகள் | 38,355,540 | 20.67 | 34,249,739 | 18.02 |
| கூட்டிணைந்த கடன் பிணையங்கள் | 12,755,297 | 6.87 | 13,506,161 | 7.11 |
| காணி மற்றும் கட்டிடங்கள் | 11,369,560 | 6.13 | 11,206,996 | 5.90 |
| வைப்புகள் | 18,322,254 | 9.87 | 20,491,247 | 10.78 |
| கூறு நம்பிக்கை அலகுகள் | 1,528,271 | 0.82 | 1,228,957 | 0.65 |
| கிடைக்க வேண்டிய மீள்காப்புறுதி | 16,840,965 | 9.07 | 12,982,985 | 6.83 |
| பூட்கையாளர்கள் மற்றும் இடைத்தரகர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய தவணைக் கட்டணங்கள | 21,129,985 | 11.39 | 23,256,352 | 12.23 |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 6,907,186 | 3.72 | 5,693,812 | 3.00 |
| ஏனைய சொத்துகள் | 14,069,946 | 7.58 | 11,672,189 | 6.14 |
| காசு மற்றும் காசுக்கு சமனானவை | 2,424,146 | 1.31 | 2,611,312 | 1.37 |
| மொத்தம் | **185,582,953** | **100** | **190,087,956** | **100** |

அமைவாக ஒவ்வொரு காப்புறுதியாளரும் தொழில்நுட்ப முதலீட்டில் 20% வீதத்தை அரசாங்க பிணையங்களில் முதலீடு செய்தல் வேண்டும். அதற்கமைவாக, காப்புறுதிக் கம்பனிகள் மேற்குறிப்பிட்ட சட்டத்தின் பிரிவுடன் இணங்குவதை ஆணைக் குழு உறுதி செய்வதுடன் மிகுதி சொத்துக்கள் தீர்மானம் 1இற்கு அமைவாக முதலீடு செய்யப்பட்டுள்ளது.

நிச்சயமற்ற அரசியல் சூழ்நிலை, நிலையற்ற பொருளாதார கொள்கைகள் மற்றும் எதிர்மறை உலகளாவிய அபிவிருத்திகள் போன்ற காரணிகளினால் 2018 ஆம் ஆண்டில் உரிமைப் பங்கு சந்தை சிறப்பாக செயற்படவில்லை. எனினும், 2017 இல் இ.ரூபா 38,556 மில்லியனைப் பதிவு செய்து 10.7% வீத எதிர்மறை வளர்ச்சியுடன் 2018இல் இ.ரூபா 34,250 மில்லியனைப் பதிவு செய்த போதும் பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் அடுத்த பெரிய சொத்து வகையினை உரிமைப் பங்கு பிரதிநிதித்துவப்படுத்துகின்றதுடன் 31 டிசம்பர் 2018இல் காணப்பட்ட மொத்த சொத்துகளில் 18.02% (2017:20.67%) வீதத்தைக் கொண்டுள்ளது. அதேவேளையில், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் துணைக் கம்பனிகளில் 58% வீத உரிமைப் பங்குகள் காணப்படுகின்றன.

31 டிசம்பர் 2018 அன்று பூட்கையாளர்களிடமிருந்தும் இடைத்தரகர்களிடமிருந்தும் கிடைக்க வேண்டிய தவணைக் கட்டணத் தொகையான இ.ரூபா 23,256 மில்லியன் (இ.ரூபா 21,130 மில்லியன்) மூன்றாவது அதிகூடிய சொத்து வகையாகவும் 2017 உடன் ஒப்பிடுகையில் 10.06% வீதம் அதிகரித்தும் காணப்படுகின்றது. வங்கிகளிலும் நிதிக் கம்பனிகளிலும் உள்ள வைப்புகள் மொத்த சொத்துக்களில் 10.78% வீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தவதுடன், இதன் பெறுமதி இ.ரூபா 20,491 மில்லியன் (2017: இ.ரூபா 18,322 மில்லியன்) ஆகும். அத்துடன் காணப்பட்ட சாதகமான வட்டி வீதத்தினால் 2017 உடன் ஒப்பிடுகையில் 11.84% வீத வளர்ச்சியைப் பதவு செய்கின்றது. பொதுக் காப்பறுதி வியாபாரத்தில் மற்றொரு பிரதான சொத்து வகையாக கூட்டிணைந்த பிணையங்கள் உள்ளதுடன், இது 2018இல் காணப்பட்ட சொத்துகளில் 7.11% (2017:6.87%) வீதத்தைக் கொண்டுள்ளது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீள்காப்புறுதி கிடைப்பனவுகளில் 23% வீதம் குறிப்பிடக்கூடியளவு வீழ்ச்சி காணப்படுகின்றது. கடந்த வருடம் நாட்டில் காணப்பட்ட எதிர்மறையான சூழ்நிலையை அடிப்படையாகக் கொண்டு மீள்காப்புறுதிப் பெறுகைகளின் மீட்பு பிரதானமாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

## முதலீட்டு வருமானம் - பொது காப்புறுதி வியாபாரம்

அட்டவணை 23 2017 மற்றும் 2018இல் பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் வேறுபட்ட சொத்து வகைககளின் முதலீட்டு வருமானம், சராசரி முதலீடு மற்றும் முதலீட்டு வருமான விகிதத்தை விளக்குகின்றது. பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் சராசரி முதலீட்டுத் தொகை இ.ரூபா 129,464 மில்லியனாவதுடன், 2017இல் பதிவு செய்யப்பட்ட இ.ரூபா 119,633 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 8.22% வீதம் வளர்ச்சியடைந்துள்ளது. 2018இல் பொதுக் காப்புறுதி வியாபாரத்தினால் உருவாக்கப்பட்ட மொத்த முதலீட்டு

அட்டவணை 23

முதலீட்டு வருமானம் மற்றும் சராசரி முதலீடுகளின் சுருக்கம் - பொதுக் காப்புறுதி வியாபாரம்

| வகை | 2017 (அ) | | | 2018 (ஆ) | | |
|---|---|---|---|---|---|---|
| | முதலீட்டு வருமானம் (இ.ரூபா'000) | சராசரி வருமானம் (இ.ரூபா'000) | முதலீட்டு வருவாய் விகிதம் (%) | முதலீட்டு வருமானம் (இ.ரூபா'000) | சராசரி வருமானம் (இ.ரூபா'000) | முதலீட்டு வருவாய் விகிதம் (%) |
| **அரசாங்க கடன் பிணையங்கள்** | 4,226,868 | 40,990,441 | 10.31 | 4,817,017 | 47,534,004 | 10.13 |
| - திறைசேரி பிணையங்கள் | 2,749,548 | | | 2,714,401 | | |
| - திறைசேரி உண்டியல்கள் | 634,201 | | | 1,322,853 | | |
| - ஏனையவை (ரிபோ) | 843,119 | | | 779,763 | | |
| **உரிமைப் பங்கு** | 659,143 | 38,075,279 | 1.73 | 868,543 | 36,302,639 | 2.39 |
| - மூலதன ஈட்டுகை/ நட்டங்கள் | 104,187 | | | 312,784 | | |
| - பங்குலாபம் | 554,956 | | | 555,759 | | |
| **கூட்டிணைந்த கடன்கள்** | 1,328,170 | 12,207,157 | 10.88 | 1,542,497 | 13,130,729 | 11.75 |
| - தொகுதிக்கடன் | 1,267,731 | | | 1,484,651 | | |
| - வணிகப் பத்திரம் மற்றும் ஏனையவை | 60,439 | | | 57,846 | | |
| **நிலம் மற்றும் கட்டடங்கள்** | 1,425 | 11,471,351 | 0.01 | (4,425) | 11,288,278 | (0.04) |
| **வைப்புகள்** | 1,604,995 | 14,863,562 | 10.80 | 2,186,962 | 19,406,751 | 11.27 |
| - வங்கி | 1,193,953 | | | 1,579,012 | | |
| - நிதி கம்பனிகள் | 411,041 | | | 607,950 | | |
| **அலகு நம்பிக்கை** | 97,978 | 1,335,332 | 7.34 | 63,388 | 1,378,614 | 4.60 |
| **பூட்கை கடன்கள்** | - | 1,353 | - | - | - | - |
| **ஏனையவை** | 463,315 | 688,493 | | 604,227 | 422,698 | |
| **மொத்தம்** | **8,381,895** | **119,632,968** | **7.01** | **10,078,210** | **129,463,713** | **7.78** |

அட்டவணை 24

கடன்தீர் நிலையின் கம்பனி ரீதியான பகுப்பாய்வு - 31 டிசம்பர் 2017 மற்றும் 2018இல் திகதியில் பொதுக் காப்புறுதி வியாபாரம்

| காப்புறுதியாளர் | 31 டிசம்பர் 2017 அன்று (ஆ) | | | 31 டிசம்பர் 2018 அன்று (ஆ) | | |
|---|---|---|---|---|---|---|
| | TAC (ரூ.'000) | RCR (ரூ.'000) | CAR (%) | TAC (ரூ.'000) | RCR (ரூ.'000) | CAR (%) |
| எலைன்ஸ் ஜென. | 1,263,160 | 883,784 | 143 | 9,608,042 | 4,086,855 | 235 |
| அமான ஜென. | 686,816 | 366,596 | 187 | 514,583 | 276,025 | 186 |
| சிலிங்கோ ஜென. | 5,131,721 | 2,703,494 | 190 | 5,896,112 | 3,026,609 | 195 |
| கென்டினென்டல் | 1,232,481 | 481,157 | 256 | 1,559,089 | 623,990 | 250 |
| கோப்பரெட்டிவ் ஜென. | 1,299,737 | 720,873 | 180 | 1,385,751 | 768,938 | 180 |
| பியார்பெஸ்ட் | 2,785,001 | 1,714,025 | 162 | 3,188,311 | 1,723,550 | 185 |
| எச்என்பி ஜென. | 945,419 | 530,948 | 178 | 1,171,520 | 585,201 | 200 |
| ஜனசக்தி ஜென. | 7,018,573 | 2,878,464 | 244 | | | |
| எல்ஓஎல்சி ஜென. | 1,129,774 | 538,281 | 210 | 1,109,301 | 628,555 | 176 |
| எம்பிஎஸ்எல் | (186,561) | 148,193 | -126 | (249,255) | 132,371 | -188 |
| ஓரியன்ட் | 565,891 | 311,104 | 182 | 627,959 | 241,239 | 260 |
| பீப்பள்ஸ் | 2,825,709 | 884,552 | 319 | 3,151,752 | 1,230,620 | 256 |
| சனச | 134,330 | 108,377 | 124 | 119,535 | 150,344 | 80 |
| எஸ்எல்ஐசி | 27,050,916 | 13,501,434 | 200 | 24,404,446 | 11,733,987 | 208 |
| மொத்தம் | **51,882,966** | **25,771,281** | **175** | **52,487,146** | **25,208,285** | **171** |

வருமானத்தின் பெறுமதி இ.ரூபா 10,078 மில்லியன் (2017: இ.ரூபா 8,382 மில்லியன்) ஆகும். அத்துடன் மொத்த முதலீடுகளின் ஊடாக பெறப்பட்ட வருமானம் 7.78% வீதமாவதுடன், இது 2017 பதிவுசெய்யப்பட்ட 7.01% வீதத்துடன் ஒப்பிடுகையில் சற்று அதிகரித்துள்ளது.

அரசாங்க பிணையங்கள் பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் பெரிய முதலீட்டு வகையாக இருப்பதுடன், இதன் சராசரி முதலீடு இ.ரூபா 47,534 மில்லியன் (2017: இ.ரூபா 40,990 மில்லியன்) ஆகவும், இதிலிருந்தான முதலீட்டு வருமானம் 2017ல் 10.31% வீதமாக காணப்பட்டதுடன், இது 10.13% வீதமாக குறைவடைந்துள்ளது.

வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களில் உள்ள வைப்புகளின் சராசரி முதலீடு இ.ரூபா 19,407 மில்லியனாவதுடன் இது 2017 பதிவுசெய்யப்பட்ட இ.ரூபா 14,863 மில்லியனுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பெற்றுள்ளது. வைப்புகளினால் உருவாக்கப்பட்ட முதலீட்டு வருமானம் இ.ரூபா 2,187 மில்லியன் (2017: இ.ரூபா 1,605 மில்லியன்) ஆகும். இது ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 36.26% வீத வளர்ச்சியைப் பதிவு செய்வதுடன், 2018ல் 11.27% (2017:10.80%) வீத முதலீட்டு வருமான விகிதத்தைப் பதிவு செய்கின்றது.

முதலீட்டு பட்டியலில், 2018இல் சராசரி முதலீடாக இ.ரூபா 13,131 மில்லியனைக் (2017: இ.ரூபா 12,207 மில்லியன்) கொண்டு கூட்டிணைந்த கடன் பிணையங்கள் குறிப்பிட்டளவு பங்கினை பெற்றுள்ளதுடன், இது ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 7.57% வீத வளர்ச்சியைப் பதிவு செய்வதுடன், 2018இல் 11.75% (2017:10.88%) வீத முதலீட்டு வருமான விகிதத்தைப் பதிவு செய்கின்றது.

மேலும், 2018இல் உரிமைப் பங்குகள் மற்றும் கூறு நம்பிக்கை அலகுகள் முறையே 2.39% மற்றும் 4.60% வீத முதலீட்டு வருமான விகிதத்தைப் பதிவு செய்கின்றன.

## காப்புறுதிக் கம்பனிகளின் கடன்தீர் நிலை - பொதுக் காப்புறுதி வியாபாரம்

அட்டவணை 24 31 டிசம்பர் 2017 மற்றும் 2018 ஆம் திகதியன்று பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் கிடைக்கப்பெறும் மொத்த மூலதனம், இடர் அடிப்படையிலான மூலதனத் தேவைப்பாடு மற்றும் மூலதனப் போதுமை விகிதம் என்பவற்றை விளக்குகின்றது. 2018 டிசம்பர் 31ஆம் திகதியன்று பொதுக் காப்புறுதி வியாபாரம் சராசரி மூலதன போதுமை விகிதமாக 171% வீதத்தைப் பதிவுசெய்ததுடன், இது 2017 இல் பதிவு செய்த 175% வீதத்துடன் ஒப்பிடுகையில் 4% வீதத்தினால் குறைந்துள்ளது. இரு கம்பனிகளைத் தவிர்த்து அனைத்து காப்புறுதி கம்பனிகளும் மிகக் குறைந்த தேவைப்பாடான 120% வீதத்தையும் இ.ரூபா 500 மில்லியனையும் 31 டிசம்பர் 2018 அன்று திருப்தியானளவில் பூர்த்தி செய்தன. அதற்கமைவாக, 2015 விதிகளான கடன்தீர் எல்லை நிபந்தனைகளில் (இடர் அடிப்படையிலான மூலதனம்) உள்ள மொத்த கிடைக்கப்பெறும் மூலதனம் தேவைப்பாட்டினை பேணாத நிறுவனங்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது. மேலும், அமுல்படுத்தப்பட்ட மட்டமான 160% வீதத்திற்கு குறைவான மூலதனப் போதுமை அறிக்கையிட்ட நிறுவனங்கள், ஆணைக்குழுவினால் விநியோகிக்கப்பட்ட இடர் அடிப்படையிலா மூலதனம் மீதான உபாயமார்க்க அமுல்படுத்தலில் உள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக நெருக்கமாக கண்காணிக்கப்படுகின்றது.

## காப்புறுதிக் கம்பனிகளின் மொத்த கிடைக்கப்பெறும் மூலதனத் தேவைப்பாடு - பொதுக் காப்புறுதி வியாபாரம்

அட்டவணை 25, 31 டிசம்பர் 2018ஆம் திகதியில் தனிப்பட்ட பொதுக் காப்புறுதிக் கம்பனிகளினால் பதிவு செய்யப்பட்ட அடுக்கு I, அடுக்கு II, கழிப்பனவு மற்றும் மொத்தம் கிடைக்கப்பெறும் மூலதனத் தேவைப்பாட்டின் அமைப்பினை சித்தரிக்கின்றது. 31 டிசம்பர் 2018 ஆம் திகதியில், பொதுக் காப்புறுதிக் கம்பனிகளின் மொத்த கிடைக்கப்பெறும் மூலதனத் தேவைப்பாட்டுத் தொகை இ.ரூபா 52,487 மில்லியனாக இருந்ததுடன், 2017இல் காணப்பட்ட இ.ரூபா 51,883 மில்லியனுடன் ஒப்பிடகையில், 1.16% வீதத்தினால் சற்று அதிகரித்துள்ளது. இ.ரூபா 77,217 மில்லியன் பெறுமதியுடைய அடுக்கு I மூலதனம் கம்பனிகள் விநியோகித்த மற்றும் முழுமையாக கொடுப்பனவு செய்யப்பட்ட சாதாரண பங்குகள், மூலதன ஒதுக்குகள் மற்றும் தக்கவைக்கப்பட்ட வருமானத்திற்கான ஏனைய சீராக்கங்கள் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. அடுக்கு II மூலதனம் 31 டிசம்பர் 2018 இல், இ.ரூபா 8,604 மில்லியன் பெறுமதியைக் கொண்டிருப்பதுடன், இது கடன்தீர் எல்லை நிபந்தனைகளில் (இடர் அடிப்படையிலான மூலதனம்) உள்ளவாறு அடுக்கு II மூலதனம் அடுக்கு I மூலதனத்தின் 50% வீதத்தை விஞ்சுதல் கூடாது.

மொத்த கிடைக்கப்பெறும் மூலதனத்திலிருந்தான கழிப்பனவு இ.ரூபா 33,333 மில்லியன் ஆவதுடன், இது கடன் மற்றும் முற்பணங்கள், முன்கொடுப்பனவுகள், கையிருப்பு, உறுதிமொழிச் சொத்துக்கள், பிற்போடப்பட்ட வருமான வரி போன்றவற்றை உள்ளடக்கியுள்ளது.

## காப்புறுதிக் கம்பனிகளின் இடர் மூலதன தேவைப்பாட்டு ஒப்பீடு - பொதுக் காப்புறுதி வியாபாரம்

அட்டவணை 26, 31 டிசம்பர் 2017 மற்றும் 2018ஆம் திகதியன்று இடர் அடிப்படையிலான மூலதனத் தேவைப்பாடு தொடர்பான பல்வேறு மூலதனக் கட்டணங்களின் நிறுவன ரீதியான அமைப்பை விளக்குகின்றது.

2018ஆம் ஆண்டில், பல்வகைப்படுத்தலுக்குப் பிறகு பொதுக் காப்புறுதி வியாபாரத்திற்கான மொத்த இடர் மூலதனத் தேவைப்பாட்டின் பெறுமதி இ.ரூபா 25,208 மில்லியன் ஆவதுடன், 2017இல் பதிவு செய்யப்பட்ட இ.ரூபா 25,771 மில்லியன் உடன் ஒப்பிடுகையில் 2% வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. தவணைக் கட்டணம் மற்றும் கோரிக்கைப் பொறுப்பு என்பவற்றை உள்ளடக்கிய பொறுப்பு இடரான பிரதான இடர் பொறுப்பு வகையாக இருப்பதுடன் இது 2018இன் பல்வகைப்படுத்தலுக்கு முன்னர் மொத்த மூலதன கட்டணங்களின் 31.39% (2017:29.94%) வீதமாக இருந்தது. கைத்தொழிற்துறையின் இரண்டாவது பெரிய இடர் வகையான செறிவு இடர் கட்டணம் 2018இல் இ.ரூபா 10,774 மில்லியனாக இருந்துதுடன், 2017இல் பதிவுசெய்யப்பட்ட இ.ரூபா 10,087 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 6.81% வீதம் அதிகரித்துள்ளது. சந்தை இடர் பல்வகைப்படுத்தலுக்கு முன்னர் மொத்த மூலதன கட்டணங்களின் 27.88% வீதத்தை (2017:31.83%) பிரதிநிதித்துவப்படுத்தி பெரிய இடர் வகையில் மூன்றாம் இடத்தில் உள்ளது. எனினும், 2017ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 12.33% வீதம் வீழ்ச்சியடைந்துள்ளது.

பொதுக் காப்புறுதி வியாபாரத்தில தொழிற்பாட்டு இடர், கடன் இடர் மற்றும் மீள்காப்புறுதி இடர் என்பன ஒப்பீட்டளவில் குறைவாக உள்ளதுடன் முறையே இவை 31 டிசம்பர் 2018 பல்வகைப்படுத்தலுக்கு முன்னர் மொத்த மூலதன கட்டணங்களின் 4.73%, 3.09% மற்றும் 1.73% ஆக இருந்தன.

அட்டவணை 25

31 டிசம்பர் 2017 மற்றும் 2018ல் மொத்த கிடைக்கப்பெறும் மூலதனம் தொடர்பாக கம்பனி ரீதியான பகுப்பாய்வு – பொது காப்புறுதி வியாபாரம்

| காப்புறுதியாளர் | 31 டிசம்பர் 2017ம் திகதியன்று (அ) கி.மு.தே (இ.ரூபா'000) | 31 டிசம்பர் 2018ம் திகதியன்று (ஆ) | | | |
|---|---|---|---|---|---|
| | | அடுக்கு I (இ.ரூபா'000) | அடுக்கு II (இ.ரூபா'000) | கழிப்பனவுகள் (இ.ரூபா'000) | கி.மு.தே (இ.ரூபா'000) |
| எலைன்ஸ் ஜென. | 1,263,160 | 10,803,392 | - | 1,195,350 | 9,608,042 |
| அமான ஜென. | 686,816 | 1,768,692 | 120,495 | 1,374,603 | 514,583 |
| சிலிங்கோ ஜென. | 5,131,721 | 11,126,093 | - | 5,229,981 | 5,896,112 |
| கொன்டினென்டல் | 1,232,481 | 1,668,558 | - | 109,469 | 1,559,089 |
| கோப்பரேட்டிவ் ஜென. | 1,299,737 | 2,039,863 | 348,510 | 1,002,622 | 1,385,751 |
| பியார்பெஸ்ட் | 2,785,001 | 5,068,134 | - | 1,879,823 | 3,188,311 |
| எச்என்பி ஜென. | 945,419 | 1,323,636 | - | 152,115 | 1,171,520 |
| ஜனசக்தி ஜென. | 7,018,573 | | | | |
| எல்ஓஎல்சி ஜென. | 1,129,774 | 1,507,285 | - | 397,984 | 1,109,301 |
| எம்பிஎஸ்எல் | (186,561) | (156,494) | (8,058) | 84,704 | (249,255) |
| ஓரியன்ட் | 565,891 | 747,926 | - | 119,967 | 627,959 |
| பீப்பள்ஸ் | 2,825,709 | 3,382,020 | - | 230,267 | 3,151,752 |
| சனச | 134,330 | 232,948 | 2,839 | 116,252 | 119,535 |
| எஸ்எல்ஐசி | 27,050,916 | 37,704,829 | 8,140,049 | 21,440,431 | 24,404,446 |
| மொத்தம் | **51,882,966** | **77,216,881** | **8,603,835** | **33,333,568** | **52,487,146** |

அட்டவணை 26

31 டிசம்பர் 2017 மற்றும் 2018ஆம் திகதியில் காப்புறுதி கம்பனிகளின் இடர் அடிப்படையிலான மூலதனத் தேவைப்பாடு ஒப்பீடுகள் - பொதுக் காப்புறுதி வியாபாரம்

| காப்புறுதியாளர் | 31 டிசம்பர் 2017ஆம் திகதியில் (அ) இ.ரூபா'000 | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | கடன் இடர் | செறிவு இடர் | சந்தை இடர் | மீள்காப்புறுதி இடர் | பொறுப்பு இடர் | தொழிற்பாட்டு இடர் | பல் வகைப்படுத்தலுக்கு முன் இ.மூ.தே | பல் வகைப்படுத்தலுக்கு முன் இ.மூ.தே |
| எலைன்ஸ் ஜென. | 3,424 | 482,833 | 118,166 | 21,050 | 621,642 | 58,455 | 1,305,571 | 883,784 |
| அமான ஜென. | 24,375 | 266,822 | 43,262 | 5,366 | 134,244 | 29,837 | 503,906 | 366,596 |
| சிலிங்கோ ஜென. | 132,556 | 1,042,265 | 783,950 | 156,653 | 1,669,237 | 217,977 | 4,002,637 | 2,703,494 |
| கென்டினென்டல் | 51,046 | 79,230 | 180,917 | 21,024 | 345,945 | 38,281 | 716,443 | 481,157 |
| கோப்பரெட்டிவ் ஜென. | 81,205 | 241,016 | 281,280 | 9,477 | 376,738 | 44,537 | 1,034,253 | 720,873 |
| பியார்பெஸ்ட் | 36,803 | 799,580 | 413,767 | 102,860 | 1,046,642 | 108,549 | 2,508,202 | 1,714,025 |
| எச்என்பி ஜென. | 42,774 | 198,031 | 73,910 | 18,212 | 411,933 | 37,108 | 781,968 | 530,948 |
| ஜனசக்தி ஜென. | 263,078 | 600,783 | 1,577,542 | 77,880 | 1,379,390 | 189,864 | 4,088,538 | 2,878,464 |
| எல்ஓஎல்சி ஜென. | 2,519 | 94,195 | 124,446 | 24,104 | 476,997 | 45,443 | 767,705 | 538,281 |
| எம்பிஎஸ்எல் | 3,255 | 84,309 | 24,758 | 6,259 | 88,705 | 5,573 | 212,860 | 148,193 |
| ஓரியன்ட் | 24,077 | 217,405 | 27,829 | 2,783 | 149,976 | 16,047 | 438,118 | 311,104 |
| பீப்பள்ஸ் | 118,529 | 139,463 | 215,990 | 8,342 | 738,073 | 71,025 | 1,291,421 | 884,552 |
| சனச | 3,170 | 43,930 | 53,022 | 1,718 | 36,620 | 5,755 | 144,216 | 108,377 |
| எஸ்எல்ஐசி | 172,360 | 5,796,802 | 7,069,453 | 138,351 | 2,860,164 | 689,716 | 16,726,847 | 13,501,434 |
| மொத்தம் | **959,172** | **10,086,665** | **10,988,293** | **594,078** | **10,336,306** | **1,558,168** | **34,522,685** | **25,771,281** |

| காப்புறுதியாளர் | 31 டிசம்பர் 2018ஆம் திகதியில் (ஆ) இ.ரூபா'000 | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | கடன் இடர் | செறிவு இடர் | சந்தை இடர் | மீள்காப்புறுதி இடர் | பொறுப்பு இடர் | தொழிற்பாட்டு இடர் | பல் வகைப்படுத்தலுக்கு முன் இ.மூ.தே | பல் வகைப்படுத்தலுக்கு முன் இ.மூ.தே |
| எலைன்ஸ் ஜென. | 173,595 | 2,307,441 | 875,598 | 58,380 | 2,226,419 | 288,308 | 5,929,741 | 4,086,855 |
| அமான ஜென. | 19,073 | 156,677 | 35,724 | 11,204 | 160,367 | 29,784 | 412,829 | 276,025 |
| சிலிங்கோ ஜென. | 235,220 | 1,268,380 | 763,755 | 168,351 | 1,780,155 | 242,373 | 4,458,234 | 3,026,609 |
| கென்டினென்டல் | 111,429 | 70,679 | 240,595 | 23,111 | 434,004 | 47,477 | 927,295 | 623,990 |
| கோப்பரெட்டிவ் ஜென. | 102,980 | 216,716 | 296,849 | 19,332 | 429,092 | 52,975 | 1,117,944 | 768,938 |
| பியார்பெஸ்ட் | 44,858 | 736,958 | 542,124 | 172,824 | 847,586 | 109,183 | 2,453,533 | 1,723,550 |
| எச்என்பி ஜென. | 49,594 | 201,164 | 103,698 | 13,447 | 453,106 | 42,457 | 863,466 | 585,201 |
| எல்ஓஎல்சி ஜென. | 12,200 | 120,281 | 185,426 | 21,123 | 526,920 | 49,947 | 915,898 | 628,555 |
| எம்பிஎஸ்எல் | 4,814 | 76,751 | 26,363 | 4,666 | 69,387 | 5,472 | 187,454 | 132,371 |
| ஓரியன்ட் | 24,016 | 122,900 | 32,290 | 3,758 | 156,201 | 17,944 | 357,108 | 241,239 |
| பீப்பள்ஸ் | 139,493 | 498,126 | 285,793 | 6,239 | 802,455 | 79,001 | 1,811,106 | 1,230,620 |
| சனச | 5,969 | 90,275 | 42,690 | 1,855 | 52,300 | 6,839 | 199,927 | 150,344 |
| எஸ்எல்ஐசி | 144,615 | 4,907,392 | 6,202,261 | 93,748 | 2,910,140 | 663,389 | 14,921,544 | 11,733,987 |
| மொத்தம் | **1,067,856** | **10,773,739** | **9,633,167** | **598,038** | **10,848,133** | **1,635,149** | **34,556,079** | **25,208,285** |

## தேறிய உழைக்கப்பட்ட கட்டுப்பணம், தேறிய ஏற்கநேர்ந்த கோரிக்கைகள், தேறிய கோரிக்கைகள் விகிதம், தேறிய செலவுகள், தேறிய செலவுகள் விகிதம் மற்றும் தேறிய இணைக்கப்பட்ட விகிதம் - பொதுக் காப்புறுதி வியாபாரம்

அட்டவணை 27 மற்றும் வரைவு 20இல் விபரிக்கப்பட்டவாறு, வேலைநிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம், நட்டவீடு மற்றும் பயங்கரவாதம் உள்ளடங்களாக பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் பிரதான உப வகைகளின் மொத்த உழைக்கப்பட்ட தேறிய வருமானம் இ.ரூபா 80,549 மில்லியன் ஆகும். இது 2017 பதிவு செய்த இ.ரூபா 72,354 மில்லியன் உடன் ஒப்பிடுகையில் 11.33% வீத வளர்ச்சியை வெளிப்படுத்துகின்றது. எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் வளர்ச்சி வீதமானது தேறிய உழைக்கப்பட்ட கட்டணத்தின் பதிவு செய்யப்பட்ட வளர்ச்சிக்கும் சாதகமாக அமைந்தது.

2018இல், மொத்த தேறிய ஏற்கநேர்ந்த கோரிக்கைகளின் பெறுமதி வேலைநிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம், நட்டவீடு மற்றும் பயங்கரவாதம் தவிர்த்து, இ.ரூபா 52,390 மில்லியன் ஆவதுடன், 2017ஆம் ஆண்டு பதிவுசெய்யப்பட்ட இ.ரூபா 47,818 மில்லியன் உடன் ஒப்பிடுகையில் 9.56% வீத வளர்ச்சியை வெளிப்படுத்துகின்றது. 2018ஆம் ஆண்டு பொது காப்புறுதி

அட்டவணை 27

தேறிய உழைக்கப்பட்ட தவணைக் கட்டணம், தேறிய ஏற்கநேர்ந்த கோரிக்கைகள், தேறிய கோரிக்கைகள் விகிதம், தேறிய செலவுகள், தேறிய செலவுகள் விகிதம் மற்றும் தேறிய இணைக்கப்பட்ட விகிதம் - பொதுக் காப்புறுதி வியாபாரம்

| வகை | தேறிய உழைக்கப்பட்ட தவணைக் கட்டணம் (இ.ரூபா'000) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2014 | 2015 | 2016 | 2017(அ) | 2018(ஆ) |
| தீ | 1,241,985 | 1,283,463 | 1,213,542 | 1,721,159 | 1,926,656 |
| கடல் | 753,643 | 797,026 | 903,170 | 991,573 | 1,127,969 |
| மோட்டார் | 33,826,829 | 37,958,834 | 44,593,900 | 50,580,010 | 56,540,998 |
| சுகாதாரம் | 7,079,162 | 8,071,777 | 9,349,093 | 11,435,476 | 12,683,442 |
| நானாவிதம் | 4,402,900 | 3,270,599 | 3,306,901 | 3,891,564 | 4,238,484 |
| உப மொத்தம் | **47,304,518** | **51,381,699** | **59,366,606** | **68,619,783** | **76,517,549** |
| எஸ்ஆர்சீசீ அன்ட் ரீ | 2,692,730 | 2,914,630 | 3,274,297 | 3,734,321 | 4,031,846 |
| மொத்தம் | **49,997,248** | **54,296,329** | **62,640,903** | **72,354,104** | **80,549,396** |

| வகை | தேறிய ஏற்கநேர்ந்த கோரிக்கைகள் (இ.ரூபா'000) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2014 | 2015 | 2016 | 2017 (அ) | 2018 (ஆ) |
| தீ | 717,626 | 645,231 | 1,024,290 | 1,640,062 | 1,561,223 |
| கடல் | 266,560 | 295,624 | 266,057 | 345,331 | 418,810 |
| மோட்டார் | 20,281,109 | 24,274,415 | 28,966,019 | 31,134,209 | 34,651,820 |
| சுகாதாரம் | 6,252,704 | 6,958,816 | 8,065,476 | 10,511,212 | 12,098,234 |
| நானாவிதம் | 1,522,689 | 1,677,736 | 2,121,221 | 4,186,860 | 3,659,804 |
| உப மொத்தம் | **29,040,687** | **33,851,822** | **40,443,063** | **47,817,674** | **52,389,891** |
| எஸ்ஆர்சீசீ அன்ட் ரீ | 56,897 | 780 | 33,677 | (10,519) | 76,068 |
| மொத்தம் | **29,097,585** | **33,852,602** | **40,476,740** | **47,807,154** | **52,465,959** |


| வகை | தேறிய செலவுகள் (இ.ரூபா'000) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2014 | 2015 | 2016 | 2017 (அ) | 2018 (ஆ) |
| தீ | 57.78 | 50.27 | 84.40 | 95.28 | 81.03 |
| கடல் | 35.37 | 37.09 | 29.46 | 34.83 | 37.13 |
| மோட்டார் | 59.96 | 63.95 | 64.96 | 61.55 | 61.29 |
| சுகாதாரம் | 88.33 | 86.21 | 86.27 | 91.92 | 95.39 |
| நானாவிதம் | 34.58 | 51.30 | 64.15 | 107.59 | 86.35 |
| உப மொத்தம் | **61.39** | **65.88** | **68.12** | **69.68** | **68.47** |
| எஸ்ஆர்சீசீ அன்ட் ரீ | 2.11 | 0.03 | 1.03 | (0.28) | 1.89 |
| மொத்தம் | 58.20 | 62.35 | 64.62 | 66.07 | 65.14 |

| வகை | தேறிய செலவுகள் (இ.ரூபா 000) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2014 | 2015 | 2016 | 2017 (அ) | 2018 (ஆ) |
| எஸ்ஆர்சிசி அன்ட் டீ தவிர்ந்த அனைத்து வகை பொது காப்புறுதி வியாபாரங்களின் தேறிய செலவுகள் விகிதம் | 19,524,543 | 19,134,713 | 21,421,928 | 24,491,746 | 28,328,017 |
| எஸ்ஆர்சீசீ அன்ட் டீ | 466,435 | 486,985 | 653,706 | 732,786 | 842,515 |
| மொத்தம் | **19,990,978** | **19,621,698** | **22,075,634** | **25,224,532** | **29,170,531** |

| வகை | தேறிய இணைக்கப்பட்ட விகிதம் (%) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2014 | 2015 | 2016 | 2017 (அ) | 2018 (ஆ) |
| எஸ்ஆர்சிசி அன்ட் டீ தவிர்ந்த அனைத்து வகை பொது காப்புறுதி வியாபாரங்களின் தேறிய இணைக்கப்பட்ட விகிதம் | 41.27 | 37.24 | 36.08 | 35.69 | 37.02 |
| பொது காப்புறுதி வியாபாரத்தின் தேறிய இணைக்கப்பட்ட விகிதம் | 39.98 | 36.14 | 35.24 | 34.86 | 36.21 |

| வகை | தேறிய செலவுகள் விகிதம் (%) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2014 | 2015 | 2016 | 2017 (அ) | 2018 (ஆ) |
| எஸ்ஆர்சிசி அன்ட் டீ தவிர்ந்த அனைத்து வகை பொது காப்புறுதி வியாபாரங்களின் தேறிய செலவுகள் | 102.67 | 103.12 | 104.21 | 105.38 | 105.49 |
| பொது காப்புறுதி வியாபாரத்தின் தேறிய செலவு விகிதம் | 98.18 | 98.49 | 99.86 | 100.94 | 101.35 |

### வரைபடம் 20
### தேறிய உழைக்கப்பட்ட தவணைக் கட்டணம், தேறிய ஏற்பட்ட கோரிக்கைகள், தேறிய கோரிக்கைகள் வீதம், தேறிய செலவுகள், தேறிய செலவுகள் வீதம் மற்றும் தேறிய இணைக்கப்பட்ட வீதம் பொது காப்புறுதி வியாபாரம்




வியாபாரத்தின் அனைத்து உப வகைகளினாலும் தேறிய ஏற்கநேர்ந்த கோரிக்கைகளின் பெறுமதி கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் நானாவித மற்றும் தீ காப்புறுதி வியாபாரங்கள் தவிர்த்து ஏனையவை அதிகரித்துள்ளன.

கடந்த ஆண்டைப் போலவே, வேலைநிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம், நட்டஈடு மற்றும் பயங்கரவாதம் தவிர்த்து, மோட்டார் வாகனக் காப்புறுதி வியாபாரப் பொதுக் காப்புறுதி வியாபாரத்தில் தேறிய உழைக்கப்பட்ட தவணைக் கட்டணத்தைப் பதிவு செய்தது. இதன் பெறுமதி இ.ரூபா 56,541 மில்லியன் ஆவதுடன், 2017இல் பதிவு செய்த இ.ரூபா 50,580 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 11.79% வீத அதிகரிப்பை வெளிப்படுத்தியதுடன், உப மொத்தத்தின் தேறிய தவணைக் கட்டணமாக 73.89% (2017:73.71%) வீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தியது. மேலும், மோட்டார் வாகனக் காப்புறுதி வியாபாரத் பொது காப்புறுதி வியாபாரத்தில் அதியுயர் தேறிய ஏற்கநேர்ந்த கோரிக்கைகளை பதிவு செய்ததுடன் இதன் பெறுமதி இ.ரூபா 34,652 மில்லியன் (2017: இ.ரூபா 31,134 மில்லியன்) ஆவதுடன், 2018இல் வேலைநிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம், நட்டஈடு மற்றும் பயங்கரவாதம் ஏற்கநேர்ந்த கோரிக்கைகளின் மொத்தத்தில் 66.05% (2017: 65.15%) வீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியதுடன் இதன் விளைவாக தேறிய கோரிக்கைகளின் விகிதம் 61.29% (2017:61.55%) வீதமாகும்.

சுகாதார காப்புறுதி வியாபாரமானது, வேலைநிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம், நட்டஈடு மற்றும் பயங்கரவாதம் தவிர்த்து, இரண்டாவது அதியுயர் தேறிய . உழைக்கப்பட்ட தவணைக் கட்டணமாக இ.ரூபா 12,683 மில்லியனைப் (2017: இ.ரூபா 11,435 மில்லியன்) பதிவுசெய்ததுடன், கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 10.91% வீத அதிகரிப்பை பதிவுசெய்தது. மேலும், சுகாதாரக் காப்புறுதி வியாபாரம், பொது காப்புறுதி வியாபாரத்தில் இரண்டாவது தேறிய ஏற்பநேர்ந்த கோரிக்கைகளை பதிவு செய்ததுடன் இதன் பெறுமதி இ.ரூபா 12,098 மில்லியன் (2017: இ.ரூபா 10,511 மில்லியன்) ஆவதுடன், 2018இல் வேலைநிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம், நட்டஈடு மற்றும் பயங்கரவாதம் உள்ளடங்களாக ஏற்கநேர்ந்த கோரிக்கைகளின் மொத்தத்தில் 23.06% (2017: 21.99%) வீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியதுடன் இதன் விளைவாக உயர் தேறிய கோரிக்கைகளின் விகிதமான 93.39% (2017:91.92%) ஐப் பதிவுசெய்தது.

நானாவித காப்புறுதி வியாபாரம் தேறிய உழைக்கப்பட்ட தவணைக் கட்டணமாக இ.ரூபா 4,238 மில்லியனைப் பதிவு செய்ததுடன் 2017இல் பதிவு செய்த இ.ரூபா 3,891 மில்லியன் உடன் ஒப்பிடுகையில் 8.92% வீதத்தினால் அதிகரித்துள்ளது. இந்த வகை வியாபரம் 2018இல் தேறிய கோரிக்கை விகிதமாக 86.35% வீதத்தைப் பதிவு செய்ததுடன், இது 2017ல் பதிவு செய்த கோரிக்கை விகிதமான 107.59% வீதத்துடன் ஒப்பிடுகையில் 21.24% வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. 2017இல் என்ஜடீஎப்பினால் வரட்சி தவிர்ந்து சூறாவளி, கடும்காற்று, வெள்ளம், நிலச்சரிவு, புயல், நிலநடுக்கம், சுனாமி மற்றும் அதையொத்த இயற்கை இடர்கள் காரணத்தினால் காப்புறுதி செய்யப்படாத உயிர்கள் மற்றும் ஆதனங்கள், வீடுகள் மற்றும் சிறிய வியாபார நிலையங்கள் என்பவற்றுக்கு ஏற்படும் சேதத்தினை ஈடுசெய்வதற்கான பாதுகாப்பு திட்டமாக 1 ஏப்பிரல் 2016இல் இலங்கை அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட என்என்டிஜஎஸ் இன் கீழ் இ.ரூபா 2,368 மில்லியனளவு குறிப்பிடத்தக்களவு கோரிக்கைகளை ஏற்கநேர்ந்தது. இந்தத் தொகை 2018இல் இ.ரூபா 1,358 மில்லியனாக குறைவடைந்தது. இதன் விளைவாக நானாவித காப்புறுதி வியாபாரத்தின் கோரிக்கைகள் விகிதம் 2018இல் குறைவடைந்தது.

2017இல் பதிவு செய்யப்பட்ட இ.ரூபா 1,721 மில்லியனாக இருந்த தீ காப்புறுதி வியாபாரத்தின் தேறிய உழைக்கப்பட்ட தவணைக் கட்டணம் 11.93% வீதத்தினால் அதிகரித்து 2018இல் இ.ரூபா 1,927 மில்லியனைப் பெற்றுள்ளது. தீ காப்புறுதி வியாபாரத்தின் தேறிய ஏற்கநேர்ந்த கோரிக்கைகளின் பெறுமதி இ.ரூபா 1,561 மில்லியனானதுடன், இது 2017இல் பதிவுசெய்யப்பட்ட இ.ரூபா 1,1640 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 4.81% வீதத்தினால் குறைந்து இ.ரூபா 1,561 மில்லியனாக அமைந்ததுடன்

இதன் தேறியி கோரிக்கை விகிதம் 81.03% (2017:95.28%) வீதமாகும்.

கடந்த ஆண்டைப் போலவே, கடல் காப்புறுதி குறைந்த தேறிய ஏற்கநேர்ந்த கோரிக்கைகளை இ.ரூபா 419 மில்லியனாக (2017: இ.ரூபா 345 மில்லியனாக) பதிவுசெய்ததுடன், மிகக் குறைந்த கோரிக்கை விகிதமான 37.13% வீதத்தை (2017:34.83%) கொண்டிருந்தடன், 2017 உடன் ஒப்பிடுகையில் 2.3% வீதத்தினால் சற்று அதிகரித்திருந்தது.

அட்டவணை 27 மற்றும் வரைபு 20இல் வெளிப்படுத்தப்பட்டவாறு, கடந்த ஐந்து ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில், 2018இல் பொதுக் காப்புறுதிக் கம்பனிகள் அனைத்தும் (எஸ்ஆர்சீசீ அன்ட் டீ உள்ளடங்களாக) உயர் செலவினை அறிக்கையிட்டுள்ளன. இத் தொகை இ.ரூபா 29,170 மில்லியனாக இருப்பதுடன் 2017இன் இ.ரூபா 25,224 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 15.64% வீதத்தினால் அதிகரித்துள்ளமையை அவதானிக்க முடிகின்றது. என்ஐடீஎப் இன் எஸ்ஆர்சீசீ அன்ட் டீயினைக் கருத்தில் கொண்டால், அது 2017இல் பதிவுசெய்யப்பட்ட இ.ரூபா 733 மில்லியனில் இருந்து இ.ரூபா 843 மில்லியனாக அதிகரித்துள்ளது.

தேறிய கோரிக்கைகளின் வீதம் மற்றும் தேறிய செலவு விகித்தைப் பிரதிபலிக்கும் தேறிய இணைக்கப்பட்ட விகிதம் 2017ஆம் ஆண்டு பதிவுசெய்த 100.94% வீதத்திலிருந்து 101.35% வீதமாக சற்று அதிகரிக்கின்றது. எனினும், பொதுக் காப்புறுதி வியாபாரத்தினால் ஏற்கநேர்ந்த மொத்தக் கோரிக்கைகள் மற்றும் செலவுகளைப் பிரதிபலிக்கும் இணைந்த விகிதம் 2017 மற்றும் 2018ஆம் ஆண்டுகளில் 100% வீதத்திற்கு மேற்பட்டதாகவிருந்தது.

## மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தைப் பிரதிபலிக்கும் பூட்கைகளின் எண்ணிக்கை - பொது காப்புறுதி வியாபாரம்

2014 இருந்து 2018 வரையான காலத்திற்கு பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் வேறுபட்ட உப வகைகளினால் உருவாக்கப்பட்ட மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்திற்கு பங்களிப்பு செய்த காப்புறுதி பூட்கைகளின் மொத்த எண்ணிக்கையை அட்டவணை 28 காட்டுகின்றது. பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் வேறுபட்ட உப வகை தொடர்பான அனைத்து காப்புறுதிப் பூட்கைகளினதும் மொத்த எண்ணிக்கை 2017இல் பதிவுசெய்யப்பட்ட 6,127,816 இருந்து 5.94% வீதத்தினால் அதிகரித்து 2018இல் 6,492,003ஐப் பதிவுசெய்தது. கடந்த ஐந்து ஆண்டுகளில் பொது காப்புறுதி வியாபாரத்தின் பூட்கைகளின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்தது. 3,190,988 (2017:2,784,920) மூன்றாம் தரப்பு காப்புறுதிக் கொள்கைகளையும் 2,423,913 (2017:2,605,302) விரிவான காப்புறுதிக் கொள்கைகளையும் உள்ளடக்கிய மோட்டார் வாகனக் காப்புறுதி வியாபாரம் கடந்த ஆண்டைப் போலவே இவ்வருடமும் அதிகூடிய எண்ணிக்கையைக் கொண்டு மொத்தக் காப்புறுதிப் பூட்கைகளில் 86.49% வீதத்தை (2017:87.96%) பிரதிநிதித்துவப்படுத்தியது. குறிப்பிட்டுக்கூறக்கூடியளவான மூன்றாந் தரப்பு காப்புறுதிப் பூட்கைகளின் எண்ணிக்கை, இக்காப்புறுதிகள் நட்டத்தை ஈடுசெய்வதற்காகவன்றி, அத்தியாவதிய தேவைப்பாட்டினை பூர்த்தி செய்வதற்காகவே பெறப்படுகின்றது என்பதை வெளிப்படுத்துகின்றது. மேலும் விரிவான காப்புறுதிப் பூட்கைகளின் எண்ணிக்கை 2017 உடன் ஒப்பிடுகையில் 6.96% வீதத்தினால் குறைவடைந்துள்ளது.

நானாவித மற்றும் சுகாதாரக் காப்புறுதி வியாபாரத்திற்கான பூட்கைகளை எடுத்துக்கொண்டால், 2017ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2018இல் அவை முறையே 37.41% மற்றும் 45.19% வீதத்தினால் அதிகரித்துள்ளன. மேலும் ஏனைய உப வகைகளான கடல் மற்றும் தீ காப்புறுதி வியாபாரங்களும் 2017 உடன் ஒப்பிடுகையில் 2018இல் சிறியளவு அதிகரித்துள்ளன.

## புதிய, புதுப்பிக்கப்பட்ட மற்றும் அமுலில் உள்ள பூட்கைகள் - பொதுக் காப்புறுதி வியாபாரம்.

2017 மற்றும் 2018ஆம் ஆண்டுகளில் பொதுக் காப்புறுதி வியபாரத்தின் அனைத்து உப வகைகளினதும் புதிய காப்புறுதிப் பூட்கைகள், புதுப்பிக்கப்பட்ட பூட்கைகள் மற்றும் அமுலில் உள்ள பூட்கைகள் என்பவற்றின் விபரங்களை அட்டவணை 27 மற்றும் வரைபு 20இல் வெளிப்படுத்துகின்றது. அமுலில் உள்ள பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் மொத்தப் பூட்கைளின் எண்ணிக்கை

அட்டவணை 28

மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கொள்கைகளின் எண்ணிக்கை - பொதுக் காப்புறுதி வியாபாரம்

| | காப்புறுதிக் கொள்கைகளின் எண்ணிக்கை | | | | |
|---|---|---|---|---|---|
| | 2014 | 2015 | 2016 | 2017 (அ) | 2018 (ஆ) |
| தீ அபாயம் | 188,578 | 227,800 | 246,058 | 241,884 | 245,027 |
| கடல் அபாயம் | 186,447 | 190,720 | 191,966 | 172,733 | 187,338 |
| மோட்டார் | 4,004,162 | 4,531,187 | 5,075,622 | 5,390,222 | 5,614,901 |
| 3ம் தரப்பு மட்டும் | 2,229,153 | 2,460,596 | 2,628,255 | 2,784,920 | 3,190,988 |
| விரிவான | 1,775,009 | 2,070,591 | 2,447,367 | 2,605,302 | 2,423,913 |
| உடல் நலம் | 13,716 | 15,053 | 16,040 | 11,893 | 17,267 |
| ஏனைய செலவுகள் | 204,285 | 202,038 | 238,921 | 311,084 | 427,470 |
| மொத்தம் | **4,597,188** | **5,166,798** | **5,768,607** | **6,127,816** | **6,492,003** |

அட்டவணை 29

புதிய, புதுப்பிக்கப்பட்ட மற்றும் அமுலில் உள்ள கொள்கைகள் பற்றிய விபரம் - பொதுக் காப்புறுதி வியாபாரம்

| | 2017 | | | 2018 | | |
|---|---|---|---|---|---|---|
| | புதிய கொள்கைகள் | புதுப்பிக்கப் பட்டவை | ஆண்டு இறுதியில் அமுலில் உள்ளவை | புதிய கொள்கைகள் | புதுப்பிக்கப் பட்டவை | ஆண்டு இறுதியில் அமுலில் உள்ளவை |
| தீ அபாயம் | 87,600 | 154,895 | 242,495 | 87,735 | 157,142 | 241,794 |
| கடல் அபாயம் | 169,993 | 4,176 | 170,321 | 183,594 | 4,256 | 177,671 |
| மோட்டார் | 2,373,578 | 3,025,591 | 5,346,721 | 2,523,101 | 3,100,420 | 5,509,012 |
| 3ஆம் தரப்பு மட்டும் | 1,289,174 | 1,484,083 | 2,775,671 | 1,483,047 | 1,708,415 | 3,188,605 |
| விரிவான | 1,084,404 | 1,541,508 | 2,571,050 | 1,040,054 | 1,392,005 | 2,320,407 |
| உடல் நலம் | 4,589 | 6,211 | 10,300 | 9,790 | 7,465 | 16,554 |
| ஏனைய செலவுகள் | 230,571 | 62,810 | 286,637 | 262,811 | 125,492 | 379,556 |
| மொத்தம் | **2,866,331** | **3,253,683** | **6,056,474** | **3,067,031** | **3,394,775** | **6,324,587** |


6,324,587 ஆகும். அத்துடன் 2017இல் அமுலில் இருந்த 6,056,474 பூட்கைகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் 4.43% வீதத்தினால் அதிகரித்துள்ளது. 2018இல் மோட்டார் காப்புறுதிப் பூட்கைகள் அமுலில் உள்ள மொத்தப் பூட்கைகளில் 87.10% (2017:88.28%) வீதத்தை பிரதிபலித்ததுடன், இது 3,188,605 (2017: 2,775,671) மூன்றாம் தரப்பு காப்புறுதிப் பூட்கைகளையும். 2,320,407 (2017: 2,571,050) விரிவான பூட்கைகளையும் உள்ளடக்கியிருந்தது. 2017 உடன் ஒப்பிடுகையில் விரிவான மோட்டார் வாகனக் காப்புறுதிப் பூட்கைகள் மற்றும் தீ காப்புறுதி பூட்கைகளைத் தவிர்த்து அமுலில் உள்ள பூட்கைகளின் எண்ணிக்கையானது இவ்வருடம் அனைத்து உப வகுப்புகளிலும் சற்று அதிகரித்துள்ளது. 2018இல், காப்புறுதி கம்பனிகள் 3,067,031 புதிய பூட்கைகளை எழுதியதுடன், இது கடந்த ஆண்டை விட 7% வீதத்தினால் அதிகரித்துள்ளது. புதுப்பித்த மொத்தப் பூட்கைகளின் எண்ணிக்கை 3,253,683 ஆவதுடன் இது 2017 உடன் ஒப்பிடுகையில் 4% வீதத்தினால் அதிகரித்துள்ளது.

## மீள்காப்புறுதி வியாபாரம்

என்ஐடீஎப்பின் மீள்காப்புறுதி வியாபாரத்தை ஆரம்பித்ததன் நோக்கம் 'தேசிய மீள்காப்புறுதியாளராக அபிவிருத்தி செய்வதற்காகும். அதற்கமைவாக, 2012 டிசம்பர் 31 வெளியிடப்பட்ட அரசாங்க வர்த்தமானி இலக்கம் 1791/4இற்கு அமைவாக 2013இல் இருந்து அனைத்து பிரதான காப்புறுதியாளர்களும் அவர்களுடைய பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் மொத்தப் பொறுப்பில் முப்பது வீதத்தை மீள்காப்புறுதியாக என்ஐடீஎப்பிற்கு செலுத்துதல் வேண்டும்.

வரைபடம் 21

புதிய, புதுப்பிக்கப்பட்ட மற்றும் செயற்பாட்டிலுள்ள காப்புறுதிக் கொள்கைகள் சம்பந்தமான விபரங்கள் - பொதுக் காப்புறுதி வர்த்தகம்




2018இல், என்ஐடீஎப்வினால் உருவாக்கப்பட்ட மீள்காப்புறுதி தவணைக் கட்டண வருமானத்தின் பெறுமதி இ.ரூபா 4,056 மில்லியன் ஆவதுடன், ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் இது 10.13% வீதத்தினால் அதிகரித்துள்ளது. மறுகட்டமைப்பு ஏற்பாட்டைப் பொறுத்தவரை, என்ஐடீடிப் இந்த ஆண்டில் இ.ரூபா 578 மில்லியனுக்கான தவணைக் கட்டண வருமானத்தை வழங்கியுள்ளது, இது 2017 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட இ.ரூபா 175 மில்லியனுடன் ஒப்பிடும் போது கணிசமாக அதிகரித்துள்ளது.

2017இல் இ.ரூபா 2,326 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2018இல் இ.ரூபா 2,326 மில்லியன் பெறுமதியான கோரிக்கையை ஏற்கநேர்ந்துள்ளது. எனினும், 2018 ஆம் ஆண்டின் மீள்காப்புறுதியாளர்களுக்கு எந்தவொரு உரிமை கோரல்களும் வழங்கப்படாததால், என்ஐடீஎப் மறுசீரமைப்பு ஏற்பாட்டின் செயற்திறனை மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

2017 உடன் ஒப்பிடுகையில் 2018இல் இ.ரூபா 3,683 மில்லியனுக்கு 12.54% வீதத்தினால் மொத்த சொத்துக்களில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதென்பதை மீள்காப்புறுதி தொழிற்பாடு காட்டுகின்றது. அதே நீண்டகால மீள்காப்புறுதி வரவுகள் 2017இல் 35.87% ஐக் குறிக்கின்றன. மேலும் என்ஐடீஎப்பின் மீள் காப்புறுதி வியாபாரத்தை ஆதரிக்க போதுமான நிதி முதலீடுகள் இல்லை.

## காப்புறுதி தரகர் கம்பனிகள்

2018ஆம் ஆண்டு, சந்தையில் அறுபத்திஐந்து காப்புறுதி தரகர் கம்பனிகள் தொழிற்பட்டதுடன், இவை இ.ரூபா 25,063 மில்லியன் பெறுமதியான மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தை உழைத்துக்கொண்டன. இது 2017ஆம் ஆண்டு காப்புறுதி தரகர் கம்பனிகளினால் பிறப்பிக்கப்பட்ட இ.ரூபா 21,479 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2018ஆம் ஆண்டு 16.69% வீதத்தினால் வளர்ச்சியடைந்திருந்தது. மேலும், இந்த முழுமையான மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணமானது நீண்டகால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரங்களில் இருந்து பெறப்பட்ட முறையே இ.ரூபா 655 மில்லியன் மற்றும் இ.ரூபா 24,408 மில்லியன் தொகைகளை உள்ளடக்கியிருந்தது.


கடந்த வருடத்தைப் போல் இவ்வருடமும், காப்புறுதி தரகர் கம்பனிகளின் பங்களிப்பை எடுத்துக்கொண்டால், 2018இல் நீண்டகால காப்புறுதி வியாபாரத்தில் (ரூபா 53,575 மில்லியன்) இதன் பங்களிப்பு குறிப்பிடக்கூடியளவில் அல்லாது 0.82% வீத வளர்ச்சியை மட்டுமே மொத்த எழுதப்படட தவணைக் கட்டணமாகப் பெற்றிருந்ததுடன், இதன் பெறுமதி இ.ரூபா 80,303 மில்லியனாகும். அதேவேளையில். பொதுக் காப்புறுதி வியாபாரத்தில் (ளுசுஊஉஊ ரூ வு தவணைக் கட்டணங்கள் உள்ளடங்களாக) மொத்தத் தவணைக் கட்டணமாக ரூபா 101,204 மில்லியனைப் பெற்றுள்ளதுடன், காப்புறுதித் தரகர் கம்பனிகள் இதில் 24.12% வீதத்தை மட்டுமே பெற்றுக்கொண்டுள்ளன.

அட்டவணை 30

காப்புறுதி தரகு கம்பனியின் ஊடாக உற்பத்தி செய்யப்பட்ட மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் - 2018

| | தரகுக் கம்பனியின் பெயர் | மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | நீண்ட கால காப்புறுதி வியாபாரம் | | பொதுக் காப்புறுதி வியாபாரம் | | மொத்தம் | |
| | | (இ.ரூபா '000) | சந்தைப் பங்கு (%) | (இ.ரூபா '000) | சந்தைப் பங்கு (%) | (இ.ரூபா '000) | சந்தைப் பங்கு (%) |
| 1 | ஏடிஇசட் இன்ஸ்யூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | 21,514 | 3.28 | 775,992 | 3.18 | 797,506 | 3.18 |
| 2 | எய்ட்கன் ஸ்பென்ஸ் இன்ஸ்யூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | 4,388 | 0.67 | 645,412 | 2.64 | 649,800 | 2.59 |
| 3 | அல்பின்கோ இன்ஸ்யூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | 1,158 | 0.18 | 935,254 | 3.83 | 936,411 | 3.74 |
| 4 | அலியோன் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | 31,637 | 4.83 | 96,121 | 0.39 | 127,758 | 0.51 |
| 5 | ஏஎம்ட்ரஸ்ட் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | 1,585 | 0.24 | 150,183 | 0.62 | 151,768 | 0.61 |
| 6 | அசட்லைன் இன்ஸ்யூரன்ஸ் புரோக்கர்ஸ் லிமிடட் | 24,829 | 3.79 | 2,078,907 | 8.52 | 2,103,735 | 8.39 |
| 7 | சினேர்ஜி இன்ஸ்யூரன்ஸ் புரோக்கர்ஸ் லிமிடட் | 6,265 | 0.96 | 137,744 | 0.56 | 144,009 | 0.57 |
| 8 | சி.எப் இன்ஸ்யூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | 2,246 | 0.34 | 3,112,256 | 12.75 | 3,114,502 | 12.43 |
| 9 | கொலம்பூர் இன்ஸ்யூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட | 6,333 | 0.97 | 285,613 | 1.17 | 291,946 | 1.16 |
| 10 | கொமர்சியல் இன்ஸ்யூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | 20,621 | 3.15 | 2,725,715 | 11.17 | 2,746,337 | 10.96 |
| 11 | டெல்மேஜ் இன்ஸ்யூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | 135,901 | 20.75 | 1,270,081 | 5.20 | 1,405,982 | 5.61 |
| 12 | ஈகுவிடி இன்ஸ்யூரன்ஸ் புரோகர்ஸ் (பிரை) லிமிடட் | 54 | 0.01 | 126,929 | 0.52 | 126,983 | 0.51 |
| 13 | ஈசாஜி கரம்ஜி ரூ கம்பனி இன்ஸ்யூரன்ஸ் (பிரை) லிமிடட் | 11,148 | 1.70 | 564,448 | 2.31 | 575,596 | 2.30 |
| 14 | பைன்ட் மை இன்சூன்ஸ் அன்ட் ரீஇன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | 17,390 | 2.65 | 134,625 | 0.55 | 152,015 | 0.61 |
| 15 | பின்லே இன்ஸ்யூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | 13,082 | 2.00 | 1,092,635 | 4.48 | 1,105,717 | 4.41 |
| 16 | ஜோர்ஜ் ஸ்டுவர்ட் இன்ஸ்யூரன்ஸ் சேர்விஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | 7,951 | 1.21 | 244,469 | 1.00 | 252,421 | 1.01 |
| 17 | க்ளோபல் இன்ஸ்யூரன்ஸ் சேர்விஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | 14,556 | 2.22 | 169,576 | 0.69 | 184,132 | 0.73 |
| 18 | இன்சூர் மீ இன்ஸ்யூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | 72,556 | 11.08 | 214,194 | 0.88 | 286,749 | 1.14 |
| 19 | லைப் அன்ட் ஜென்ரல் இன்ஸ்யூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | 5,488 | 0.84 | 156,305 | 0.64 | 161,794 | 0.65 |
| 20 | மேர்கன்டைல் போர்ச்சூன்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | 1,292 | 0.20 | 540,628 | 2.21 | 541,920 | 2.16 |
| 21 | மேர்கன்டைல் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | 4,466 | 0.68 | 345,266 | 1.41 | 349,732 | 1.40 |
| 22 | நேஷன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட | 97,467 | 14.88 | 1,963,049 | 8.04 | 2,060,516 | 8.22 |
| 23 | புரொகெயர் இன்ஸ்யூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | 7,025 | 1.07 | 361,978 | 1.48 | 369,003 | 1.47 |
| 24 | புரடெக்சன்ஸ் அன்ட் எஸ்யூரன்ஸ் இன்ஸ்யூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | 885 | 0.14 | 1,296,616 | 5.31 | 1,297,501 | 5.18 |
| 25 | ரிலைன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | 33,836 | 5.17 | 868,568 | 3.56 | 902,404 | 3.60 |
| 26 | சேனரட்ன இன்ஸ்யூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட | 33,248 | 5.08 | 1,298,179 | 5.32 | 1,331,427 | 5.31 |
| 27 | செங்கடகல இன்ஸ்யூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | - | - | 1,147,463 | 4.70 | 1,147,463 | 4.58 |
| 28 | ஸெனித் இன்ஸ்யூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட | 960 | 0.15 | 249,765 | 1.02 | 250,724 | 1.00 |
| | உப மொத்தம் | **577,880** | **88.23** | **22,987,971** | **94.18** | **23,565,851** | **94.03** |
| | ஏனைய காப்புறுதி தரகுக் கம்பனிகள் (37) | **77,124** | **11.77** | **1,419,672** | **5.82** | **1,496,797** | **5.97** |
| | முழுத் தொகை | **655,005** | **100.00** | **24,407,643** | **100.00** | **25,062,648** | **100.00** |

வரைபடம் 30
2006இல் இருந்து 2015 வரை காப்புறுதித் தரகுக் கம்பனிகளினால் உருவாக்கப்பட்ட மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம்




| | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நீண்டகால காப்புறுதியின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம். (இ.ரூபா.மில்லியன்) | 195 | 188 | 243 | 296 | 195 | 191 | 158 | 206 | 263 | 341 | 655 |
| பொதுக் காப்புறுதியின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம். (இ.ரூபா.மில்லியன்) | 8,781 | 8,698 | 9,317 | 10,193 | 12,532 | 14,189 | 14,559 | 16,124 | 17,518 | 21,138 | 24,408 |
| மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தில் தரகர்களின் பங்களிப்பு % | 15.43 | 15.44 | 14.43 | 12.78 | 14.03 | 14.39 | 13.91 | 13.28 | 12.43 | 13.02 | 13.81 |

2018இல், இருபத்தியெட்டு காப்புறுதி தரகர் கம்பனிகள் ரூபா 100 மில்லியனை விட அதிகமான மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணங்களை உழைத்திருந்ததுடன், இவை ஒன்று சேர்த்து இ.ரூபா 25,566 மில்லியனை பெற்றிருந்தன. மிகுதி முப்பத்தியேழு காப்புறுதி தரகர் கம்பனிகளும் அட்டவணை 30இல் வெளிப்படுத்தியவாறு ரூபா 1,497 மில்லியனைப் பெற்றுள்ளன.

# தொழிற்பாட்டு மீளாய்வு

## மேற்பார்யையாளர் மீளாய்வு

### காப்புறுதிக் கம்பனிகள்

### 1. விபரத்திரட்டுகளின் மீளாய்வு

#### அ) வருடாந்த நியதிச் சட்ட விபரத்திரட்டுகள், கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்கள் மற்றும் கணிப்பீட்டு அறிக்கைகள்

2017 மார்ச் 13ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட 14 மற்றும் 15ஆம் தீர்மானங்களுக்கு அமைவாக சகல காப்புறுதி வழங்குனர்களும் தமது வருடாந்த நியதிச் சட்ட விபரத்திரட்டு மற்றும் நிதிசார் கணக்காய்வுக் கூற்றுக்கள் ஆகியவற்றை குறிப்பிட்ட நிதி ஆண்டு நிறைவடைந்து அடுத்து வருகின்ற நான்கு மாதங்களினுள் சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும் என வேண்டப்படுகின்றனர். மேலும், நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தில் ஈடுபடுகின்ற காப்புறுதி வழங்குனர்கள் காப்புறுதிக் கணக்கீட்டு அறிக்கை ஒன்றையும் மற்றும் வருடாந்த நியதிச் சட்ட விபரத்திரட்டுடன் தொடர்புடைய சாராம்சம் ஒன்றையும் சட்டத்திற்கு அமைவாக சமர்ப்பிக்க வேண்டும்.

மேலும், இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் உரிய அலுவலர்களுடன் இணைந்து, 2015ஆம் ஆண்டின் இடர் அடிப்படையிலான மூலதனத்தின் திருத்தங்கள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் மாற்றங்களுடன் இணங்கும் வகையில் 29ஆவது சுற்றுநிருபத்திற்கு அமைவாக வெளிவாரி கணக்காய்வாளர்களிடமிருந்தான சான்றுபடுத்தலுக்கான காப்புறுதியாளர்களுக்கான அறிக்கையிடல் மாதிரி வடிவங்களை ஆணைக்குழு மாற்றியமைத்தது.

விபரத்திரட்டுகள் உரிய நேரத்தில் சமர்ப்பிக்கப்படுவதைக் கண்காணிப்பதுடன், அவற்றின் செம்மை மற்றும் சபையின் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகளுடன் இணங்குவதையும் உறுதிப்படுத்தவதற்கு அவற்றை ஆணைக்குழு பரீட்சிக்கின்றது. மீளாய்வின் போது அவதானிக்கப்படும் நியதிச் சட்ட தேவைகளில் இருந்தான விலகல்கள் குறிப்பிட்ட காலத்திற்குள் நிவர்த்தி செய்யுமாறு கோரப்படுகின்றது. காப்புறுதி வழங்குனர்கள் சட்டத்தின் ஏற்பாடுகள், சபையின் ஒழுங்குவிதிகள் என்பவற்றுடன் இணங்குகின்றமையை உறுதிப்படுத்தவதற்கு பின்னூட்டு நடவடிக்கைகள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படுகின்றது. மேலும், விபரத்திரட்டுகளின் மீளாய்வின் போது அவதானிக்கப்படும் பிரச்சனைகளை சபை கூட்டங்களின் போதும், அமைவிடத்திலான பரீட்சித்தல்களின் போதும் உரிய கம்பனிகளுக்கு அறிவித்தது.

#### ஆ) காப்புறுதி கம்பனிகள் மற்றும் குழுக்களின் நிதி பாதிப்பின் மதிப்பீடு

அவர்களுடைய இடர் மதிப்பீட்டு அறிக்கையை ஆணைக்குழுவிற்கு ஒவ்வொரு வருடமும் சமர்ப்பிப்பதற்கு காப்புறுதி கம்பனிகள் கோரப்படுகின்றனர். அதற்கமைவாக, கம்பனிகளின் தொழிற்பாடுகள் தொடர்பான மேலோட்டத்தைப் பெற்றுக்கொள்வதற்காக, இந்த வருடம் இடர் மதிப்பீட்டு அறிக்கையில் நிறுவன கட்டமைப்பு மற்றும் உரிமை, வியாபார சுருக்கக் குறிப்பு, சிரேஸ்ட முகாமைத்துவம், சந்தைப்படுத்தல் மற்றும் விநியோகம், கோரிக்கைகள் நிர்வாகம், இடர் முகாமைத்துவம் போன்றவை தொடர்பாக உள்ள தகவல்களை ஆணைக்குழு மீளாய்வு செய்தது.

#### இ) மீள்காப்புறுதி ஒழுங்குகள்

சட்டத்தின் பிரிவு 31(1) இற்கு அமைவாக, ஆணைக்குழுவிற்கு வருடாந்தம் மீள்காப்புறுதி ஒழுங்குபடுத்தல்கள் தொடர்பாக அறிவிக்குமாறு கோரப்படுகின்றது. காப்புறுதி வழங்குனர்கள் சபையினால் வழங்கப்பட்ட மீள்காப்புறுதி நியதிகள் மற்றும் நிபந்தனைகளை பூர்த்தி செய்யுமாறு கோரப்படுகின்றனர். சபையினால் குறித்துரைக்கப்பட்ட தரப்படுத்தல் தேவையை திருப்திப்படுத்தும் வகையில் மீள்காப்புறுதியாளரிடமிருந்து மீள்காப்புறுதி காப்பீடுகளைப் பூர்த்தி செய்கின்றதுடன், காப்பீடுகள் உரிய வகைளுக்கு பெறப்பட்டு காப்புறுதி வழங்குனர் தேசிய காப்புறுதி நம்பிக்கை சபையினால் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துவதற்கு ஆணைக்குழு இக்குறித்த ஆவணங்களை மீளாய்வு செய்கின்றது. யாதேனும் இணக்கப்பாடின்மை மற்றும் விலகல்கள் அவதானிக்கப்படின், அதனை திருத்துவதற்கான நடவடிக்கைகளை குறித்த கால வரையறைக்குள் மேற்கொள்ளுமாறு உரிய கம்பனிகளுக்கு சபையினால் அறிவித்தல் வழங்கப்படும்.

அத்துடன், அனைத்துக் காப்புறுதியாளர்களும் காலாண்டு அடிப்படையில் தேர்வுரிமையுள்ள மறுகாப்பீட்டு ஏற்பாடுகளை கோரப்படுகின்றார்கள். ஆணைக்குழு மேற்குறிப்பிட்ட ஒழுங்குகளையும் வேறுபாடுகளையும் மீளாய்வு செய்து அவதானிப்புகளை உரிய காப்புறுதி நிறுவனங்களுக்கு குறிப்பிட்ட காலத்தினுள் திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அனுப்பி வைக்கும்.

#### ஈ) காலாண்டு விபரத்திரட்டுகள்

சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக ஒவ்வொரு காலாண்டு முடிவடைந்து நாற்பத்தைந்து தினங்களுக்குள் காலாண்டு விபரத்திரட்டினை ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்குமாறு காப்புறுதிக் கம்பனிகள் வேண்டப்படுகின்றன.

2018ஆம் ஆண்டு, காலாண்டு மற்றும் மாதாந்த அறிக்கையிடல் மாதிரி

வடிவங்களை உள்ளடக்கிய தீர்மானம் 12 ஆனது பணிப்புரை 16 (ஒரே முறை மிகைக்கான நடவடிக்கைகளை அடையாளம் காணல்) மற்றும் ஏனைய திருத்தங்களின் தேவைப்பாட்டுடன் இணங்கும் வகையில் திருத்தம் செய்யப்பட்டது.

2018ஆம் ஆண்டுக்கு சமர்ப்பிக்கப்பட்ட காலாண்டு விபரத்திரட்டுகள் ஆணைக்குழுவினால் மீளாய்வு செய்யப்பட்டதுடன், சட்டத்தின் ஒழுங்குவிதிகளுடன் அவர்களுடைய காலாண்டு செயற்பாடுகள் மற்றும் இணக்கப்பாடுகளின் இணக்கம் உறுதிப்படுத்தப்பட்டது.

இவ்வருடம் அவர்களுடைய சொத்து மற்றும் பொறுப்பு நிலை, மூலதனப் போதுமை (கடன்தீர் நிலை), திரவத்தன்மை மற்றும் ஏனைய இடர் பரப்புகள் என்பவற்றை பகுப்பாய்வு செய்வதன் ஊடாக ஒவ்வொரு காலாண்டுக்கும் ஒவ்வொரு காப்புறுதிக் கம்பனிகளினதும் நிதியில் நிலை தொடர்ச்சியாக கண்காணிக்கப்பட்டது. காலாண்டு விபரத்திரட்டுகளில் அவதானிக்கப்பட்ட இணக்கப்பாடின்மை மற்றும் குறிப்பிடக்கூடிய வேறுபாடுகள் உரிய காப்புறுதிக் கம்பனிகளுக்கு குறிக்கப்பட்ட கால எல்லையினுள் திருத்தப்படுவதற்காக அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

ஒவ்வொரு காப்புறுதி வழங்குனரின் காலாண்டு செயற்பாடுகளை மதிப்பீடு செய்வதற்காக, ஆணைக்குழு விபரத்திரட்டு அடிப்படையிலான தவணைக் கட்டண வருமானம், உத்தரவாதமளிக்கப்பட்ட இலாபம் மற்றும் தேறிய இலாபம் என்பனவற்றை பகுப்பாய்வு செய்தது. மேலும், முழுமையான பகுப்பாய்வு விகிதங்கள் பயன்படுத்தப்பட்டு இலாபத்தன்மை, செலவினங்கள் மற்றும் கோரிக்கைகள் போன்றன குறித்த காப்புறுதி வழங்குனர்களின் காலாண்டு செயற்பாட்டின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டதுடன், முன்னைய காலாண்டு எச்சரிக்கை விகிதங்களுடன் ஒப்பீடு செய்யப்பட்டது.

2006ஆம் ஆண்டு 6ஆம் இலக்க நிதிக் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாகவும், சபையின் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் அவர்கள் இணங்குகின்றார்கள் என்பதை உறுதிப்படுத்துவதற்காக காப்புறுதி வழங்குனர்கள் காலாண்டு விபரத்திரட்டுகளுடன் இரண்டு இணக்கப்பாட்டு சான்றிதழினை வழங்குமாறு கோரப்படுகின்றர். மேலும், காப்புறுதி வழங்குனர்கள் காலாண்டு விபரத்திரட்டுகளுடன் நான்கு காலாண்டுகளுக்கும் மேற்கொண்ட திறமைமிக்க மீள்காப்புறுதி ஒழுங்குகள் தொடர்பான விபரங்களையும் சமர்ப்பிக்குமாறு கோரப்படுகின்றர்.

### உ) மாதாந்த விபரத்திரட்டுகள்

2018இல், நான்கு காப்புறுதிக் கம்பனிகள் இடர் அடிப்படையிலான மூலதன சட்டகத்தின் கீழ் மாதாந்த விபரத்திரட்டுகளை சமர்ப்பிப்பதற்கு கோரப்பட்டதுடன், இவற்றின் மூன்று கம்பனிகள் மாதம் முடிவடைந்து இருபத்தியொரு நாட்களினுள்ளும், ஒரு கம்பனி முப்பது நாட்களினுள்ளும் சமர்ப்பிப்பதற்கு கோரப்பட்டது. இந்த முடிவு அவர்களின் நிதியில் ஸ்தீரநிலை மற்றும் இணக்கம் என்பவற்றை பரிசோதித்ததன் பின்னர் எடுக்கப்பட்டது.

## 2. கடன்தீர் எல்லை விதிகங்ளுடன் (இடர் அடிப்படையிலான மூலதனம்) இணக்கப்பாட்டினைக் கண்காணித்தல்

2015 கடன்தீர் எல்லை விதிகளுக்கு அமைவாக, ஒவ்வொரு காப்புறுதி வியாபாரமும் குறைந்தபட்ச மூலதனப் போதுமை விகிதத்தையும் மொத்த கிடைக்கப்பெறும் மூலதனத்தையும் பொது மற்றும் நீண்ட கால காப்புறுதி வியாபாரங்கள் இரண்டும் பேணுதல் வேண்டும் என்பதுடன் அவர்களின் கடன்தீர் எல்லை கணிப்பீட்டினை மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த விபரத்திரட்டுகளுடன் சமர்ப்பித்தல் வேண்டும். கடன்தீர் எல்லை விதிகளுடன் இணங்குவதை உறுதிப்படுத்துவதற்கு ஆணைக்குழு இவ்வாறான கணிப்பீட்டினை பகுப்பாய்வு மற்றும் மீளாய்வு செய்கின்றது. காப்புறுதி வழங்குனர்கள் அவசியமான கடன்தீர் எல்லையை பூர்த்திசெய்வதற்கு தவறும் பொழுதில் அல்லது கணிப்பீடானது தவறாக இருக்கும் சந்தர்ப்பத்தில், குறிப்பிட்ட காலவரையறைக்குள் அதனை சீர்செய்வதற்கும் மற்றும் கடன்தீர் எல்லையுடன் இணங்குவதற்குமான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்குமாறு சபை அவர்களுக்கு அறிவுறுத்தும்.

## 3. முதலீட்டு விபரக்குறிப்புகளுடனான இணக்கப்பாட்டினைக் கண்காணித்தல்

### அ) அரச பிணையங்களில் முதலீடு

சட்டத்தின் 25ஆம் பிரிவுக்கு அமைவாக, அரச பிணையங்களில் தொழில்நுட்ப ஒதுக்குகளின் சொத்துக்களில் 20% வீதத்திற்கு குறையாத தொகையையும் நீண்ட கால காப்புறுதி நிதியத்தின் சொத்துக்களில் 30% வீதத்திற்கு குறையாத தொகையையும் முதலீடு செய்யுமாறு கோரப்படுகின்றர். குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுடன் சமர்ப்பிக்கப்பட்ட மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த அடிப்படையில் வழங்கப்பட்ட விபரத்திரட்டுகள் மற்றும் உரிய துணை ஆவணங்கள் இணங்குவதை உறுதிப்படுத்துவதற்காக அரச பிணையங்களில் முதலீடுகளை ஆணைக்குழு மிகவும் உன்னிப்பாக கண்காணிக்கின்றது. இதற்காக, அரசாங்க பிணைய முதலீடுகளில் அறிவிக்கப்பட்டுள்ள தொகைகளின் மீளாய்வின் போது யாதேனும் இணக்கப்பாடின்மை அல்லது வேறுபாடுகள் அவதானிக்கப்படின், குறிப்பிட்ட கால வரையறைக்குள் உரிய திருத்தத்திற்கான நடவடிக்கையை எடுக்குமாறு உரிய காப்புறுதி வழங்குனர்கள் சபையினால் அறிவுறுத்தப்படுவர்.

### ஆ) தீர்மானம் 1இற்கு அமைவாக ஏனைய முதலீடுகள

ஒவ்வொரு காப்புறுதி வழங்குனர்களும் அவர்களின் தொழில்நுட்ப ஒதுக்குகளின் சொத்துக்கள் மற்றும் நீண்ட கால காப்புறுதி நிதியத்தின் மீதிகளை 2011 மார்ச் 01ஆம் திகதி 1ஆவது தீர்மானத்திற்கும் மற்றும் அதன் திருத்தங்களுக்கு அமைவாகவும் முதலீடுகளை மேற்கொள்ளுதல் வேண்டும். ஆணைக்குழு 1ஆம் தீர்மானத்திற்கு அமைவாக காப்புறுதி வழங்குனர்களினால் முதலீடுகள் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த அடிப்படையில் அவர்கள் வழங்கிய விரபத்திரட்டுகளை அடிப்படையாகக் கொண்டு தொழில்நுட்ப ஒதுக்குகள் மற்றும் நீண்ட கால காப்புறுதி நிதியத்தின் முதலீட்டு விபரங்களை மீளாய்வு செய்கின்றது.

இந்த வருடம் 1ஆம் தீர்மானத்துடன் வேறுபட்டமை மற்றும் இணக்கப்பாடின்மை ஐந்து கம்பனிகளில் அவதானிக்கப்பட்டது. அதற்கமைவாக உடனடியாக அவசியமான நடவடிக்கைகளை எடுக்குமாறு உரிய காப்புறுதியாளர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

## 4. கடன்தீர் எல்லை (இடர் அடிப்படையிலான மூலதனம்) மீதான அமுலாக்கல் உபாயமார்க்கம்

காப்புறுதிக் கம்பனி கடன்தீர் எல்லை( இடர் அடிப்படையிலான மூலதனம்) விதிகளுக்கு அமைவாக மூலதன போதுமை தேவைப்பாடுகளை பாராமரிப்பதற்கு தவறின், ஆணைக்குழு தலையீட்டை மேற்கொண்டு, கைத்தொழிற்துறைக்கு இடர் அடிப்படையிலா மூலதனத்தின் மீது அமுலாக்கப்பட்டுள்ள உபாயமார்க்கத்தின் அடிப்படையில் சரிசெய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும். இதற்கு காரணம், காப்பறுதிக் கம்பனிகளை முதல் கட்டத்திலேயே அடையாளம் காணல் மற்றும் குறிப்பிடத்தக்க அமுலாக்கல் பிரச்சினை வருவதற்கும் மற்றும் அவர்களுடைய கட்டுப்பாட்டை மீறுமளவிற்கு வளருவதற்கு முன்னர் வினைத்திறனான ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் ஆகும். இது காப்புறுதி நிறுவனங்களின் செயற்திறனை உன்னிப்பாக கண்காணிக்க, நிதி நிலமை அல்லது கடன்தொகையில் ஏதேனும் குறிப்பிடத்தக்க சரிவு ஏற்படுவதையும் நெருக்கடி நிலைக்கு இட்டுச்செல்வமையும் தடுப்பதற்கு வழிவகுக்கும். இவ்வருடம் மூன்று நிறுவனங்கள் 120% இருந்து 160% வீதமான மூலதனப் போதுமை விகிதத்தை அறிவித்தன, அதன்படி ஆணைக்குழு அமுலாக்க உபாயமார்க்கத்தின் அடிப்படையில் தேவையான நடவடிக்கைகளை எடுத்தது.

## 5. அமைவிட பரீட்சித்தல்

2018இல் இடர் அடிப்படையிலான மேற்பார்வை முறைமையியலில் மூன்று காப்புறுதிக் கம்பனிகளில் அமைவிட பரீட்சித்தல் மேற்கொள்ளப்பட்டது. இந்த பரீட்சித்தல்கள் உயர் மட்ட இடர்களுடன் தொடர்புடைய காப்புறுதியாளர்களின் பிரதானமாக கூட்டிணைந்த ஆளுகை, நிதியியல் நிலமை, முதலீடுகள், தீர்க்கப்படாதவை மற்றும் ஏனைய தொழிற்பாட்டு செயற்பாடுகள், இடர் முகாமைத்துவம் மீளாய்வுகளை உள்ளடக்கியுள்ளது.

அதற்கமைவாக, ஆணைக்குழு சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் ஆணைக்குழுவினால் விநியோகிக்கப்பட்ட ஏனைய விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் உடன் அவர்களுடைய இணங்குவிப்பை மதிப்பீடு செய்வதற்கு காப்புறுதியாளர்களின் தொழிற்பாடுகள், முறைமைகள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் என்பன மீளாய்வு செய்யப்பட்டது. பிரதான செயற்பாடுகளின் செயன்முறை தொடர்பாக தற்போதுள்ள இடர் அகற்றல் உபாயமார்க்கங்கள், முறைமைகள், கட்டுப்பாடுகள் மற்றும் நடைமுறைகளின் தாக்கம் பரீட்சிக்கப்பட்டது. மேலும், காப்புறுதியாளர்களின் பொறுப்பு மதிப்பீடுகள், நடைமுறைகள் மற்றும் முறைமைகள் தொடர்பாக காப்புறுதிக் கம்பனிகளின் சிரேஸ்ட அலுவலர்கள், உள்ளக/ வெளிவாரி கணக்காய்வாளர்கள் மற்றும் காப்புறுதிக் கணிப்பீட்டாளர்களுடன் நேர்காணல்கள் மேற்கொள்ளப்பட்டது. பணத்தை தூயதாக்கல் வழிகாட்டல் நடைமுறைகளுடனான இணக்கப்பாடு அமைவிட பரீட்சித்தலின் போது உறுதிசெய்யப்பட்டது.

அமைவிட பரீசிலித்தலின் போதான அவதானிப்புகள் உரிய காப்புறுதியாளர்களுக்கு அவர்களுடைய பொறுப்புகளை மேம்படுத்துவதற்கான ஆணைக்குழுவின் விதப்புரையுடன் இணைத்து வழங்கப்பட்டது.

## 6. இலங்கை மத்திய வங்கிக்கு தகவல்களை வழங்குதல்

ஆணைக்குழு காலாண்டு விபரத்திரட்டுகளில் இருந்து பெற்றுக்கொண்ட தகவல்களின் அடிப்படையில் பெற்றுக்கொண்ட, விபரங்களை காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் காலாண்டு செயற்பாடுகள் தொடர்பான நிதியியல் தகவல்களை இலங்கை மத்திய வங்கியின் நிதி முறைமை நிலைப்படுத்தல் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கும்.

## 7. கைத்தொழில் கைநூல் 2017

2017 டிசம்பர் 31 முடிவடைந்த ஆண்டிற்கு சமர்ப்பிப்பதற்கு காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் தகவல்கள் மற்றும் புள்ளிவபரங்கள் ஆணைக்குழுவினால் சேகரிக்கப்பட்டதுடன், காப்புறுதிக் கைத்தொழிற்துறையாளர்களினதும், பங்குதாரர்களினதும் நன்மைக்காக "கைத்தொழிற்துறை கைநூல்" வெளியிடப்பட்டது. கைநூல் மொத்த சொத்துக்கள், காப்புறுதி வியாபாரத்தின் வேறுபட்ட வகைகளின் மொத்த எழுதப்பட்ட தவணைக்கட்டணம், காப்புறுதிக் கம்பனிகளின் விரிவான வருமானக் கூற்று மற்றும் நிதியியல்

நிலமைக் கூற்று மற்றும் நிறுத்தி வைத்தல் விகிதம், கோரிக்கை விகிதம், கலப்பு விகிதம் போன்ற விகிதங்களையும் உள்ளடக்கிய தகவல்களைக் கொண்டிருந்தது.

### 8. காப்புறுதி நிதிகளை முகாமைத்துவம் செய்வதற்கான நடைமுறைகள் - நீண்டகால காப்புறுதி வியாபாரம் (பணிப்புரை 15)

சொத்துக்களின் சரியான பகிர்வு மற்றும் சொத்துக்களில் இருந்தான வருவாய், கடன்கள் மற்றும் காப்புறுதி நிதியங்களுக்கான செலவினம் மற்றும் காப்புறுதி நிதியத்திலிருந்தான மீளெடுப்புகள் ஆகியவற்றின் தேவைகளை நிர்ணயித்து நீண்ட கால வியாபாரத்தை மேற்கொண்டு வரும் அனைத்து காப்புறுதி நிறுவனங்களுக்கும் ஆணைக்குழு பணிப்புரை 15ஐ வழங்கியது. ஆணைக்குழு சமர்ப்பிக்கப்பட்ட விபரத்திரட்டுகளை மீளாய்வு செய்ததன் மூலம் கம்பனிகளின் நிலையை மீளாய்வு செய்ததுடன் பணிப்புரையுடன் இணக்குவதற்காக உரிய காப்புறுதிக் கம்பனிகளுக்கு உரிய நடைமுறைகள் மீதான மேலதிக விசாரணைகள் தொடர்பாக அறிவித்தது.

### 9. ஒரே தடவை மிகையை அடையாளம் காணல் மற்றும் நடவடிக்கை எடுத்தல் (பணிப்புரை 16)

காப்பீட்டு கணிப்பீட்டு நிபுணராக வில்ஸ் டவர்ஸ் வட்சனுடனும் கைத்தொழிற்துறையாளர்களுடனும் தொடர்ச்சியான கலந்துரையாடல்களை மேற்கொண்டதன் பின்னர், நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தை கொண்டு நடாத்தும் காப்புறுதியாளர்களுக்கு ஒரே தடவை மிகையை அடையாளம் காணல் மற்றும் நடவடிக்கை எடுத்தல் என்பவற்றுக்கான முறைமைகளை விளக்கி 2018 மார்ச் மாதம் 16ஆம் பணிப்புரையினை ஆணைக்குழு வழங்கியது. ஆணைக்குழுவிற்கு காப்புறுதிக் கம்பனிகளால் செய்ய வேண்டிய வெளிப்பாடுகளும் பணிப்புரையில் உள்ளன. இந்த வெளிப்பாடுகள் நிறுவனங்களினால் கணக்கிடப்பட்ட ஒரு தடவை மிகைக்கு ஒப்புதல் அளிப்பதற்கு முன் ஆணைக்குழுவினால் மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும். மேலும், அத்தகைய காப்புறுதி நிறுவனங்கள் ஒரு தடவை மிகைக்கு ஆதரவளிக்க கட்டுப்படுத்தப்பட்ட இருப்புகள் போன்ற போதுமான சொத்துக்களை பராமரிக்க வேண்டும்.

### 10. பணத்தூயதாக்கல் மற்றும் பயங்கரவாத நிதியிடலுக்கு எதிர்த்துப் போராடல் நடவடிக்கைகள்

பண மோசடி மற்றும் பயங்கரவாத நிதியளிப்பு தொடர்பான காப்புறுதித்துறையின் பாதிப்புகளை மதிப்பிடுவதற்கு காப்புறுதி நிறுவனங்களிடமிருந்து தகவல் மற்றும் தரவுகளை ஆணைக்குழு சேகரித்தது. சேகரிக்கப்பட்ட தகவல்கள் இலங்கை மத்திய வங்கியின் நிதி புலனாய்வுப் பிரிவுக்கு இலங்கையில் உள்ள காப்புறுதி துறையின் பணத்தூயதாக்கல் மற்றும் பயங்கரவாத நிதியிடல் மீதான தேசிய இடர் மதிப்பீட்டை இற்றைப்படுத்தவதற்காக அனுப்பிவைக்கப்பட்டன.

மேலும், இடர் மதிப்பீட்டு வினாக்கொத்தை அபிவிருத்தி செய்தல் மற்றும் காப்புறுதித்துறைக்கு பொருத்தமாக இடர் கருவியினை திருத்தி இற்றைப்படுத்துதல் போன்ற காப்புறுதித்துறையில் பணத்தூயதாக்கல் பயங்கரவாதத்திற்கு நிதியிடலுக்கு எதிரான நடவடிக்கைகளின் மேற்பார்வைக்கு இடர் அடிப்படையிலான அமுல்படுத்தலை மேற்கொள்வதற்கு ஆணைக்குழு நடவடிக்கைகளை மேற்கொண்டது. இணக்கப்பாட்டிற்காக துறைக்கு நிதி விசாரணை அலகினால் விநியோகிக்கப்பட்ட காப்புறுதித்துறைக்கான வாடிக்கையாளர் உரிய விடாமுயற்சி விதிகள் முன்வரைவு குறித்தும் கருத்துகள் தெரிவிக்கப்பட்டன.

### 11. IFRS 17ஐ அமுல்படுத்தவதற்கு தயாராவதற்கான மதிப்பீடு

1 ஜனவரி 2021 அன்று அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பிக்கும் அறிக்கையிடல் காலத்திற்கு பயனுறுதி பெறும்வகையில் காப்புறுதி ஒப்பதங்கள் மீதான சர்வதேச நிதியியல் அறிக்கையில் நியமங்கள் 17 ஆரம்பத்தில் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது. அமுல்படுத்தலுக்கான காலம் ஒரு ஆண்டால் தள்ளிப்போடப்பட்டுள்ளது. சர்வதேச நிதியியல் அறிக்கையில் நியமங்கள் 17 ஐ அமுல்படுத்துவதற்கு மேற்கொள்ள வேண்டிய முக்கிய மாற்றங்களை கருத்தில் கொண்டு, ஆணைக்குழு காப்புறுதிக் கம்பனிகளுக்கு கம்பனிகளினால் மேற்கொள்ளப்பட்ட 17இற்கான நிதியியல் தாக்கம் மற்றும் முறைமை தேவைப்பாடு என்பவற்றுக்கான இடைவெளிப் பகுப்பாய்வு, கம்பனிகளினால் அடையாளம் காணப்பட்ட அவர்களுடைய பாதை வரைபடத்தில் திட்ட மாற்றங்கள் மற்றும் வரவுசெலவுத்திட்ட மதிப்பீடு போன்ற பிரதான சவால்கள் என்பவற்றை உள்ளடக்கி அவர்களின் தயார்நிலையை சமர்ப்பிக்குமாறு அறிவித்துள்ளது.

## காப்புறுதித் தரகர் கம்பனிகள்

### 1. காலாண்டு விபரத்திரட்டுகள், மாதாந்த விபரத்திரட்டுகள், இடைக்கால நிதியியல் கூற்றுகள் மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்கள்

2010 பெப்பரவரி 25ஆம் திகதி வெளியிடப்பட்ட 1642/16 (முதலாம் அட்டவணை) வர்த்தமானி அறிவித்தலின் நியதிகளுக்கு அமைவாக, ஒவ்வொரு காலாண்டு முடிவடைந்து நாற்பத்து ஐந்து நாட்களினுள் காப்புறுதி தரகர் கம்பனிகள் அவர்களின் காலாண்டு விபரத்திரட்டுகளையும் இடைக்கால நிதியியல் கூற்றுக்களையும் சபைக்கு

சமர்ப்பிக்க வேண்டும் எனக் கோரப்படுகின்றனர்.

மீள்காப்புறுதி தரகு மற்றும் வெளிநாட்டு காப்புறுதி வைப்புகள் மீதான மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் வகையில் இவ்வருடம் காலாண்டு விபரத்திரட்டு மாதிரி திருத்தப்பட்டது.

2018ஆம் ஆண்டு அனேகமான காப்புறுதி தரகர் கம்பனிகள் தங்கள் காலாண்டு விபரத்திரட்டுகள் மற்றும் இடைக்கால நிதியியல் கூற்றுகளை ஆணைக்குழுவிற்கு இறுதி நாளுக்கு முன்னராக சமர்ப்பித்தன. அவர்களின் நிதியியல் நிலைமையை உறுதிப்படுத்துவதற்கும் மற்றும் அவை சட்டம், ஏனைய ஒழுங்குவிதிகளுடன் இணங்கிசெயற்படுகின்றமையை கண்காணிப்பதற்கும் கம்பனிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட காலாண்டு விபரத்திரட்டுகளை ஆணைக்குழுவினால் மீளாய்வு செய்யப்பட்டது. யாதேனும் இணக்கப்பாடின்மை அல்லது விலகல்கள் ஆணைக்குழுவினால் அவதானிக்கப்பட்டதாயின், குறிப்பிட்ட காலவரையறைக்குள் அவற்றினை திருத்துமாறு உரிய காப்புறுதி தரகர் கம்பனிக்கு அறிவிக்கப்பட்டது.

நிதியாண்டு முடிவடைந்ததும் அதிலிருந்து ஆறு மாதங்களுக்குள் காப்புறுதி தரகர் கம்பனிகளின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுகளை சமர்ப்பிக்குமாறு கோரப்படுகின்றனர். சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுகள் ஆணைக்குழுவினால் மீளாய்வு செய்யப்பட்டது. யாதேனும் இணக்கப்பாடின்மை அல்லது விலகல்கள் ஆணைக்குழுவினால் அவதானிக்கப்பட்டதாயின் அவற்றினை திருத்துமாறு நடவடிக்கை எடுக்குமாறு உரிய காப்புறுதி தரகர் கம்பனிக்கு அறிவிக்கப்பட்டது.

## 2. தவணைக் கட்டணங்களின் சேகரிப்பினைக் கண்காணித்தல்

சட்டத்தின் 89ஆம் பிரிவுக்கு அமைவாக, காப்புறுதியாளர்களுக்காக காப்புறுதி தவணைக் கட்டணங்களை காப்புறுதி தரகர் கம்பனிகள் சேகரித்து உரிய காப்புறுதியாளர்களுக்கு சேகரித்து இரு வாரங்களினுள் வரவு வைத்தல் வேண்டும். இந்த காலாண்டு விபரத்திரட்டுகள் மற்றும் அமைவிட கண்காணிப்புகள் மூலம் சட்டத்தின் 89ஆம் பிரிவுக்கு அமைவாக காப்புறுதித் தரகர் கம்பனிகள் இணங்குகின்றனவா என சபை உன்னிப்பாக கண்காணித்தது. இந்த பிரிவுக்கு அமைவாக இணங்காத காப்புறுதி தரகர் கம்பனிகளுக்கு எதிராக அவசியமான நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்பட்டது

## 3. அமைவிட பரீட்சிப்புகள்

ஆணைக்குழுவின் ஒழுங்குவிதிகள் இணங்கப்படுகின்றதா என மதிப்பிடுவதற்காக 2018ஆம் ஆண்டினுள் சபை எட்டு அமைவிட பரீட்சிப்புகள் காப்புறுதி தரகர் கம்பனிகளில் மேற்கொள்ளப்பட்டது. அமைவிட பரீட்சிப்புகளின் போது அவதானிக்கப்பட்ட விடயங்கள், உரிய காப்புறுதி தரகர் கம்பனிகளின் திருத்தச் செயற்பாடுகளுக்காக ஆணைக்குழுவின் விதப்புரைகள் கம்பனிகளின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. மேலும் பொருத்தமான ஒழுங்காற்றல் நடவடிக்கைகள் ஆணைக்குழுவினால் மீறல்களுக்காக மேற்கொள்ளப்பட்டது.

## 4. பதிவினை புதுப்பித்தல்

2019ஆம் ஆண்டு அவற்றின் தொழிற்பாடுகளை தொடர்ந்து மேற்கொள்வதற்காக அவர்களின் அனுமதிப்பத்திரத்தை புதுப்பிப்பதற்கான விண்ணப்பங்கள் காப்புறுதி தரகர் கம்பனிகளிடமிருந்து கிடைக்கப் பெற்றது. புதுப்பிப்பதற்கு முன்னர் அவற்றின் நிதியியல் நிலமையை தீர்மானிப்பதற்காக, கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுகள் மற்றும் காலாண்டு விபரத்திரட்டுகள் என்பனவற்றை ஆணைக்குழு பகுப்பாய்வு செய்தது.

## 5. புதிய காப்புறுதித் தரகர் கம்பனிகளின் புதுப்பித்தல்

இவ்வருடம், காப்புறுதி தரகர் கம்பனிகளாக பதிவினைப் பெற்றுக்கொள்வதற்கு கம்பனிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றது. ஆணைக்குழு பதிவிற்கு விதப்புரை செய்வதற்கு முன்னர், விண்ணப்பிக்கப்பட்ட கம்பனியின் விற்பனை மற்றும் நிதியியில் முன்மதிப்பீடு, நிறுவனத்தின் கட்டமைப்பு, கிடைக்கப்பெறும் உட்கட்டமைப்பு வசதி மற்றும் வெளிவாரி கணக்காய்வாளரின் சான்றிதழ் உள்ளடங்களாக வியாபாரத் திட்டத்தை பகுப்பாய்வு செய்தது.

# ஒழுங்குமுறைப்படுத்தல் மீளாய்வு

## காப்புறுதிக் கம்பனிகளை பதிவுசெய்தல்

இவ்வருடம் காப்புறுதிக் கம்பனிகளாக பதிவுசெய்வதற்கான விண்ணப்பங்கள் ஏதும் கிடைக்கப்பெறவில்லை. அதற்கமைவாக பதிவுசெய்யப்பட்ட காப்புறுதிக் கம்பனிகளின் எண்ணிக்கை 27 ஆகும், இலங்கையில் இருந்து வெளியேறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதனால் ஏஐஜி காப்புறுதி நிறுவனம் எவ்வித புதிய வியாபாரங்களையும் மேற்கொள்ளவில்லை. மேலும் எம்பிஎஸ்எல் காப்புறுதி கம்பனி லிமிடட் நிறுவனத்தின் நடவடிகைகள் 28 ஜுன் 2017இல் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளது.

**இணைப்பு** 1: ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்ட அனைத்துக் காப்புறுதிக் கம்பனிகளின் பெயர்கள் மற்றும் அவை காப்புறுதி வியாபாரத்தை கொண்டு நடாத்துவதற்கான அதிகாரமளிக்கப்பட்ட வகை/ வகைகள் என்பவற்றை வழங்குகின்றது.

## அமுலாக்கல் நடவடிக்கைகள்

### காப்புறுதிக் கம்பனிகள்

#### இடைநிறுத்தல்கள்

ஆணைக்குழு, 28 ஜுன் 2017 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் ஒரு காப்புறுதி நிறுவனத்தின் மோசமடைந்துவரும் நிதி நிலையை பரிசீலித்ததன் பின்னர் (நிறுவனத்தின் நிதி நம்பகத்தன்மை மீதான கடுமையான சந்தேகம் மற்றும் அத்தகைய காப்புறுதியாளரின் பூட்கையாளர்களை மோசமாக பாதிக்கும் என்பதனால்), நீண்ட கால மற்றும் பொது காப்புறுதி வியாபாரங்கள் இரண்டையும் தொடர வழங்கப்பட்ட அதன் பதிவை நிறுத்தி வைத்தது. அதற்கமைவாக, ஏன் அத்தகைய இடைநீக்கம் நீக்கப்பட்டு பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் என நிறுவனம் ஆணைக்குழுவிற்கு எழுத்துமூலமான காரணத்தைக் காட்ட வேண்டியதுடன் சட்டத்தின் ஏற்பாடுகளுடன், இணங்குவதற்கான ஒழுங்குமுறைத் தேவைகளை உடனடியாக பூர்த்தி செய்வதற்கான மூலதனத் திட்டத்தை ஆணைக்குழுவின் கவனத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும். இதுவரை கம்பனியினால் அதனை சமர்ப்பிக்க முடியாதுள்ளதனால், கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்த இடைநிறுத்தல் 20 ஜுலை 2017 இல் இருந்து சட்டத்தின் ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதன தேவைப்பாட்டுடன் இணங்கும் வரை நீடிக்கப்பட்டுள்ளது. எனினும், வருங்கால முதலீட்டின் மூலம் ஒழுங்குமுறை தேவையை பூர்த்திசெய்வதற்கான செயற்பாட்டில் இருப்பதாக அந்த நிறுவனம் ஆணைக்குழுவிற்கு அறிவித்துள்ளது.

சிலிங்கோ டக்காபுல் லிமிடட் நிறுவனத்திற்கு விதிக்கப்பட்டுள்ள இடைநிறுத்தல் தொடர்கின்றது. அத்துடன், ஆணைக்குழுவினால் நியாயமான கோரிக்கைகள் என அடையாளம் காணப்பட்ட கோரிக்கைகள் அனைத்தையும் நிறுவனம் தீர்த்து வைத்திருந்தாலும், சிலிங்கோ டக்காபுல் லிமிடட் மீது நீதிமன்ற வழக்குகள் தொடர்ந்து நடைபெற்று வருவதனால், உரிமைக்கோரல் தீர்வு செயன்முறையை முடிக்க முடியவில்லை.

சட்டத்தின் பிரிவு 18(1)இன் படி, ஒரு குறிப்பிட்ட வகை அல்லது காப்புறுதி வியாபாரத்தின் துணை வகை மற்றவற்றுடன் கடனைத் தக்கவைக்கத் தவறியதாக ஆணைக்குழுவால் நிர்ணயிக்கப்பட்ட அல்லது சட்டத்தின் எந்தவொரு விதிமுறையையும் அல்லது எந்தவொரு விதியையும் அல்லது விதிக்கப்பட்ட நிபந்தனையையும் அல்லது சட்டத்தின் கீழ் ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட எந்தவொரு பணிப்புரையையும் அல்லது தீர்மானத்தையும் மீறியமைக்காக ஒரு காப்புறுதியாளரின் பதிவை ஆணைக்குழு இரத்து செய்யலாம் அல்லது நிறுத்தி வைக்கலாம்.

#### எச்சரிக்கைகள்

சட்டத்தின் 57ஆம் பிரிவுக்கு அமைவாக, 2015ஆம் ஆண்டில் ஆணைக்குழுவிலிருந்து முன் எழுத்துபூர்வமான ஒப்புதல் பெறாமல், எந்தவொரு கூட்டாளர், துணை அல்லது தாய் நிறுவனம் அல்லது அதன் ஒருபகுதியாக இருக்கும் ஒரு குழு நிறுவனத்தின் உறுப்பினர்களுடன் தொடர்புடைய தரப்பினருக்கு ஒரு காப்புறுதியாளர் எந்தவொரு சேவையையும் பெற்றுத்தருவதை தடைசெய்யும் உத்தரவைப் பிறப்பித்துள்ளது. எனினும், ஆணைக்குழுவிடமிருந்து முதலில் அனுமதியைப் பெற்றுக்கொள்ளாத அவ்வாறான கம்பனிகளின் அனைத்துப் பணிப்பாளர்களுக்கும் தலைமை அலுவலருக்கும் எச்சரிக்கையை ஆணைக்குழு விடுத்துள்ளது.

#### புதிய காப்புறுதி தரகர் கம்பனிகளின் பதிவு மற்றும் காப்புறுதி தரகர் கம்பனிகளின் பதிவைப் புதுப்பித்தல்

காப்புறுதி தரகர்களாக பதிவுசெய்ய ஆர்வமுள்ள ஆட்களிடமிருந்து இந்த ஆண்டில் 4 புதிய வியாபாரத்திட்டங்களை ஆணைக்குழு பெற்றது. ஆணைக்குழு 7 ஆட்களுக்கு ஒப்புதல்களை வழங்கியது. அத்துடன் 4 கம்பனிகளை காப்புறுதி தரகர்களாக பதிவு செய்தது.

2019ஆம் ஆண்டுக்கு அவர்களுடைய புதுப்பித்தல்களை மேற்கொள்வதற்கு 59 காப்புறுதி கம்பனிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதுடன், சட்டத்தின் தேவைப்பாட்டுக்கு அமைவாக இணங்கியமையினால் அதில் 58 கம்பனிகளுக்கு பதிவைப் புதிப்பித்தலுக்கான அனுமதி வழங்கப்பட்டது. அதில் ஒரு கம்பனியின் தேறிய மூலதன நிலை ஆணைக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் நிலுவையில்

இருந்தது. எனினும் அந்த காப்புறுதி தரகர் கம்பனி பின்னர், சட்டத்தின் கீழ் அவசியமான தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்தமையினால் புதுப்பித்தல் வழங்கப்பட்டது. போர்சைட் காப்புறுதி தரகர் தனியார் கம்பனிக்கு ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட பதிவு 31 டிசம்பர் 2018 அன்றுடன் காலவதியான போதிலும் அவர்கள் புதுப்பித்தலுக்கான விண்ணப்பத்தை சமர்ப்பிக்கவில்லை.

**இணைப்பு II:** ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்ட அனைத்துக் காப்புறுதித் தரகர் கம்பனிகளின் பெயர்கள் மற்றும் அவை காப்புறுதி வியாபாரத்தை கொண்டு நடாத்துவதற்கான அதிகாரமளிக்கப்பட்ட வகை/ வகைகள் என்பவற்றை வழங்குகின்றது.

## அமுலாக்கல் நடவடிக்கைகள்

### காப்புறுதித் தரகர் கம்பனிகள்

#### எச்சரிக்கைகள்

இவ்வருடத்தினுள் ஆணைக்குழு எவ்வித எச்சரிக்கைகளையும் காப்புறுதித் தரகர் கம்பனிகளுக்கு வழங்கவில்லை.

#### பணிப்புரைகள்

1. கீழ்வரும் முறைப்பாடு ஆணைக்குழுவிற்கு கிடைத்ததைத் தொடர்ந்து, நிதி மோசடி காரணமாக சேவையில் இருந்து நிறுத்தப்பட்டவர்களை மீண்டும் சில காப்புறுதியாளர்கள் மற்றும் காப்புறுதியாளர்கள் சேவைக்கு இணைந்திருந்தமையை அவதானிக்க முடிந்தது. அதனால், ஆணைக்குழு சட்டத்தின் பிரிவு 96ஏ இற்கு அமைவாக, நிதி கையாடல் அல்லது மோசடி காரணமாக சேவையிலிருந்து இடைநிறுத்தியவர்களை மீண்டும் சேவைக்கு (எந்தவொரு சேவை வழங்கலாக இருந்தாலும்) இணைத்துக்கொள்ளலை தவிர்த்துக்கொள்ளுதல் வேண்டும் எனும் பணிப்புரையை அனைத்து காப்புறுதியாளர்களுக்கும் தரகர்களுக்கும் வழங்கியது.

2. நான்கு காப்புறுதிக் கம்பனிகளின் தேறிய மூலதனம் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடான இ.ரூபா 2.5 மில்லினைவிடக் குறைவாக இருந்தமை அவதானிக்கப்பட்டதனால், ஆணைக்குழு நிறுவனங்களுக்கு மூலதனத்தை உட்செலுத்தவும், சமர்ப்பிக்க வேண்டிய காலாண்டு விபரத்திரட்டுக்கு மேலதிகமாக மாதாந்த விபரத்திரட்டை சமர்ப்பிக்கவும் அவர்களுக்கு அறிவுறுத்தியது.

### ஒழுங்குமுறைப்படுத்தல் / ஆலோசனை நடவடிக்கைகள்

1. சட்டத்தின் 102ஆம் பிரிவுக்கு அமைவாக, இரண்டு பொது காப்புறுதிக் கம்பனிகளை ஒன்றிணைப்பதற்கு அனுமதி ஆணைக்குழுவிடம் கோரப்பட்டது. சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவு மீளாய்வு செய்யப்பட்டு, வழங்கப்பட்ட நிபந்தனைகளுடன் கம்பனிகள் இணங்குவதன் கீழ் இணைப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டது.

2. காப்புறுதித் தரகர் கம்பனிகள் சிலவற்றினால் வெளிநாட்டு சுகாதாரக் காப்புறுதிப் பண்டங்களை சேர்த்தக்கொள்வதற்கு சுற்றறிக்கை 36இன் கீழ் விநியோகிக்கப்பட்ட விண்ணப்பங்களுக்கு ஆணைக்குழு அனுமதியை வழங்கியது.

   சுற்றறிக்கை 36 ஏதேனும் காப்புறுதி தரகர் கம்பனி ஏதும் வெளிநாட்டு காப்புறுதி பூட்கை வகைகளை தங்கள் வியாபாரத்தில் இணைந்துக்கொள்ள விரும்பின், அதற்கான அனுமதியை ஆணைக்குழுவிடமிருந்து பெற்றுக்கொள்ளல் வேண்டும் எனக் கோருகின்றது.

   மேலும் காப்புறுதித் தரகர் கம்பனிகளினால், வெளிநாட்டு சுகாதார காப்புறுதிப் பண்டங்களை தொடர்ந்து பேணுவதற்காக அதனைப் புதுப்பிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களுக்கு அமைவாக, ஆணைக்குழு அதற்கான அங்கீகாரத்தை வழங்கியது.

3. 2010 ஒக்டோபர் 05ஆம் திகதி விசேட வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 1674/4 இனால் திருத்தப்பட்ட 23 செப்டெம்பர் 2002ஆம் திகதி விசேட வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 1255/3 இன் 2(சீ)(ஐ) விதியின் நியதிகளுக்கு அமைவாக, இலங்கை காப்புறுதி நிறுவனத்தினால் நடாத்தப்படும் ஆட்சேர்ப்புக்கு முன் பரீட்சைக்கு தோற்றுவதற்கு வருங்கால காப்புறுதி முகவர்களினால் வழங்கப்பட்ட கோரிக்கைகளுக்கு தகைமைகளை கருத்தில் கொண்டு ஆணைக்குழு அனுமதிகளை வழங்கியது.

   காப்புறுதி முகவர்களின் தகைமையாக (2010 ஒக்டோபர் 05ஆம் திகதி விசேட வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 1674/4 இனால் திருத்தப்பட்ட 23 செப்டெம்பர் 2002ஆம் திகதி விசேட வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 1255/3 இல் 2(சீ)(ii) விதியின் கீழ் காப்புறுதி முகவராகப் பதிவு செய்வதற்கான ஒரு மிகக் குறைந்த தகைமையாக கல்விப் பொது சாதாரண தரப் பரீட்சையில் கணிதம் அல்லது எண் கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கில மொழிகளில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் ஈ 2(சீ)(ii) விதியின் கீழ் யாரேனும் நபர் குறிப்பிடப்பட்ட தகைமைக்கு சமமான அல்லது 2(சீ)(ii) விதியின் கீழ் குறிப்பிடப்பட்ட தகைமையைவிட உயர்ந்த தகைமையைக் கொண்டிருப்பின் ஆணைக்குழு ஒவ்வொரு விடயத்தையும் தனித்தனியாகப் பார்க்கும்.

4. ஒரு வெளிநாட்டு காப்புறுதியாளருடன் ஒரு குறிப்பிட்ட கப்பல்களுக்கு 2018 ஜுன் 01 முதல் ஒரு வருட காலத்திற்கு ஹல், இயந்திரங்கள் மற்றும் போர் ஆபத்துக் காப்பீட்டுத் தொகையைத் தொடர்ந்து வைக்க ஆணைக்குழுவின் ஒப்புதல் ஒரு

நிறுவனத்தினால் கோரப்பட்டதுடன், சட்டத்தின் பிரிவு 101இன் படி 2018ஆம் ஆண்டின் ஒரு வருட காலத்திற்கு ஆணைக்குழுவினால் ஒப்புதல் வழங்கப்பட்டது.

சட்டத்தின் பிரிவு 101இன் படி, இலங்கையில் எந்தவொரு நபரும் ஆணைக்குழுவின் முன் எழுத்துபூர்வ ஒப்புதல் இல்லாமல், நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எந்தவொரு வியாபாரத்தையும் ஒரு மீள்காப்புறுதி தவிர்த்து, ஆணைக்குழுவில் பதிவுசெய்யாத காப்புறுதியாளருடன் மேற்கொள்ள முடியாது. மேலும், அந்த அனுமதி காப்புறுதி கைத்தொழிற்துறை மற்றும் நாட்டின் நலன் கருதி அரசாங்கத்தின் கொள்கையைக் கருத்தில் கொண்டே வழங்கப்படும்.

5. ஆணைக்குழு பல்வேறு காப்புறுதிக் கம்பனிகளுக்கு காப்புறுதி வியாபாரத்தைத் தவிர்த்து ஏனைய வியாபாரங்களை மேற்கொள்வதற்கான அனுமதியை வழங்கியது. பணிப்புரை 10, அனைத்து காப்புறுதித் தரகர் கம்பனிகளும், சட்டத்தில் வரைவிலக்கப்படுத்தப்படாத காப்புறுதி தரகர் வியாபாரம் தவிர்த்து ஏனைய துணைச் சேவைகளை வழங்குவதற்கு முன்னர் அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளது.

6. 2011ஆம் ஆண்டு 03ஆம் இலக்க திருத்தச் சட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட நிபந்தனைகளின் கீழ் காப்புறுதி கம்பனிகளுக்கான பணிப்பாளர்களை நியமிப்பதற்கான பல விண்ணப்பங்களுக்கு ஆணைக்குழு ஒப்புதலை வழங்கியுள்ளது.

7. சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக காப்புறுதி மற்றும் காப்புறுதித் தரகர் கம்பனிகளுக்கான தலைமை அலுவலர்களை நியமிப்பதற்கு கோரிக்கை விடுத்து சமர்ப்பிக்கப்பட்ட பல விண்ணப்பங்களுக்கு ஆணைக்குழு ஒப்புதலை வழங்கியுள்ளது.

8. 2016ஆம் ஆண்டு 12ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கிடைக்கப்பெற்ற பல விண்ணப்பங்களுக்கு ஆணைக்குழு பதிலளித்தது.

9. ஆணைக்குழு காப்புறுதியாளர்களின் பல காப்புறுதி வகைகளை மீளாய்வு செய்ததுடன், உரிய காப்புறுதியாளர்களுக்கு அவசிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அவதானிப்பை வழங்கியுள்ளது. சுற்றறிக்கை 39, அனைத்துக் காப்புறுதியாளர்களும், அவர்களின் புதிய காப்புறுதிப் பண்டத்தை அறிமுகப்படுத்தவதற்கு முன்னர், அந்தப் பண்டம் தொடர்பான பூட்கை ஆவணங்களை ஆணைக்குழுவிற்கு சமர்ப்பித்தல் வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

10. சட்டத்தின் ஏற்பாடுகளில் உள்ள நியதிகளுக்கு அமைவாக அங்கீகரிக்கப்பட்ட பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடுவதற்கு அந்த காப்புறுதியாளர்களுக்கு விலக்களிக்குமாறு கோரி வழங்கப்பட்ட கோரிக்கைகள் மீளாய்வு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது. 2011ஆம் ஆண்டு 03ஆம் இலக்க திருத்தச் சட்டத்திற்கு அமைவாக, ஆணைக்குழுவில் பதிவுசெய்யப்பட்ட அனைத்துக் கம்பனிகளும் 1987ஆம் ஆண்டு 36ஆம் இலக்க இலங்கை பங்குப் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் உள்ள அங்கீகரிக்கப்பட்ட பங்குப் பரிவர்த்தனையில் சுயமாக பட்டியலிடப்படல் வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது. எனினும் 2017ஆம் ஆண்டு 23ஆம் இலக்க திருத்தச் சட்டத்தில் மேற்குறித்த பட்டியலிடுவதற்கான விலக்களிப்பு அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட திருத்தச் சட்டத்தின் கீழ் விலக்களிப்பிற்காக கீழ்வரும் காப்புறுதியாளர் வகையினர் விண்ணப்பிக்க முடியும்.

*(i)* ஒரு உள்ளூர் துணை காப்புறுதி நிறுவனம், அந்த நிறுவனத்தின் 85% வீத பங்குகளை வைத்திருக்கும் கம்பனி வெளிநாட்டு ஹோல்டிங் கம்பனிக்கு சொந்தமானது, மேலும் அந்த வெளிநாட்டு ஹோல்டிங் கம்பனி ஒரு வெளிநாட்டு பங்குச்சந்தையில் பட்டியலிடப்பட்டுள்ளது, இது உலக பரிமாற்ற கூட்டமைப்பின் உறுப்பினராக அல்லது ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பிற அமைப்பில் உள்ளதாக இருத்தல்.

மேலும், அந்தக் கம்பனி குறிப்பிட்ட கம்பனியின் கணக்குகள் வெளிநாட்டு ஹோல்டிங் கம்பனியின் குழுமத்தின் திரட்டிய கணக்குகளில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் வெளிநாட்டு பங்குப் பரிவர்த்தனையின் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளின் குழும மட்ட இணக்கத்தை உறுதிப்படுத்தப்படுவதற்கு சட்டரீதியாக வெளிநாட்டு ஹோல்டிங் கம்பனி தேவைப்படுத்தப்பட்டுள்ளமை தொடர்பாக ஆணைக்குழுவைத் திருப்பதிப்படுத்தினால், (2000ஆம் ஆண்டு 43ஆம் இலக்க காப்புறுதி கைத்தொழிற்துறை ஒழுங்குமுறைப்படுத்தல் சட்டத்தின் 15பி பிரிவுக்கு அமைவாக)

*(ii)* உள்நாட்டு காப்புறுதிக் கம்பனியின் தாய்க் கம்பனி அங்கீகரிக்கப்பட்ட இலங்கைப் பங்குப் பரிவர்த்தனையின் கீழ் பட்டியலிடப்பட்டிருத்தல் (சட்டத்தின் 15சீ (2)ம் பிரிவு)

மேற்குறிப்பிட்ட இரண்டு வகைகளையும் சேர்ந்த

கம்பனிகளைத் தவிர்த்து தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் மற்றும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் அல்லது ஏதேனும் காப்புறுதியாளர் பிரித்தலின் ஊடாக உருவாக்கப்பட்ட ஏதேனும் கம்பனிகள் மேற்குறித்த பட்டியலிடுதலில் இருந்து விலக்குப் பெறும். இது போன்ற நிறுவனங்கள் இலங்கை அரசுக்கு சொந்தமானவரை மட்டுமே இந்த விலக்கு செல்லுபடியாகும்.

11. நட்ட சீராக்கலாளர் என பதிவு செய்ய விரும்பும் பல நபர்களின் விண்ணப்பங்களை மீளாய்வு செய்த பின்னர் ஆணைக்குழு, சட்டத்தின் ஏற்பாடுகளில் உள்ள நட்ட சீராக்கலாளராக பதிவு செய்வதற்கான தேவைப்பாட்டுடன் இணங்கிய, 10 தனிநபர்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. சட்டத்தின் 89(சீ)(1) ஆம் பிரிவின் நிபந்தனைகளின் படி, நட்ட சீராக்கலாளராக பதிவு செய்வதற்காக கிடைக்கப்பெற்ற விண்ணப்பம் தொடர்பாக, ஆணைக்குழுவால் அந்த நோக்கத்திற்காக வழங்கப்படும் மற்றும் அத்தகைய ஆவணங்கள், தகவல்கள் மற்றும் கட்டணம் என்பவற்றுடன் ஆணைக்குழுவினால் உருவாக்கப்பட்டுள்ள விதிகள் என்பவற்றின் கீழ் தீர்மானம் மேற்கொள்ளப்படும்.

**இணைப்பு III**: ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்ட நட்ட சீராக்கலாளர்களின் பெயர்கள் மற்றும் அனுமதிப் பத்திரம் பயனுறுதி பெறும் திகதி என்பவற்றை வழங்குகின்றது.

சட்டத்தின் பிரிவு 114(1)இற்கு அமைவாக, "நட்ட சீராகலாளர்" என்பவர் விசாரணை செய்வதற்கான விசேட அறிவினைக் கொண்டுள்ளவரும் காப்புறுதிக் கோரிக்கைகளில் எழும் நட்டங்களை மதிப்பீடு செய்பவரும் மற்றும் சட்டத்தின் கீழ் நட்ட சீராக்கலாளராக பதிவு செய்த நபர் எனப் பொருள்படும்.

# விசாரணை மீளாய்வு


தற்போதுள்ள மற்றும் உத்தேச பூட்கை வைப்பாளர்களின் நன்மைகளை பாதுகாக்கும் நோக்கத்தின் கீழ், காப்புறுதி வழங்குனர்கள் மற்றும் கோரிக்கையாளர்கள் இருவருக்கிடையில் தோன்றும் முரண்பாடுகளை தீர்த்துவைப்பதற்காக கோரிகையாளர்கள் சபைக்கு சமர்ப்பிக்கும் கோரிக்கைகளை தீர்த்து வைப்பதற்கான அதிகாரம் ஆணைக்குழுவிற்கு உள்ளதனால் வழங்கப்பட்ட கோரிக்கை முரண்பாட்டினைத் தீர்த்து வைப்பதற்காக அனைத்துத் தரப்பினரினதும் பிரச்சனைகளையும் செவிமடுப்பதற்கான சந்தர்ப்பம் ஆணைக்குழுவினால் வழங்கப்படும். அத்துடன், யாரேனும் காப்புறுதி வழங்குனர், தரகர் அல்லது முகவருக்கு எதிராக யாதேனும் தவறான நடவடிக்கைகள் அல்லது ஒழுங்கீனங்கள் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளதா என ஆணைக்குழு புலனாய்வு செய்யும்.

ஆணைக்குழுவிற்கு யாதேனும் முரண்பாடுகள் அல்லது முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதும் (காப்புறுதி வழங்குனருக்கு, காப்புறுதி தரகருக்கு அல்லது முகவருக்கு எதிராக), எதிர் தரப்பினருக்கு அவர்களின் தீர்மானம் தொடர்பாக அதற்கான காரணத்தை சான்றுழிக்கும் தகவல்கள் மற்றும் ஆவணங்களுடன் கட்டியெழுப்புமாறு கோரப்படுவர். அவசியமாயின் இரு தரப்பினரிடமிருந்தும் தகவல்களும் தெளிவுபடுத்தல்களும் பெறப்படும். அத்துடன், தேவைப்படுமாயின் ஆணைக்குழு தீர்மானத்திற்கு வருவதற்காக அரச அதிகாரசபைகள் மற்றும் தனிப்பட்ட நிபுணர்கள் என்பவர்களுடனும் ஆலோசனைகளை மேற்கொள்ளும்.

## மொத்தப் பரிந்துரைகளின் பகுப்பாய்வு


மீளாய்வுக்குட்பட்ட இவ்வருடத்தில் மொத்தமாக 247 புதிய முறைபாடுகள் ஆணைக்குழுவிற்கு கிடைக்கப்பெற்றதுடன், அதில் 295 விடயங்கள் இவ்வருடத்தினுள் தீர்க்கப்பட்டது. தீர்க்கப்பட்ட விடயங்களில் ஆணைக்குழுவின் தலையீடு காரணமாக 65 கோரிக்கைகள் காப்புறுதி பூட்கையாளர்களுக்கு சார்பாக தீர்க்கப்பட்டது. ஆணைக்குழுவின் தலையீடு காரணமாக தீர்க்கப்பட்ட கோரிக்கைகளின் ஒன்றுசேர்த்த பெறுமதி இ.ரூபா 38 மில்லியன் ஆகும்.

வரைபு 01
கடந்த ஐந்து வருடங்களில் கிடைக்கப்பெற்றவைகள்





கடந்த ஐந்து வருடங்களில் ஆணைக்குழுவுக்கு மொத்தமாக 1,498 விடயங்கள் கிடைக்கப்பெற்றது. வரைபு 1இல் காட்டப்பட்டுள்ளவாறு, கடந்த ஆண்டுடன் (348) ஒப்பிடுகையில் ஆணைக்குழுவிற்கு கிடைக்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை (247) வீழ்ச்சியடைந்துள்ளது. இதற்கு காரணம் காப்புறுதிக் கம்பனிகளினால் அவர்களின் முறைப்பாடுகளை கையாளும் நடைமுறைக்கு ஏற்ப நுகர்வோர் முறைப்பாடுகள் திறம்படத் தீர்மானிக்கப்பட்டமை காரணமாக, ஆணைக்குழுவிற்கு அனுப்புதல் குறைந்திருக்கக்கூடும்.

வரைபு 2
மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில் கிடைக்குப் பெற்ற பரிந்துரைகளின் பகுப்பாய்வு மாதாந்த ரீதியாக



வரைபு 3
2018இல் கிடைக்கப்பெற்ற மொத்த பரிந்துரைகளின் வகைப்படுத்தல்




இந்த ஆண்டினுள் சபைக்கு அனுப்பப்பட்ட பரிந்துரைகளின் எண்ணிக்கை மாதாந்த அடிப்படையில் வரைபு 2இல் காட்டப்பட்டுள்ளது. அதிகப்படியான முறைப்பாடுகள் ஒகஸ்ட் மாதத்தில் (33) கிடைக்கப்பெற்றதுடன், ஜூன் மாதத்தில் 7 முறைப்பாடுகள் மட்டுமே கிடைக்கப்பெற்றது. இதற்கு ஜூன் மாதத்தில் இரண்டு வாரங்களாக காணப்பட்ட வேலைநிறுத்தம் காரணமாக இருக்கக்கூடும். சாராசரியாக மாதத்திற்கு 20.5 பரிந்துரைகள் ஆணைக்குழுவிற்கு கிடைக்கப்பெற்றுள்ளதுடன், பெப்பரவரி, மே, ஜூலை, ஒகஸ்ட் மற்றும் ஒக்டோபர் மாதங்களில் மேற்படி சராசரி கிடைத்துள்ளது.

2018ஆம் ஆண்டு கிடைக்கப்பெற்ற மொத்த பரிந்துரைககளின் வகைப்படுத்தல் வரைபு 3இல் காட்டப்பட்டுள்ளது. இந்த மொத்த முறைப்பாடுகளில் முறையே 122 (46%) பரிந்துரைகள் பொதுக் காப்புறுதி வியாபாரம் தொடர்பாகவும் 76 (31%) பரிந்துரைகள் நீண்டகால காப்புறுதி வியாபாரம் தொடர்பாகவும் கிடைக்கப்பெற்றவையாகும். இங்கு வழங்கப்பட்டவற்றில் 49(20%) பரிந்துரைகள் பொது முறைப்பாடுகளாகும், இவற்றை காப்புறுதி வியாபாரத்துடன் வகைப்படுத்துவதற்கு முடியாது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், கிடைக்கப்பெற்ற பரிந்துரைகளின் பொது பரிந்துரைகள் 11% (2017இல்) வீதத்தில் இருந்து 20% வீதத்தினால் அதிகரித்துள்ளதுடன் பொது வியாபாரம் தொடர்பாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் பரிந்துரைகள் 60% (2017இல்)வீதத்தில் இருந்து 49% வீதத்தினால் குறைவடைந்துள்ளது.

## பொதுக் காப்புறுதி வியாபாரம் மீதான பரிந்துரைகளின் பகுப்பாய்வு

பிரச்சினையின் வகையை அடிப்படையாகக் கொண்டு பொதுக் காப்புறுதி வியாபாரம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பகுப்பாய்வு தொடர்பான விபரங்கள் அட்டவணை1இல் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 1இல் காட்டப்பட்டவாறு, பொது காப்புறுதி வியாபாரத்தின் கீழ் உள்ள மொத்தப் பரிந்துரைகளில் (122), 113 (92.6%) பரிந்துரைகள் உரிமைக்கோரல் முரண்பாடுகள், மீதமுள்ள 9 (7.4%) பரிந்துரைகள் இடைக்கால கொள்கை இரத்து போன்ற பிற புகார்கள், கேள்விகளுக்கு பதிலளிக்கவில்லை, தவணைக் கட்டணத்தை மீளப்பெற்றுக்கொள்வதற்கான கோரிக்கைகள் மற்றும் பூட்கை ஆவணங்களை பெறாதது போன்றவையாகும். உரிமைக் கோரல் முரண்பாடுகளின் கீழ் பரிந்துரைகளுக்கான (73.4.%) முக்கிய பிரச்சினை பொறுப்பை ஏற்காதது, அதாவது உரிமைக்கோரல் மறுப்பாகும். அரசாங்க ஆய்வாளர் திணைக்களம், காவல் நிலையங்கள், மருத்துவமனைகள் மற்றும் சாட்சிகளிடமிருந்து (அவசியமானால்) அவதானிப்புகளை அழைப்பதன் மூலம் உரிமைகோரல் மறுப்பு தொடர்பாக விரிவான விசாரணைகள் நடாத்தப்பட்டன. பூட்கை இழப்பு காரணத்தை உள்ளடக்கிய சந்தர்ப்பங்களில், உரிமைகோரல் தொடர்பான பொருள் உண்மைகளை மோசடி அல்லது வேண்டும் என்றே சித்தரிக்காத வேளைகளில் ஆணைக்குழு உரிமைகோருபவர்களுக்கு உதவியது.

உரிமைகோரல் முரண்பாடுகளின் கீழ் பரிந்துரைகளுக்கு (18.6%) வீதம் வழங்கப்பட்ட / செலுத்தப்பட்ட உரிமைக் கோரலின் அதிருப்தி என்பன மற்றைய முக்கிய காரணமாகும். பூட்கை சொற்களின் தவறான புரிதல் மற்றும் இழப்பு சரிசெய்தல் / விலக்குகள் குறித்து காப்புறுதியாளர்கள் வழங்கிய விளக்கங்களில் தெளிவு இல்லாமை ஆகியவை இந்த பரிந்துரைகளுக்கு முக்கிய காரணங்களாக இருந்தன. இந்த மோதல்களில் பெரும்பாலனவை உரிமை

அட்டவணை 1
பொதுக் காப்புறுதி வியாபாரம் தொடர்பான பரிந்துரைகள்: பிரச்சனை ரீதியாக

| பிரச்சனை | # | % |
|---|---|---|
| **கோரிக்கை முரண்பாடுகள்** | **113** | **92.6** |
| பொறுப்பினை ஏற்றுக்கொள்ளாமை | 83 | 73.4 |
| வழங்கப்பட்ட கோரிக்கைக் கொடுப்பனவு தொடர்பாக திருப்தியின்மை | 21 | 18.6 |
| கோரிக்கைக் கொடுப்பனவுகளை வழங்குவதில் தாமதம் | 9 | 8.0 |
| **ஏனைய முறைப்பாடுகள்** | **9** | **7.4** |
| **மொத்தம்** | **122** | **100.0** |

கோருபவர்களுக்கு எழுத்துமூலமாக அல்லது ஆணைக்குழுவில் நடைபெற்ற கலந்துரையாடல்களில் தேவையான விளக்கங்களை வழங்குவதன் மூலம் தீர்க்கப்படுகின்றது.

ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்ட மீதமுள்ள ஒன்பது முரண்பாடுகள் உரிமைக்கோரல்களைத் தீர்ப்பதில் ஏற்பட்ட தாமதம் தொடர்பானதாகும். உரிமைக்கோரல்கள் குறித்து மேலதிக விசாரணைகளை இறுதியாக்குவதற்கு தகவல்களையும் ஆவணங்களையும் வழங்குவதில் காப்புறுதியாளர்கள் அல்லது பழுதுபார்ப்பவர்களின் தாமதங்கள் காரணமாக பெரும்பாலன தாமதங்கள் ஏற்பட்டுள்ளன.

## நீண்டகால காப்புறுதி வியாபாரம் மீதான பரிந்துரைகளின் பகுப்பாய்வு

கீழே அட்டவணை 2இல், நீண்ட கால காப்புறுதி வியாபாரம் தொடர்பாக கொடுக்கப்பட்ட பரிந்துரைகள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

அட்டவணை 2இற்கு அமைவாக, நீண்டகால காப்புறுதி தொடர்பான மொத்த பரிந்துரைகளில் (76) கோரிக்கை தொடர்பான முரண்பாடுகள் மற்றும் ஏனைய முறைப்பாடுகள் எனும் இரண்டும் சம அளவில் இருந்தன (ஒவ்வொன்றும் 50%)

கோரிக்கை முரண்பாடுகளில் (50%) பெரும்பான்மையானவை காப்புறுதியாளரினால் பொறுப்புக்கள் ஏற்றுக்கொள்ளாமை உள்ளது. கொள்கையின் தொடக்கத்திலோ அல்லது புதுப்பித்தலிலோ பொருள் உண்மைகளை வெளிப்படுத்தாது அல்லது தவறாக சித்தரிப்பதை அடிப்படையாகக் கொண்டது. காப்புறுதி ஒப்பந்தங்களின் காப்புறுதியின் அடிப்படைச் சட்டக்கொள்கை ரடிநசசநைஅயந கனைநந (பரிபூரண நம்பிக்கை) ஆவதுடன், ஒப்பந்தத்தின் இரு தரப்பினருக்கும் நேர்மாறாக செயற்படுகின்றது. அதாவது காப்புறுதியாளர் மற்றும் காப்புறுதி செய்யப்பட்டவர் இருவருக்கும் இது பொதுவானது. ஒரு காப்புறுதியாளர் முன்மொழிவு படிவத்தில் முன்மொழிந்தவர் வெளிப்படுத்திய தகவல்களின் அடிப்படையில், முன்மொழிவாளரின் உயிருக்கான ஆபத்தை ஏற்றுக்கொள்வது மற்றும் தொடர்புடைய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளைத் தீர்மானிக்கின்றார். எனவே பொருள் உண்மைகளை வெளிப்படுத்தாத அல்லது தவறாக சித்தரிப்பது காப்புறுதியாளர்களினால் பரிபூரண நம்பிக்கையை மீறுவதாகும்.

சில நிகழ்வுகளில், முன்மொழிவாளர்களினால் உண்மைகளை வெளிப்படுத்தாததற்கும் தவறாக சித்தரிப்பதற்கும் காரணம் தொடர்புடைய காப்புறுதிக் கொள்கைகள் குறித்த விழிப்புணர்வு இல்லாதது மற்றும் பொருள் தகவல்களை வெளிப்படுத்த வேண்டிய கடமை பற்றிய தெரியாமையாகும். ஆகையால் காப்புறுதியாளர்கள் வருங்கால பூட்கையாளர்களுக்கு தங்களது வெளிப்படுத்தல் கடமை மற்றும் அவ்வாறு செய்யத் தவறினால் ஏற்படும் பாதகமான விளைவுகள் குறித்து முறையாக அறிவிக்கப்படுவதை உறுதி செய்ய கூடுதல் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

பூட்கையாளர்களுக்கு ஒரு பூட்கை ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்குள் அவர்கள் தவணைக் கட்டணங்களை தவறாமல் செலுத்துவதை உறுதி செய்வதற்கான ஒப்பந்தக் கடமை உள்ளது. உரிமைக்கோரல் நேரத்தில், தவணைக் கட்டணம் செலுத்தாததால் பூட்கைகளை இழந்த இடத்தில் உரிமைக்கோரல்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. பூட்கையாளர்கள் சரியான நேரத்தில் தவணைக் கட்டணத்தை செலுத்துவதன் மூலம் பூட்கைகளைப் பராமரிக்கக் கடமைப்பட்டுள்ளனர். மேலும், அவர்கள் முரண்பாடுகள் ஏற்பட்டால் தீர்ப்பதற்கு அவர்கள் செலுத்தியதற்கான ஆதாரங்களை தக்கவைத்துக் கொள்ள வேண்டும். அதன்படி, தவணைக் கட்டணங்களை சரியான நேரத்தில் செலுத்துவது அல்லது பணம் செலுத்துவதில் தாமதம் ஏற்படுவதை நியாயப்படுத்தக்கூடிய இடங்களில் மட்டுமே ஆணைக்குழு உதவ முடியும்.

உரிமைக்கோரல் முரண்பாடுகளின் மற்றைய முக்கிய காரணம் (36.8%) முதிர்வு மற்றும் சரணடைதல் நன்மைகளைப் பெறுவது தொடர்பானது. இத்தகைய முரண்பாடுகளுக்கு முக்கிய காரணம் கொள்கை சொற்களின் தவறான புரிதல் மற்றும் காப்புறுதியாளர்கள் வழங்கிய விளக்கங்கள் போதாமையாகும். பூட்கைதாரர்களுக்கு தேவையான விளக்கங்களை எழுத்து மூலமாகவும், ஆணைக்குழுவில் நடைபெற்ற கலந்துரையாடல்களிலும் வழங்குவதன் மூலம் இந்த முரண்பாடுகளில் பெருமாலானவை தீர்க்கப்படலாம். உரிமைகோரல் தொகைகளில் உரிமைக்கோருபவர்களுக்கு அதிருப்தி

அட்டவணை 2

நீண்டகாலக் காப்புறுதி வியாபாரம் தொடர்பான பரிந்துரைகள்: பிரச்சனை ரீதியாக

| பிரச்சனை | # | % |
|---|---|---|
| **கோரிக்கை முரண்பாடுகள்** | **38** | **50.0** |
| பொறுப்பினை ஏற்றுக்கொள்ளாமை | 19 | 50.0 |
| முதிர்ச்சி மற்றும் சரணடைதல் நன்மைகள் | 14 | 36.8 |
| வழங்கப்பட்ட கோரிக்கைக் கொடுப்பனவுத் தொகை தொடர்பாக திருப்தியின்மை | 5 | 13.2 |
| **ஏனைய முரண்பாடுகள்** | **38** | **50.0** |
| மீள்செலுத்தல்/ இரத்துச்செய்தல் அல்லது புதுப்பித்தல் கோரிக்கைகள் | 21 | 55.3 |
| தகவலுக்கான ஏற்பாடு | 5 | 13.2 |
| தவணைக் கட்டணங்களின் தவறான கையாளுகை/மோசடி | 4 | 10.5 |
| ஏனையவை | 8 | 21.0 |
| **மொத்தம்** | **76** | **100.0** |

அடைந்து கிட்டத்தட்ட முரண்பாடுகளிலும் (13.2%) உரிமை கோருபவர்களுக்கு தங்கள் சலுகைகளைத் தெரிவிக்கும் போது காப்புறுதியாளர்கள் வழங்கிய தெளிவுபடுத்தல்கள் அல்லது விளக்கங்கள் இல்லாததே காரணம் என்று தென்பட்டது.

பூட்கைகளை இரத்துச் செய்து தவணைக் கட்டணங்களை திரும்பப்பெறுதல் அல்லது பூட்கைகளுக்கு புத்துயிர் பெறுவதற்கான கோரிக்கைகள் தொடர்பாக நீண்டகால காப்புறுதி வியாபாரத்தின் கீழ் குறிப்பிடப்பட்ட பிற புகார்களின் முக்கிய காரணம் (55.3%) பூட்கைகளை இரத்துச்செய்து தவணைக் கட்டணங்களை மீளப்பெறுவதற்கான கோரிக்கைகள் தொடர்பான விடயங்களில் உதவ முடியாது, ஏனெனில் அதற்குரிய காலம் முடிந்த பின்னர், அதாவது பூட்கை ஆவணம் கிடைத்த நாளிலிருந்து 21 நாட்களிலுள் இல்லை எனில் பூட்கையாளர்களுக்கு அத்தகைய உரிமையில்லை, எனினும் பூட்கையாளர்கள் அல்லது உரிமைக்கோருபவர்கள் அனுபவிக்கும் கஷ்டங்கள் தெளிவாக தெரிந்த இடத்தில் நிவாரணம் வழங்க காப்புறுதியாளர்கள் ஒப்புக்கொண்டனர். புத்துயிர் பெறுவதற்கான கோரிக்கைகள் குறிப்பிட்ட காலத்தில் காலாவதியான பிறகு செய்யப்படும் பூட்கைக்கு புத்துயிர் அளிக்க நடவடிக்கை எடுக்கும் தாமதங்களை பூட்கையாளர்கள் நியாயப்படுத்தக்கூடிய இடத்தில் மட்டுமே உதவ முடியும்.

தகவல்களை வழங்குவது தொடர்பான புகார்கள் (13.2%) விசாரணைகளின் கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் நடவடிக்கை எடுப்பதன் மூலம் தீர்க்கப்படலாம். தவணைக்கட்டணங்களை செலுத்துதல் மற்றும் முறைகேடாகப் பயன்படுத்துவது தொடர்பான 4 (10.5%) புகார்கள் மட்டுமே இருந்தன. சரிபார்க்கக்கூடிய ஆதாரங்களால் தவறாகப் பயன்படுத்துவதை நிறுவக்கூடிய இடத்தில் மட்டுமே பூட்கையாளர்களுக்கு உதவ முடியும். ஏனைய புகார்களில் (21%) பூட்கைக் கடன்கள், தவணைகட்டணம் செலுத்தும் முறைகள் மற்றும் கிளை அலுவலகங்களின் செயற்பாடு தொடர்பானவையாகும். விசாரணைகளின் கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் இதுபோன்ற அனைத்துப் புகார்களும் தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

## ஏனைய பரிந்துரைகள்

மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில், வியாபாரத்துடன் குறிப்பிடப்படாத பிற விடயங்கள் (49) முக்கியமாக நியாயமற்ற பணி நீக்கம்/ தடுப்புப்பட்டியல் மற்றும் முகவர்களின் கல்வித் தகுதிகள் புகார்தாரர்களுக்கு உதவ அல்லது விவகாரங்களைத் தீர்ப்பதற்கான சட்டத்தின் கீழ் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் அடிப்படையில், சாத்தியமான இடங்களில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

## காப்புறுதி முரண்பாடு தீர்த்தல் முறைமையை முறைப்படுத்தல்

ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கை அரசுக்கு மூலதன சந்தை மேம்பாட்டுத் திட்டத்திற்காக 2 தவணைகளில் கொள்கை அடிப்படையிலான கடனுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. முதலீட்டாளர் தளத்தின் விரிவாக்கம் மற்றும் பல்வகைப்படுத்தல் மூலம் சேமிப்பு மற்றும் முதலீட்டிற்கு இடையிலான ஒதுக்கீட்டு செயற்திறனை மேம்படுத்துவதன் மூலம் நிதி இடைநிலை மற்றும் வள அணிதிரட்டலில் மூலதன சந்தையின் பங்கை மேம்படுத்தவதற்கான மூலதன சந்தை அபிவிருத்தி வரவுசெலவுத்திட்டம் ஆதரவை வழங்குகின்றது. நிதி வெளியீடு செயல்படுத்துவதைப் பொறுத்து ஆணைக்குழு உட்பட முகவர்களை செயல்படுத்துவதன் மூலம் அடையாளம் காணப்பட்ட சில கொள்கை நடவடிக்கைகள், கொள்கை நடவடிக்கைகளை செயல்படுத்த ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து செயல்படுத்தும் முகவர் தொழில்நுட்ப உதவிகளைப் பெறுகின்றது.

டிரன்ச் 2ஜப் பொறுத்தவரை, ஆணைக்குழு தனது பரிந்துரைகளை ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கும் காப்புறுதித்துறைக்கு ஒரு முரண்பாடுகளைத் தீர்க்கும் குழுவை நிறுவி பணியாற்ற வேண்டும். ஜுலை 2018இல் சர்வதேச ஆலோசகர்களின் பரிந்துரைகளை கருத்தில் கொண்டு, சட்டத்தின் 98ஆவது பிரிவின் கீழ் ஆணைக்குழவில் ஒப்படைப்பதன் மூலம் தற்போதுள்ள காப்புறுதி ஒம்புட்ஸ்மன் திட்டத்தை முறைப்படுத்தவும் மேம்படுத்தவும் ஆணைக்குழு முடிவுசெய்துள்ளது. நவம்பர் 2018இல் முன்மொழியப்பட்ட காப்புறுதி வியாபார ஒம்புட்ஸ்மன் மையத்திற்கான வரைவு கட்டமைப்பு மற்றும் செயற்படுத்தல் திட்டம் குறித்து பூர்வாங்க தொழில் ஆலோசனை நடாத்தப்பட்டது. 2018ஆம் ஆண்டின் இறுதிக்குள் தொழிற்துறையின் கருத்துகள் பெறப்பட்டன, மேலும் இந்த திட்டத்தை முறைப்படுத்த ஆணைக்குழு தற்போது தொழிற்துறையுடன் கலந்துரையாடி வருகின்றது.

# சந்தை அபிவிருத்தி மற்றும் வெளியுறவுகள் பற்றிய மீளாய்வு

காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் அபிவிருத்திக்கு காப்புறுதித் தேவை மீதான பொது மக்களின் விழிப்புணர்வும் நம்பிக்கையும் ஊக்குவிக்கபப்படுதல் வேண்டும். தற்போதுள்ள மற்றும் வருங்கால பூட்கையாளர்கள் காப்புறுதித்துறையின் முக்கிய பங்குதாரர்களாக இருப்பதனால், அவர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கும், காப்புறுதி ஒப்பந்தத்தில் நுழையும் பொழுது தகவலறிந்த முடிவை எடுக்கும் நிலையில் இருப்பதற்கும் அறிவுடன் அதிகாரமளித்தல் வேண்டும். நாடு முழுவதிலும் பொது விழிப்புணர்வு பிரச்சாரங்கள் மூலம் பொது மக்களுக்கு காப்புறுதி குறித்த அறிவை மேம்படுத்த ஆணைக்குழு பாடுபடுகின்றது.

இந்த நோக்கத்தை தொடர, இலக்கு பார்வையாளர்களை அடைய ஆணைக்குழு பல்வேறு தகவல் தொடர்பு ஊடகங்களைப் பயன்படுத்தியது. தகவல்தொடர்பு ஊடகங்களின் விபரங்கள் மற்றும் மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பின்வருமாறு:

## விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்

### பிரதேச செயலகங்களில் நிகழ்ச்சித்திட்டங்கள்

இந்த நிகழ்ச்சிகள் பிரதேச செயலகங்களுடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டன. இத்தகைய திட்டங்களின் நோக்கம், கிராம அலுவலர்கள், காவல்துறை, மதுவரி, சமூர்த்தி அபிவிருத்தி, விவசாய மற்றும் கள அலுவலர்கள், அந்தந்த பிரதேச செயலங்களின் பணியாளர்கள் போன்ற பொது அலுவலர்களின் காப்பறுதி குறித்த அறிவை மேம்படுத்துவதாகும். ஆணைக்குழுவின் பங்கு (பங்கேற்பாளர்களுக்கு காப்புறுதிக் கட்டுப்பாட்டாளராக) பங்கேற்பாளர்களுக்கு ஆயுள் அல்லது சொத்துக்கான அபாயங்களை ஈடுகட்ட தேவையான காப்புறுதிக் கொள்கையை வைத்திருப்பதன் முக்கியத்தவம், காப்புறுதிக் கொள்கையாளரின் உரிமைகள் மற்றும் கடமைகள், காப்புறுதிப் பூட்கையை வாங்கும் போது மற்றும் பராமரிக்கும் போது மற்றும் காப்புறுதிக் கொள்கையின் கீழ் உரிமை கோரும் போது கருத்தில் கொள்ள வேண்டிய முக்கிய காரணிகள் பற்றி தெரியப்படுத்தப்படுவதாகும்.

பன்னிரெண்டு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் பிரதேச செயலக மட்டத்தில் சீதாவக்க, திவுலுபிட்டிய, பண்டாரகம, மட்டக்களப்பு, ஹபரதுாவ, மாதம்பே, ரிதிகம, அரநாயக்க, மன்னார், முலடியான மற்றும் பஸ்ஸர ஆகிய பிரதேச செயலகங்களைச் சேர்ந்த 773 கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கியது. அந்தப் பிரிவுகளைச் சேர்ந்த அண்ணளவாக 1,675 அரசாங்க அலுவலர்கள் பங்குபற்றினர்.



### ஏனைய நிகழ்ச்சித்திட்டங்கள்

பிரதேச செயலக மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட பிரதான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களுக்கு மேலதிகமாக, கீழ்வரும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களையும் பல்வேறுபட்ட குழுக்களுக்கு ஆணைக்குழு நடாத்தியது.

காப்புறுதி விழிப்புணர்வு என்பது கைத்தொழில் அபிவிருத்தியில் தாக்கத்தை உருவாக்கும் பிரதான காரணியாகும். காப்புறுதி மற்றும் இதன் இடரை பரிமாற்றும் பொறிமுறை நன்மைகள் தொடர்பாக விழிப்புணர்வு பற்றாக்குறை மக்களிடம் காணப்படுகின்றது. அத்துடன், காப்புறுதிச் சந்தையை ஊக்குவிப்பதற்காக, விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் பூட்கையை பெற்றுக் கொள்ளல் மற்றும் பராமரிக்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய பிரதான விடயங்களை விழிப்பூட்டுவதன் மூலம் தற்போதுள்ள மற்றும் உத்தேச காப்புறுதி வைப்பாளர்களின் விருப்பத்தை பாதுகாத்தலை நோக்காகக் கொண்டிருந்தன. திருப்திகரமான காப்புறுதி தகவலைப் பெற்றுக்கொள்வதற்கு அவசியமான விழிப்பூட்டல் போன்று காப்புறுதி கொள்கைகளின் கீழ் அவர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக காப்புறுதி பூட்கையாளர்கள் விழிப்பூட்டப்பட்டனர்.

- மே மாதம் கொழும்பு 12இல் அமைந்துள்ள ஹமீட் அல் ஹுஸ்னியா தேசிய பாடசாலையின் உயர்தர வணிகப் பிரிவு மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் ஜுன் மாதம் கடவத்த வித்தியாலோக்க வித்தியாலயத்திலும் விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டம் நடத்தப்பட்டது.
- மார்ச் மாதம் கொலொன்னாவை சலமுள்ள "லக்சந்த" வீட்டுத் திட்டத்தில் வசிப்போருக்கு விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது.
- ஜனவரி மாதம் சப்பரகமுவ பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற "முதலீட்டாளர்கள் நாள்" கண்காட்சியில் பங்குபற்றியது.



### மின்னிலத்திரனியல் ஊடகங்கள் ஊடான விழிப்புணர்வு

பொது மக்கள் விழிப்புணர்வுக்கு வினைத்திறன் உள்ள ஊடகமாக மின்னிலத்திரனியலை சபை அடையாளம் கண்டுகொண்டது. அதனால், மீளாய்வுக்குட்பட்ட காலத்தில் ஆணைக்குழு இரு தொலைக்காட்சி நிகழ்ச்சிகளையும் இரு வானொலி நிகழ்ச்சிகளையும் நடாத்தியது. காப்புறுதி விடயங்கள் தொடாபான விழிப்புணர்வை ஏற்படுத்தவதற்கு கீழ்வரும் நிகழ்ச்சிகளில் ஆணைக்குழுவின் அலுவலர்கள் பங்குபற்றினர்.

### தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

- சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பு சிங்கள மொழியில் அதன் பிரதான செய்தியின் போது 'News segment' ஐ ஒளிபரப்பியது.
- இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் சனல் ஐ பதிவுசெய்யப்பட்ட 'Business Today" கலந்துரையாடலை ஒளிபரப்பியது.

### வானொலி நிகழ்ச்சிகள்

- இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் சிட்டி எப்எம்மில் 'Subharathi' நேரடி நிகழ்ச்சி ஒலிபரப்பப்பட்டது.
- இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் சிட்டி எப்எம்மில் செய்திகளின் பின்னர் ஒலிபரப்பாகும் முன்பதிவு செய்யப்பட்ட 'News in Brief' இல் ஒலிபரப்பப்பட்டது.

### அச்சக ஊடகத்தின் ஊடான விழிப்பூட்டல்

ஆணைக்குழு கீழ்வரும் பத்திரிகை வெளியீடுகளையும் பத்திரிகை அறிவித்தல்களையும் வெளியிட்டது.

### பத்திரிகை வெளியீடுகள்


- 2017ஆம் ஆண்டுக்கான காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் செயலாற்றுகை
- 2018 1ஆம் காலாண்டுக்கான காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் செயலாற்றுகை
- 2018 இன் அரையாண்டுக்கான காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் செயலாற்றுகை
- 2018 3ஆம் காலாண்டுக்கான காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் செயலாற்றுகை
- புதிய தலைவரின் நியமனம்
- புதிய பணிப்பாளர் சபை அங்கத்தவர்களின் நியமனம்.

### பத்திரிகை செய்திகள்

- பொது மக்களுக்கான விசேட அறிவித்தலின் கீழ் வருடத்திற்கான பதிவுசெய்த காப்புறுதிக் கம்பனிகள் மற்றும் காப்புறுதி தரகர் கம்பனிகளின் விபரங்களை வெளியிட்டது.
- காப்புறுதி ஆலோசகர்கள் - நீங்கள் அவர்களைப் பற்றியும் அவர்களின் வகிபாகத்தைப் பற்றியும் உங்களுக்கு தெரியுமா?

### ஏனைய வெளியீடுகள்

இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு, காப்புறுதி பூட்கையாளர்களின் உரிமை மற்றும் கடமைகள் மற்றும் சுகாதாரக் காப்புறுதி எனும் தற்போதுள்ள கையேடுகள் மற்றும் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் தகவல் - காப்புறுதி பூட்கையைக் கொள்வனவு செய்யும் போது கவனத்தில் கொள்ள வேண்டியவை பற்றிய பதாகைகள் என்பன மீள அச்சிடப்பட்டு மீளாய்வு வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சிகளின் போது விநியோகிக்கப்பட்டது. மேலும் காப்புறுதிப் பூட்கைகளுடன் இணைந்த முதலீடுகள் எனும் கையேடு அச்சிடப்பட்டு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளின் போது விநியோகிக்கப்பட்டது.




## தேசிய காப்புறுதி நாள்

ஆணைக்குழு, தேசிய காப்புறுதி நாளைக் கொண்டாடும் முகமாக செப்டெம்பர் 1ஆம் திகதி காப்புறுதியின் முக்கியத்துவம் மீதான பொது மக்களின் விழிப்புணர்வை உருவாக்கும் நோக்கத்துடன் பல்வேறு நடவடிக்கைகளை ஒழுங்குசெய்ததுடன், செப்டெம்பர் மாதம் காப்புறுதி விழிப்புணர்வு மாதமாக கொண்டாடப்பட்டது.

(1) தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

(அ) சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பில் மல் பார நேரடி நிகழ்ச்சி ஒளிபரப்பப்பட்டது.

(ஆ) இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தில் சன்ஹின்ட நேரடி நிகழ்ச்சி ஒளிபரப்பப்பட்டது.

(2) வானொலி நிகழ்ச்சிகள்

(அ) 'SLBC News Package Programme' இலங்கை ஒளிபரப்பு கூட்டுத்தாபனத்தின் அனைத்து சனல்களிலும் பிரதான செய்தியின் பின்னர் முன்பதிவு செய்யப்பட்ட குறுந் தகவல்கள் ஒலிபரப்பப்பட்டது.

(ஆ) SLBC News Package Programme' இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் வர்த்தக சனலில் 'Sara Prabha Gira' நேரடி கலந்துரையாடல் ஒலிபரப்பப்பட்டது.

(3) **பத்திரிகை ஆக்கம்**

(அ) தேசிய காப்புறுதி நாள் தொடர்பான பத்திரிகை ஆக்கம் வெளியானது.

## ஆசிய அபிவிருத்தி வங்கியின் மூலதன சந்தை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கை அரசுக்கு மூலதன சந்தை மேம்பாட்டுத் திட்டத்திற்காக 2 தவணைகளில் கொள்கை அடிப்படையிலான கடனுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. முதலீட்டாளர் தளத்தின் விரிவாக்கம் மற்றும் பல்வகைப்படுத்தல் மூலம் சேமிப்பு மற்றும் முதலீட்டிற்கு இடையிலான ஒதுக்கீட்டு செயற்திறனை மேம்படுத்துவதன் மூலம் நிதி இடைநிலை மற்றும் வள அணிதிரட்டலில் மூலதன சந்தையின் பங்கை மேம்படுத்தவதற்கான மூலதன சந்தை அபிவிருத்தி வரவுசெலவுத்திட்டம் ஆதரவை வழங்குகின்றது. நிதி வெளியீடு செயல்படுத்துவதைப் பொறுத்து ஆணைக்குழு உட்பட முகவர்களை செயல்படுத்தவதன் மூலம் அடையாளம் காணப்பட்ட சில கொள்கை நடவடிக்கைகள், கொள்கை நடவடிக்கைகளை செயல்படுத்த ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து செயல்படுத்தும் முகவர் தொழில்நுட்ப உதவிகளைப் பெறுகின்றது.

பகுதி 2இன் கீழ், நிதி கல்வியறிவை வலுப்படுத்த சில்லறை கல்விக்கான விரிவான மூலோபாயத்தை செயல்படுத்த ஆணைக்கழு தொடங்கியிருக்க வேண்டும்.

ஆலோசகர் சமர்ப்பித்த கல்வி உத்தி மற்றும் அமுலாக்கத் திட்டத்தை ஆராய்ந்த பின்னர், ஆலோசகரின் சமர்ப்பிப்பை மேலும் மீளாய்வு செய்யவும், முன்மொழியப்பட்ட நடவடிக்கைகளை ஒப்புக்கொள்ளப்பட்ட கொள்கை நடவடிக்கைகளுக்கு ஏற்ப இருப்பதை உறுதி செய்வதற்கு தேவையான மேலதிக தகவல்கள் விளக்கங்களை (ஆலோசகருக்கு) தெரிவிக்கவும் ஆணைக்குழு அறிவுறுத்தியது. இதற்கு பதிலளிக்கும் விதமாக, உள்ளூர் சூழல் மற்றும் வளங்களின் வரம்புகளைக் கருத்தில் கொண்டு கல்வி மூலோபாயம் திருத்தப்பட வேண்டும் என்று ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஆலோசகர்கள் ஒப்புக்கொண்டனர்.

## ஏனைய பங்குபற்றல்கள்

### பொது மக்கள் விசாரணைகளுக்கு பதிலளித்தல்.

மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில், தகவல்களைக் கோருவது மற்றும் காப்புறுதி தொடர்பான வழிகாட்டுதல்களைத் தேடுவது தொடர்பாக பொது மக்கள், பூட்கையாளர்கள் மற்றம் பங்குதாரர்களிடமிருந்து கிடைத்த பல விசாரணைகளில் ஆணைக்குழு கலந்து கொண்டது.

### ஆசிய காப்புறுதி மீளாய்வுடன் தலைவரின் நேர்காணல்

ஆணைக்குழு தலைவருடன் நேர்காணலை மேற்கொள்வதற்கு சந்தர்ப்பத்தை உருவாக்கிக் கொடுத்ததுடன், அது 2018 ஒகஸ்ட் மாத சஞ்சிகையில் வெளிவந்தது.

### இலங்கை காப்புறுதி நிறுவனத்தினால் முகவர் ஆட்சேர்ப்புக்கு முன் நடாத்தப்படும் பரீட்சை தொடர்பான பாடவிதானத்தை மீளாய்வு செய்தல்

தற்போதுள்ள பாடப் புத்தகங்கள் மற்றும் மாதிரி வினாத்தாள்கள் என்பவற்றை ஆணைக்குழு பரீட்சித்ததுடன், முகவர் ஆட்சேர்ப்புக்கு முன் நடாத்தப்படும் பரீட்சையை மேம்படுத்துவதற்காக சில மாற்றங்களை முன்மொழிந்தது.

# நிருவாக மீளாய்வு

## பணிக் குழுவினர்

எந்த ஒரு நிறுவனத்தின் வெற்றியும் அதன் நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்ட மக்களின் திறமையிலேயே பெரும் அளவில் தங்கி இருக்கின்றது. எனவே, சபையின் வெற்றிகரமான உத்திகளுக்கு முதுகெலும்பாக இருப்பது மனித மூலவளம் என நாங்கள் நம்புகின்றோம்.

காப்புறுதி வைப்பாளர்கள் மற்றும் உத்தேச காப்புறுதி வைப்பாளர்கள் அனைவரது ஆர்வங்களையும் பாதுகாக்கும் நோக்கத்துடன். இலங்கையின் காப்புறுதி கைத்தொழில் நேர்மையுடன் நடத்தப்படுவதை உறுதி செய்யும் ஒட்டு மொத்த நோக்கத்தை அடைவதற்கு தனது கடமையை நிறைவேற்ற அவசியமான நடவடிக்கைகளை அடையாளம் காணுகின்ற வகையில் தனது நிறுவனக் கட்டமைப்பை ஆணைக்குழு நிறுவியுள்ளது.

தேவைப்படும் தொழில் சார்ந்தவர்களை ஏற்ற நேரத்தில் நியமிப்பதன் ஊடாக, மனித வளத்தை வலுப்படுத்தும் நோக்கத்துடன். மீளாய்வின் கீழ் வரும் ஆண்டின் போது அனேக முக்கியமான முன்னெடுப்புகளை சபை எடுத்தது. இத்தகைய முன்னெடுப்புகளை சந்திப்பதற்காக, மீளாய்வின் கீழ் வரும் ஆண்டின் போது நிரந்தர பதவிகளுக்கு ஒரு பணிப்பாளர் மற்றும் ஐந்து நிறைவேற்று அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். 2018 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு, சபையின் மொத்த பணியாட் தொகுதியினரின் வலு 45 ஆகும்.

கீழே உள்ள அட்டவணையில் பணியாட் தொகுதியினரின் கல்வி மற்றும் தொழில் சார்ந்த தகைமைகள் காட்டப்பட்டுள்ளது.

## பயிற்சி

நிறுவனத்தின் இலக்குகளை அடைவதற்கு ஊழியர்கள் அறிவையும் தொழில்சார்ந்த திறனையும் மேம்படுத்திக் கொள்வதற்கு பயிற்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பது சபையின் பூட்கையாகும். இவ்வருடக் காலப்பகுதியில் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் பயிற்சி சந்தர்ப்பங்கள் அளிக்கப்படுவதற்காக மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வகைப்படுத்தல் | 2018<br>இ.ரூபா | 2017<br>இ.ரூபா |
|---|---|---|
| உள்நாட்டுப் பயிற்சி | 1,264,144/- | 1,297,577/- |
| மாநாடுகள் மற்றும் வெளிநாட்டுப் பயிற்சி | 10,589,034/- | 4,741,449/- |

## பணியாட் தொகுதியினரின் நலன்கள்

நிறுவனத்தின் பணியாளர்களின் நலன்களில் அக்கறை காட்டுவது, அவர்கள் மத்தியில் ஊக்குவிப்பை உருவாக்குவதிலும் அவர்களின் நேர்மையை அதிகரிப்பதிலும் முக்கிய காரணியாக செயற்படுகின்றது. எனவே, உள்ளேயும், வெளியிலும் கிடைக்கும் மருத்துவத் திட்டங்கள், சுய விபத்து காப்புறுதி பூட்கை, வாகனம் மற்றும் துயரிடர் கடன் திட்டங்கள், பண்டிகை முற்பணக் கொடுப்பனவுகள் உள்ளடங்கலாக கவர்ச்சிகரமான நலன்புரி பொதிகள் ஆகியவற்றை சபை வழங்குகின்றது. மேலும் உள்ளக பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் வருடாந்த ஒன்று கூடல் போன்றவற்றை ஒழுங்குபடுத்துவதன் மூலம் பணியாட் தொகுதியினருடனும், அவர்களின் குடும்பத்தினருடனும் நல்லுறவுகளை விருத்தி செய்வதற்கான வாய்ப்புகளையும் சபை வழங்குகின்றது.

| ஊழியர்களின் எண்ணிக்கை | கல்வி/சார்ந்த/தொழில் சார்ந்த தகைமைகள் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | பட்டப்பின்படிப்பு பட்டங்களும் முதலாவது பட்டமும், மற்றும் தொழில் சார்ந்த தகைமைகளும | பட்டப்பின் படிப்பு பட்டங்களும் மற்றும் தொழில் சார்ந்த தகைமைகளும | பட்டப் பின்படிப்பு மற்றும் முதலாவது பட்டம் | முதலாவது பட்டமும் மற்றும் தொழில் சார்ந்த தகைமைகளும | முதலாவது பட்டம் | தொழில் சார்ந்த தகைமைகள் |
| 45 | 09 | 03 | 06 | 04 | 09 | 03 |

# நிதி மீளாய்வு


## காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியம் (PPF)

காப்புறுதி பூட்கையாளர்களின் பாதுகாப்பு நிதியத்திற்காக சேகரிக்கப்படுகின்ற செஸ் ஆணைக்குழுவினால்) விவேகமான முறையில் சிறந்த வருவாயை ஈட்டுவதற்காக சபையினால் முதலீடு செய்யப்படுகின்றது. வரைபு 01 செஸ் சேகரிப்பு மற்றும் ஈட்டப்பட்ட வருமானம் ஆகியவற்றை விபரமாக காட்டுகின்றது.

கடந்த ஐந்து ஆண்டுகளுக்கான செஸ் வருமானத்தின் வளர்ச்சியை வரைபு 1 வெளிப்படுத்துகின்றது. சாதகமான சந்தை நிலைமைகள் காரணத்தினால் முதலீட்டு வருமானம் 2016ஆம் ஆண்டில் இருந்து 2018 வரை குறிப்பிட்டளவில் வளர்ச்சி அடைந்துள்ளதை இது காட்டுகின்றது.


கடந்த ஐந்து வருடங்களில் காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியத்தின் பெறுமதி அதிகரித்திருப்பதை வரைபு 2 காட்டுகின்றது.

வரைபடம் 01
2014-2018 வரையிலான காலப்பகுதியில் பெற்றப்பட்ட செஸ் வருமானமும் முதலீட்டு வருமானமும்





| | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|---|
| செஸ் வருமானம் (இரூபா.மில்) | 274 | 322 | 408 | 418 | 479 |
| முதலீட்டு வருமானம் (இரூபா.மில்) | 158 | 145 | 229 | 372 | 455 |

வரைபடம் 2
2014 – 2018 வரையான காலப்பகுதிக்கு காப்புறுதி வைப்பாளரின் பாதுகாப்பு நிதியத்தின் பெறுமதி




| | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|---|
| காப்புறுதி வைப்பாளின் பாதுகாப்பு நிதியத்தின் மதிப்பு (இரூபா.மில்) | 2,183 | 2,643 | 3,292 | 4,110 | 5,043 |

வரைபடம் 3
2018 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியத்தின் சொத்துகளின் தொகுப்பு



31 டிசம்பர் 2018இல் சொத்துக்களின் கலவை கீழே விபரிக்கப்பட்டுள்ளது.

### சபையின் வருமானம்

சபையின் அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் பின்வரும் வழிவகைகள் மூலம் கிடைக்கப் பெறுகின்றன.

- காப்புறுதி வழங்குனர் மற்றும் காப்புறுதி தரகுக் கம்பனிகளிடம் இருந்து கிடைக்கும் பதிவுக் கட்டணம்.
- காப்புறுதி கம்பனிகளிடம் இருந்து அறவிடப்படும் வருடாந்தக் கட்டணம்.
- காப்புறுதித் தரகுக் கம்பனிகளின் பதிவுகளை புதுப்பிக்கும் வருடாந்த பதிவு கட்டணம்.
- மிகை நிதியங்களை முதலீடு செய்வதன் மூலமான வட்டி வருமானம்.

2014 இலிருந்து 2018 வரையான காலப்பகுதியில் கிடைக்கப் பெற்ற அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தின் பிரிவுகளை வரைபு 4 காட்டுகின்றது.


அறவிட வேண்டிய வருடாந்த கட்டண வீதம் 0.75% இருந்து 0.1% வீதமாக அதிகரிக்கப்பட்டதனால், 2015ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் வருடாந்த கட்டணத்தில் அதிகரிப்பு காணப்பட்டது.

### சபையின் செலவினம்

2017ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2018ஆம் ஆண்டு செலவானது 14.4% வீதத்தினால் அதிகரித்துள்ளது. ஆணைக்குழு 2018ஆம் ஆண்டில் இ.ரூபா 7.3 மில்லியன் மிகையைப் பதிவு செய்துள்ளது. கடந்த காலங்களில் சட்டத்தின் படி வருமானத்திற்கும் செலவினங்களுக்குமான பற்றாக்குறை நிறுவத்திடமிருந்து நிதியளிக்கப்பட்டது, இந்த மிகை பூட்கையாளர் பாதுகாப்பு நிதிக்கு மாற்றப்படுதல் வேண்டும்.


2014 இலிருந்து 2018 வரையான காலப்பகுதியில் சபையின் மொத்தச் செலவை வரைபு 5 காட்டுகின்றது.

வரைபடம் 4
2014 - 2018 வரையிலான காலப் பகுதிக்கான சபையின் வருமானம்




| | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|---|
| ஆண்டிற்கான கட்டணம் (ரூ.மில்) | 73 | 104 | 126 | 142 | 168 |
| பதிவு செய்தல் மற்றும் புதுப்பித்தல் கட்டணம் (ரூ.மில்) | 4 | 9 | 5 | 9 | 8 |
| ஏனைய வருமானம் (ரூ.மில்) | 2 | 2 | 3 | 3 | 3 |
| கொடைகளின் அங்கீகாரம் (ரூ.மில்.) | 4 | 5 | 2 | 1 | 2 |
| மொத்த வருமானம் (ரூ.மில்) | 83 | 119 | 136 | 155 | 181 |

வரைபடம் 05
2014-2018 வரையான காலப்பகுதியில் சபையின் மொத்த செலவினம் (இ.ரூபா.மில்)




| | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|---|
| மொத்த செலவினங்கள் (இ.ரூபா.மில்) | 107 | 123 | 124 | 125 | 143 |



# நிதித் தகவல்கள்

# நிதி நிலைமை தொடர்பான கூற்று

2018 டிசம்பர் 31 இல் உள்ளவாறு

| | குறிப்பு | 31.12.18 இல் ரூபா | 31.12.17 இல் மீள் கூற்று ரூபா |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறையற்ற சொத்துக்கள்** | | | |
| ஆதனங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | 1 | 15,689,425 | 7,324,758 |
| காப்புறுதிக் கொள்கையாளர்களின் பாதுகாப்பு நிதியம் - வாடகை, மின்சார வைப்புகள் மற்றும் திறைசேரி முறிகள் | 2 | 1,086,252,949 | 1,086,252,949 |
| **மொத்த நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | 1,101,942,374 | 1,093,577,707 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| தொக்குகள் | 3 | 522,620 | 347,299 |
| காப்புறுதிக் கொள்கையாளர்களின் பாதுகாப்பு நிதியம் - முதலீடுகள் மற்றும் ஏனையவை | 2 | 3,956,513,320 | 3,023,706,256 |
| ஏனைய நடைமுறைச் சொத்துக்கள் | 4 | 16,007,020 | 12,194,049 |
| அரசாங்க பிணையங்களில் உள்ள முதலீடுகள் | | 70,700,000 | 42,000,000 |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 5 | 2,711,448 | 5,796,222 |
| **மொத்த நடைமுறைச் சொத்துக்கள்** | | 4,046,454,409 | 3,084,043,825 |
| **மொத்த சொத்துக்கள்** | | 5,148,396,782 | 4,177,621,532 |
| **ஒதுக்குகளும் பொறுப்புகளும்** | | | |
| **ஒதுக்குகள்** | | | |
| ஒன்றுதிரட்டிய நிதியம் | 16 | 41,337,937 | - |
| காப்புறுதிப்பூட்கையாளர் பாதுகாப்பு நிதியம் | 6 | 5,042,765,873 | 4,109,959,205 |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கு | | 17,689,652 | 7,389,652 |
| **மொத்த ஒதுக்குகள் மற்றும் நிதியங்கள்** | | 5,101,793,462 | 4,117,348,857 |
| **பொறுப்புகள்** | | | |
| **நடைமுறையற்ற பொறுப்புக்கள்** | | | |
| மானியம் | 7 | 5,389,425 | 5,718,532 |
| ஓய்வு நலக் கடப்பாடு | 8 | 12,155,897 | 10,902,547 |
| **மொத்த நடைமுறையல்லா பொறுப்புகள்** | | 17,545,322 | 16,621,079 |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| முன்னரே பெற்றுக்கொண்டவை | | 14,161,815 | 7,358,099 |
| ஏனைய நடைமுறைப் பொறுப்புக்கள் | 9 | 14,896,183 | 36,293,496 |
| **மொத்த நடைமுறைப் பொறுப்புகள்** | | 29,057,998 | 43,651,596 |
| **மொத்த ஒதுக்குகளும் பொறுப்புகளும்** | | 5,148,396,782 | 4,177,621,532 |

இந்தக் கணக்குக் கூற்றுக்களைத் தயார் செய்வதிலும், சமர்ப்பிப்பதிலும் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல்கள் ஆணைக்குழுவின் அங்கத்தவர்களே பொறுப்புடையவர்களாவர்.

மேலே கூறப்பட்ட நிதிநிலைமைக் கூற்று, கணக்கியல் கொள்கைகள் மற்றும் 91 தொடக்கம் 99 ஆம் பக்கம் வரையிலான குறிப்புகளோடு சேர்த்து வாசிக்கப்படல் வேண்டும்.

மனோ தித்தவெல்ல
தலைவர்

யுதிஸ்ரன் கனகசபை
அங்கத்தவர்

தமயந்தி பெர்னாண்டோ
பணிப்பாளர் நாயகம்

சதீஸ்குமார்
பணிப்பாளர் நிதி மற்றும் நிர்வாகம்

கொழும்பு, ஸ்ரீலங்கா
26 பெப்பரவரி 2019

# நிதிச் செயற்பாடு பற்றிய அறிக்கை

2018 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடம்

| | குறிப்பு | 31.12.18 இல் முடிவுற்ற வருடம் ரூபா | 31.12.17 இல் முடிவுற்ற வருடம் ரூபா |
|---|---|---|---|
| வருமானம் | | | |
| வருவாய் | 10 | 176,168,849 | 150,783,219 |
| மானிய அங்கீகாரம் | 7 | 1,929,052 | 1,455,019 |
| வட்டி வருமானம் | | 7,439,303 | 4,486,296 |
| ஏனைய வருமானம் | 11 | 277,233 | 302,826 |
| மொத்த வருமானம் | | 185,814,437 | 157,027,360 |
| செலவுகள் | | | |
| பணியாளர் தொடர்பான செலவுகள் | 12 | (79,009,564) | (69,941,211) |
| தொழில்முறை ரீதியான கட்டணங்கள் | 13 | (5,035,081) | (2,000,000) |
| செயற்பாட்டுக் கட்டணங்கள் | 14 | (58,453,496) | (53,212,244) |
| நிதி மற்றும் ஏனையவை | 15 | (155,451) | (114,876) |
| காப்புறுதிக் கொள்கையாளர்களின் பாதுகாப்பு நிதியத்திற்கு மாற்றப்பட்ட Surplus மொத்த செலவுகள் | 6 | - | (31,220,674) |
| மொத்தச் செலவுகள் | | (142,653,592) | (156,489,005) |
| நிகர மிகை / (பற்றாக்குறை) வரிக்கு முன் | | 43,160,845 | 538,355 |
| வரி விதிப்பு | | (1,822,908) | (538,355) |
| நிகர மிகை / (பற்றாக்குறை) வரிக்குப் பின் | | 41,337,937 | - |
| வருடத்திற்கான நிகர Surplus | | 41,337,937 | - |

91 தொடக்கம் 99 வரையிலான பக்கங்களில் காணப்படும் கணக்கியல் கொள்கைகளும், குறிப்புகளும் இந்த நிதிக்கூற்றின் ஒரு பகுதியாக அமைந்திருக்கும்.

# உரிமைப்பங்கு/ தேறிய சொத்துகளில் ஏற்பட்ட மாற்றம் தொடர்பான கூற்று

31 டிசம்பர் 2018 முடிவடைந்த ஆண்டுக்கான

| | மீள்மதிப்பீட்டு ஒதுக்குகள் | ஒன்றுதிரட்டிய மிகைகள்/ (பற்றாக்குறைகள்) | மொத்தம் |
|---|---|---|---|
| 31 டிசம்பர் 2017 அன்று மீதி | 7,389,652 | - | 7,389,652 |
| ஆதன மீள்மதிப்பீட்டு மீது 2018 இல் சொத்துக்களில் ஏற்பட்ட மாற்றம் | 10,300,000 | - | 10,300,000 |
| வருடத்தின் மிகை | - | 41,337,937 | 41,337,937 |
| 31 டிசம்பர் 2018 அன்று மீதி | 17,689,652 | 41,337,937 | 59,027,589 |

# நிதிப் பாய்ச்சல் அறிக்கை

2018 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடம்

| | குறிப்பு | 31.12.18 இல் முடிவுற்ற வருடம் ரூபா | 31.12.17 இல் முடிவுற்ற வருடம் ரூபா |
|---|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து நிதிப் பாய்ச்சல்கள்** | | | |
| இக்காலப்பகுதிக்கான நிகர அதிகரிப்பு/(குறைவு) | 16 | 41,337,937 | - |
| பெறுமானத் தேய்வுக்கான ஏற்பாடு | | 3,535,279 | 3,955,019 |
| ஓய்வு நலனுக்கான ஏற்பாடு | | 2,014,024 | 1,893,706 |
| அகற்றல் மீதான இலாபம்/(நட்டம்) | | - | (41,449) |
| மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவு - ஓய்வு நலன் | | (760,674) | (833,784) |
| மானிய அங்கீகாரம் | | (1,929,052) | (1,455,019) |
| வருமான வரி | | 1,822,908 | 538,355 |
| வட்டி வருமானம் | | (7,439,303) | (4,486,296) |
| நடைமுறை மூலதன மாற்றங்களுக்கு முன்னரான நிகர அதிகரிப்பு | | 38,581,119 | (429,467) |
| நடைமுறை மூலதனத்தில் மாற்றம் | | | |
| தொக்குகளில் குறைவு/(அதிகரிப்பு) | | (175,322) | 45,735 |
| பெறுவனவுகளில் குறைவு/(அதிகரிப்பு) | | (4,482,480) | 1,289,668 |
| முற்பணங்களில் அதிகரிப்பு/(குறைவு) | | 6,803,715 | (880,694) |
| கடன் வழங்குநர் மற்றும் சேர்த்தல்களுக்கான அதிகரிப்பு/(குறைவு) | | (21,397,313) | 15,852,619 |
| செயற்பாட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட நிதிப் பாய்ச்சல் | | (19,251,399) | 16,307,328 |
| செயற்பாட்டு நடவடிக்கைகளில் நிகர நிதிப் பாய்ச்சல்கள் | | 19,329,720 | 15,877,861 |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் (பயன்படுத்தப்பட்ட)/நிதிப் பாய்ச்சல்கள்** | | | |
| அரசாங்க பிணையங்களில் முதலீடு | | (28,700,000) | (19,300,000) |
| வட்டி வருமானம் | | 6,285,506 | 3,969,678 |
| ஆதனங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரண விற்பனை மூலம் பெற்ற வருமானம் | | - | 41,449 |
| ஆதனங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு | | (1,599,945) | (3,650,319) |
| முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட நிகர நிதி | | (24,014,439) | (18,939,191) |
| **நிதியிடல் நடவடிக்கைகள் மீதான நிதிப் பாய்ச்சல்** | | | |
| காப்புறுதிக் கொள்கையாளர் பாதுகாப்பு நிதியத்தில் மாற்றப்பட்ட மூலதனம் | | 1,599,945 | 3,650,319 |
| நிதியிடல் நடவடிக்கைகள் மீதான நிகர நிதிப் பாய்ச்சல்கள் | | 1,599,945 | 3,650,319 |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளில் நிகர அதிகரிப்பு/(குறைவு) | | (3,084,774) | 588,988 |
| வருட ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்குச் சமமானவை | | 5,796,222 | 5,207,234 |
| வருட இறுதியில் காசு மற்றும் காசுக்குச் சமமானவை | | 2,711,448 | 5,796,222 |
| வங்கியிலும் கையிலுமுள்ள காசு | 5 & 17 | 2,711,448 | 5,796,222 |

91 தொடக்கம் 99 வரையிலான பக்கங்களில் காணப்படும் கணக்கியல் கொள்கைகளும், குறிப்புகளும் இந்த நிதிக்கூற்றின் ஒரு பகுதியாக அமைந்திருக்கும்.

# காப்புறுதிக் கொள்கையாளர்களின் பாதுகாப்பு நிதியம் நிதிப் பாய்ச்சல் அறிக்கை

2018 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடம்

| | குறிப்பு | 31.12.18 இல் முடிவுற்ற வருடம் ரூபா | 31.12.17 இல் முடிவுற்ற வருடம் ரூபா |
|---|---|---|---|
| செயற்பாட்டு நடவடிக்கைகள் மீதான நிதிப் பாய்ச்சல் | | | |
| காப்புறுதிக் கொள்கையாளர் நிதியத்தில் நிகர அதிகரிப்பு | | 932,807,064 | 818,093,839 |
| நடைமுறை மூலதன மாற்றங்களுக்கு முன்னரான நிகர அதிகரிப்பு | | 932,807,064 | 818,093,839 |
| நடைமுறை மூலதனத்தில் மாற்றம் | | | |
| அரசாங்க பிணையங்களில் பெறவேண்டிய வட்டி குறைவு/(அதிகரிப்பு) | | (53,659,167) | (68,356,404) |
| பெறவேண்டிய வீத வரியில் குறைவு/(அதிகரிப்பு) | | (2,372,466) | (15,572,411) |
| வாடகை வைப்பில் குறைவு/(அதிகரிப்பு) | | - | 5,165,931 |
| PPF இலிருந்து மாற்றப்பட வேண்டிய அதிகரித்த தொகை (குறைவு)/அதிகரிப்பு | | 29,810,751 | (16,376,099) |
| | | (26,220,882) | (95,138,983) |
| செயற்பாட்டு நடவடிக்கைகளில் நிகர காசு | | 906,586,182 | 722,954,856 |
| முதலீட்டு நடவடிக்கையில்/நிதிப் பாய்ச்சல் (பயன்படுத்தப்பட்ட) | | | |
| அரசாங்க பிணையங்களில் முதலீடுகள் | | - | 1,049,400,000 |
| நிலையான வைப்புகளில் முதலீடுகள் | | (906,097,000) | (1,772,300,000) |
| முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்து நிகர காசு | | (906,097,000) | (722,900,000) |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளில் நிகர அதிகரிப்பு/(குறைவு) | | 489,182 | 54,856 |
| வருட ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்குச் சமமானவை | | 558,124 | 503,267 |
| வருட இறுதியில் காசு மற்றும் காசுக்குச் சமமானவை | | 1,047,306 | 558,124 |
| வங்கியிலுள்ள காசு | 2 & 17 | 1,047,306 | 558,124 |

91 தொடக்கம் 99 வரையிலான பக்கங்களில் காணப்படும் கணக்கியல் கொள்கைகளும், குறிப்புகளும் இந்த நிதிக்கூற்றின் ஒரு பகுதியாக அமைந்திருக்கும்.

# கணக்கீட்டுக் கொள்கைகள்

## 1. முக்கியத்துவம் வாய்ந்த கணக்கீட்டுக் கொள்கைகள்

### 1.1 தயாரித்தலுக்கான அடிப்படை

ஆணைக்குழுவின் நிதிக் கூற்றுக்கள், இலங்கை ரூபாவில் கிட்டிய தொகைக்குச் சீரமைக்கப்பட்டுச் சமர்ப்பிக்கப்பட்டதோடு, அது, வரலாற்று ரீதியிலான அடிப்படையில் தயாரிக்கப்பட்டது.

பொருத்தமான இடங்களில் இயைபான கணக்கியல் கொள்கைகள் பின்னிணைப்பு குறிப்புக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

### 1.2 இணக்கம் பற்றிய கூற்று

இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல்கள் ஆணைக்குழுவின் நிதிக் கூற்றுக்கள், இலங்கை பகிரங்கத்துறை கணக்கியல் நியமங்களுக்கு அமைவாக தயாரிக்கப்பட்டதோடு அது, கூறப்பட்ட நியமங்களுடன் இணங்கியுள்ளது.

### 1.3 தொடந்து செல்லும் கரிசனை

ஆணைக்குழு உறுப்பினர்கள், இந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, தொடர்ந்து செல்லும் கரிசனை அடிப்படையில் ஆணைக்குழு தொடர்ந்து இயங்குவதற்கான தகைமை உள்ளதா என்பதை மதிப்பீடு செய்துள்ளனர். ஆணைக்குவின் உறுப்பினர்கள், IRCSL அதன் செயற்பாட்டைத் தொடரும் எனவும், எதிர்பார்க்கக்கூடிய எதிர்கால நியதிச் சட்டக் கடமைகளைப் பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்கும் என்ற நியாயமான உறுதிப்பாட்டுடன் உள்ளனர். எதிர்காலம் பற்றிய அனைத்துத் தகவல்களையும் கருத்திற் கொண்ட பின்னர் IRCSL அதன் செயற்பாடுகளை முடிவுக்கு கொண்டுவர வேண்டிய தேவை ஒன்று உள்ளது என்பதை எதிர்பார்க்கவில்லை. இதற்கமைவாக IRCSL அதன் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதில் தொடர்ந்து செல்லும் கரிசனை என்பதை தொடர்ந்து தழுவுகிறது.

### 1.4 அறிக்கையிடும் காலப் பகுதியின் பின்னரான நிகழ்வுகள்

நிதிக் கூற்றுக்களில் தேவையான இடங்களில் அறிக்கையிடப்பட்ட திகதியின் பின்னர் நடைபெற்ற அனைத்து முக்கிய சம்பவங்களும் கருத்திற் கொள்ளப்பட்டு, பொருத்தமான சீராக்கங்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 1.5 ஒப்பீட்டு இலக்கங்கள்

தற்போதைய நிதியாண்டில் சமர்ப்பிக்கப்பட்டவற்றில் ஏற்பட்ட மாற்றங்களோடு இணங்கிச் செல்வதற்காக, ஒப்பீட்டு எண்ணிக்கைகள் மீளக் குறிப்பிடப்பட்டுள்ளன.

### 1.6 வரி விதிப்பு

2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் எற்பாடுகளுக்கு அமைவாக வருமான வரி ஏற்பாடுகள் கணக்கிடப்பட்டுள்ளன.

பங்கிலாபம் அல்லது வட்டியில் இருந்து பெறப்படும் இலாபங்கள் அல்லது வருமானங்கள் தவிர்ந்த ஏனையவற்றுக்கு ஆணைக்குழு வருமான வரி விலக்களிப்பைப் பெற்றுள்ளது.

### 1.7 வெளிநாட்டு நாணயத்தை மாற்றுதல்

ஏதேனும் வெளிநாட்டு நாணயப் பரிமாற்ற நடவடிக்கைகள் இருப்பின், கொடுக்கல் வாங்கல் நடைபெற்ற வேளையில் இருந்த நாணயமாற்று வீதத்தின் அடிப்படையில் அவை, அறிக்கையிடும் நாணயமான இலங்கை ரூபாவுக்கு மாற்றப்பட்டுள்ளது.

## 2. சொத்துக்களும் மதிப்பீட்டு அடிப்படைகளும்

### 2.1 ஆதனங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள்

#### உரிமை கொள்ளப்பட்ட ஆதனங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள்

ஆதனங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் என்பன, திரண்ட தேய்மானத்தில் இருந்து கழிக்கப்பட்டு, அதன் நிலை/மீள் மதிப்பீட்டுத் தொகையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆதனங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் விலை, அவை எந்த நோக்கத்திற்காகப் பயன்படுத்த எண்ணியிருந்ததோ அதற்காக அவை செயற்படுகின்ற நிலையில் கொண்டுவருவதற்கு உறப்பட்ட ஏதேனும் செலவுகள் மற்றும் அதனைக் கைக் கொள்வதற்கான செலவுகள் என்பவற்றை உள்ளடக்கும்.

#### பெறுமானத் தேய்வு

பெறுமானத் தேய்வு, நேர்கோட்டு அடிப்படையில், மதிப்பிடப்பட்ட சொத்துக்களின் பயன்பாட்டுக் காலத்திற்கு ஏற்ப அறவிடப்பட்டுள்ளது.

| | % வருடாந்த அடிப்படையில் |
|---|---|
| மோட்டார் வாகனங்கள் | 25 |
| தளபாடமும் பொத்துக்களும் | 12.5 |
| அலுவலக மற்றும் EDP உபகரணம் | 25 |
| பயிற்சி உபகரணம் | 25 |

ஒரு சொத்து கொள்வனவு செய்யப்பட்ட நாளிலிருந்து அது அகற்றப்படும் நாள் வரை பெறுமானத் தேய்வு கணிக்கப்படுகிறது. அகற்றப்படுதல் மீதான பெறுவனவுகளும் இழப்புக்களும் அகற்றப்படுவதிலிருந்து பெறப்படும் வருமானத்தைக் கொண்டு வரும் தொகையுடன் ஒப்பிட்டு தீர்மானிக்கப்படுகின்றது.

### 2.2 முதலீடுகள்

அரசாங்க பிணையங்கள் மற்றும் நிலையான வைப்புகளிலான

# கணக்கீட்டுக் கொள்கைகள்

முதலீடுகள் செலவு குறைந்த அடிப்படையில் அல்லது முகப் பெறுமதியில் குறிப்பிடப்பட்டுள்ளன் வருட முடிவு வரை வட்டி சேர்க்கப்பட்டுள்ளது.

## 2.3 தொக்குகள்

தொக்குகளின் செலவு குறைவாக அல்லது பெறக்கூடிய நிகர பெறுமதியில் மதிப்பிடப்பட்டுள்ளன. பொருள் பட்டியல்களுக்கான விலை “முதலில் வருவது முதலில்” (FIFO) என்ற அடிப்படையில் மதிப்பிடப்பட்டுள்ளது.

## 2.4 பெறுவனவுகள்

பெறுவனவுகள் பெறப்படக் கூடிய பெறுமதியில் மதிப்பிடப்பட்டுள்ளன.

## 2.5 காசு மற்றும் காசுக்குச் சமமானவை

காசுப் பாய்ச்சல் கூற்றின் நோக்கத்திற்காக காசு மற்றும் காசுக்குச் சமமானவை வங்கியிலும், கையிலும் உள்ள பணத்தை உள்ளடக்குகின்றது.

## 3. பொறுப்புகளும் ஏற்பாடுகளும்

## 3.1 ஓய்வு நலன்கள்

## 3.1.1 வரைவிலக்கணப்படுத்தப்பட்ட நலன் திட்டங்கள் / பணக்கொடை

1983 ஆம் ஆண்டின் பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டத்திற்கு அமைவாக, பணியாள் ஒருவர் தொடர்ச்சியாக ஐந்து வருடங்கள் வேலை செய்திருந்தால் மாத்திரமே பணிக்கொடை வழங்குவதற்கான கடப்பாடு எழுகிறது. இந்தக் கடப்பாட்டைப் பூர்த்தி செய்வதற்கான ஏற்பாடு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இதற்கமைவாக, ஒரு வருட கால சேவையைப் பூர்த்தி செய்த அனைத்து பணியாட்களும் நிதியாண்டு இறுதியில் கடைசியாக பெற்ற சம்பளத்தின் மீது அதிலிருந்து அரை மாத சம்பளத்திற்குச் சமமான தொகை இவ்வேற்பாட்டில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது.

## 3.1.2 வரைவிலக்கணப்படுத்தப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள் - ஊசேநி மற்றும் ஊநநி

ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பன, பொருத்தமான நியதிச் சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக, அனைத்து ஊழியர்களும் ஊழியர் பங்கிலாப பங்களிப்புகள் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியப் பங்களிப்புகள் ஆகியவற்றுக்குத் தகுதியுடையவர்கள். ஆணைக்குழு ஊழியர் நம்பிக்கை நிதிய மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் என்பவற்றுக்கு ஊழியர்களின் மொத்த வருமானத்திலிருந்து முறையே 12% மற்றும் 3% ஐ பங்களிப்புச் செய்கிறது.

## 3.2 பொறுப்புகள்

நிதிக் கூற்றில் நடைமுறைப் பொறுப்புகள் என்பதில் கேள்வி மீதான கொடுப்பனவு அல்லது அறிக்கையிடும் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குள் செலுத்த வேண்டியவைகள் அடங்கும். நடைமுறையற்ற பொறுப்புகள் என்பது, அறிக்கையிடும் காலப்பகுதியில் இருந்து ஒரு வருடத்திற்கு பின்னர் செலுத்த வேண்டிய மிகுதிகள் ஆகும்.

நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுகையில், அறிந்து கொள்ளப்பட்ட சகல பொறுப்புக்களும் அதன் விலையில் கணக்கிடப்பட்டுள்ளன.

## 3.3 மானியம்

பாதுகாப்பு நிதியத்திற்கு மாற்றப்பட்ட காப்புறுதிக் கொள்கையாளர்களின் மூலதனச் செலவு, மானியமாக கருதப்பட்டு சொத்து ஒன்றின் மதிப்பிடப்பட்ட பாவனைக் காலத்தின் மீது அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

## 4. வருமானம் மற்றும் செலவுகள்

## 4.1 வருமான அங்கீகாரம்

வருமானம், உண்மையான அடிப்படையில் அங்கீகரிக்கப் பட்டுள்ளது.

## 4.2 செலவு அங்கீகாரம்

ஆணைக்குழுவைப் பேணிப் பாதுகாப்பதற்காக உறப்பட்ட அனைத்து செலவுகளும் வருமானத்தின் மீதான செலவுகளை உறுதிப்படுத்துவதற்கு வருவாய்க்கு அறவிப்பட்டுள்ளது.

## 4.3 நிதிப் பாய்ச்சல் கூற்று

உட்கிடையான முறையைப் பயன்படுத்தி நிதிப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது.

# நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள்

1. ஆதனங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள்

| | மோட்டார் வாகனங்கள் | தளபாடங்களும் பொருத்துக் களும் | அலுவலக உபகரணங்கள் (EDP மற்றும் ஏனைய) | பயிற்சி உபகரணங்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| செலவு | | | | | |
| 2018 ஜனவரி 1 இல் உள்ளவாறு மீதி | 10,000,000 | 14,152,432 | 25,035,591 | 141,450 | 49,329,474 |
| சேர்ப்பனவுகள் | - | - | 1,599,945 | - | 1,599,945 |
| அகற்றல்கள் | - | - | - | - | - |
| | 300,000 | | | | 300,000 |
| 2018 டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி | 10,300,000 | 14,152,432 | 26,635,537 | 141,450 | 51,229,419 |
| திரண்ட பெறுமானத் தேய்வு | | | | | |
| 2018 ஜனவரி 01 உள்ளவாறு மீதி | 8,393,773 | 12,304,194 | 21,165,298 | 141,450 | 42,004,716 |
| வருடத்திற்கான கட்டணம் | 1,606,227 | 371,687 | 1,557,365 | - | 3,535,279 |
| அகற்றல்கள் | - | - | - | - | - |
| மீள் மதிப்பீட்டு தாக்கம் | (10,000,000) | | | | (10,000,000) |
| 2018 டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி | - | 12,675,881 | 22,722,663 | 141,450 | 35,539,995 |
| எழுதப்பட்ட பெறுமதி | | | | | |
| 2018 டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி | 10,300,000 | 1,476,550 | 3,912,875 | - | 15,689,425 |
| எழுதப்பட்ட பெறுமதி | | | | | |
| 2017 டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி | 1,606,227 | 1,848,237 | 3,870,294 | - | 7,324,758 |

** முழுமையாக பெறுமானத் தேய்வுக்கு உட்பட்ட நிலையான சொத்துக்களின் பெறுமதிகள் பின்வருமாறு:

| | தொகை ரூபா |
|---|---|
| தளபாடமும் பொருத்திகளும் | 4,632,587 |
| பொருத்திகள் | 6,279,005 |
| அலுவலக உபகரணங்கள் - EDP | 17,377,553 |
| அலுவலக உபகரணங்கள் - ஏனைய | 2,470,883 |
| பயிற்சி உபகரணங்கள் | 141,450 |
| | **36,332,454** |

ரூபா 10,300.00 ஆக மோட்டார் வாகனங்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டது.

# நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள்

| | குறிப்பு | 31.12.18 இல் ரூபா | 31.12.17 இல் மீள் கூற்று ரூபா |
|---|---|---|---|
| 2 காப்புறுதிக் கொள்கையாளர் பாதுகாப்பு நிதியக முதலீடுகள் மற்றும் ஏனையவை | | | |
| நடைமுறையற்ற சொத்துக்கள் | | | |
| வாடகை மற்றும் மின்சார வைப்புகள் | | 9,593,949 | 9,593,949 |
| திறைசேரி முறிகள் | | 1,076,659,000 | 1,076,659,000 |
| | | 1,086,252,949 | 1,086,252,949 |
| நடைமுறைச் சொத்துக்கள் | | | |
| அரசாங்க பிணையங்களில் முதலீடு | | 3,600,397,000 | 2,694,300,000 |
| நிலையான வைப்புகளில் முதலீடு | | 227,256,770 | 173,597,603 |
| அரசாங்க பிணையங்கள் மற்றும் நிலையான வைப்புகள் மீதான பெறவேண்டிய வட்டி | | 129,409,689 | 127,037,223 |
| பெறவேண்டிய வீத வரி | 17 | 47,306 | - |
| வங்கி மீது | 17 | 1,000,000 | 558,124 |
| PPF க்கு மாற்றப்பட வேண்டிய தொகை | | (1,597,445) | 28,213,306 |
| | | 3,956,513,320 | 3,023,706,256 |
| கழி | | | |
| காப்புறுதிபூட்கையாளர் பாதுகாப்பு நிதியத்திலிருந்து மாற்றப்பட்ட தொகை | | - | - |
| | | 3,956,513,320 | 3,023,706,256 |
| மொத்த சொத்துக்கள் | | 5,042,766,269 | 4,109,959,205 |
| 3 தொக்குகள் | | | |
| அச்சு, காகிதாதி மற்றும் கணனி உபகரணங்கள் | | 455,105 | 331,359 |
| முத்திரைகள் | | 67,515 | 15,940 |
| | | 522,620 | 347,299 |
| 4 ஏனைய நடைமுறைச் சொத்துகள் | | | |
| வைப்புக்கள் | | 212,237 | 202,895 |
| சேமிப்புகள் - தே.சே.வ | | 500 | 500 |
| ஏனைய பெறுவனவுகள் | | 820,886 | 79,420 |
| WHT மீளப்பெற வேண்டியவை | | 1,551,524 | 1,934,725 |
| VAT கட்டுப்பாடு | | 1,874,969 | 1,735,599 |
| பெறவேண்டிய வட்டி - அரசாங்க பிணையங்கள் | | 1,076,391 | 211,727 |
| ஊழியர் கடன்கள்* | | 5,005,967 | 5,769,159 |
| முற்பணம் மற்றும் முற்கொடுப்பனவுகள் | | 1,778,025 | 1,965,955 |
| பொருளாதார சேவைக் கட்டணம் | | - | 279,070 |
| SEC இலிருந்து பெற வேண்டியவை | | - | 15,000 |
| காப்புறுதிபூட்கையாளர் பாதுகாப்பு நிதியத்திற்கு மாற்றப்பட்ட வேண்டிய தொகை | | 1,597,445 | - |
| கைக்கொள்ளலுக்கான ஏற்பாடு | | 2,089,077 | - |
| | | 16,007,020 | 12,194,049 |
| * ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் | | | |
| ஜனவரி 01 இல் உள்ளவாறான மீதி | | 5,769,159 | 5,769,159 |
| இவ்வருடத்தில் வழங்கப்பட்ட கடன்கள் | | 3,236,700 | 3,319,000 |
| | | 9,005,859 | 9,088,159 |
| இவ்வருடத்தில் செலுத்தப்பட்ட மீள் கொடுப்பனவுகள் | | (3,999,892) | (3,314,383) |
| டிசம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | | 5,005,967 | 5,769,159 |
| 5 காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | | | |
| வங்கியிலுள்ள காசு | | | |
| நிதிய முகாமைத்துவக் கணக்கிலுள்ள மீதி | 17 | 4,248,455 | 9,373,734 |
| இலங்கை வங்கி - பேரேட்டிலுள்ளவாறு | 17 | (1,537,007) | (3,577,513) |
| | | 2,711,448 | 5,796,222 |

# நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள்

| | குறிப்பு | 31.12.18 இல் ரூபா | 31.12.17 இல் மீள் கூற்று ரூபா |
|---|---|---|---|
| **6 காப்புறுதிக் கொள்கையாளர் பாதுகாப்பு நிதியம்** | | | |
| திறந்த மீதி | | 4,109,959,205 | 3,291,865,366 |
| இவ்வருடத்தில் பெறப்பட்ட வீத வரி | | 479,088,491 | 418,234,960 |
| Repo மற்றும் அழைப்புக் கணக்கிலிருந்து பெற்ற வட்டி | | 36,710 | 28,364,495 |
| திறைசேரி முறி முதலீட்டிலிருந்து பெற்ற வட்டி | | 95,120,708 | 95,120,708 |
| நிலையான வைப்பு மீதான வட்டி | | 359,754,785 | 248,496,708 |
| நிதிய முகாமைத்துவக் கணக்கு மீதான வட்டி | | 419,017 | 331,799 |
| ஆணைக்குழுவின் மேலதிகச் செலவை மிஞ்சிய நிகர வருமானம் | | - | 31,220,674 |
| | | 5,044,378,915 | 4,113,634,709 |
| கழிப்பனவுகள்: | | | |
| மூலதனச் செலவுகளுக்கான மாற்றங்கள் | | 1,599,945 | 3,650,319 |
| மொத்த மாற்றங்கள் - காப்புறுதிக் கொள்கையாளர் பாதுகாப்பு நிதியம் | | 1,599,945 | 3,650,319 |
| வங்கிக் கட்டணங்கள் | | 13,097 | 25,186 |
| | | 1,613,042 | 3,675,505 |
| இறுதி மீதி | | 5,042,765,873 | 4,109,959,205 |
| **7 மானியம்** | | | |
| வருட ஆரம்பத்தில் உள்ள மீதி | | 5,718,532 | 3,523,232 |
| காப்புறுதிக் கொள்கையாளர் பாதுகாப்பு நிதியத்தில் ஏற்பட்ட மூலனதச் செலவுகள் | | 1,599,945 | 3,650,319 |
| கழி: வருட காலப்பகுதியின் போது நிலைமாறக்கூடியவை | | (1,929,052) | (1,455,019) |
| வருட முடிவின் போது உள்ள மீதி | | 5,389,425 | 5,718,532 |
| **குறிப்பு - மானியங்களின் அங்கீகாரம்** | | | |
| மானியம் நிதிச் செயற்பாட்டுக் கூற்றில் பின்வரும் விகிதங்களில் வருமானமாக அங்கீகரிக்கப்பட்டது | | | |
| (அதாவது, சம்பந்தப்பட்ட சொத்தின் பயன்பாட்டுக் காலத்தின் மறையான அடிப்படை மீது) | | | |
| மோட்டார் வாகனம் | | 25% | |
| அலுவலக உபகரணம் - EDP மற்றும் ஏனையவை | | 25% | |
| தளபாடங்களும் பொருத்திகளும் | | 12.5% | |
| பயிற்சி உபகரணங்கள் | | 25% | |
| **8 ஓய்வு நலக் கடப்பாடுகள்** | | | |
| வருட ஆரம்பத்தில் உள்ள மீதி | | 10,902,547 | 9,842,625 |
| வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடு | | 2,014,024 | 1,893,706 |
| (-) வருட காலத்தின் போது செலுத்தப்பட்ட கொடுப்பனவுகள் | | (760,674) | (833,784) |
| வருட இறுதியில் உள்ள மீதி | | 12,155,897 | 10,902,547 |
| **9 ஏனைய நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| சேர்த்தல்களுக்கான செலவுகள் | | 13,188,945 | 6,403,725 |
| செலுத்த வேண்டிய ஊ.சே.நி | | 710,207 | 694,744 |
| செலுத்த வேண்டிய ஊ.ந.நி | | 106,532 | 104,212 |
| செலுத்த வேண்டிய PAYE | | 74,014 | 193,832 |
| PPF க்கு மாற்றப்பட வேண்டிய தொகை | | - | 28,213,306 |
| ஏனையவை | | 816,486 | 683,677 |
| | | 14,896,183 | 36,293,496 |

# நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள்

| | 31.12.18 இல் ரூபா | 31.12.17 இல் ரூபா |
|---|---|---|
| **10 வருவாய்** | | |
| காப்புறுதிக் கம்பனிகள் மீதான வருடாந்தக் கட்டணங்கள் | 168,499,107 | 142,174,726 |
| பதிவு மற்றும் புதுப்பித்தல் கட்டணம் | 7,669,742 | 8,608,493 |
| | 176,168,849 | 150,783,219 |
| **11 ஏனைய வருமானம்** | | |
| வாகனக் கடன்கள் மீதான வட்டி | 31,406 | 38,235 |
| இடர் கடன்கள் மீதான வட்டி | 143,164 | 160,369 |
| அகற்றல்கள் மீதான இலாபம் | - | 41,449 |
| சில்லறை வருமானம் | 102,664 | 62,773 |
| | 277,233 | 302,826 |
| **12 ஊழியர் செலவுகள்** | | |
| ஊழியர் சம்பளங்கள் | 41,676,378 | 40,561,287 |
| ஊ.சே.நி 12% | 4,987,246 | 4,867,354 |
| ஊ.ந.நி 3% | 1,246,812 | 1,216,839 |
| தலைவருக்கான கொடுப்பனவு | 129,589 | 1,200,000 |
| தலைவருக்கான எரிபொருள் கொடுப்பனவு | 25,775 | 238,680 |
| சபை உறுப்பினர்கள் - சமூகமளித்தமைக்கான கொடுப்பனவுகள் | 530,000 | 630,000 |
| பயிற்சியாளர்களுக்கான கொடுப்பனவுகள் | 342,600 | 25,000 |
| மேலதிக நேர வேலை | 209,841 | 144,169 |
| பணியாட்களுக்கான மருத்துவச் செலவுகள் | 1,970,211 | 1,767,019 |
| பணியாட்களுக்கான மருத்துவக் காப்புறுதி | 1,117,854 | 1,080,307 |
| தனிப்பட்ட மற்றும் தீ அபாயக் காப்புறுதி | 239,222 | 254,026 |
| ஊழியர் நலன்புரி | 1,163,529 | 946,202 |
| ஊழியர்களுக்கான உள்நாட்டுப் பயிற்சி மற்றும் சந்தாப்பணம் | 1,264,144 | 1,297,577 |
| சபை உறுப்பினர்கள் மற்றும் ஊழியர் - வெளிநாட்டுப் பயிற்சி மற்றும் பிரயாணம் | 10,589,034 | 4,741,449 |
| செயற்பாட்டு அடிப்படையிலான ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் | 4,561,566 | 2,093,426 |
| விளம்பர ஆட்சேர்ப்பு | 249,975 | 536,990 |
| பணிப்பாளர்களின் வசிப்பிடத் தொலைபேசி | 390,112 | 463,199 |
| விடுப்பிற்கான பணம் பெறுதல் | 687,638 | 714,347 |
| வாகன செயற்பாட்டு குத்தகைக் கட்டணங்கள் | 1,455,048 | 970,032 |
| சாரதியின் கொடுப்பனவு | 26,786 | 111,290 |
| பணிப்பாளர்களுக்கான வாகனக் கொடுப்பனவு | 3,123,699 | 3,243,548 |
| பணிப்பாளர்களுக்கான எரிபொருள் கொடுப்பனவு | 1,008,482 | 944,764 |
| ஊழியர்களுக்கான பணிக்கொடை | 2,014,024 | 1,893,706 |
| | 79,009,564 | 69,941,211 |
| **13 தொழில்முறைக் கட்டணங்கள்** | | |
| ஆலோசனைக் கட்டணம் | 5,035,081 | 2,000,000 |
| | 5,035,081 | 2,000,000 |

# நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள்

| | 31.12.18 இல் ரூபா | 31.12.17 இல் ரூபா |
|---|---|---|
| **14 செயற்பாட்டுச் செலவுகள்** | | |
| வாடகை | 36,423,747 | 32,175,621 |
| வாகனத் தரிப்பிடக் கட்டணங்கள் | 606,000 | 508,670 |
| தொலைபேசி மற்றும் இணையச் செலவுகள் | 1,499,000 | 1,605,633 |
| மின்சாரம் | 1,503,455 | 1,324,406 |
| அலுவலகப் பாதுகாப்பு | 764,913 | 473,899 |
| அச்சு மற்றும் காகிதாதி | 1,650,787 | 2,096,822 |
| பொதுமக்கள் விழிப்புணர்வு | 2,402,923 | 3,334,383 |
| பொழுதுபோக்கு | 4,000 | 32,515 |
| பிரயாணம் - உள்ளூர் | 133,883 | 92,044 |
| அலுவலக உபகரணப் பராமரிப்பு EDP மற்றும் ஏனையவை | 1,743,298 | 1,178,671 |
| IAIS இன் சர்வதேச உறுப்பான்மை (CHF 14,200) | 3,147,964 | 2,784,043 |
| விளம்பரம் - ஏனையவை | 105,050 | 85,950 |
| கூட்டங்களுக்கான செலவுகள் | 336,428 | 559,353 |
| புதினத்தாள்கள் மற்றும் நூலக புத்தகங்களுக்கான சந்தா | 121,387 | 135,959 |
| தபால் மற்றும் குறியர் கட்டணங்கள் | 242,488 | 990,554 |
| கணக்காய்வுக் கட்டணங்கள் - கணக்காய்வாளர் நாயகம் | 485,000 | 227,100 |
| பெறுமானத் தேய்வு | 1,440,000 | - |
| பெறுமானத் தேய்வு | 3,535,279 | 3,955,019 |
| பெயர் மாற்றம் தொடர்புடைய செலவுகள் | 416,496 | - |
| பொதுச் செலவுகள் | 80,855 | 98,343 |
| சட்டச் செலவுகள் | 98,370 | 12,960 |
| விசாரணைச் செலவுகள் | 26,202 | 4,492 |
| மேற்பார்வைச் செலவுகள் | 1,775 | 2,000 |
| வாகன பராமரிப்பு | 409,483 | 422,040 |
| வாகனக் காப்புறுதி | 110,693 | 107,011 |
| வாகன ஓட்ட கட்டணங்கள் | 260,688 | 182,727 |
| கட்டணங்கள் மற்றும் தண்டம் | 1,754 | - |
| பாதுகாப்புப் பெட்டக வாடகை | - | 3,000 |
| தேசிய நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான வரி | 901,576 | 819,026 |
| | 58,453,496 | 53,212,244 |
| **15 நிதி மற்றும் ஏனைய செலவுகள்** | | |
| வங்கி கட்டணங்கள் | 155,451 | 114,876 |
| | 155,451 | 114,876 |

# நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள்

## 16. ஒன்றுதிரட்டிய நிதியம்

ஆணைக்குழுவின் மிகை முன்மொழியப்பட்ட சம்பள கட்டமைப்பின் மீது அமுல்படுத்தப்பட்டு வரவிருக்கும் சம்பள நிலுவைகள் மற்றும் தொடர்புடைய செலவுகள் வரை ஒன்றுதிரட்டிய நிதியத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

## 17. நிதி முகாமைத்துவ கணக்குகள், பேரேட்டு மீதிகள் மற்றும் வங்கி மீதிகள்

இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு, ஆணைக்குழுவின் இரு நடைமுறைக் கணக்குகளில் (ஆணைக்குழு மற்றும் காப்புறுதிபூட்கையாளர் பாதுகாப்பு நிதியம் என்பவற்றுக்கான) சாதகமான மீதியான ரூபா 1,000,000வைக் கொண்டுள்ள நடைமுறைக் கணக்குகளின் மீதிகள் (வங்கி பதிவேடுகளில்) நிதி முகாமைத்துவ கணக்குகளுக்கு தன்னியக்கமாக மாற்றப்படும் வகையில் இரு நிதி முகாமைத்துவக் கணக்குகளை தொழிற்படுத்துகின்றது. இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் ஏற்கனவே வழங்கப்பட்ட காசோலைகள் உடனடியாக சமர்ப்பிக்கப்படாதிருந்தால், பேரேட்டில் காணப்படும் வங்கி மீதியானது நிதி முகாமைத்துவ கணக்குகளுடனான கொடுக்கல்வாங்கல்களின் பின்னர் பதிவுசெய்யப்படுவதன் காரணமாக மறைப் பொறுமதியை வெளிப்படுத்தக்கூடும்.

31 டிசம்பர் 2018ம் திகதியன்று வங்கி மீதிகள் பின்வருமாறு,

| | |
|---|---|
| ஆணைக்குழு | - (ரூபா 1,537,007.05) |
| PPF | - ரூபா 4,248,455.40 |
| மொத்தம் | - ரூபா 2,711,448.35 |

## 18. வரிவிதிப்பு

வருமான வரிக்கான ஏற்பாடுகள் 2017ஆம் ஆண்டு 24ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்திற்கு அமைவாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 19. இரண்டாம் சந்தைக் கொடுப்பனவுகள் மீதான அரசாங்க பிணையங்கள் மீதான நிறுத்திவைத்தல் வரிக்கான பெயரளவிலான வரிவரவு

2006ம் ஆண்டு 10ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் பிரிவு 137ன் ஏற்பாடுகளுக்கு அமைவாக, 2018 மார்ச் 31 வரையான வரி மதிப்பாண்டுக்குரிய ஆணைக்குழுவின் நியதிச் சட்ட வருமானத்தின் பகுதியாக அமையும் அந்த வட்டி வருமானம், இரண்டாம் சந்தையில் மேற்கொள்ளப்படும் அரசாங்க பிணையங்களின் இருந்து வருமத் வட்டி வருமானத்திற்கான பெயரளவிலான வட்டி வரவுக்கு ஆணைக்குழு உரித்துடையதாகும்.

அதற்கமைவாக, நிதியியல் கூற்றுகளில் இரண்டாம் சந்தையில் மேற்கொள்ளப்பட்ட அரசாங்க பிணையக் கொடுக்கல் வாங்கல்களில் இருந்து ஆணைக்குழுவினால் உழைக்கப்பட்ட தேறிய வருமானம் ஒன்றாக சேர்க்கப்பட்டுள்ளதுடன், 31 டிசம்பர் 2018ம் திகதி முடிவடையும் நிதிக் கூற்றுகளில் 01 ஜனவரி 2018 இருந்து 31 மார்ச் 2018 வரையான காலப்பகுதிக்கான பெயரளவிலான வரி வரவாக ரூபா 72,740.42 அடையாளம் காணப்பட்டுள்ளது. காப்புறுதிபூட்கையாளர்கள் பாதுகாப்பு நிதியத்தின் இரண்டாம் சந்தையில் மேற்கொள்ளப்பட்ட அரசாங்க பிணையக் கொடுக்கல் வாங்கல்களில் இருந்து வரும் வட்டி வருமானம் தேறிய பெறுமதியில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 20. மூலதன ஒப்படைப்புகள்

டிசம்பர் 31 அன்று மூலதன ஒப்படைப்புகள் ஏதுமில்லை.

## 21. தொடர்ந்து செல்லும் பொறுப்புகள்

டிசம்பர் 2018ம் திகதியன்று சொத்து கைக்கொள்ளலுக்காக ரூபா 2,089,077.00 ஏற்பாடுகளை ஆணைக்குழு ஏற்பாடு செய்துள்ளது.

முன்மொழியப்பட்ட சம்பளக் கட்டமைப்பு அமுல்படுத்தப்படும் போது நிலுவையாகும் சம்பள திருத்தத் தொகை மற்றும் தொடர்புடைய செலவுகள்.

## 22. அறிக்கையிடலின் பின்னரான நிகழ்வுகள்

நிதியியல் கூற்றுகளில் அவசியமான சீராகல்கள் மேற்கொண்டதன் பின்னர் அல்லது வெளிப்படுத்ததன் பின்னர் அறிக்கையிடப்பட்டதன் பின்னரான எந்த ஒரு நிகழ்வும் எழவில்லை.

## 23. தொடர்புடைய தரப்பினரின் வெளிப்படுத்தல்கள்

திருமதி. இந்திராணி சுகததாச (தலைவி), 01 ஜனவரியில் இருந்து 9 பெப்பரவரி 2018 வரை
திரு.மனோ திதத்தவெல் (தலைவர்), 29 மார்ச்சில் இருந்து 31 ஒக்டோபர் 2018 வரை.
திரு.ஏ.ஆர். தேசபிரிய (தலைவர்) 14 நவம்பரில் இருந்து 31 டிசம்பர் 2018 வரை.
திரு.ஏ.ஆர். தேசபிரிய 1 ஜனவரியில் இருந்து 31 டிசம்பர் 2018 வரை.
திரு.ஈ.ஏ.டி. பெரேரா 3 மே இல் இருந்து 31 நவம்பர் 2018 வரை
திரு. யுதிஸ்ரன் கனகசபை 3 மே இல் இருந்து 31 ஒக்டோபர் 2018 வரை
திரு.உபுல் தேசப்பிரிய 3 மே இல் இருந்து 31 டிசம்பர் 2018 வரை
திரு.எச்.ஏ.கருணாரத்ன 30 ஒக்டோபரில் இருந்து 31 டிசம்பர் 2018 வரை.
திரு.சீ.ஜே.கே பெரேரா 14 நவம்பரில் இருந்து 31 டிசம்பர் 2018 வரை
திருமதி கே.வி.சி.தில்ருக்ஷி 14 நவம்பரில் இருந்து 31 டிசம்பர் 2018 வரை.
திரு.டி.என.ஆர்.சிறிவர்தன 1 ஜனவரியில் இருந்து 21 டிசம்பர் 2018 வரை
திரு.சி.ஜே.பி..சிறிவர்தன 1 ஜனவரியில் இருந்து 21 ஒக்டேர்பர் 2018 வரை

கீழ்வரும் அட்டவணை இவ்வருடத்தினுள் ஆணைக்குழுவின் அங்கத்தவர்களினால் வைத்திருக்கப்பட்ட தொடர்புமுறைகளை வெளிப்படுத்துகின்றது.

# நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள்

| அங்கத்தவரின் பெயர் | தொடர்புடைய நிறுவனத்தின் பெயர் | தொடர்பு முறை |
|---|---|---|
| **திருமதி இந்திராணி சுகததாச** | **கலுபோவிட்டியன ரீ பெக்ரி லிமிடெட்**<br>**தேசிய அபிவிருத்தி வங்கி** | **பணிப்பாளர்**<br>**பணிப்பாளர்** |
| திரு.மனோ தித்தவெல | ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் லிமிடட்<br>ஸ்ரீலங்கன் கேட்டரிங் லிமிடட்<br>ஏவைஎல் வென்சர்ஸ் (பிறைவட்) லிமிடட்<br>ஏவைல் சப்ஸ் (பிறைவட்) லிமிடட்<br>ஏபிஈஎக்ஸ் கன்சல்டன்சி சேர்விஸ் (பிறைவட்) லிமிடட்<br>கிளின்ச் (பிறைவட்) லிமிடட்<br>ரிசோர்ஸ் ஏசியா நெட்வேர்க் (பிறைவட்) லிமிடட் | பணிப்பாளர்<br>பணிப்பாளர்<br>பணிப்பாளர்<br>பணிப்பாளர்<br>பணிப்பாளர்<br>பணிப்பாளர்<br>பணிப்பாளர் |
| திரு.ஈ.ஏ.டி. பெரேரா | கார்கில்ஸ் பிஎல்சி<br>சி டி புரப்படர்டீஸ்<br>சிலோன் தியர்டர்ஸ்<br>ராகம புரப்பட்ர்டீஸ் | பணிப்பாளர்<br>பணிப்பாளர்<br>பணிப்பாளர்<br>தலைவர் |
| திரு.உபுல் தேசப்பிரிய | - | - |
| திரு.டி.என்.ஆர்.சிறிவர்தன | இலங்கை கணக்கியல் மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்பு சபை<br>இலங்கை பிணையங்கள் மற்றும் நாணயப்பரிமாற்றல் ஆணைக்குழு | அங்கத்தவர் (01 ஜனவரியில் இருந்து 31 டிசம்பர் 2018 வரை)<br>அங்கத்தவர் (01 ஜனவரியில் இருந்து 31 டிசம்பர் 2018 வரை) |
| திரு.யுதிஸ்ரன் கனகசபை | சிலோன் டுபாக்கோ பிஎல்சி<br>யூனியன் பாங் பிஎல்சி<br>ஹன்டர்ஸ் பிஎல்சி<br>யுபி பைனான்ஸ் லிமிடட்<br>லங்கா கனேரிஸ் லிமிடட்<br>மிலேனியம் இன்பமேசன் டெக்னோலஜிஸ் (பிறைவட்) லிமிடட் | கணக்காய்வுக் குழுவின் தலைவர்<br>பணிப்பாளர்<br>பணிப்பாளர்<br>பணிப்பாளர்<br>பணிப்பாளர்<br>பணிப்பாளர் |
| திரு.எச்.ஏ.கருணாரத்ன | சிலோன் டெக்யாட் பிஎல்சி<br>இலங்கை கடன் தகவல்கள் பணியகம்<br>பிணையங்கள் மற்றும் நாணயப் பரிமாற்று ஆணைக்குழு | பணிப்பாளர் (31 ஒக்டோபரில் இருந்து 31 டிசம்பர் 2018 வரை)<br>தலைவர் (31 ஒக்டோபரில் இருந்து 31 டிசம்பர் 2018 வரை)<br>ஆணைக்குழு அங்கத்தவர் |
| திரு.ஏ.ஆர.தேசப்பிரிய | பிராந்திய அபிவிருத்தி வங்கி<br>நலன்புரி நன்மைகள் சபை<br>ஸ்ரீலங்கா டெலிகொம் பிஎல்சி | பணிப்பார் சபை பணிப்பாளர்<br>பணிப்பார் சபை பணிப்பாளர்<br>பணிப்பார் சபை பணிப்பாளர் (03 ஒக்டோபர் 2017 இல் இருந்து 19 ஜூன் 2018 வரை) |
| திரு.சி.ஜே.கே.பெரேரா | ஸ்ரீலங்கா ஸ்டான்டர்ட் இன்ரிடியூட் (எஸ்எல்எஸ்ஐ)<br>இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை (சிஏஏஎஸ்எல்) | கவுன்சில் அங்கத்தவர்<br>சபை அங்கத்தவர் |
| திரு.சி.ஜே.பி.சிறிவர்தன | கொழும்பு டெக்யாட் பிஎல்சி<br>கடன் தகவல் பணியகம்<br>பிணையங்கள் மற்றும் நாணயப் பரிமாற்றல் ஆணைக்குழு | பணிப்பாளர்<br>தலைவர்<br>ஆணையாளர் |
| திருமதி.கே.வி.சி.தில்ருக்ஷி | லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி லிமிடட் | பணிப்பாளர் |

இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் இந்த வருடத்தில் குறிப்பிடப்பட்ட நிறுவனங்களுடன் சந்தை விலையில் மேற்கொள்ளப்பட்ட சாதாரண வியாபார நடவடிக்கைகளி தவிர்ந்த ஏனைய கொடுக்கல் வாங்கல்கள் பதிவுசெய்யப்படவில்லை.

# கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. TRE/C/IRCSL/2018/FA/07 ඔබේ අංකය / உமது இல. / Your No. දිනය / திகதி / Date 12 July 2019

தலைவர் அவர்கள்,

இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு.

## இலங்கை காப்புறுதிக் கண்காணிப்பு ஆணைக்குழுவின் 2018 டிசெம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட ரீதியான மற்றும் கண்காணிப்பு தேவைப்பாடுகள் தொடர்பான 2018 ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 கணக்காய்வின்மீதானகருத்துரை

இலங்கை காப்புறுதிக் கண்காணிப்பு ஆணைக்குழுவின் 2018 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலான நிதி நிலைமை பற்றிய கூற்று மற்றும் அன்றைய தினத்துடன் முடிவடையும் ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, உரிமை மாற்றல் கூற்று, அன்றைய தினத்துடன் முடிவடையும் ஆண்டிற்கான நிதிப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கு உரிய குறிப்புக்கள், முக்கிய கணக்கீட்டு கொள்கைகளின் பொழிப்புஎன்பன உள்ளடங்கிய 2018 ஆண்டின் டிசெம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154 (1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கக் கூடிய எனது கட்டளையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பின் 154 (6) உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் கணக்காய்வுமீதான அபிப்பிராயத்தைக் கொண்ட பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கம் தவிர, ஆணைக்குழுவின் 2018 ஆண்டின் டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலான நிதிக்கூற்றுக்கள் மற்றும் அன்றைய தினத்துடன் முடிவடையும் ஆண்டு தொடர்பான அதன் நிதிச் செயலாற்றுகை மற்றும் நிதிப் பாய்ச்சல் கூற்றுக்கள் என்பன இலங்கை அரச துறைசார் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய உண்மை மற்றும் நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 கணக்காய்வின் மீதான கருத்துரைக்கான அடிப்படை

(அ) கணக்கீட்டுநியமங்களுடன் இணங்காமை.

(i) **இலங்கை அரச துறைசார்கணக்கீட்டு நியமம் இல.01**

- மேற்படி நியமத்தின் 48ஆம் பந்திக்கமைய,இ.அ.து.க.நி.மூலம் வேண்டப்படும் போது அல்லது அனுமதியளிக்கப்பட்டுள்ள போது தவிர, சொத்துக்கள் பொறுப்புக்கள், வருமானம், செலவுகள் என்பன செலுத்தித் தீர்க்கப்படாதிருக்க வேண்டிய போதிலும் 'ரூபா 1,537,007 ஆன காசேட்டில் சாதகமற்ற மீதி, நிதி மற்றும் அதற்குச் சமமான பெறுமதிக்குப் புறம்பாகபதிவழிக்கப்பட்டிருந்து.
- 53 ஆம் பந்தியின் பிரகாரம், இ.அ.து.க.நி.மூலம் வேறு விதமாக அவசியமாயின் அல்லது அனுமதியளிக்கப்பட்டிருக்கும் பட்சத்தில் தவிர, நிதிக் கூற்றுக்களில் அறிக்கையிடப்படும் அனைத்து எண்ணிக்கை ரீதியான தகவல்கள் குறித்தும் கடந்த காலப்பகுதியில் ஒப்பீட்டு ரீதியான தகவல்கள் வெளிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் நிறுவனத்தினால் உரிமைப்பங்கு மாற்றல் கூற்று ஒப்பீட்டு ரீதியான தகவல்களை உள்ளடக்கியதாக சமர்ப்பிக்கப்படவில்லை.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

# கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

- மேற்படி நியமத்தின் 128 ஆம் பந்தியின் பிரகாரம், நிதி நிலைமைக் கூற்று, நிதிச் செயலாற்றுகைக் கூற்று, உரிமைப்பங்கு மாற்றல் கூற்று மற்றும் நிதிப் பாய்ச்சல் கூற்று ஆகியவற்றின் முகப்பின் ஒவ்வொரு உருப்படிகளுக்கும் உரிய குறிப்புக்களிலுள்ள குறித்த விபரங்களுக்கு குறுக்குக் குறிப்புக்கள் இடவேண்டியிருந்த போதிலும் நிதி நிலமைக் கூற்றிலும், நிதிச் செயலாற்றக் கூற்றிலும், உரிமைப்பங்கு மாற்றக் கூற்றிலும், நிதிப்பாய்ச்சல் கூற்றிலும் குறிப்பிடப்பட்டுள்ள பங்குரிமைச் சான்றிதழ்களின் முதலீடுகள், நிலையான வைப்புக்கள், முற்பணப் பெறுவனவுகள், வட்டி வருவாய் மற்றும் வருமானவரி சம்பந்தமான தகவல்கள் தொடர்பாக குறுக்குக் குறிப்புக்கள் இடப்படவில்லை.
- 129 (ஈ) (ii) பந்தியின் பிரகாரம் நிதிசாரா வெளிப்படுத்தல்களின் கீழ் நிதி இடர் முகாமைத்துவ நோக்கங்கள் மற்றும் கொள்கைகள் வெளிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் நிறுவனத்தினால் நிதி இடர் முகாமைத்துவம் சம்பந்தமான தகவல்கள் வெளிப்படுத்தப்படவில்லை.
- மேற்படி நியமத்தின் 137 ஆம் பிரிவின் பிரகாரம் உருவகங்களினால் நிதிக் கூற்றுக்களில் அடையாளங் காணப்பட்ட தொகை தொடர்பாக கவனிக்கத்தக்க பெறுபேறினை பெறக்கூடிய மதிப்பீடுகள் அல்லது முகாமைத்துவத்தினால் எடுக்கப்பட்ட தீர்வுகள், கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பில் அல்லது ஏனைய குறிப்புக்களில் வெளிப்படுத்தப்படவில்லை.
- 150 ஆம் பந்தியின் பிரகாரம், உருவகத்தின் நிலையான அமைவிடங்கள், சட்டபூர்வத் தன்மையும் அதன் செயற்பாடும், உருவகத்தின் செயற்பாடுகளின் தன்மையும் அதன் பிரதான பணிகளின் விபரமும், உருவகத்தின்செயற்பாடுகளை கட்டுப்படுத்தும் யாப்பு என்பன தொடர்பான தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை.

(ii) **இலங்கை அரச துறைசார்கணக்கீட்டு நியமம் இல.02**

- மேற்படி நியமத்தின் 56 ஆம் பந்திக்கமைய, உருவகமொன்று நிதி மற்றும் நிதிக்குச் சமமானவற்றின் கூறுகளை வெளிப்படுத்த வேண்டியதுடன் நிதிப்பாய்ச்சல் கூற்றிலுள்ள உருப்படிகளின் பெறுமதி அதற்குச் சமனாக நிதி நிலைமைக் கூற்றில் அறிக்கையிடப்பட்டுள்ள உருப்படிகளுடன் ஒப்பிடு செய்து சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு நிதி நிலமைக் கூற்றின் உருப்படிகளுடன் ஒப்பீடு செய்து நிதிப்பாய்ச்சல் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.
- நிதிப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து உருவான நிதிப் பாய்ச்சலுக்குரிய முதலீட்டு வழிவகைகளுக்கு அமைவாக வெவ்வேறாக காட்டப்பட வேண்டியிருந்த போதிலும், நிலையான வைப்புக்களின் முதலீடுகளினுள் உருவான தேறியநிதிக்கூற்று மற்றும் மீள் கொள்வனவு பெறுவனவுகளினால் உருவான தேறிய நிதிப்பாய்ச்சல் என்பனவற்றை நிதிப்பாய்ச்சல் கூற்றில் வெவ்வேறாக வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.
- நிதிப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது வரிக்கு முன்னரான இலாபம் மீதான செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவான நிதிப்பாய்ச்சல் கணக்கிடப்பட வேண்டியிருந்த போதிலும், வரிக்குப் பின்னரான இலாபம் மீதான செற்பாட்டு நடவடிக்கைளிலிருந்து உருவான நிதிப்பாய்ச்சல் கணக்கிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(iii) **இலங்கை அரச துறைசார்கணக்கீட்டு நியமம் இல.07**

- மேற்படி நியமத்தின் 40 ஆம் பந்திக்கமைய சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் அடையாளங் காணப்பட்டதன்பின்னர் கணக்கீடு தொடர்பாக கையாளப்படுகின்ற கொள்கை நிறுவனத்தினால் வெளிப்படுத்தப்படவில்லை.
- மேலும் 90 ஆம் பந்திக்கமைய சொத்துக்கள் மற்றும் பொறித்தொகுதி உபகரணங்கள் மீள்மதிப்பீட்டு பெறுமதியில்குறிப்பிடப்பட்டுள்ள போது உருவகம் மீள்மதிப்பீட்டுப் பெறுமதிக்குரியதாக வெளிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் வெளிப்படுத்தப்படவில்லை.
- இலங்கை அரச துறையின் கணக்கீட்டு நியம இல. 07 இற்கு அமைய சொத்துக்களின் வினைத்திறன்மிக்க ஆயுட்காலம் வருடாந்தம் மீள் பரிசீலனைக்குட்படுத்தப்பட்டு அதற்கமைய ஏற்படும் கணக்கிணக்கம் அரச துறை கணக்கீட்டு நியம இல. 03 இற்கமைய மேற்கொள்ளப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், முழுமையாக தேய்மானமாகவுள்ள 'ரூபா 36,332,454ஆன சொத்துக்கள் சம்பந்தமாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

# கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

(iv) இலங்கை அரச துறைசார்கணக்கீட்டு நியமம் இல.10

(அ) கொடுக்கல் வாங்கல் பரிமாற்றங்களிலிருந்து மேலெழுகின்ற மிகை விதிப்பினை அடையாளங் காணும் போதுமேற்படி நியமத்தின் 19ஆம் பந்திக்கமைய குறித்த நிபந்தனைகளை உரியவாறு பூரணப்படுத்தியதற்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) நிறுவனத்திற்குக் கிடைக்கப் பெற்ற மொத்தம் ‘ரூபா 1,569,187 பெறுமதியான 02 அசையாசொத்துக்கள் குறித்த அசையாசொத்துக்களாக கணக்கிடப்படாதுஅசையும் சொத்துக்களாக கணக்கிடப்பட்டிருந்தன. மேலும் 2019 ஆண்டில் சபையினால் கையகப்படுத்தப்பட்ட ‘ரூபா 319,890 பெறுமதியானஅசையா சொத்துக்கள் மீளாய்வாண்டில் அசையும் சொத்துக்களின் கையகப்படுத்தலாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன.

(இ) கணனி முறைமைக் செயற்பாடு குளிரூட்டி முறைமை தொடர்பாக செலவிடப்பட்ட ‘ரூபா 200,000 ஆன ஆலோசனைக் கட்டணம் மூலதனமாக அல்லாது டிசெம்பர் 31 ஆந்திகதியளவில் அசையும் சொத்துக்களாக கணக்கிடப்பட்டிருந்தது.

(ஈ) வருமான வரி செலவு ‘ரூபா 1,822,908 என நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட போதிலும் இவ் வரிச் செலவு கணக்கிடப்பட்ட விபரம் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை.

(உ) நிதிப் பாய்ச்சல் கூற்றின் செயற்பாட்டு மூலதன மாற்றத்தின் காசோட்டம் ‘ரூபா 4,482,480 ஆகும் வரை இருந்தபோதிலும், அப் பெறுமதியை கணக்கிடுவதற்குரியதான விபரங்கள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) அமைய என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இவ் அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது கணக்காய்வின் மீதான கருத்துரைக்கான அடிப்படைய வழங்கும் பொருட்டு என்னால் பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதியதானதென்பதும், உசிதமானதென்பதும் எனது நம்பிக்கையாகும்.

## 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் கட்டுப்படுத்தும் பங்காளர்களதும் பொறுப்புக்கள்

இந் நிதிக் கூற்றுக்கள் இலங்கை அரசதுறையின் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரித்தல் மற்றும் நியாயமான முறையில் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய போதியளவு உண்மைக்குப் புறம்பான கூற்றுக்களைத் தவிர்த்து நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு ஏதுவாகும் பொருட்டு அவசியமான உள்ளக கட்டுப்பாடொன்றை தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, ஆணைக்குழுவை தொடர்ந்தும் பேணிச் செல்வதற்கான இயலுமையைத்தீர்மானிக்க வேண்டியது முகாமைத்துவத்தின் பொறுப்பு ஆவதுடன், முகாமைத்துவம் ஆணைக்குழுவை ஏலமிட கருதுவதாயின் அல்லது வேறு மாற்றீடு இல்லாத போது செயற்பாடுகளை நிறுத்துவதற்குநடவடிக்கை எடுக்கும் பட்சத்தில் தவிர தொடர்ந்து பேணிச் செல்லும் அடிப்படையில் கணக்கு வைத்தல் மற்றும் ஆணைக்குழுவின் தொடர்ந்தேச்சையான பேணலுக்கு உரியதான விடயங்களை தெரியப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறை சம்பந்தமான பொறுப்பு, கட்டுப்படுத்தும் தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

# கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் 16 (1) உப பிரிவின் பிரகாரம், ஆணைக்குழுவின் வருடாந்த மற்றும் காலத்துக்கேற்றவாறான நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானம், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரியவாறு பதிவேடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படல் வேண்டும்

## 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்கள், மோசடி மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படும் போதியளவு உண்மைக்குப் புறம்பான கூற்றுக்களிலிருந்து தவிர்ந்தவை என நியாயமான உறுதிப்பாடொன்றை வழங்குதல் மற்றும் எனது கருத்து உட்பட கணக்காய்வாளரின் அறிக்கை வெளியிடுவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்பாடு உயர் மட்ட உறுதிப்பாடு ஆக இருப்பினும், இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் போதியளவிலான குறைபாடுடைய கூற்றுக்களை வெளிப்படுத்துவதை உறுதிப்படுத்துவதாக அமையாது. மோசடி மற்றும் தவறுகள் என்பன தனி அல்லது குழுவாக தாக்கம் செலுத்தும் போதுபோதிய குறைபாடுடைய கூற்றுக்கள் ஏற்பட முடிவதுடன், இந் நிதிக் கூற்றுக்களை அடிப்படையாக கொண்டு பரிசீலிப்பாளர்களினால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பில் தாக்கம் ஏற்படுக்கூடுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

என்னால் தொழில் நியாய மற்றும் தொழிற்சார் ஐயப்பாடுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு ஏற்ப கணக்காய்வு செய்யப்பட்டது. மேலும்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக்கூடிய போதியளவிலான உண்மைக்குப் புறம்பான கூற்றுக்களின் இடர்நிலையை அடையாளங் காணும் போதும், மதிப்பிடும் போதும் கலாத்திற்கேற்றவாறு உசிதமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதன் மூலமும் அல்லது தவறுகள் காரணமாக எழக்கூடிய இடரினை தவிர்த்துக் கொள்வதற்கும், போதியளவிலானதும் தகுந்தளவிலானதுமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக் கொள்வது உசிதமானதென்பது எனது கருத்தாகும் போதிய மற்றும் உண்மைக்குப் புறம்பான கூற்றுக்களிலிருந்து ஏற்படும் பாதிப்பினை விட மோசடியினால் ஏற்படும் தாக்கம் அதிகமாவதுடன், நயவஞ்சக கூட்டுசேர்தல், போலி ஆவணங்களைத் தயாரித்தல்,வேண்டுமென்றே தவிர்த்தல் அல்லது உள்ளக கட்டுப்பாடுகளைத் தவிர்த்தல் என்பன மோசடி நிகழுவதற்கான காரணிகளாகும்.

- காலத்திற்கேற்றவாறான உசிதமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் பொருட்டு ஆணைக்குழுவின் உள்கசுட்டுப்பாடு சம்பந்தமான புரிந்துணர்வினைப் பெற்றுக் கொண்ட போதிலும், உள்ளக கட்டுப்பாட்டின் விளைதிறன் தொடர்பாக கருத்தொன்றை வெளியிட எண்ணுவதில்லை.

- பயன்படுத்தப்பட்டகணக்கீட்டு நியமங்களில் இருந்தும், கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயப்பாடு மற்றும் முகாமைத்துவத்தினால் செய்யப்பட்ட வெளிப்படுத்தல்களில் இருந்தும் வெளிப்படுத்தப்பட்ட தகைமை பாராட்டப்பட்டது.

- நிகழ்வுகள் மற்றும் நிலைமைகள் காரணமாக ஆணைக்குழுவின் தொடர்ந்தேச்சையான இருப்பு குறித்த போதியநிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என்பது சம்பந்தமாக பெற்றுக் கொண்ட கணக்காய்வுச் சான்றுகள் மீதான கணக்கீடு தொடர்பாக நிறுவனத்தின் தொடர்ச்சியான இருப்பு குறித்த அடிப்படையைக் கையாள்வதற்கான பொருத்தம் தீர்மானிக்கப்பட்டது. போதிய நிச்சயமற்ற தன்மை நிலவுவதாக நான் தீர்மானிக்கும் பட்சத்தில், நிதிக் கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் அவதானம் செலுத்தப்பட வேண்டியதுடன், அவ் வெளிப்படுத்தல்கள் போதியனவாக அல்லாதிருப்பின் எனது கருத்து கணக்காய்வு திருத்தப்படல் வேண்டும். எனினும் நிகழ்வுகள் அல்லது தரவுகளை அடிப்படையாக கொண்டு தொடர்ச்சியான இருப்பானது முடிவுறக்கூடும்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கிய நிதிக் கூற்றுக்களின் சமர்ப்பித்தல்கள், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் என்பனவற்றை மதிப்பீட்டுக்குட்படுத்தியதுடன், அது தொடர்பாக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் உசிதமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமை பாராட்டுக்குரியது.

எனது கணக்காய்வின் போது அடையாளங் காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளக கட்டுப்பாடு குறைபாடுகள் மற்றும் பிற விடயங்கள் தொடர்பாக கட்டுப்படுத்தும் தரப்புக்கள் அறிவுறுத்தப்பட்டன.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

# கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

## 2. பிற சட்ட ரீதியான மற்றும் கண்காணிப்பு தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கணக்காய்வு சட்டத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகள் சம்பந்தமான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன.

- 2018 ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய, எனது அறிக்கையின் கணக்காய்வு மீதான கருத்துரைகள் தொடர்பாக கையாளப்பட்ட பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கம் தவிர, கணக்காய்வு தொடர்பாக அவசியமான அனைத்து தகவல்கள் மற்றும் விளக்கமளிப்புக்கள் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன், எனது பரிசீலனையின் மூலம் அறியக்கூடிய வகையில் உரிய நிதி அறிக்கைகள் ஆணைக்குழுவினால் பேணப்பட்டு வந்துள்ளது.

- 2018 ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்குஅமைய ஆணைக்குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்தாக அமைந்துள்ளன.

- கடந்த வருடத்தில் பிரிவுகள் (ஆ)(1)(i) மற்றும் (அ)(5)(iii) என்பனவற்றில் நான் வெளிப்படுத்திய விடயங்கள் தவிர்த்து, 2018ம் ஆண்டு 19ம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 6(i)(ஈ)(iv) யின் தேவைப்பாடுகளுடன் இணங்கும் வகையில் ஆணைக்குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகள் கடந்த ஆண்டுடன் இணங்குகின்றன.

கடைப்பிடிக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் பெறப்பட்ட சான்றுகளின் மீதான மற்றும் போதியளவிலான விடயங்களுக்கான வரையறையினுள், கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு வெளிப்படுத்துமளவிற்கு ஏதும் எனது அவதானத்துக்குட்படவில்லை.

- 2018ம் ஆண்டு 19ம் ஆம் ஆம் இலக்க கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 12 (ஈ) யின் தேவைப்பாடுகளுடன் இணங்கும் வகையில், ஆணைக்குழுவின் ஒப்பந்தம் தொடர்பில், சாதாரண வியாபார சந்தர்பங்களில் தவிர்ந்த, ஒரு ஆணைக்குழுவின் அங்கத்தவர் நேடியான அல்லது மறைமுகமான தொடர்பு காணப்படல்.

- 2018 ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புக்கள் தவிர ஏதேனும் குறித்த எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டுப் சபையினால் வழங்கப்பட்ட பிற பொது அல்லது விசேட கட்டளைகளுக்கு இணங்காத வகையில் செயற்பட்டுள்ளமை.

| சட்ட திட்டங்கள் மற்றும் கட்டளைகளுக்கு அமைவாக | விபரம் |
|---|---|
| (i) 2000 ஆண்டின் 43 ஆம் தொழிலை முறைசார்ந்த வகையில் மேற்கொள்ளும் சட்டத்தின் 6 (2) (ஈ) பிரிவு | சபையினால் (தற்போதைய ஆணைக்குழு) அதன் இலக்க, காப்புறுதித் அதிகாரங்கள்தத்துவங்கள், பணிகள், கடப்பாடுகள் சபையினால் (தற்போதைய ஆணைக்குழு) அதன் இலக்க, காப்புறுதித் அதிகாரங்கள்தத்துவங்கள், பணிகள், கடப்பாடுகள் நிறைவேற்றும் போதும் முறைசார்ந்தவாறு மேற் கொள்ளும் போதும் சபைக்கு கிடைக்கப்பெறும் அனைத்து நிதியும், நிதியத்தின் நிதியமாக அடையாளங் காணப்பட வேண்டிய போதிலும்,மீதி சரிபார்த்தலில் வருமானமாக வகைப்படுத் தப்பட்டிருந்த மொத்தம் ‘ரூபா 934,419,711 ஆன 05 வருமான உருப்படிகளுக்கான நிதிச் செயலாற்றக் கூற்றில் வருமானமாக காண்பிக்கப்படாது காப்புறுதி பொறுப்பாளர்களின் பாதுகாப்பு நிதிய கணக்கில் சேர்க்கப்பட்டிருந்து. |

## கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

| | |
|---|---|
| (ii) 2017 ஆம் ஆண்டின் 24 இறைவரி சட்டத்தின் 7(2) பிரிவு | வட்டி வருவாய் பிரிதொரு வருமானமாக கொண்டு ஆம் இலக்க உள்நாட்டு வரி கணக்கிடப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்ட போதிலும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த 'ரூ. 462,770,523 ஆன வட்டி வருமானம் தொடர்பாக வரி கணக்கிடப்படவில்லை. |
| (iii) நிதிப் பிரமாணம் 371 | பெற்றுக் கொள்ளப்படும் நானாவித பணிக்கான இடைக்கால கட்டுநிதி அது வழங்கப்பட்ட பணி முடிவடைந்த உடனேயே மீளச் செலுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், 2016,2017, 2018 ஆண்டுகளில் வழங்கப்பட்ட 'ரூபா 554,497 ஆன 03 முற்பணங்கள் 2019 ஏப்ரல் 30 ஆந் திகதியளவிலும் கூட தீர்க்கப்படவில்லை. |
| (iv) 2003 ஆண்டின் ஜூன் 02 ஆந் திகதிய PED/12 இலக்க பொது முயற்சி யாண்மை சுற்றிக்கையின் 9.14 ஆம் பந்தி | நிர்வாக கையேடு ஒன்றினைத் தயாரித்து அது தொடர்பாக பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் திறைசேரி செயலாளருக்கு சமர்ப்பித்து இணக்கப்பாடு பெற வேண்டியிருந்த போதிலும், 2019 ஆண்டின் ஏப்ரல் 30 திகதியளவிலும் ஆணைக்குழுவினால் பயன்படுத்தப்பட வேண்டிய கையேடு தொடர்பாக திறைசேரி செயலாளரின் இணக்கப்பாடு கிடைக்கப்பெறவில்லை. எனினும், முற்பண கொடுப்பனவுகள், வாகன கடன் வழங்கல் உட்பட அனுமதி பெறப்படாத நிர்வாக கையேட்டின் பிரகாரம் முன்னெடுக்கப்பட்டு வருவது அவதானிக்கப்பட்டது. |
| (v) 2000 ஆண்டின் 43 இலக்க காப்புறுதி தொழில் முறைப்படுத்தல் சட்டத்தின் 48(1) பிரிவு | அனைத்து காப்புறுதியாளர்களும் அத் தொழிலின் காப்புறுதியாளரின் சொத்துக்கள், பொறுப்புக்களை மதிப்பீடு செய்வது உட்பட, ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் காப்பீட்டு கணிப்பீட்டின் உதவியுடன் புலனாய்வு செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டியதுடன், சபையினால் தயாரிக்கப்பட்ட சட்டதிட்டங்களுக்கு அமைய பிரித்தெடுப்பு ஒன்றினைத் தயாரிப்பதற்கும் சபையினால் ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும். எனினும் ஆணைக்குழுவில் காப்புறுதி கணிப்பீட்டாளர் பதவி தொடர்ந்தும் வெற்றிடமாக காணப்படுவதனால் காப்புறுதியாளரினால் வருடாந்தம் சமர்ப்பிக்கப்படும் காப்புறுதி கணிப்பீட்டு அறிக்கை 2016 ஆண்டில் இருந்து இது வரை மீளாய்வு செய்யப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. |
| (vi) 2003 ஜூன் 2 ஆந்திகதிய PED/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 9.3.2 ஆம் பந்தி | (ஆணைக்குழுவின் அனுமதிக்கப்பட்ட பதவிகளுக்கு உரிய ஆசேர்ப்பு நடைமுறை அங்கீகரிக்கப் பொது முயற்சியாண்மை படவில்லை) |

- 2018 ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டிற்கு அமைய சபையின் அதிகாரங்களும் தத்துவங்களும், கடப்பாடுகள் மற்றும் பணிகளுடன் இணங்காதவாறுசெயற்படுத்தப்பட்டுள்ளமை.
- 2018ம் ஆண்டு 19ம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 12 (ஈ) யின் தேவைப்பாடுகளுடன் இணங்கும் வகையில், ஆணைக்குழுவின் நிர்வாக சபையின் ஒரு அங்கத்தவர் வழமையான வியாபார சந்தர்ப்பங்கள் தவிர்த்து நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஆணைக்குழுவின் ஒப்பந்தம் சார்ந்த விடயங்களின் தொடர்புகள்.

# கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

## 03. பிற கணக்காய்வு அவதானிப்புக்கள்

அ) ஆணைக்குழுவின் அலுவலக நடவடிக்கைகள் வெளி நிறுவனம் ஒன்றினால் பேணிச் செல்லப்படுவதுடன் கட்டிடத்தின் வாடகையாக 2018 ஆம் ஆண்டில் 'ரூபா 38,533,202 செலுத்தப்பட்டிருந்ததுடன் அது 2017 ஆம் ஆண்டிற்கு நிகராக நூற்றுக்கு 13 ஆன அதிகரிப்பாகுமென அவதானிக்கப்பட்டது.

ஆ) பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் சில கடன் தீர்த்து வைத்தல்களின் போது உள்ளக காப்புறுதி நிதியமொன்றை பேணும் பொருட்டு கட்டணம் அறவிடப்படுவதாக 2018 ஜுலை 09 ஆந் திகதி ஆணைக்குழுவுக்குக் கிடைக்கப் பெற்ற முறைப்பாடொன்று தொடர்பாக இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லாத நிதி நிறுவன கண்காணிப்புத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், இது தொடர்பாக ஆணைக்குழுவினால் வேறு எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இ) ஆணைக்குழுவில் 26 கம்பனிகள் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், செயற்பாட்டுத் திட்டத்திட்டத்திற்கமைய அக் கம்பனிகளின் மாதாந்த அறிக்கைகள், காலாண்டு அறிக்கைகள் மற்றும் வருடாந்த அறிக்கைகள் சபைக்கு கிடைக்கப் பெற்றதன் பின்னர் 2-3 மாதங்களிடையே மீளாய்வு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 04 நிறுவனங்களின் வருடாந்த அறிக்கைகளின் மீளாய்வின் போது 38 நாட்களில் இருந்து 84 நாட்கள் வரை தாமதம் நிலவியமை அதவதானிக்கப்பட்டுள்ளது.

ஈ) ஆணைக்குழு 2016 ஆண்டின் ஆரம்பத்தில் இருந்தே காப்புறுதிக் கம்பனிகளின் சட்டக் கட்டமைப்புக்குப் பதிலாகஅறிமுகப்படுத்தப்பட்ட இடர் அடிப்படையானமூலதனத்தை முதன்மையாக கொண்ட பாதுகாப்பு முறைமைக்கு உட்பட்டதன் காரணமாக காப்புறுதிக் கணிப்பீட்டு அலகொன்றை உருவாக்குவதற்கு ஒரு காப்புறுதி கணிப்பீட்டாளர் பதவி, ஒரு உதவி காப்புறுதி கணிப்பீட்டாளர் பதவி மற்றும் 02 சிரேʼட நிறைவேற்று பதவிகள் தொடர்பான அங்கீகாரம் 2016 ஜுன் 09 மற்றும் டிசெம்பர் 07 ஆகிய இருதினங்களிலும் பெறப்பட்டிருந்தன. எனினும் அப் பதவிகள் 2019 ஏப்ரல் 30 ஆந் திகதியளவிலும்கூட வெற்றிடமாகவே காணப்பட்டன.

உ) ஆணைக்குழுவின் ஆரம்ப சம்பள அளவுத்திட்டங்கள் 2005 ஆண்டில் முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தினல் அங்கீகரிக்கப்பட்டவுடனேயே, அங்கீகரிக்கப்பட்ட சம்பள அளவுத்திட்டம்மற்றும் தற்போது செலுத்தப்படும் உள்ளபடியான சம்பள அளவுத்திட்டத்திற்கிடையே வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. தேசிய சம்பளங்கள் மற்றும் பணியாட்தொகுதி ஆணைக்குழுவின் மூலம் போன்றே நிரல் அமைச்சு மூலமும் சம்பளம் அதிகரிப்பதற்காக சிபார்சு செய்ய முடியாதென அறிவிக்கப்பட்டிருந்தும், 2012 ஆண்டில் சபையின் திறைசேரி முகவரினால் வழங்கப்பட்ட கடிதமொன்றினை அடிப்படையாக கொண்டு, ஆரம்ப சம்பளத்தில் இருந்து நூற்றுக்கு 15 ஆன சம்பள அளவுத்திட்டம் அதிகரிக்கப்பட்டு, செலுத்தப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

ஊ) காசோலைகளில் செலுத்துவதற்கு முன்னர் வங்கியில் உள்ள காசு மீதீயை உறுதிப்படுத்திக் கொள்ளாது காசோலைகள் வழங்கப்பட்டதன் காரணமாக கொடுப்பனவுகள் சம்பந்தமாக நிலவுகின்ற உள்ளக கட்டுப்பாடு பலவீனமடைந்துள்ளமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே ஆணைக்குழுவினால் பயன்படுத்தப்படுகின்ற கணக்கு மென்பொருள் (DMS) மூலம்பெற்றுக் கொண்ட பரீட்சை மீதியில் இலாபநட்ட தொங்கல் கணக்கொன்று அவதானிக்கப்பட்டதுடன்,அதில் 'ரூபா 31,150 ஆன ஆரம்ப வரவு மீதி மற்றும் 'ரூபா 192,578,152 ஆன இறுதி வரவுமீதி காணப்பட்டமையினால் கணக்கு வைப்பின் சரியான தன்மை தொடர்பாக கணக்காய்வின் போது திருப்பதியடைய முடியாதிருந்ததுடன், இக் குறைபாட்டினை அடையாளங்கண்டு சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

டபிள்யூ.பீ.சீ. விக்ரமரத்ன
கணக்காய்வாளர்தலைமை அதிபதி

# 2018 ஆண்டுக்காக கணக்காய்வாளர் நாயகத்தினால் எடுத்துக் காட்டப்பட்ட விடயங்கள் மற்றும் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பதிலளிப்புகள்

| | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைக்கு மேற்கொள்ளப்பட்ட பதிலளிப்புகள் |
|---|---|---|
| (அ) | கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை | |
| (i) | இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 1: | |
| | - மேற்குறிப்பிப்பிடபட்ட நியமமான பிரிவு 48 உடன் இணங்கும் வகையில், இலங்கை அரச கணக்கீட்டு நியமங்களினால் அனுமதிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் தவிர்த்து வருமானங்கள் மற்றும் செலவினங்களுடன் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தீர்க்கப்படக்கூடாத போதிலும், காசுப் புத்தகத்தில் உள்ள ரூபா 1,537,007 மீதி காசு மற்றும் காசுக்கு சமமானவற்றுக்கு எதிராக தீர்க்கப்பட்டிருந்தது. | இரண்டு வங்கிக் கணக்குகள், நடைமுறை மற்றும் சேமிப்பு கணக்குகளாக இலங்கை வங்கியில் பராமரிக்கப்படுகின்றதுடன் நடைமுறைக் கணக்குப் பேரேட்டில் கடன் மீதி காணப்பட்ட போதிலும், வங்கிக் கூற்றில் எப்போதும் கடன் மீதி பேணப்படவில்லை. இது நாளின் முடிவில் சேமிப்பு கணக்கில் உள்ள நிலுவையினை மாற்றுவதன் காரணமாக ஏற்பட்டாகும். மென்பொருளில் பதியப்பட்ட அனைத்துக் கொடுப்பனவுகளும் பேரேட்டுக்கு சென்ற போதிலும், அவை கொடுப்பனவுகளுக்காக வங்கிக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. அதற்கமைவாக, வினைத்திறனான நிதியங்களின் முகாமைத்துவத்திற்காக ஆணைக்குழுவினால்இரு வங்கிக் கணக்குகள் பராமரிக்கப்படுகின்றது. அதனால், சரியான முறையில் சீராக்கப்பட்டு, நிதியியல் கூற்றுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. |
| | - பிரிவு 53ற்கு அமைவாக, இலங்கை அரச துறை கணக்கியநிதியியல் கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்டுள்ள நடைமுறை வருடம் சார்ந்த அனைத்து இலக்கங்களில் வெளியிடப்பட்டுள்ள தகவல்களை அதற்கு முன்னைய காலத்துடன் ஒப்பிடப்பட்டு வெளிப்படுத்தப்படுதல் வேண்டும் என கோரப்பட்ட போதிலும், காசுப் பாச்சல் கூற்றுக்கள் தொடர்பாக ஒப்பீட்டுத் தகவல்களை ஆணைக்குழு வெளிப்படுத்தவில்லை. | 2019ம் ஆண்டில் ஒப்பீட்டு தகவல்களை சமர்ப்பிப்பதற்காக குறித்துக்கொள்ளப்பட்டது. |
| | - மேற்குறிப்பிட்ட நியமமான பிரிவு 128ற்கு அமைவாக, நிதியியல் நிலமைக் கூற்று, நிதிச் செயலாற்றுகை கூற்று, உரிமைப் பங்கு மாற்றக்கூற்று மற்றும் காசுப் பாச்சல் கூற்று மேல் தொடர்புடைய தகவல்களுக்கு தொடர்புடைய குறிப்புகளை காட்டும் படி கோரப்பட்ட போதிலும், அரச பிணையங்கள், நிலையான வைப்புகள், கிடைக்கப்பெற்ற முற்பணங்கள், வட்டி வருமானம் மற்றும் வருமான வரி தொடர்பாக தொடர்புடைய தகவல்களுக்கான தொடர்புடைய குறிப்புகள் காட்டப்படவில்லை. | தொடர்புடைய குறிப்புகளுக்கான அனைத்து தேவைப்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கணக்காய்வு வினாவில் முனைவுறுத்தப்பட்டவை சுய விளங்கங்கள் மற்றும் மேலதிக தகவல்களாகும், உரிய குறிப்புகளின் கீழ் தொடர்புடைய குறிப்புகள் மேற்கொள்ளப்படவில்லை மற்றும் வெளிப்படுத்தப்படவில்லை. உரிய தகவல்களை வெளிப்படுத்துவதை தொடர்வதற்கு எதிர்பார்க்கின்றோம். |
| | - பிரிவு 129 (டி) (ஸை) க்கு அமைவாக, நிதியியல்லல்லாத வெளிப்படுத்துகைகளின் கீழ் நிதியியல் இடர் முகாமைத்துவ நோக்கங்கள் மற்றும் கொள்கைகளை வெளிப்படுத்துமாறு கோரப்பட்ட போதிலும், ஆணைக்குழு நிதியியல் இடர் மற்றும் நிதியியல் இடர் முகாமைத்தவம் தொடர்பான தகவல்களை வெளிப்படுத்தவில்லை. | குறித்துக்கொள்ளப்பட்டது. கடந்த காலங்களில் நிறுவனத்தின் நிதியியல் இடர் முகாமைத்துவ நோக்கங்கள தனியாக வெளிப்படுத்தப்படவில்லை, அனால் கணக்கு கொள்கைகளின் ஊடாக வெளிப்படுத்தப்பட்டது. அதனால் 2019 நிதியாண்டில் இடர் மதிப்பீட்டினை தனியானதொரு பிரிவாக உட்படுத்தவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன், அதற்கமைவாக கணக்கியல் கொள்கைகள் மாற்றப்படும். |

## 2018 ஆண்டுக்காக கணக்காய்வாளர் நாயகத்தினால் எடுத்துக் காட்டப்பட்ட விடயங்கள் மற்றும் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பதிலளிப்புகள்

| | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைக்கு மேற்கொள்ளப்பட்ட பதிலளிப்புகள் |
|---|---|---|
| | - மேற்குறிப்பிடப்பட்ட நியமத்திற்கு அமைவாக, பிரிவு 137 இற்கு இணங்கும் வகையில் ஆணைக்குழு முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட நிதியியல் கூற்றுக்களில், கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கங்களில் அல்லது ஏனைய குறிப்புகளில் அடையாளம் காணப்பட்ட குறிப்பிட்டளவு தாங்கங்களை உருவாக்கும் விடயங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகள் அல்லது தீர்மானங்கள் வெளிப்படுத்தப்படவில்லை. | குறித்துக்கொள்ளப்பட்டது. |
| | - பிரிவு 150 வது நியமத்திற்கு இணங்கும் வகையில், நிறுவனத்தின் நிலையான இருப்பிடம், சட்ட ரீதியான அமைவு, தொழிற்பாடுகளின் இயல்பு, அதன் தொழிற்பாடுகளைக் கட்டுப்படுத்தும் மற்றும் அதன் பிரதான செயற்பாடுகளுக்கான உருவகத்தின் சட்டம் என்பன நிதியியல் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை. | பிரிவு 150 வது நியமத்திற்கு இணங்கும் வகையில், ஆணைக்குழு தொடர்பான அனைத்து விடங்களும் வருடாந்த அறிக்கையில் (2017 அறிக்கையில் 22ம் பக்கத்தில்) வெளிப்படுத்தப்பட்டுள்ளது.<br><br>2019ம் ஆண்டுக்கான நிதயியில் கூற்றுக்களில் உரிய தகவல்களை வெளிப்படுத்தவதற்கு எதிர்பார்க்கின்றோம். |
| **(ii)** | **இலங்கை அரச துறை கணக்கியல் நியமம் இலக்கம் 2:** | |
| | - மேற்குறிப்பிட்ட நியமத்திற்குரிய பிரிவு 56ற்கு இணங்கும் வகையில், காசுப் பாச்சல் கூற்றுக்களில் உருப்படிகளுக்கு இடையில் ஒப்பீடாக காசு மற்றும் காசுக்கு சமனானவையை வெளிப்படுத்துவதற்கு கோரப்பட்ட போதிலும் மற்றும் நிதியியல் நிலைக் கூற்றில் அந்த உருப்படிகளை, அந்த உருப்படிக்கள் மீதான ஒப்பீடுகள் நிதியியல் நிலைமைக் கூற்றில் அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும், காசுப் பாச்சல் கூற்றில் அது வெளிப்படுத்தப்படவில்லை. | 31 டிசம்பர் 2018ம் திகதி நிறைவடைந்த ஆண்டுக்கான நிதியியல் கூற்றுக்களின் 04ம் பக்கத்தில் உரிய வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டள்ளது. |
| | - காசுப் பாச்சல் கூற்றினைத் தயாரிக்கும் போது முதலீட்டு மூலத்திற்கு அமைவாக முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்தான காசுப் பா்சலை வேறாக காட்டும்படி கோரப்பட்டிருந்த போதிலும், நிலையான வைப்புகளில் முதலீடு செய்ததன் ஊடாக கிடைக்கப் பெற்ற தேறிய காசுப் பாச்சல் மற்றும் மீள்கொள்ளவவில் இருந்து உருவாக்கப்பட்ட தேறிய காசுப் பாச்சல் என்பன காசுப் பாச்சல் கூற்றில் வேறாக வெளிப்படுத்தப்படவில்லை. | இலங்கை கணக்கியல் நியம இலக்கம் 02ற்கு அமைவாக காசுப் பாச்சல் கூற்றினைத் தயாரிப்பதற்கு நேரடி மற்றும் நேரடியற்ற முறை எனும் இரு முறைகளையும் பயன்படுத்த முடியும். அதனால் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு நியமங்களின் உப பிரிவு 2 (32) இன் கீழ் நேரடியற்ற முறைமையின் கீழ் தேறிய பெறுமதிக்கு சீராக்கும் வகையில காசுப் பாச்சல் கூற்றினைத் தயாரித்துள்ளது. முதலீடுகளில் இருந்தான காசுப் பாச்சல் மற்றும் தேறிய காசுப் பாச்சல் ( ரூபா 40,000,000/-) காசுப் பாச்சலுக்கு அமைவாக சீராக்கப்பட்டுள்ளது.<br><br>மேலே குறிப்பிட்டுள்ளவாறு, நேரடியற்ற முறையில் காசுப் பாச்சல் கூற்றுகள் தயாரிக்கப்படும் போது, மீள்கொள்வனவில் தேறிய பெறுமதி சீராக்கப்பட்டள்ளது. அரச பிணையங்களின் தேறிய பெறுமதி (ரூபா 28,700,000/-) நிலையான வைப்புகளில் (ரூபா 40,000,000/-) மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளில் இருந்தான தேறிய காசுப் பாச்சல் மற்றும் மீள்கொள்வனவுகளில் (ரூபா 11,300,000/-) இருந்தான தேறிய காசுப் பாச்சல் என்பவற்றை ஒன்று சேர்த்து கணிப்பீடு செய்யப்பட்டது. அதற்கமைவாக, முதலீடுகளில் இருந்தான காசுப் பாச்சலின் கீழ் குறிப்பிடப்பட்ட நிலையான சொத்துக்கள் மற்றும் மீள்கொள்வனவுகள் என்பவற்றுக்கிடையிலான வேறுப்பாடு (ரூபா 28,700,000/- எனக் குறிப்பிடப்பட்டது) சரியானதாகும். |

# 2018 ஆண்டுக்காக கணக்காய்வாளர் நாயகத்தினால் எடுத்துக் காட்டப்பட்ட விடயங்கள் மற்றும் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பதிலளிப்புகள்

| | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைக்கு மேற்கொள்ளப்பட்ட பதிலளிப்புகள் |
|---|---|---|
| | - வரிக்கு முன்னரான இலாபங்களின் மீது தொழிற்பாட்டு செயற்பாடுகளில் இருந்து உருவான காசுப் பாச்சலைக் கணிப்பீடு செய்யுமாறு கோரப்பட்ட போதிலும், காசுப் பாச்சல் கூற்று வரிக்குப் பின்னரான இலபத்தின் மீது தொழிற்பாட்டு செயற்பாடுகளில் இருந்து உருவான காசுப் பாச்சலில் கணிப்பீடு செய்யப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. | குறித்துக்கொள்ளப்பட்டது.<br>2019ம் ஆண்டிலிருந்து இதனை நிவர்த்தி செய்ய எதிர்பார்க்கின்றோம். |
| (iii) | இலங்கை அரச துறை கணக்கியல் நியமம் இலக்கம் 7: | |
| | - மேற்குறிப்பிட்ட நியமத்திற்குரிய பிரிவு 40ற்கு இணங்கும் வகையில், ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை கணக்கீடு செய்வதற்கு பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கையை நிறுவனம் வெளிப்படுத்தவில்லை. | மதிப்பீட்டாளரின் பெயர் தவிர்ந்த நிலையான சொத்துக்களின் கீழான கணக்கீட்டு நியமங்களின் கீழ் அனைத்து தகவல்களும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. நாங்கள் 31 டிசம்பர் 2019ல் முடிவடையும் ஆண்டுக்கான கூற்றுக்களில் மேலதிக தகவல்களை வெளிப்படுத்துவதற்கு எதிர்பார்க்கின்றோம். |
| | - மேலும், நிறுவனம் மேற்குறிப்பிட்ட நியமத்திற்குரிய பிரிவு 90ற்கு இணங்கும் வகையில், ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் வகை தொடர்பாக மீள்மதிப்பீட்டுத் தொகையை வெளிப்படுத்தவில்லை. | நாங்கள், 2019ம் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகளில் உரிய வெளிப்படுத்தல்களை மேற்கொள்ள எதிர்பார்க்கின்றோம். |
| | - இலங்கை அரச துறை கணக்கியல் நியம இலக்கம் 7ற்கு அமைவாக, சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் வருடாந்தம் மீள்மதிப்பீடு செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன், இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமம் 3ற்கு அமைவாக பெறுபேற்று சீராக்கங்கள் கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், ரூபா 36,332,454 பெறுமதியான சொத்துக்கள் முழுமையாக தேய்மானம் செய்யப்பட்டள்ளதுடன், குறித்துரைக்கப்பட்ட நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை. | நிலையான சொத்துக்களின் கீழ் மோட்டார் வாகன மீள் பரிசீலனையின் ஊடாக மீள்மதிப்பீடு செய்யப்பட்டதுடன், இதற்கான அனுமதி கணக்காய்வுக் குழுவினால் வழங்கப்பட்டுள்ளது. மீள்மதிப்பீட்டு இலாபம் கணக்குகளில் சீராக்கப்பட்டுள்ளது. கணக்காய்வுக் குழுவினால் ஏனைய சொத்துக்களில் இருந்து ஒரு பகுதியை அகற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட்டள்ளதுடன், 2019ம் ஆண்டில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |
| (iv) | இலங்கை அரச துறை கணக்கியல் நியமம் இலக்கம் 10: | |
| | (அ) மேற்குறிப்பிட்ட நியமத்திற்குரிய பிரிவு 19ற்கு இணங்கும் வகையில், நாணயப்பரிமாற்றல் கொடுக்கல் வாங்கல்களில் இருந்தான வருமானத்திற்கான சான்றுகளை வழங்குமாறு கோரப்பட்டிருந்த போதிலும், அவ்வகையான சான்றுகள் ஏதும் கணக்காய்வு நோக்கத்திற்காக சமர்ப்பிக்கப்படவில்லை. | இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் வெளிநாட்டு நாணங்களிலான கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படவில்லை. |
| | (ஆ) நிறுவனத்தினால் பெற்றுக்கொள்ப்பட்ட ரூபா 1,569,187 மொத்தப் பெறுமதியுடைய இரு நிலையான சொத்துக்கள் நிலையான சொத்துக்களுக்கு பதிலாக நடைமுறைச் சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், 2019ம் ஆண்டு ஆணைக்குழுவினால் கைக்கொள்ளப்பட்ட ரூபா 319,890 பெறுமதியான நிலையான சொத்துக்கள், மீளாய்வுக்குட்பட்ட வருடத்தின் நிதியியல் கூற்றுகளில் நடைமுறைச் சொத்துக்களின் கையகப்படுத்தலாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. | 2019ம் ஆண்டு 25 கதிரைகள் நிறுவனத்தினால் கொள்ளவனவு செய்யப்பட்ட போதிலும், 2018ம் ஆண்டு அதற்கான ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டு கட்டளை உறுதிப்படுத்தப்பட்டது. 2018ம் ஆண்டின் அட்டுறு செலவுகளின் கீழ் அது குறிப்பிடப்பட்டுள்ளதுடன் நிறுவனத்திற்கு உரிய சொத்துக்கள் கிடைக்கப்பெற்றது் சொத்துக்கள் கணக்கில் செம்மையான முறையில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. |

# 2018 ஆண்டுக்காக கணக்காய்வாளர் நாயகத்தினால் எடுத்துக் காட்டப்பட்ட விடயங்கள் மற்றும் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பதிலளிப்புகள்

| | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைக்கு மேற்கொள்ளப்பட்ட பதிலளிப்புகள் |
|---|---|---|
| | (இ) குளிர்படுத்தல் முறைமைகள் தொடர்பாக செலவு செய்யப்பட்ட ரூபா 200,000 ஆலோசனைச் சேவைக் கட்டணம் மூலதனப்படுத்தப்படாமல் 31 டிசம்பர் 2018ம் திகதியன்று நடைமுறைச் சொத்துக்களில் கணக்கீடு செய்ப்பட்டுள்ளது. | 2018ம் ஆண்டின் முடிவிலும் குளிர்படுத்தல் முறைமைக்கான ஆலோசனைச் சேவைக் கட்டணம் கொடுப்பனவு செய்யப்படவில்லை, அத்துடன் இது அட்டுறு செலவாக 2018ம் ஆண்டில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் குளிர்படுத்தல் முறைமையானது செயல்படுத்தும் மட்டத்தில் குறித்துரைக்கப்படவில்லை, நிறுவனம் அதனை பரிசீலனை செய்யுமாறு அறிவித்துள்ளது. அதற்கமைவாக, அந்த முறைமை குறித்துரைக்கப்பட்ட மட்டத்திற்கு வரும்வரை அதனை சொத்தாக அடையாளம் காண முடியாது. 2019ம் ஆண்டிலேயே அந்த முறைமையினை சரியான முறையில் தொழிற்படுவதாக உறுதிப்படுத்த முடியும். 2019ம் ஆண்டு உரிய சொத்து சொத்துக்கள் கணக்குக்கு மாற்றப்படும். |
| | (ஈ) நிதியியல் கூற்றுக்களில் வருமான வரியாக ரூபா 1,822,908 வைக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், வரிச் செலவுக்கான விரிவான கணிப்பீடுகள் நிதியியல் கூற்றுகளில் வெளிப்படுத்தப்படவில்லை. | அது உரிய குறிப்புகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளதுடன் 2019ம் ஆண்டு நிதியியல் கூற்றுகளில் வெளிப்படுத்தவதற்கு எதிர்பார்க்கின்றோம். |
| | (உ)காசுப் பாச்சல் கூற்றுகளில தொழிற்பாட்டு மூலதனத்தின் காசு வெளிப்பாச்சால் தொகையாக ரூபா 4,482,480 எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், இந்தக் கணிப்பீடுகள் கணக்காய்வு நோக்கங்களுக்காக வழங்கப்படவில்லை. | தொழில்பாட்டு மூலதன மாற்றத்தில் கழிக்க வேண்டிய கிடைக்கப் பெற வேண்டிய மீதியாக ரூபா 4,482,480/- குறிக்கப்பட்டிருந்த போதிலும், இது குறிப்பு 4ற்கு உரிய 2017 மற்றும் 2018 இடையில் கிடைக்கப் பெற வேண்டிய மீதியின் வேறுபாடாகும். மீதிகளை கழிப்பதன் ஊடாக கணிக்கப்படும் தேறிய மாற்றத்தில் கிடைக்கப் பெற வேண்டிய நிறுத்தி வைத்தல் வரிகள், வட்டி வருமானம் மற்றும் வருடத்தின் வருமான வரி வருமானம் என்பவை எந்தவொரு நிதியியல் தாக்கத்தையும் விளைவிப்பதில்லை என்பதுடன் இது சீராக்கப்பட்டுள்ளது. அதற்கமைவாக, கிடைக்கப் பெற வெண்டிய மீதிகளின் கழிப்பனவு ரூபா 4,482,480/- ஆவதுடன், இது சரியானதாகும். கணக்காய்வு நோக்கத்திற்காக எக்ஸெல் வடிவில் உரிய மென்பிரதிகளை நாங்கள் சமர்ப்பித்துள்ளோம். |
| **2.** | **ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளின் அறிக்கை** | |
| | 2018ஆம் ஆண்டு 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (அ) பிரிவின் தேவைப்படுகளுக்கு இணங்கும் வகையில், கீழ்வரும் அவதானிப்புகள் தவிர்த்து, ஆணைக்குழு ஏதேனும் உரிய எழுத்திலான சடடவாக்கத்தினை நிர்மாணித்துள்ளது அல்லது ஆணைக்குழுவின் ஆளுகைச் சபையினால் பொது அல்லது குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகள் விநியோகிக்கப்பட்டுள்ளது.<br>(i) 2000ஆம் ஆண்டு 43ஆம் இலக்க காப்புறுதித்துறையின் ஒழுங்குமுறைப்படுத்தல் சட்டத்தின் பிரிவு (6)(2)(ஈ) | மதிப்பீட்டுக் குறிப்பு. |
| | ஐந்தொகையில் உள்ள அதன் அதிகாரத்தை பயன்படுத்தியும் அதன் கடமைகளை நிறைவேற்றுகையில் ஆணைக்குழுவினால் பெறப்படும் அனைத்து நிதியங்களும் அடையாளம் காணப்படுவதற்கு தேவைப்படுத்தப்படுகின்றது, எனினும் நிதியியல் செயலாற்றுகைக் கூற்றில் உள்ள வருமானமாக காட்டாது 5 உருப்படிகளின் வருமானத்தைக் கொண்ட மொத்தத் தொகையான ரூபா 934,419,711 காப்புறுதி பூட்கையாளர்களின் பாதுகாப்பு நிதியத்திற்கு சேர்க்கப்பட்டுள்ளது. | 2000ஆம் ஆண்டு 43ஆம் இலக்க காப்புறுதித்துறையின் ஒழுங்குமுறைப்படுத்தல் சட்டத்தின் பிரிவு 103(1)ம் பிரிவுக்கு அமைவாக காப்புறுதி பூட்கையாளர்களின் பாதுகாப்பிற்கான நிதியம் நிறுவப்பட்டள்ளதுடன் அதற்கான காசு அந்த நிதியத்தினால் உருவாக்கப்பட்ட செஸ் வரியில் இருந்து சேர்க்கப்படுகின்றது.<br>2018ம் ஆண்டு செஸ் வருமானம் — ரூபா<br>செஸ் வருமானம் — 479,088,491<br>முதலீட்டு வருமானம் — 455,331,220<br>காப்புறுதி பூட்கையாளர் பாதுகாப்பு நிதியம் — 934,419,711 |

## 2018 ஆண்டுக்காக கணக்காய்வாளர் நாயகத்தினால் எடுத்துக் காட்டப்பட்ட விடயங்கள் மற்றும் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பதிலளிப்புகள்

| | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைக்கு மேற்கொள்ளப்பட்ட பதிலளிப்புகள் |
|---|---|---|
| | | மேற்குறிப்பிட்ட நிதி ஐந்தொகையில் ஒதுக்கீட்டின் கீழ் சரியான முறையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கமைவாக சட்டத்தின் பிரிவு 6 இற்கு இணங்கும் வகையில் வருடாந்த வருமானம் சரியான முறையில் வருமான மற்றும் செலவுக் கணக்கில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளதுஇ அதற்கமைவாக காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் இலாபம் குறைக்கப்படவில்லை என்பதுடன், அது சரியான முறையில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. |
| | (ii) 2017ஆம் ஆண்டு 24ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் பிரிவு 7(2)<br>வட்டி வருமானத்தின் வரிக் கணிப்பீடு, தனியானதொரு வருமானமாக கருத்தில் கொள்ளப்படுதல் வேண்டும் எனக் குறிப்பிடப்பட்ட போதிலும், நிதியியல் கூற்றுக்களில் ரூபா 462,770,523 எனக் குறிப்பிடப்பட்ட வட்டி வருமானத்திற்கான வரி கணிப்பீடு செய்யப்ப டவில்லை. | காப்புறுதிப்பூட்கையாளர்களின் பாதுகாப்பு நிதியத்தின் முதலீட்டு வருமானம் ஆணைக்குழுவின் வருமானமாக அடையாளம் காணப்படவில்லை மற்றும் அது பாதுகாப்பு நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ளது. ஆணைக்குழுவின் வட்டி வருமானம் சரியான முறையில் கணிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன், வருமான வரி சீராக்கப்பட்டுள்ளது. |
| | (iii) நிதி ஒழுங்குவிதி 371<br>உரிய பணிகள் நிறைவடைந்ததும் முற்பணங்களை உடனடியாக தீர்க்குமாறு கூறப்பட்ட போதிலும், 2016, 2017 மற்றும் 2018ம் ஆண்டு வழங்கப்பட்ட் ரூபா 554,497 30 ஏப்பிரல் 2019 வரை தீர்க்கப்படவில்லை. | 2016இல், ரூபா 50,000 குளிரூட்டல் முறைமைக்கான ஆலோசனைச் சேவைக்கான முற்பணமாக செலுத்தப்பட்ட போதிலும், வழங்கப்பட்ட இலக்கு இன்னும் பூர்த்தி செய்யப்பட்வில்லை என்பதனால், இலக்கு பூர்த்தி செய்யப்பட்டதும் மிகுதிக் கொடுப்பனவை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.<br>வெப்தளத்தை மேம்படுத்துவதற்காக ரூபா 100,000 முற்பணமாக செலுத்தப்பட்ட போதிலும், குறித்த இலக்கு இன்னும் பூர்த்தி செய்யப்படவில்லை என்தனால், குறித்த மீதி இன்னும் கணக்கில் நிலுவையாக உள்ளது. உரிய இலக்கு பூர்த்தி செய்யப்பட்டதும், முற்பணக் கணக்கில் இருந்து அதனை மாற்றுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.<br>வெப் தளம் தொடர்பான முலதன செலவுகளுக்கான இலக்கு மற்றும் 03ல் குறிப்பிடப்பட்ட பூர்த்தி செய்யப்பட்டதும் மற்றும் குளிரூட்டல் முறைமை தொடர்பான பணிகளை 2019 முடிவடைவதற்கு முன்னர் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. உரிய இலக்குகள் பூர்த்தி செய்யப்பட்டதும், 2019ம் அதனை மூலதனமாக்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. |
| | (iv) 2 ஜுன் 2003ம் திகதி விநியோகிக்கப்பட்ட இலக்கம் PED/12 பொது தொழில்முயற்சிகளுக்கான சுற்றுநிருபத்தின் பிரிவு 9.14 | ஆணைக்குழுவின் பணிகள் ஆரம்பித்த தினத்தில் இருந்து அனைத்துப் பணிகளும் நிர்வாக கையேடுகளுக்கு அமைவாக மேற்கொண்ட போதிலும் சுற்றநிரூபம் மற்றும் வழிகாட்டலுகளுடன் இணங்குவதற்கு முயன்ற போதிலும் நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக அனுமதியைப் பெற்றுக்கொள்வதில் தாமதங்கள் காணப்பட்டது. |

# 2018 ஆண்டுக்காக கணக்காய்வாளர் நாயகத்தினால் எடுத்துக் காட்டப்பட்ட விடயங்கள் மற்றும் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பதிலளிப்புகள்

| | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைக்கு மேற்கொள்ளப்பட்ட பதிலளிப்புகள் |
|---|---|---|
| | நிர்வாக கையேட்டுடைத் தயாரித்து பணிப்பாளர் சபை அங்கத்தவர்களின் அனுமதியுடன் திறைசேரி செயலாளரின் உறுதிப்படுத்தலுக்கு சமர்ப்பிக்குமாறு கோரப்பட்ட போதிலும், ஆணைக்குழுவினால் பின்பற்றப்படும் கையேட்டுக்கான உறுதிப்படுத்தல் திறைசேரி ஆணையாளரினால் வழங்கப்படவில்லை. அத்துடன் முற்பணம் மற்றும் கடன் வழங்கல் உள்ளடங்களாக செயற்பாடுகள் அங்கீகரிக்கப்படாத கையேட்டின் ஊடாக மேற்கொள்ளப்படுவது அவதானிக்கப்பட்டது. | 18.05.2018ம் திகதி நடைபெற்ற 182வது ஆணைக்குழு கூட்டத்தில் இது தொடர்பாக கவனம் எடுக்கப்பட்டதுடன் நிர்வாக கையேட்டினைப் பின்பற்றாது பொதுச் சுற்றுநிருபங்களைப் பின்பற்றும் போது சிக்கல்கள் எழுகின்றன. அதற்கமைவாக தற்போது அங்கீகரிக்கப்பட்டுள்ள நிர்வாக கையேட்டினைப் பின்பற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. |
| | (v) 2000ம் ஆண்டு 43ம் இலக்க காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் சட்டத்தின் பிரிவு 48ற்கு அமைவாக,<br><br>ஒவ்வொரு காப்புறுதியாளர்களும், ஒவ்வொரு நிதியியல் வருடம் முடிவடைந்ததன் பின்னர் காப்புறுதி கணிப்பீட்டாளரினால் மீளாய்வு செய்யப்பட்டதன் பின்னர் ஆணைக்குழுவினால் விதத்துரைக்கப்பட்ட விதிகளுக்கு அமைவாக சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் உள்ளடங்களாக் கொண்டு தயாரிக்கப்பட்ட சுருக்கமொன்றினைத் பெற்றுக்கொள்வதற்கு ஆணைக்குழு ஒழுங்குகளை மேற்கொள்ளுதல் வேண்டும். இதுவரை ஆணைக்குழுவிற்கான காப்பீட்டுக் கணிப்பீட்டாளருக்கான பதவி இது வரை வெற்றியடாக இருப்பதுடன், வருடாந்தம் காப்புறுதியாளர்களினால் சமர்ப்பிக்கப்படும் காப்புறுதிக் கணிப்பீட்டு அறிக்கைகள் 2016இல் இருந்து இதுவரை மீளாய்வு செய்யப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | இந்த நிலைமை காப்புறுதிக் காப்பீட்டாளர் இல்லாமையினால் உருவானதாகும். எனினும் 2019ம் ஆண்டிலிருந்து FSMP கருத்திட்டத்தின் கீழ் உள்ள காப்புறுதிக் கணிப்பீட்டாளரின் சேவையைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. காப்புறுதிக் கணிப்பீட்டுப் பிரிவின் நிறுவலின் பின்னரே பிரதான காப்புறுதிக் கணிப்பீட்டாளரின் வகிபாகத்திற்கான பணிகள் தொடங்குகின்றன. |
| | (vi) 2 ஜுன் 2003ம் திகதி விநியோகிக்கப்பட்ட இலக்கம் PED/12 பொது தொழில்முயற்சிகளுக்கான சுற்றுநிருபத்தின் பிரிவு 9.3.1<br><br>ஆணைக்குழுவின் பொருத்தமான பதவிகளுக்கு ஆட்சேர்ப்பினை மேற்கொள்வதற்கான அங்கீகாரங்கள் பெற்றுக்கொள்ளப்படவில்லை. | பதவிகளை உருவாக்கும் போது ஆணைக்குழுவின் ஆட்சேர்ப்பு நடைமுறைக்கான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படும். |
| | • 2018ம் ஆண்டு 19ம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12(எ) இன் தேவைப்பாடுக்கு இணங்கும் வகையில் ஆணைக்குழு அதன் அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் கடமைகளையாற்றவில்லை.<br><br>• 2018ம் ஆண்டு 19ம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12(ஏ) இன் தேவைப்பாடுக்கு இணங்கும் வகையில், குறித்தரைக்கப்பட்ட கால எல்லையினுள்ளும் பிரயோகிக்கப்படும் சட்டங்களுக்கு இணங்கும் வகையிலும் வளங்களை சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், செயற்திறனுடனும் பயக்படுத்தவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | மதிப்பீட்டு குறிப்பு. |

# 2018 ஆண்டுக்காக கணக்காய்வாளர் நாயகத்தினால் எடுத்துக் காட்டப்பட்ட விடயங்கள் மற்றும் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பதிலளிப்புகள்

| | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைக்கு மேற்கொள்ளப்பட்ட பதிலளிப்புகள் |
|---|---|---|
| **3.** | ஏனைய கணக்காய்வு அவதானிப்புகள் | |
| | அ) ஆணைக்குழுவின் தொழிற்பாடுகள் வெளிவாரிக் கட்டத்தில் மேற்கொள்ளப்பட்டதுடன், இதற்கான வாடகையாக ரூபா 38,533,202 செலுத்தப்பட்டுள்ளதுடன், இது கடந்த ஆண்டு வாடகையுடன் ஒப்பிடும் போது 13 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. | இந்த விடயம் இதற்கு முன்னரும் சில தடவைகள் ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்பட்டதுடன், அதற்கான பதில்களும் வழங்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனத்தை நிறுவுவதற்கு மாற்று இடமொன்று தேடப்பட்ட போதிலும், குறைந்த விலையில் அவ்வாறான இடமொன்றைப் பெற்றுக்கொள்ள முடியாமல் போயுள்ளது. மேலும் இந்த இடத்தினை வாடகைக்கு பெற்றுக்கொள்வதற்கான ஒப்பந்தம் ஐந்து வருடங்களுக்கு கைச்சாத்திடப்பட்டள்ளடுன், ஆணக்குழுவின் அங்கீகாரமும் பெறப்பட்டுள்ளது. |
| | ஆ) பல்வேறுபட்ட பதிவுசெய்யப்பட்ட நிதிக் கம்பனிகள், கடன் விநியோகத்தின் போது உள்ளக காப்புறுதி நிதியத்தை பேணுவதற்காக கட்டணங்களை அறவிடுவதாக 09 ஜுலை 2018ம் திகதி கிடைக்கப்பெற்ற முறைப்பாடு தொடர்பாக ஆணைக்குழு இலங்கை மத்திய வங்கியின் வங்கிச் செயற்பாடற்ற நிதி நிறுவனங்கள் கண்காணிப்புத் திணைக்களத்திற்கு அறிவித்துள்ள போதிலும், ஆணைக்குழு இது தொடர்பாக வேறெந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை. | எங்களால் இலங்கை மத்திய வங்கிக்கு அனுப்பப்பட்ட கடிதத்திற்கான பதில் 27 ஒகஸ்ட் 2018ம் திகதி கிடைக்கப்பெற்றது. எனினும் அதில் இலங்கை மத்திய வங்கியினால் இது வரை விசாரணைகள் மேற்கொள்ளப்படவில்லை என அறிவிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக மேலும் ஒரு ஞாபகமூட்டல் கடிதத்தை அனுப்புவதற்கு எதிர்பார்க்கின்றோம். |
| | இ) ஆணைக்குழுவின் கீழ் பதிவுசெய்யப்பட்ட 26 காப்புறுதிக் கம்பனிகள் உள்ளன. ஆணைக்குழுவிற்கு இந்தக் கம்பனிகளின் மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த விபரத்திரட்டுகள் கிடைக்கப்பெற்றதிலிருந்து 2−3 மாதங்களினுள் மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், நான்கு நிறுவனங்களின் அறிக்கைகள் தொடர்பாக 38−84 நாட்கள் காலதாமதம் காணப்பட்டது அவதானிக்கப்பட்டது. | 3 கம்பனிகளின் மீளாய்வு காலதாமதமடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டதும், உரிய அலுவலர் விசாரணைக்குட்படுத்தப்பட்டார். அதன் போது, சில அவதானிப்புகள் விபரமாக பகுப்பாய்வு செய்யப்பட வேண்டிருந்தததானல் காலதாமதமாகியமை உறுதிப்படுத்தப்பட்டது.<br><br>இவ்வாறான காலதாமதங்களைக் குறைப்பதற்கு தொடர்ச்சியாக இந்த மீளாய்வுகளை கணக்காணித்து ஞாபகமூட்டல் கடிதங்களை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. |
| | ஈ) 2016ம் ஆண்டு ஆணைக்குழுவை ஆரம்பித்தததின் பெறுபேறாக, காப்புறுதிக் கம்பனிகளுக்கான கடன்தீர் எல்லை சட்டகத்திற்கான இடர் அடிப்படையிலான மூலதன மதிப்பீடு முறைமை அமுல்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், காப்புறுதிக் கணிப்பீட்டாளர், உதவி காப்புறுதிக் கணிப்பீட்டாளர் மற்றும் இரண்டு சிரேஸ்ட நிறைவேற்று/ நிறைவேற்றுத் தரமல்லாத ஆளணியினரைக் கொண்டு காப்புறுதிக் கணிப்பீட்டு அலகினை ஆரம்பிப்பதற்கானக மேற்குறித்த பதவிகளுக்கான அனுமதி 2016 ஜுன் 9 மற்றும் டிசம்பர் 7 ம் திகதிகளில் கோரப்பட்டிருந்த போதிலும் அது நிறுவப்படவில்லை. | ஆணைக்குழுவினால் உலக வங்கியின் கருத்திட்டத்தை அமுல்படுத்தலுடன் காப்புறுதிக் கணிப்பீட்டாளர் மற்றும் உதவிக் காப்புறுதிக் கணிப்பீட்டாளர் பதவி வெற்றிடங்களைப் பூர்த்தி செய்வதற்கு அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |

## 2018 ஆண்டுக்காக கணக்காய்வாளர் நாயகத்தினால் எடுத்துக் காட்டப்பட்ட விடயங்கள் மற்றும் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பதிலளிப்புகள்

| | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைக்கு மேற்கொள்ளப்பட்ட பதிலளிப்புகள் |
|---|---|---|
| | உ) ஆணைக்குழுவின் ஆரம்ப சம்பள படி முறைமையை முகாமைத்துவத் திணைக்களம் 2015 இல் அங்கீகரித்துள்ளதுடன், அதனை தற்போது வழங்கப்படும் சம்பளத்துடன் ஒப்பிடும் போது அதில் வேறுபாடுகள் இல்லை. எனினும், தேசிய சம்பளங்கள் மற்றும் ஆளணி ஆணைக்குழுவும், சமாந்தர அமைச்சும் சம்பள அதிகரிப்பு விதந்துரைக்கப்படவில்லை என அறிவித்துள்ளதென்பது 2012ம் ஆண்டில் அவதானிக்கப்பட்டுள்ளது. எனினும் அடிப்படை சம்பளத்தில் இருந்து 25 வீத சமபள அதிகரிப்புடன் சம்பளம் திறைசேரி பிரதிநிதிகளினால் வழங்கப்பட்ட கடிதத்திற்கு அமைவாக வழங்கப்பட்டுள்ளது. | காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு நிறுவப்பட்ட 2000ஆம் ஆண்டு 43ஆம் இலக்க காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் சம்பளங்கள் தீர்மானிக்கப்படுகின்றன. |
| | ஊ) காசோலைகளை கொடுப்பனவுகளுக்கு வழங்குவதற்கு முன்னர் வங்கி மீதிகளை உறுதிப்படுத்திக் கொள்ளாது காசோலைகளை வழங்கும் முறையில் உள்ளக ரீதியாக கட்டுப்பாடுகள் வலிவற்றதாக காணப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது. மேலும், இலாப நட்ட தொங்கல் கணக்கில் ஆரம்ப செலவு மீதி ரூபா 31,150 ஆகவும் பரீட்சை மீதியில் இறுதி செலவு மீதி ரூபா 192,578,152 ஆகவும் ஆணைக்குழுவினால் பயன்படுத்தப்படும் .கணக்கு மென்பொருள் (DMS) காட்டுகின்றது. அதனால் கணக்குப் பதிவுகளை பேணுதலில் உள்ள செம்மை தொடர்பாகவும், அதனால் வழு அடையாளம் காணப்பட்டு திருத்தப்பட முடியாமையினால் கணக்காய்வாளர்கள் திருப்தியடையவில்லை. | ஆணைக்குழுவினால் பயன்படுத்தப்படும் DMS மென்பொருளில் உள்ள கணக்குகள் 2018ம் ஆண்டுக்கானவை இன்றும் முடிக்கப்படவில்லை என்பதனால், இலாப நட்ட தொங்கல் கணக்கில் நிலுவை உள்ளது. இறுதிக் கணக்கு தீர்க்கப்பட்டதுட், நிலுவைகள் பூஜ்ஜியமாகும்.<br>தற்போது அந்த நிலுவைகள் பூஜ்ஜியமாக உள்ளன. |

# பின்னிணைப்பு I

2018 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதிக் கைத்தொழில் ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள காப்புறுதிக் கம்பனிகள்.

| இல. | காப்புறுதிக் கம்பனியின் பெயர் | காப்புறுதி வியாபாரத்தின் வகுப்பு |
|---|---|---|
| 1 | ஏஐஏ இன்ஷுவரன்ஸ் லங்கா பிஎல்சி | நீண்ட காலக் காப்புறுதி |
| 2 | ஏஐஜி இன்ஷுவரன்ஸ் லிமிட்டெட் * | பொதுக் காப்புறுதி |
| 3 | அலியான்ஸ் இன்ஷுவரன்ஸ் லங்கா லிமிட்டெட் | பொதுக் காப்புறுதி |
| 4 | அலியான்ஸ் லைஃப் இன்ஷுவரன்ஸ் லங்கா லிமிட்டெட் | நீண்ட காலக் காப்புறுதி |
| 5 | அமானா தக்கபுல் பிஎல்சி | பொதுக் காப்புறுதி |
| 6 | அமானா தக்கபுல் லைஃப் பிஎல்சி | நீண்ட காலக் காப்புறுதி |
| 7 | ஆர்பிகோ இன்ஷுவரன்ஸ் பிஎல்சி | நீண்ட காலக் காப்புறுதி |
| 8 | சொப்ட்லொஜிக் லைஃப் இன்ஷுவரன்ஸ் பிஎல்சி | நீண்ட காலக் காப்புறுதி |
| 9 | பெயார்பெஸ்ட் இன்ஷுவரன்ஸ் லிமிட்டெட் | பொதுக் காப்புறுதி |
| 10 | செலிங்கோ ஜெனரல் இன்ஷுவரன்ஸ் லிமிட்டெட் | பொதுக் காப்புறுதி |
| 11 | செலிங்கோ லைஃப் இன்ஷுவரன்ஸ் லிமிட்டெட் | நீண்ட காலக் காப்புறுதி |
| 12 | கொன்டினென்டல் இன்ஷுவரன்ஸ் லங்கா லிமிட்டெட் | பொதுக் காப்புறுதி |
| 13 | கோப்பரேட்டிவ் இன்ஷுவரன்ஸ் கம்பனி லிமிட்டெட் | பொதுக் காப்புறுதி |
| 14 | கோப்லைவ் இன்ஷுவரன்ஸ் லிமிட்டெட் | நீண்ட காலக் காப்புறுதி |
| 15 | எச்என்பி அஷுரன்ஸ் பிஎல்சி | நீண்ட காலக் காப்புறுதி |
| 16 | எச்என்பி ஜெனரல் இன்ஷுவரன்ஸ் லிமிட்டெட் | பொதுக் காப்புறுதி |
| 17 | ஜனசக்தி இன்ஷுவரன்ஸ் பிஎல்சி | நீண்ட காலக் காப்புறுதி |
| 18 | லைஃப் இன்ஷுவரன்ஸ் கோப்பரேஷன் (லங்கா) லிமிட்டெட் | நீண்ட காலக் காப்புறுதி |
| 19 | எல்ஓஎல்சி ஜெனரல் இன்ஷுவரன்ஸ் லிமிட்டெட் | பொதுக் காப்புறுதி |
| 20 | எல்ஓஎல்சி லைஃப் அஷுரன்ஸ் லிமிட்டெட் | நீண்ட காலக் காப்புறுதி |
| 21 | நஷனல் இன்ஷுவரன்ஸ் டிரஸ்ட் பண்ட் | பொதுக் காப்புறுதி |
| 22 | ஓறியன்ற் இன்ஷுவரன்ஸ் லிமிட்டெட் | பொதுக் காப்புறுதி |
| 23 | பீள்பள்ஸ் இன்ஷுவரன்ஸ் பிஎல்சி | பொதுக் காப்புறுதி |
| 24 | சீமாசஹித்த சணச ரக்ஷன சமாகம | பொதுக் காப்புறுதி மற்றும் நீண்டகாலக் காப்புறுதி |
| 25 | ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ் கோப்பரேஷன் லிமிட்டெட் | பொதுக் காப்புறுதி மற்றும் நீண்டகாலக் காப்புறுதி |
| 26 | யூனியன் அஷுரன்ஸ் பிஎல்சி | நீண்ட காலக் காப்புறுதி |
| 27 | ஜனசக்தி ஜெனரல் இன்ஷுவரன்ஸ் லிமிட்டெட் | பொதுக் காப்புறுதி |

* புதிய காப்புறுதி வியாபாரங்களை ஏற்றுக்கொள்வதில்லை என்பதுடன், இலங்கையில் இருந்து வெளியேறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்றது.

** நீண்டகால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரங்களை மேற்கொள்ளுவதற்காக பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், 28 ஜுன் 2017 இருந்து அமுலுக்கு வரும் வகையில் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

# பின்னிணைப்பு II

2018 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதிக் கைத்தொழில் ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள தரகுக் கம்பனிகள்.

| இல. | தரகரின் பெயர் | வியாபார வகை |
|---|---|---|
| 1 | 3 டி எச் இன்ஷ்வரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொதுக் காப்புறுதி |
| 2 | ஏ.எம்.டபில்யூ இன்ஷ்வரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொதுக் காப்புறுதி |
| 3 | ஏடிஎஸ் இன்ஷ்வரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி |
| 4 | எயிற்கன் ஸ்பென்ஸ் இன்ஷ்வரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி |
| 5 | அல்பின்கோ இன்ஷ்வரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி |
| 6 | அலியான் இன்ஷ்வரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி |
| 7 | எம்ட்ரஸ்ட் இன்ஷ்வரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி |
| 8 | அகியூலைன் இன்ஷ்வரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி |
| 9 | அஸெட்லைன் இன்ஷ்வரன்ஸ் புரோக்கர்ஸ் லிமிட். | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி |
| 10 | ஏஎக்ஸ் இன்ஷ்வரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொதுக் காப்புறுதி |
| 11 | பிரலியன்ஸ் இன்ஷ்வரன்ஸ் புரோக்கர்ஸ் கம்பனி (பிரை.) லிமிட். | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி |
| 12 | சிஎஸ்சீ இன்ஷ்வரன்ஸ் புரோக்கர்ஸ் லிமிட். | பொதுக் காப்புறுதி |
| 13 | சிலோன் இன்ஷ்வரன்ஸ் புரோக்கர்ஸ் கம்பனி (பிரை.) லிமிட் | பொதுக் காப்புறுதி |
| 14 | சினேர்ஜி இன்ஷ்வரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி |
| 15 | சீஎப் இன்ஷ்வரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி |
| 16 | கொலம்போ இன்ஷ்வரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி |
| 17 | கொமர்ஷியல் இன்ஷ்வரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி |
| 18 | டி எஸ் இன்ஷ்வரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி |
| 19 | டெல்மேஜ் இன்ஷ்வரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி |
| 20 | ஈகல் டிவிஆர்எஸ் இன்ஷ்வரன்ஸ் அன்ட் றீஇன்ஷ்வரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொதுக் காப்புறுதி |
| 21 | இக்குவிற்றி இன்ஷ்வரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி |
| 22 | எஸ்னா இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி |
| 23 | ஈஸாஜி கரிம்ஜி இன்ஷ்வரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி |
| 24 | பைன்ட் மை இன்சூரன்ஸ் அன்ட் ரீஇன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி |
| 25 | பைன்லே இன்ஷ்வரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி |
| 26 | ஜோர்ஜ் ஸ்ருவட் இன்ஷ்வரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி |
| 27 | குளோபல் இன்ஷ்வரன்ஸ் புரோக்கர்ஸ் அன்ட் சேர்விசஸ் (பிரை.) லிமிட். | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி |
| 28 | கிரான்ட் இன்ஷ்வரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி |
| 29 | காடியன் இன்ஷ்வரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொதுக் காப்புறுதி |
| 30 | ஐகோன் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி |
| 31 | இன்சூர்மீ இன்ஷ்வரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி |
| 32 | ஜே இன்ஷ்வரன்ஸ் புரோக்கர்ஸ் அன்ட் கன்சல்டன்ஸ் (பிரை.) லிமிட். | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி |
| 33 | ஜே எப் இன்ஷ்வரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொதுக் காப்புறுதி |
| 34 | எல்எம் அன்ட் ஏ இன்ஷ்வரன்ஸ் புரோக்கர்ஸ் அன்ட் கன்சல்டன்ஸ் (பிரை.) லிமிட். | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி |
| 35 | லக் இன்ஷ்வரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி |
| 36 | லை.்.ப் அன்ட் ஜெனரல் இன்ஷ்வரன்ஸ் புரோக்கர்ஸ் சிலோன் (பிரை.) லிமிட் | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி |
| 37 | மெக்ஸ்வெல் இன்ஷ்வரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி |
| 38 | மேர்கன்டைல் போர்டியூன்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி |
| 39 | முட்டுவல் இன்ஷ்வரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி |
| 40 | எம் ஆர் யு எஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | பொதுக் காப்புறுதி |
| 41 | மேர்கன்டைல் இன்ஷ்வரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொதுக் காப்புறுதி |

# பின்னிணைப்பு II தொடர்ச்சி...

| | | |
|---|---|---|
| 42 | மை இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொதுக் காப்புறுதி |
| 43 | நேஷன்ஸ் இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி |
| 44 | பிளேசிட் இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி |
| 45 | புரோகெயர் இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி |
| 46 | புரோடெக்சன் அன்ட் அஷுரன்ஸ் இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி |
| 47 | புரோடெக்சன் அன்ட் அட்மொஸ்ட் இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி |
| 48 | ரெட்மோ சுவிஸ் இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொதுக் காப்புறுதி |
| 49 | றிலயன்ஸ் இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி |
| 50 | றின்கூன் லங்கா இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொதுக் காப்புறுதி |
| 51 | ஆர் எம் எஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி |
| 52 | எஸ்வைஎம் இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொதுக் காப்புறுதி |
| 53 | சம்சன் இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொதுக் காப்புறுதி |
| 54 | சேனாரத்ன இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி |
| 55 | செங்கடகல இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி |
| 56 | ஸ்டஜிக் இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி |
| 57 | டிரஸ்ட் இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொதுக் காப்புறுதி |
| 58 | யுஎன் இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொதுக் காப்புறுதி |
| 59 | யுனைட்டெட் இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொதுக் காப்புறுதி |
| 60 | வெராசிட்டி இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி |
| 61 | விக்டர் இம்மானுவல் இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி |
| 62 | வொலங்கா இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி |
| 63 | ஸெனித் இன்ஷுவரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை.) லிமிட். | பொது மற்றும் நீண்டகாலக் காப்புறுதி |

# பின்னிணைப்பு III

31 டிசம்பர் 2018ம் திகதியன்று சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள காப்புறுதிக் கணிப்பீட்டாளர்கள்

| இல. | காப்புறுதிக் கணிப்பீடாளர்களின் பெயர் | உரிமத்தின் செயல்வலுவாக்கல் திகதி |
|---|---|---|
| 1 | செல்வி. உதிதமாலா ஜினாதரி குருகுலசூரிய | 13 ஜுன் 2018 |
| 2 | திரு. ரன் பண்டார தென்னகோன் | 25 ஜுன் 2018 |
| 3 | திரு. விஜேசேன லீலாரத்ன பெர்னாந்து | 25 ஜுன் 2018 |
| 4 | திரு. காமினி கினிகம | 25 ஜுன் 2018 |
| 5 | திரு.அஹமட் நஷிம் நஷ்வி ரஹுமான் | 25 ஜுன் 2018 |
| 6 | திரு. குணவர்தன முதியான்சலாகே ஆனந்த உதய | 25 ஜுன் 2018 |
| 7 | திரு.மாஹுபாலகே டொன் சிசிர உபாலி பெரேரா | 26 ஜுன் 2018 |
| 8 | திரு.நிரோஷ் சஞ்சீவ வதுகரவட்ட | 26 ஜுன் 2018 |
| 9 | திரு. சுசந்த மஹிந்தரத்ன வீரகோன் | 26 ஜுன் 2018 |
| 10 | திரு.ராஹுபக்ஷ பத்திரகே டொன் காஞ்சன சுரங்கிகா | 10 செப்டெம்பர் 2018 |

# அருஞ்சொல் சொற்கள்

## திரட்டு

அதே கம்பனியுடன் காப்புறுதி செய்துகொண்ட அல்லது மறுகாப்பீடு செய்யப்பட்ட குறிப்பிடத்தக்க அளவான இடர்கள் இழப்பு நிகழ்வு ஒன்று நடைபெறும் அதே சமயத்தில் பாதிக்கப்படும் சூழ்நிலையை குறிக்கும்.

## கையேற்புச் செலவுகள்

புதிய காப்புறுதி ஒப்பந்தங்கள் மற்றும் இருக்கின்ற காப்புறுதி ஒப்பந்தங்களைப் புதுப்பித்தல் கையேற்புகளோடு முதன்மையாக சம்பந்தப்பட்ட அத்துடன் மாறுபடும் அனைத்துச் செலவுகளையும் குறிக்கும். உதாரணம் - தரகு.

## காப்பீட்டு கணிப்பாளர்

காப்பீட்டுக் கணிப்பாளர் என்பவர், எதிர்பாராத நிகழ்வுகளையுடைய நிதிசார் தாக்கங்களை மதிப்பிடுவதற்கு தொழில் முறையாகப் பயிற்றுவிக்கப்பட்ட நபர் ஆவார். காப்புறுதிக் கணிப்பீட்டாளர்கள் காப்புறுதி வியாபாரத்தின் இயல்பு, அதன் நிதிசார் சேவைகள், சொத்துக்களுடன் ஒன்றிணைந்துள்ள இடர்கள் மற்றும் புள்ளி விபரவியல் மாதிரிகளைப் பயன்படுத்துதல் போன்றவற்றில் சிறந்த விளக்கம் கொண்டவர்களாக இருத்தல் அவசியமாகும். காப்புறுதிச் சூழலில் இந்தத் திறன்கள் உதாரணமாக, கட்டுப்பணங்களை நிரூபித்தல், தொழில்நுட்ப ஏற்பாடுகள் மற்றும் மூலதன மட்டங்கள் ஆகியவற்றில் அடிக்கடி பயன்படுத்தப்படும்.

## நிர்வாகச் செலவுகள்

கட்டுப்பணச் சேகரிப்பு, இலாகா நிர்வாகம், ஊழியர் செலவினம், ஆதனம், ஆலை மற்றும் உபகரணம் தொடர்பான பெறுமானத் தேய்வுகளுக்கான ஏற்பாடுகள் என்பவற்றை உள்ளடக்கிய நிர்வாகத் தன்மையைக் கொண்ட செலவுகளாகும்.

## நிர்வாகிக்கக்கூடிய சொத்துகள்

காப்புறுதியாளர்களின் நியதிச்சட்ட திரவமாக்கலைத் தீர்மானிப்பதற்கு சொத்துக்கள் உள்ளடக்கப்படுதல் வேண்டம். அந்த சொத்துக்கள் 2000ஆம் ஆண்டு 43ஆம் இலக்க காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளில் குறித்துரைக்கப்பட்டுள்ளது.

## ஆண்டுத் தொகை

ஆண்டுத் தொகை பெறுபவரின் ஆயுள் காலம் முழுவதும் அல்லது குறிப்பிட்ட காலப்பகுதிக்கு காலாந்தர அடிப்படையில் செலுத்தப்படும் வருமான அனுகூலங்களாக அமைகின்ற ஒரு நீண்டகால காப்புறுதிப் பொருள் ஆகும். ஒத்திவைக்கப்பட்ட ஆண்டுத் தொகை. கொடுப்பனவுகள் - எதிர்காலத்தில் ஏதேனும் ஒரு காலப்பகுதியில் ஆரம்பிக்குமாயின், அது ஒத்தி வைக்கப்பட்ட ஆண்டுத் தொகை எனப்படும். உடனடியான ஆண்டுத் தொகை - ஒப்பந்தம் ஆரம்பிக்கப்பட்ட போதே கொடுப்பனவும் ஆரம்பிக்கப்படுமாயின், அது உடனடியான ஆண்டுத் தொகை எனப்படும்.

## பாங்கசூரன்ஸ் (Bancassurance)

ஒரு காப்புறுதி வழங்குநர், காப்புறுதி மற்றும் மூலதனப் பொருளை, வங்கி வாடிக்கையாளர்களுக்கு விற்பனை செய்வதற்கான ஒரு ஒழுங்கமைப்பு.

## பயனாளி

காப்புறுதிக் கொள்கையாளர் ஒருவரின் இறப்பு இடம்பெறும் வேளை, காப்புறுதி செய்யப்பட்ட தொகையையும் ஏனைய அனுகூலங்களையும் பெற்றுக்கொள்வதற்காக காப்புறுதிக் கொள்கையாளரால் பெயர் குறித்து நியமிக்கப்படும் ஒருவர்.

## மூலதன போதுமான விகிதம் (CAR)

தேவைப்படும் இடர் மூலதனத்திற்கு (RCR) ஆதரவளிக்கும் மொத்த மூலதனத்தின் (TAC) போதுமான வழிவகைகள். CAR = (TAC/RCR) x100

## மாற்றாளர்

மறு காப்புறுதிக் கம்பனி ஒன்றின் வடிக்கையாளர் (முதன்மை காப்புறுதிக் கம்பனி)

விட்டுக்கொடுத்தல் - விட்டுக்கொடுக் கப்படும் கம்பனிகளால் மறு காப்புறுதி வழங்குநர்களுக்காக மாற்றப்படும் இடரின் ஒரு பகுதி.

## கோரிக்கைகள்

சொத்துக்களுக்கு ஏற்படும் சேதம் அல்லது அழிவு மற்றும் இறப்பு அல்லது ஊறுகள், வைத்தியசாலை மற்றும் மருத்துவத்திற்காக செலவிடப்படும் போது, காப்புறுதிக் கொள்கையாளரின் இறப்பு அல்லது இயலாமை, மானியக்கொள்கை ஒன்று முதிர்வடையும் போது, ஓய்வு பெறும் வயதை அடையும் போது, காப்புறுதிக் கொள்கை ஒன்று சரணடையும் போது போன்ற ஏதேனும் நிகழ்வு ஒன்று எழும் சந்தர்ப்பங்களில் காப்புறுதி ஒப்பந்தம் ஒன்றின் கீழ் செலுத்தப்படும் தொகை.

## உறப்பட்ட கோரிக்கைகள்

கணக்குக் காட்டப்படும் காலப்பகுதியில், கோரிக்கை கையாளுவதோடு தொடர்புடைய செலவுகள், பொருத்தமான சந்தர்ப்பங்களில் கணக்குக் காட்டப்படும் காலத்தின் ஆரம்ப அல்லது இறுதித் திகதியில் செலுத்தப்பட வேண்டிய இருக்கின்ற கோரிக்கை தொடர்பான ஏற்பாடுகளைச் சீராக்குதல் ஆகியவற்றோடு தொடர்புபட்ட செலுத்தப்பட்ட மொத்தக் கோரிக்கைகளின் கூட்டுத் தொகை.

## உறப்பட்ட ஆனால் அறிக்கை இடப்படாத கோரிக்கைகள் (IBNR)

எதிர்பார்க்கப்பட்ட ஏற்பட்ட இழப்பு சம்பந்தமான செலவுகளை ஈடு செய்வதற்காக ஆதனம், பொறுப்பு மற்றும் பண ரீதியான காப்புறுதி என்பன சம்பந்தமான கணக்கு காட்டப்படுகின்ற காலத்தின் இறுதிப் பகுதியில் ஒதுக்கி வைக்கப்பட்ட ஒரு தொகையாகும். ஆனால், காப்புறுதி வழங்குநருக்கு இதுவரை அறிக்கையிடப்படாத தொகை.

## செலுத்தப்பட வேண்டிய கோரிக்கைக-ளின் ஒதுக்கு - பொதுக் காப்புறுதி வியாபாரம்

கோரிக்கைகள் மற்றும் கோரிக்கைளைக் கையாள்வதில் ஏற்பட்ட செலவுகள், அத்துடன், அத்தகைய கோரிக்கைகளில் ஏற்கனவே செலுத்தப்பட்ட தொகைகளைக் கழித்து, உறப்பட்ட செலவுகள் உட்பட ஆனால், அறிக்கையிடப்படாத ஐந்தொகை தயாரிக்கப்படும். திகதியன்று நடைபெறுகின்ற நிகழ்வுகள் மூலமாக, ஏற்பட்ட கோரிக்கைகளைச் செலுத்தித் தீர்ப்பதற்காக மதிப்பிடப்பட்ட தொகையை ஈடு செய்வதற்காக வழங்கப்பட்ட தொகை.

## இணைக் காப்புறுதி

காப்புறுதிக் கொள்கையாளருடன் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட காப்புறுதி வழங்குநர்கள், குறித்துரைக்கப்பட்ட கட்டுப்பணத்தில் உடன்பட்ட விகிதத்திற்கான இடர் ஒன்றை ஈடு செய்வதற்காக ஏற்படுத்திக் கொள்ளும் ஒரு ஒப்பந்தமாகும்.

# அருஞ்சொல் சொற்கள் தொடர்ச்சி...

### தரகு

காப்புறுதி வழங்குநரின் பொருட்களை விற்பனை செய்தமைக்காக அல்லது அவருக்கு சேவைகளை வழங்கியமைக்காக தரகர் அல்லது காப்புறுதி முகவர் ஒருவருக்கு மேற்கொள்ளப்படும் கொடுப்பனவு.

### செறிவு இடர்

காப்புறுதி வழங்குநரின் சொத்துக்கள், உள்ளார்ந்த கடன் இடரை, பொருத்தமான வகையில் கணிப்பதற்கு பொதுமான அளவில் பன்முகப்படுத்தப்படாத போது இருக்கின்ற மேலதிகக்கடன், மேலதிக கடன் இடர்.

### கடன் இடர்

கம்பனிக்கு வெளிப்பாடு ஒன்று உள்ள பிணையங்கள் வழங்குநரின் (காப்புறுதரி வழங்குநரின் மூலதன இலாகாவில்), கடனாளிகள் (உதாரணம்-அடமானதாரர்கள்), அல்லது எதிர் முனைவோர் (உதாரணம் -மறுகாப்பீட்டு ஒப்பந்தங்கள், வழித்தோன்றல் ஒப்பந்தங்கள் அல்லது வைப்புக்கள் மீது) மற்றும் இடைத்தரகர்களின் தவறுகை அல்லது கடன் விகித ஒப்படைகளில் ஏற்படும் நகர்வுகள் காரணமாக, நிகழும் நிதி இழப்பு இடர், கடன் இடர் எனப்படும். கடன் இடர், தவறுகை இடர், தரமிறக்கிய அல்லது இடம்பெயர்வு இடர், உட்கிடையான கடன் அல்லது பரவலான கடன், செறிவு இடர் மற்றும் இடைத்தொடர்பு இடர் என்பவற்றை உள்ளடக்கும். கடன் இடர் மூலதன எதிர்முனைவோர், காப்புறுதிக் கொள்கையாளர்கள் (செலுத்தப்பட வேண்டிய கட்டுப்பணங்கள் ஊடாக), மறுகாப்பீட்டாளர்கள், இடைத்தரகர்கள் மற்றும் வழித்தோன்றல் எதிர்முனைவோர் என்பவற்றில் இருந்து தோன்றும்.

### ஒத்திவைக்கப்பட்ட கையேற்புச் செலவு - பொதுக் காப்புறுதி வியா-பாரம்

கணக்கியலின் வருடாந்த அடிப்படையின் கீழ் ஐந்தொகைத் திகதியன்று வலுவிலுள்ள காலாவதியாகாத ஒப்பந்த இடர்களின் காலப்பகுதியுடன் தொடர்புபட்ட கையேற்புச் செலவுகள் ஆகும். இவை, ஒரு கணக்கியல் காலப்பகுதியில் இருந்து அடுத்து வரும் கணக்கியல் காலப்பகுதிகளுக்கு கொண்டு வரப்படும்.

### கைவிடப்பட்ட செயற்பாடு

நிறுவனம் முழுவதிலும் இருந்து அகற்றுவதற்கு முறையான திட்டம் ஒன்றுள்ள ஒரு நிறுவனத்தின் முழுமையான பிரிவு, துணைப் பிரிவு அல்லது ஒரு பிரிவின் செயற்பாடுகள்.

### சமபாதிக்கப்பட்ட கட்டுப்பணங்கள்

கணக்கியல் காலப்பகுதியின் ஆரம்பத்திலும், இறுதியிலும் சம்பாதிக்கப்படாத கட்டுப்பண ஏற்பாடுகள் மூலமாக சீராக்கப்பட்ட எழுதப்பட்ட கட்டுப்பணங்கள்.

### மானியங்கள்

துரதிஷ்டவசமான நிகழ்வு ஒன்றின் காரணமாக, தனிப்பட்ட ஒருவரின் வாழ்க்கைக்கு ஏற்படுகின்ற இடரை மாத்திரம் உள்வாங்குகின்ற ஆயுள் காப்புறுதி ஒப்பந்தம், ஆயின், தவணை முடிவின் போது முதிர்வு அனுகூலங் களையும் வழங்கக்கூடிய ஒன்று.

(ஆயுள் காப்புறுதி ஒப்பந்தம் ஒன்று குறிப்பிட்ட கால முடிவிற்கு பின்போ (அதன் முதிர்வின் போது) அல்லது இறப்பின் மீதோ ஒரு தொகையை செலுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டது).

### பொதுக் காப்புறுதி வியாபாரம்

தீ, கடல், மோட்டார் அல்லது இதர காப்புறுதி வியாபாரம் ஒன்றை, தனித்தோ அல்லது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவற்றுடன் இணைந்து நடத்தப்படுகின்ற காப்புறுதி வியாபாரம் ஆகும். கணக்கியல் காலப் பகுதியின் போது, பொதுக் காப்புறுதி வியாபாத்துடன் சம்பந்தப்பட்ட அனுமானிக்கப்பட்ட மறு காப்பீட்டிற்கான கட்டுப்பணங்கள் உள்ளடங்கலாக, அனைத்து மூலங்களிலும் இருந்து பெற வேண்டிய அல்லது மொத்தமாகப் பெறப்பட்ட கட்டுப்பணமாகும்.

### மொத்த கட்டுப்பணம்

கழிவுகள், மீளச் செலுத்தல்கள், தள்ளுபடிகள் என்பவற்றைக் கழித்த பின் உள்ள கட்டுப்பணம். ஆயின், மறுகாப்பீட்டு விட்டுக்கொடுப்பிற்காக காப்புறுதி வழங்குநரால் செலுத்தப்பட்ட ஏதேனும் கட்டுப்பணம் அல்லது செலுத்த வேண்டிய கட்டுப்பணம் என்பவற்றில் இருந்து கழிப்பதற்கு முன்னராக.

### காப்புறுதி வழங்குநர்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட ஒரு பொதுக் கம்பனியாவதுடன், 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதிக் கைத்தொழில்துறை ஒழுங்குபடுத்துதல் சட்டத்தின் கீழ் காப்புறுதி வழங்குநராகப் பதிவு செய்யப்பட்டவர்.

### Insurtech தீர்வுகள்

தற்போதைய காப்புறுதிக் கைத்தொழில் மாதிரியில் இருந்து வினைத்திறன் மற்றும் சேமிப்புகளை எடுத்துக் கொள்வதற்காக வடிவமைக்கப்பட்ட தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளின் பயன்பாட்டைக் குறிக்கும். Insurtech என்பது. “insurance” (காப்புறுதி) மற்றும் “technology” (தொழில்நுடபம்) ஆகிய சொற்களில் இருந்து பெறப்பட்ட ஒட்டுச் சொல்லாகும். அத்துடன், இது, fintech என்ற வார்த்தையில் இருந்து ஈர்க்கப்பட்டு உருவான ஒரு சொல்லாகும்.

### காலாவதியான கொள்கை

கட்டுப்பணத்தைச் செலுத்தாமையின் காரணமாக, சலுகைக் கால இறுதியில் முடிவுறுத்தப்பட்ட ஒரு கொள்கை.

### பொறுப்பு போதுமான தன்மை பரீட்சை (LAT)

அதன் காப்புறுதி ஒப்பந்தங்களின் கீழ் உள்ள எதிர்கால நிதிப் பாய்ச்சல்களின் நிகழ்கால மதிப்புகளைப் பயன்படுத்தி, அதன் காப்புறுதிப் பொறுப்புக்கள் போதுமையானவையா என அங்கீகரிப்பதற்காக அறிக்கையிடும் ஒவ்வொரு காலப்பகுதியின் முடிவிலும் மேற்கொள்ளப்படும் மதிப்பீடு.

### பொறுப்பு இடர்

காப்புறுதி வழங்குநரால் ஸ்தாபிக்கப்பட்ட தொழில்நுட்ப ஏற்பாடுகள் மற்றும் காப்புறுதிக் கொள்கையாளரின் பொறுப்புகள், எதிர்காலக் கோரிக்கைகள் மற்றும் தற்போது வலுவிலுள்ள கொள்கைகள் மீதான செலவுகள் என்பவற்றைச் செலுத்துவதற்கு போதுமானதாக இல்லாமையைக் குறிப்பிடும் இடர்.

### நீண்டகால காப்புறுதி வியாபாரம்

மனித வாழ்க்கையை உத்தரவாதப் படுத்துவதற்காக ஈடுபடுத்தப்படும் அல்லது பராமரிக்கப்படும் ஒப்பந்தங்கள். அத்தகைய ஒப்பந்தங்கள் ஒருவரின் இறப்பு நிகழ்கின்ற போது பணம் செலுத்தப்படும் ஒப்பந்தங்களையும் அல்லது மனித வாழ்க்கையில் எதிர்பாராத நிகழ்வு ஒன்று ஏற்படும் போது பணம் செலுத்தப்படும் ஒப்பந்தத்தையும் அத்துடன், மனித

# அருஞ்சொல் சொற்கள் தொடர்ச்சி...

வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு குறிப்பிட்ட காலப்பகுதி ஒன்றுக்கு செலுத்த வேண்டிய கட்டுப்பணத்திற்கு அமைவாக ஈடுபடுகின்ற ஒப்பந்தங்கள் ஆகும்.

## இழப்பு விகிதம்

சம்பாதிக்கப்பட்ட கட்டுப்பணங்களுக்காக உறப்பட்ட கோரிக்கைகளின் விகிதம். இது, காப்புறுதி ஒப்பந்தங்களில் எடுத்துக் கொள்ளப்பட்ட இடர்களோடு காப்புறுதி வழங்குநரின் விலையிடல். எவ்வாறு சிறந்த வகையில் பொருந்துகிறது என்பதைக் குறித்துக் காட்டும். (சம்பந்தப்பட்ட வரைவிலக்கணங்கள், உறப்பட்ட கோரிக்கைகள், வருடாந்த அடிப்படையிலான எழுத்தாக்க உறுதி).

## சந்தை இடர்

காப்புறுதி வழங்குநரின் சொத்துக் களுக்குரிய சந்தைப் பெறுமதியில் குறைப்பை ஏற்படுத்தும் இடர்.

## முதிர்சி

நீண்டகால காப்புறுதிக் கொள்கை ஒன்று பெறப்பட்டு அதன் தவணை முடிவில் செலுத்த வேண்டிய தொகைக்குரிய கொடுப்பனவை மேற்கொள்கின்ற நேரம்.

## இறப்பு விகிதம்

முழு மக்கள் தொகைக்கு அல்லது குறிப்பிட்ட வயது குழுமத்திற்குரிய மரண விகிதம். இது, உலகளாவிய ரீதியில் விகிதத்தில் வெளிப்படுத்தப்படுவதோடு, இறப்பு விகித அட்டவணைகளில் விளக்கப்படுகிறது.

## நிகர கோரிக்கைகள் விகிதம் நிகர இழப்பு விகிதம்

காப்புறுதி வழங்குநர்களால் நிகர கோரிக்கைச் செலவுகளை நிகர சம்பாதிக்கப்பட்ட கட்டுப்பணத்தோடு, தொடர்பு படுத்துவதற்காக பயன்படுத்தப் படும் ஒரு சூத்திரமாகும். (அதாவது, பொருத்தமான மறுகாப்பீட்டைக் கழித்த பின்னர்).

$$\frac{\text{உறப்பட்ட நிகர கோரிக்கை}}{\text{நிகர கட்டுப்பண சம்பாத்தியம்}} \times 100$$

## நிகர இணைந்த விகிதம் - பொதுக் காப்புறுதி வியாபாரம்

நிகர இழப்பு விகிதத்தோடு, நிகர செலவு விகிதத்தை ஒன்றிணைப்பதன் மூலம், காப்புறுதி வழங்குநரின் செயற்பாடுகளின் இலாபகரத் தன்மையை குறித்துக் காட்டுகிறது. இணைந்த விகிதம் மூலதன வருமானத்தைக் கருத்திற் கொள்ளாது.

$$\frac{\text{உறப்பட்ட நிகர கோரிக்கை}}{\text{நிகர கட்டுப்பண சம்பாத்தியம்}} \times 100 + \frac{\text{செலவுகள்}}{\text{நிகர கட்டுப்பண சம்பாதிப்பு}} \times 100$$

## நிகர சம்பாதிக்கப்பட்ட கட்டுப்பணம் - பொதுக் காப்புறுதி வியாபாரம்

மறுகாப்பீட்டுக் கட்டுப்பணத்திற்காகவும் சம்பாதிக்கப்படாத கட்டுப்பணத்தின் அதிகரிப்பு அல்லது குறைப்புக்கு சீராக்கப்பட்ட மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணம்.

## நிகர செலவு விகிதம் - பொதுக் காப்புறுதி வியாபாரம்

நிகர சம்பாதிக்கப்பட்ட கட்டுப்பணத்தை கையேற்பு மற்றும் நிர்வாக செலவுகளோடு தொடர்புபடுத்துவதற்கு காப்புறுதி கம்பனிகளால் பயன்படுத்தப்படும் ஒரு சூத்திரம் (உதாரணம், தரகு, வரிகள், பணியாட்கள், விற்பனை மற்றும் செயற்பாட்டுச் செலவுகள்)

## பங்குபற்றாத கொள்கை - நீண்டகால காப்புறுதி வியாபாரம்

பொருத்தமான ஆயுள் காப்புறுதி நிதியத்திலுள்ள surplus களை பங்கிட்டுக் கொள்வற்கான ஒப்பந்த ரீதியில் உரித்தற்ற நீண்ட காப்புறுதி வியாபாரத்தின் காப்புறுதிக் கொள்கையாளர்கள்.

## ஒரு தடவை மேலதிகம்

2016 ஆம் ஆண்டின் ஜனவரி 01 இல் உள்ளவாறு RBC யில் உள்ள மொத்த கொள்கை பொறுப்புக்கள் மீது 2015 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான NPV ஆளுமையின் கீழ் உள்ள மொத்த கொள்கைப் பொறுப்புக்களின் மிகை ஆகும். மேலதிகம் பின்வரும் மாற்றத்தினால் உருவாக்கப்பட்டது. கொள்கை பொறுப்புக்களுடைய மதிப்பீட்டு முறைமை நிகர கட்டுப்பண மதிப்பீட்டிலிருந்து மொத்த கட்டுப்பண மதிப்பிட்டிற்கு மாற்றப்பட்டது.

## ஒரு தடவை மேலதிக மாற்றம்

surplus உடைய மாற்றம் பின்வரும் காரணத்தினால் ஏற்பட்டது. கொள்கைப் பொறுப்புக்கள் மதிப்பீட்டு முறைமை, நிகர கட்டுப்பண மதிப்பீட்டில் (NPV) இருந்து பங்குதாரர் நிதியத்திற்கான மொத்த கட்டுப்பண மதிப்பீட்டிற்கு (GPV) மாற்றப்பட்டது.

## செயற்படு இலாபம்

மூலதன வருமானம், நிகர மூலதன ஆதாயம் மற்றும் ஏனைய வருமானங்கள் என்பவற்றைக் கருத்திற் கொண்ட பின்னர், பொதுக் காப்புறுதி வியாபாரத்தை பரிவர்த்தனை செய்வதன் மூலம் ஈட்டப்படுகின்ற இலாபம்.

## செயற்பாட்டு இடர்

உள்ளக முறைமைகள், ஆட்கள், நடபடி முறைகள் அல்லது நிதி இழப்பை ஏற்படுத்தும் கட்டுப்பாடுகள், உள்ளக முறைமைகள், ஆட்கள், நடபடி என்பவற்றின் பற்றாக்குறை அல்லது தோல்வி அல்லது நிதியிழப்பை ஏற்படுத்தும் கட்டுப்பாடுகள் என்பவற்றில் இருந்து எழுகின்ற இடர் செயற்பாட்டு இடர். பாதுகாப்பு இடரையும் உள்ளடக்கும்.

## கொள்கை

காப்புறுதி ஒப்பந்தம் ஒன்றின் நியதிகள், நிபந்தனைகள் என்பவற்றைக் குறித்துக் காட்டும் ஆவணங்கள்.

## காப்புறுதி கொள்கையாளர்

காப்புறுதி வழங்குநருடன் ஒப்பந்தத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அப்போதைக்கு காப்புறுதிக் கொள்கை ஒன்றை வைத்துள்ள சட்ட உரித்தாளர்.

## கொள்கைக் கடன்

நீண்டகால காப்புறுதிக் கொள்கை ஒன்றின் சரணடையும் பெறுமதி மீதான உத்தரவாதத்தின் கீழ் காப்புறுதி வழங்குநரால் காப்புறுதி கொள்கையாளருக்கு வழங்கப்படும் கடன். இந்தக் கடன் சாதாரணமாக, கொள்கையின் தற்போதைய சரணடையும் பெறுமதியில் ஒரு விகிதத்திற்கு மட்டுப்படுத்தப்படுவதோடு, அத்தகைய கடன்கள் மீது வட்டி அறவிடப்படும்.

## முதன்மை காப்புறுதி வழங்குநர்

காப்புறுதிக் கட்டுப்பணம் ஒன்றுக்கு பிரதிபலனாக இடர்களை அனுமானிக்கும் காப்புறுதிக் கம்பனி ஒன்றாவதோடு, காப்புறுதிக் கொள்கையை வைத்துள்ள வருடன், நேரடியான ஒப்பந்த தொடர்பும் இருக்கும். (தனிப்பட்ட ஆள், சங்கம் அல்லது அமைப்பு)

## மறு காப்பீடு

ஒரு பிரதிபயனின் (கட்டுப்பணம்) பரிமாற்றத்திற்காக மாற்றாளரால் வழங்கப்பட்ட ஒன்று அல்லது அதற்கு

# அருஞ்சொல் சொற்கள் தொடர்ச்சி...

மேற்பட்ட ஒப்பந்தங்களின் இழப்புக்களுக்கு எதிராக அவற்றைத் தீதறுப்பதற்காக ஒரு காப்பறுதியாளர் அல்லது மறுகாப்பீட்டாளர் இன்னுமொரு காப்புறுதியாளருடன் (மாற்றாளர்) செய்து கொள்ளப்படும் காப்புறுதி ஒப்பந்தம்.

## மறுகாப்பீட்டுத் தரகு

மறு காப்பீட்டாளர் ஒருவருக்கு செலுத்தப்பட்ட அல்லது செலுத்தப்பட வேண்டிய கட்டுப்பணங்களோடு சம்பந்தப் பட்ட பெறப்பட்ட அல்லது பெற வேண்டிய தரகு.

## உள்நோக்கிய மறுகாப்பீடு

மறுகாப்பீட்டு ஒப்பந்தத்தின் கீழ் இடர்களை ஏற்றுக்கொள்ளுதல்.

## வெளிநோக்கிய மறுகாப்பீட்டு

மறுகாப்பீட்டு ஒப்பந்தத்தின் கீழ் இடர்களை சேர்த்தல்.

## மறுகாப்பீட்டு இலாபத் தரகு

மறுகாப்பீட்டு ஒப்பந்தத்தின் மீது மறுகாப்பீட்டாளரால் பெறப்பட்ட நிகர இலாபத்தின் (மறுகாப்பீட்டு ஒப்பந்தத்தின் வரைவிலக்கணப் படுத்தப்பட்டவாறு) அடிப்படையில் மறுகாப்பீட்டாளரிடம் இருந்து மாற்றாளரால் (மறுகாப்பீடு செய்யப்பட்ட முதன்மை காப்புறுதி வழங்குநர்) பெறப்பட்ட அல்லது பெறவேண்டிய தரகு.

## தக்க வைத்துக் கொள்ளல்

அனுமானிக்கப்பட்ட இடரின் ஒரு பகுதி. இதற்கு காப்புறுதி வழங்குநர் / மறு காப்பீட்டாளர், மறு காப்பீடு / திருப்பிச் செலுத்த மாட்டார். அதாவது, சொந்தக் கணக்கிற்காக நிகர தொகையை வைத்துக் கொள்ளுதல்.

## மீளப் பெறுதல்

மறுகாப்பீட்டாளர் இடர்களை மாற்றும் ஒரு நடவடிக்கையாகும். இது, இன்னுமொரு மருத்துவக் காப்பீட்டாளருக்காக மறு காப்பீடு செய்யப்பட்டது.

## இடர் மூலதன தேவைப்பாடு (RCR)

இடர் அடிப்படையிலான மூலதனத் தேவைப்பாடு என்பது, 2015 ஆம் ஆண்டின் கடன் தீர்வு திறன் விழிம்பு விதிகளில் குறித்துரைக்கப்பட்ட அனைத்து பொருத்தமான மற்றும் பொருள் வகையைச் சார்ந்த இடர்களின் மூலதனத் தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்வதற்குரிய தேவைப்படும் மூலதனத்தின் மொத்த தொகை.

RCR பொது மற்றும் நீண்டகால காப்புறுதிக்கு வெவ்வெறாக கணக்கிடப்படுவதுடன், காப்புறுதி மற்றும் பங்குதாரர் நிதியம் ஆகிய இரண்டையும் உள்ளடக்கும்.

(அ) பொதுக் காப்புறுதி வியாபாரத்திற்கு

RCR = [(√கடன் இடர் மூலதனக் கட்டணம் + செறிவு இடர் மூலதனக் கட்டணம் + மறு காப்புறுதி இடர் மூலதனக் கட்டணம் + சந்தை இடர் மூலதனக் கட்டணம்)$^2$+ பொறுப்பு இடர் மூலதனக் கட்டணம்$^2$+ செயற்பாட்டு இடர் மூலதனக் கட்டணம்$^2$]; மற்றும்

(b) நீண்டகால வியாபாரம் ஒன்றுக்கு:

RCR = max {(SVCC, [(√கடன் இடர் மூலதனக் கட்டணம் + செறிவு இடர் மூலதனக் கட்டணம் + மறு காப்புறுதி இடர் மூலதனக் கட்டணம் + சந்தை இடர் மூலதனக் கட்டணம்)$^2$+ பொறுப்பு இடர் மூலதனக் கட்டணம்$^2$+ செயற்பாட்டு இடர் மூலதனக் கட்டணம்$^2$]

## கடன் தீர் திறன் விழிம்பு (இடர் அடிப்படையிலான மூலதனம்)

காப்புறுதிப் பொறுப்புகளுக்காக தொழில்நுட்ப ஏற்பாடுகளுக்கு மேலதிகமாக, காப்புறுதி வழங்குநரால் வைத்திருக்க வேண்டிய வில்லங்கமற்ற மூலதனத்தின் தொகையைத் தீர்மானிப்பதற்காக இருக்கின்ற ஒழுங்குபடுத்தும் மூலதனத் தேவைப்பாடு. அத்துடன், முழுமையான குறைந்தபட்ச மூலதன போதுமான தன்மையின் தராதரத்தை உள்ளடக்கியதோடு, 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதி ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் பிரிவு 26(1) உடன் சேர்த்து வாசிக்கின்றவிடத்து, பிரிவு 105 இன் கீழ் உருவாக்கப்பட்ட 2015 ஆம் ஆண்டின் கடன் தீர் திறன் விழிம்பு விதிகளின் (இடர் அடிப்படையிலான மூலதனம்) வரைவிலக்கணப்படுத்தியுள்ள இடர் அடிப்படையிலான தேவைப்பாட்டையும் உள்ளடக்குகிறது.

## மேலதிக மாற்றங்கள்

கொள்கைப் பொறுப்புகளை விஞ்சுகின்ற சொத்துக்களின் மிகைத் தொகையை ஆயுள் காப்புறுதி நிதியத்திலிருந்து காப்பீட்டுக் கணிப்பாளரின் பரிந்துரையின் அடிப்படையில் பங்குதாரருடைய நிதியத்திற்கு மாற்றுதல்.

## சரணடையும் பெறுமதி

காப்புறுதிக் கொள்கை ஒன்றின் தவணைக்காலம் பூர்த்தியடைய முன்னர், நீண்டகால காப்புறுதிக் கொள்கை ஒன்று முடிவுறுத்தப்படும் போது அதற்காக காப்புறுதி வழங்குநரால் காப்புறுதிக் கொள்கையாளருக்கு செலுத்த வேண்டிய தொகை ஆகும். இங்கு குறிப்பிடப்பட்ட சரணடையும் பெறுமதியை அடைவதற்கு காப்புறுதிக் கொள்கை தொடர்ச்சியாக மூன்று வருடங்களுக்கு அமுலில் இருந்திருத்தல் வேண்டும்.

## சரணடையும் பெறுமதி மூலதனக் கட்டணம் (SVCC)

அனைத்துக் காப்புறுதி ஒப்பந்தங்களும் ஒரே நேரத்தில் சரணடையக் கூடிய தீவிர பாதகமான சூழ்நிலை ஒன்று ஏற்படும் சந்தர்ப்பம்.

## தவணைக் காப்புறுதி

குறிப்பிட்ட காலப்பகுதி ஒன்றுக்கு அல்லது குறித்துரைக்கப்பட்ட தவணைக்கு பாதுகாப்பை வழங்குகின்ற ஆயுள் காப்புறுதிக் கொள்கையின் ஒரு வகை. கொள்கையில் குறித்துரைக்கப்பட்ட காலப் பகுதியின் போது காப்புறுதி இறந்தால் மற்றும் காப்புறுதிக் கொள்கை வலுவில் இருப்பின் - இறப்பின் மீதான ஒரு அனுகூலம் செலுத்தப்படும்.

## தொழில்நுட்ப ஏற்பாடு

இலாகாவின் ஆயுள் காலத்தின் போது, அதிலிருந்து எழும் ஏனைய பயனாளிகள் மற்றும் காப்புறுதிக் கொள்கையாளருக்கு செலுத்த வேண்டிய அனைத்து கொடுப்பனவுகள் மற்றும் அதன் காப்புறுதிக் கடப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்காக காப்புறுதி வழங்குநரால் ஒதுக்கி வைக்கப்படும் ஒரு தொகை. இது, கொள்கைகள், மறு காப்புறுதி என்பவற்றை நிர்வகிப்பதற்கான செலவுகள் மற்றும் எஞ்சிய இடர்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு தேவையான மூலதனத்தையும் உள்ளக்கும்.

## அடுக்கு 1 மூலதனம்

தொடர்ந்து செல்லுக்கான கரிசனைகள் மற்றும் வியாபாரத்தை முடிவுறுத்தல் ஆகிய அடிப்படையின் மீது அனைத்து சந்தர்ப்பங்களிலும் காப்புறுதி

# அருஞ்சொல் சொற்கள் தொடர்ச்சி...

வழங்குநருக்கு ஏற்படுகின்ற நட்டத்தை பாதுகாப்பதற்காக முழுமையாக இருக்கக்கூடிய நிரந்தர மூலதனம்.

## அடுக்கு 2 மூலதனம்

அடுக்கு 1 மூலதனத்தில் உறிஞ்சும் தன்மையுடைய பண்புகள் இல்லாத மூலதனம். ஆயின், எவ்வாறாயினும், நடந்து கொண்டிருக்கின்ற செயற்பாடுகள் அல்லது வியாபாரத்தை முடிவுறுத்தும் செயற்பாடுகளின் போது சில இழப்பு உறிஞ்சும் தன்மையை வழங்கக்கூடியது.

## மொத்தமாக இருக்ககூடிய மூலதனம் (TAC)

2015 ஆம் ஆண்டின் கடன்தீர் திறன் விழிம்பு விதிகளில் குறித்துரைக்கப்பட்ட கழிப்பணவுகள் ஏதேனும் இருப்பின், அவற்றைக் கழித்த அடுக்க 2 மூலதனம் மற்றும் அடுக்கு 1 மூலதனம் ஆகிய இரண்டினதும் மொத்தத் தொகை இருக்கக்கூடிய மொத்த மூலதனமாகும்.

## எழுத்தாக்க இலாபம்

மூலதன வருமானம் மற்றும் ஏனைய வருமானத்தை கருத்திற் கொள்ளாது, பொதுக் காப்புறுதி வியாபாரத்தை நடத்துவதன் மூலம் ஈட்டப்படும் தொழில்நுட்ப இலாபம்.

## சம்பாதிக்கப்படாத கட்டுப்பணம்

வரவேண்டிய கட்டுப்பணங்கள் கணக்குகளில் ஏற்கனவே உள்ளிடப் பட்டிருப்பதோடு, ஆயின், இது, ஐந்தொகை திகதியை அடுத்து வரும் இடர் காலப்பகுதியோடு தொடர்புபட்டது.

## சம்பாதிக்கப்படாத கட்டுப்பண ஒதுக்கு

இன்னும் வலுவிலுள்ள காப்புறுதிக் கொள்கைகளின் கீழ் எதிர்காலத்தில் எழக்கூடிய கோரிக்கைகளை வழங்குவதற்காக பொதுக் காப்புறுதி வழங்குநரால் வைத்திருக்கப்படும் நிதியமாகும்.

## காலாவதியாகாத இடர் ஒதுக்கு

கோரிக்கைகளின் மதிப்பிடப்பட்ட பெறுமதியை விட கூடிய தொகை மற்றும் இதுவரை அத்திகதிக்கு முன்னர் நிதியாண்டு முடிவடைந்த பின்னர் முடிவுபெற்ற ஒப்பந்தங்களில் இருந்து எழக்கூடிய செலவுகள் என்பவற்றின் மதிப்பிடப்பட்ட தொகையைவிட கூடிய தொகையாகும். ஏனெனில், அவற்றினுடைய மதிப்பிடப்பட்ட தொகை சம்பாதிக்கப்படாத கட்டுப்பணங்களுக்கான ஏற்பாடுகளைவிட அதிகரித்திருப்பதால் (ஒத்தி வைக்கப்பட்ட ஏதேனும் கையேற்புக்கான செலவுகள் இருப்பின் அவற்றைக் கழித்த பின்பு).

## உலகளாவிய ஆயுள் காப்புறுதி

முதலீட்டு சேமிப்புகள் மற்றும் குறைந்த கட்டுப் பணங்களை உள்ளடக்கிய வகையிலான தவணை ஆயுள் காப்புறுதியாக அமைகின்ற நிரந்தர ஆயுள் காப்புறுதி ஆகும். அநேகமான உலகளாவிய காப்புறுதிக் கொள்கைகள், நெகிழ்வான கட்டுப்பணத் தெரிவுகளை உள்ளடக்கியிருக்கிறது. எவ்வாறாயினும், சில ஒற்றைக் கட்டுப்பணம் (ஒற்றை மொத்தத் தொகைக் கட்டுப்பணம்) அல்லது நிலையான கட்டுப்பணங்களை (அட்டவணையிடப்பட்ட நிலையான கட்டுப்பணங்கள்) விரும்புவர்.

## முழு ஆயுளுக்குமான காப்புறுதி

முழு ஆயுள் காப்புறுதி பெற்றவரின் ஆயுள் காலம் முழுவதையும் பாதுகாப்பதற்காக வழங்கப்படுகிறது. இறப்பு மீதான நலனை வழங்குவதற்கு மேலதிகமாக, முழுமையான ஆயுள் காப்புறுதி பணப் பெறுமதி திரளக்கூடிய ஒரு சேமிப்பு உறுப்பையும் உள்ளடக்கும். இந்தக் கொள்கைகள் நிரந்தர அல்லது பாரம்பரிய ஆயுள் காப்புறுதி எனவும் அழைக்கப்படும்.

# பொதுத் தகவல்கள்

## அலுவலக முகவரி

இல. 11, கிழக்குக் கோபுரம்,
உலக வர்த்தக நிலையம்,
எச்சலன் சதுக்கம், கொழும்பு 1
ஸ்ரீலங்கா.

| | | |
|---|---|---|
| தொலைபேசி | : | +94 11 2396184-9 |
| தொலைநகல் | : | +94 11 2396190 |
| மின்னஞ்சல் | : | info@ircsl.gov.lk |
| இணைய தளம் | : | www.ircsl.gov.lk |

## சட்ட வடிவம்

காப்புறுதிக் கைத்தொழில் ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க விதிகளுக்கு அமைய, இலங்கையில் ஒரு நியதிச் சட்ட சபையாக ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இது, 2001 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 23 ஆம் திகதிய, 1172/27 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் 2001 ஆம் ஆண்டு மார்ச் 01 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வந்தது.

## ஆணைக்குழுவின் இலக்கும் பொறுப்பும்

காப்புறுதிக் கொள்கையாளர்கள் மற்றும் எதிர்கால காப்புறுதிக் கொள்கையாளர்களின் அக்கறைகளைப் பாதுகாக்கும் நோக்குடன், இலங்கையில் காப்புறுதி வியாபாரம் நேர்மைத் திறனுடனும், தொழில் முறையாகவும், விவேகமான முறையிலும் நடத்தப்படுவதை உறுதிப்படுத்துவது ஆணைக்குழுவின் இலக்கும், பொறுப்புமாகும்.

## கணக்கியல் வருடம்

டிசம்பர் 31

## கணக்காய்வாளர்

கணக்காய்வாளர் நாயகம்

## வங்கியாளர்

இலங்கை வங்கி

## கணக்காய்வுக் குழு

திரு.ஏ.ஆர். தேஷபிரிய
திரு. ஜெரோமி போலிங்
டாக்டர் ஏ ஏ ஷபீர் குலாம்ஹுசைன்

திரு.யுதிஸ்ரன் கனகசபை
திரு.ஈ.ஏ.டி. பெரேரா
திரு.யு.உபுல் தேசப்பிரிய

செல்வி.கே.வி.சி. டில்ருக்ஷி
திரு.டி.என்.ஆர். சிறிவர்தன
திரு.சி.ஜே.கே. பெரேரா

இலங்கை
காப்புறுதி
ஒழுங்குமுறைப்படுத்தல்
ஆணைக்குழு

இல. 11, கிழக்குக் கோபுரம், உலக வர்த்தக நிலையம், கொழும்பு 1, ஸ்ரீலங்கா
தொலைபேசி : +94 11 2396184-9 | தொலைநகல் : +94 11 2396190
மின்னஞ்சல் : info@ircsl.gov.lk | இணைய தளம் : www.ircsl.gov.lk